உ

திருச்சிற்றம்பலம்

# திருமுல்லைவாயிற் புராணம்.

திருமயிலை வித்வான்

சண்முகம்பிள்ளையவர்கள்

பாடியது.

இஃது

ஷை தேவஸ்தான தருமகர்த்தா

செந்நீர்க்குப்பம் - சொர்ணலிங்க முதலியார்

விருப்பத்தின்படி

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90
22843

சென்னை
தாம்ஸன் கம்பேனியாரால்
தமது
மினெர்வா அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

1903

Copyright Registered.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

தஞ்சை-சதாவதானம்
**சுப்பிரமணிய ஐயரவர்கள்**
இயற்றிய

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பூமேவு திருமுல்லை வாயிலென்னு மாநகர்த்துப் புகழ்மை மாலைத்
தாமேவு வடமொழியி னிறைத்தபொரு ளொன்றுமொரு தாது கொண்டு
பாமேவு மியலெட்டோ டீரமெனுங் காதாறும் படைத்துத் தந்தான்
நாமேவு தமிழ்மிகுசண் முகக்கவிஞ னென்புவியென் றுநகரி லுனே.

---

கவுரிமாயூரம்-வித்வான்
**திருஷ்ணையர் அவர்கள்**
இயற்றிய

## நேரிசை வெண்பா.

மருமுல்லை வாயின் மருவுமிடப் பாகன்
திருமுல்லை வாயிற் றிருப்புகழ்—திருவார்
தருசீர்ச் சரிதந் தமிழ்செய்தான் பன்னூல்
வருசண் முகநா வலன்.

---

திருக்கைலாச பரம்பரைப் பொம்மபுரம்
ஸ்ரீசிவஞான பாலைய தேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசானியமடம்
**ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளவர்கள்**
மாணாக்கரு ளொருவரான
**க. வ. திருவேங்கட நாயுடு அவர்கள்**
இயற்றிய

## நிலைமண்டில வாசிரியப்பா.

திருப்பொலி சைவத் தினிருப்பிதென் றெவரு
மையமின் றுணர்தர மெய்யறி வுறுத்து
நீற்றொடு கண்டியும் போற்றுமைந் தெழுத்தும்
வேதமு மேதமில் போதநூல் பிறவு
௫. திறவிய நால்வரா மறுவறு குரவர்
மன்பதை யுய்வா னன்பினி னருளிய
விழுமிய தமிழினிற் செழுமிய பாடல்சொன்
டவ்விய மவித்த வெவ்வமி லெளவையுஞ்
சான்றோ ருடைத்தென வான்றசீர் படைத்த
தண்டக நாட்டகந் தண்டார்போற் றிசைப்ப

22843

நண்ணுமெண் ணான்கெனும் புண்ணிய தலங்களுள்
தொண்டைமான் குரிசிலைப் பண்டையாண் டிடுவான்
கற்புக் கொடியினிற் கிற்புறத் தடுத்தக்
கொடியகத் தயர்ந்த வடிவிலா வடிவுகொண்
மாசிலா மணியெம் மீசனார் வடதிரு
முல்லை வாயிலி னெல்லையில் சீர்த்தியைச்
சோணாட் டகத்துச் சேணாட் டரையன்
வேணுவாய் வழுத்தப் பேணுவர மளித்த
பன்னிரு நாம மன்னிய புகலிடா
மத்தலத் தமர்ந்த முத்தமிழ் விரகர்
வாணி சேர்வுறு நாணியுள் ளயர்தரச்
சத்ததா னவையுமோ ரத்தியாந் தானுவிற்
றேற்றுவித் தெய்மான் மாற்றரு மருட்பெருக்
கென்னரு முணரா மன்னுவித் திட்ட
பழம்பதி யுதித்த தொழும்புமிகு முதியன்
பன்னூற் றுறையினுந் துன்னிய வறிவன்
பண்முகத் தரும்புஞ் சண்முகக் கவிஞன்
றன்மொழி நிலைவற்கோர் நன்னிப மிதுவெனச்
செந்தமிழ்ப் பாடலின் முந்துவித் திடுவான்
வேணவா மிகுதலிற் பேணலாந் தகைமையிற்
சொற்சுவைப் பொருட்சுவைப் பொற்புநனி விளங்க
வகையலங் காரந் தகைபெற வமைத்தே
நாவலர் புகழ்தரு பாவளங் குலவ
வோதின னதனை நீதிசே ரோதிச்சாட்
டோங்கிய சிறப்பினன் பாங்குடைப் பண்ப
னந்தலில் வளர்திகழ் சந்த சுவாமி
யென்னுநல் லறிஞன் மன்னிய வேட்கையி
னெழுதரு வெழுத்திற் பழுதறு வண்ணம்
பதித்தினி தளித்தனன் கதித்தவிவ் வுதவிசெ
யிவர்புக ழோங்கி யிலகுற முல்லைச்
சிவன்பதஞ் சென்னியிற் சேர்த்திறைஞ் சுதுமே.

---

இந்நூலாசிரியர் மாணாக்கர்

## காவேரிநகர்-நமச்சிவாய முதலியார்

இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்னாடு மருமத்துப் புங்கவன்ற னுந்திபூத் தொளிரும் புத்தேள்
தென்னாடு செய்தவமாய்ப் பொதுவேதம் புகல்பரிசாஞ் செவ்வி யோங்கி
யெந்நாடு மெம்மக்கிணையின் றெனச்சான்றோ ருடைத்தெனலா லிலகு மந்தச்
சொன்னாடு புகழ்மைமரீஇத் தொண்டைநா டீவிளங்குந் தொண்டை நாடு.

# சிறப்புப்பாயிரம்.

நல்லைநகர் புயக்குரிசில் களிற்றைமுல்லை யாற்றொடக்கிக் காட்சி யெய்த
வல்லைநகர் குழலுமையா ளொடுமாசி லாமணியை யமர்ந்து மென்றுஞ்
செல்லைநகர் வணத்திருமா றனக்குரிமை கொடுமேவுஞ் சிறப்பு மேய
முல்லைநகர் நிலவுறுமா லெஞ்ஞான்று நிலமகட்கோர் முகனே யென்ன.

இன்னநகர்ச் செழுஞ்சரிதஞ் செந்தமிழ்நா வலரெலாரு மிரும்பூதெய்தத் [தி
சொன்னயமும் பொருணயமுந் தொலைவில்பல வணிநயமுந் தோன்றப் பத்
நன்னயமொ டெண்ணயமுங் கனிந்தொழுக மாநிலக்கு நயந்து சொற்றான்
கன்னலொடு தெளிதேனு முதுபாகு மேய்ந்த சுவை கயப்ப மாதோ.

இத்தகைய கவிஞர்பிரான் யாவனெனிற் புகலியர்தம் மிறைவ னைவை
வித்தகஞா மயிலென்னச்செய் மயிலைநகர் விளங்கவரு மேதக் கோனிம்
மைத்தகருங் கடல்கட்டின் மெய்கண்டான் சந்தானம் வயங்க வந்த
பொய்த்தலில்சீர்த் துறைசைவரு சிவஞான மாதவன்றாள் புந்திவைத்தோன்.

இருமுனிவர் பணிந்தேத்த நடனவிற்றும் பெருமானா ரிணைய டிக்கே
மருவியமெய் யன்பினொடு மனத்திடைவை யாமளித்து மகிழு மாண்பான்
கருநெய்தன் மலர்வாவி வள்ளையா மீராடைநணி யணும் போரூர்
வருமுருக னடிமறவாப் புரசைவாழ் சபாபதிமால் மலர்த்தாட் கன்பன்.

சொற்றேறும் வாய்மணப்பச் சித்தாந்த சைவமணந் தோன்றப் பாடும்
வற்றாத விலக்கியமோ டிலக்கணமாந் தமிழ்க்கடலை வாய்மடுத்தோன்
முற்றுரு மணற்கேணி தொட்டென்ன வுரைமொழியு நீரான்
நற்றூர ணியினச்ச ரொம்பரிமே லழகரும்பின் னுட லொப்பான்

அன்பினெனை யிருத்தியிவ ணத்தகைய வருநூலு மடைவி னோர்வான்
இன்புறநல் லன்னையினு மினிதருத்திக் கைப்புறுமா மலகமேய்ப்ப
முன்புறமே காட்டியென தகமேவு மடமனைத்து மொழியா தோடத்
தன்பெரிய கருணையொடு மெனையாண்ட சண்முகனுந் தம்பி ரேறே.

உவனுழையிங் கன்புடையான் கனவினுங்கல் லாமூ டருறவு மேவான்.
தவமலிமெய் யன்பர்தமக் கெஞ்ஞான்று மடித்தொண்டு தான்செய் கிற்கும்
சிவமலிநற் குடிவளர்ந் தழீஇயவொதிக் காடென்னுந் தேத்தா னென்றும்
பவனடியை மறவாத பண்புடையா னற்குணக்கோர் பரவை போல்வான்.

விண்காட்டும் பொழில்காட்டு மொற்றிநக ரிறைபாக மேவக் காட்டும்
பண்காட்டு மொழிகாட்டும் வடிவுடைநா யகிக்காட்டும் பத்தி நீரான் [தோன்.
கண்காட்டு நுதற்பெருமான் சடைக்காட்டுப் பெண்காட்டுங் கவின்குலத்
தண்காட்டு முகில்காட்டுங் கொடைக்கந்த சாமியாந் தக்கோ னம்மா.

எத்தகைய வறந்தனினுங் கல்விவிருப் புறவளித்த லென்று நிற்கு
முத்தமமா தானமெனத் தணவாத வார்வமுட னுவந்திங் கீய்
வித்தகைய தமிழ்நூலே யான்றதென வெழுதாக வெழுத்திலிட்டு
முத்தமிழ்மா தானமளித் தானெனினிங் கிவன்பெருமை மொழியற் பாற்றே.

உ

திருச்சிற்றம்பலம்.

## ஆளுடைய நம்பிகள்,

திருவாய் மலர்ந்தருளிய

# வடதிருமுல்லைவாயிற் றேவாரம்.

பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக்கழல்களென்றெண்
யொருவரை மதியா துறுமைகள் செய்துமூடியு முறைப்பனாய்த் திரிவேன் [ணி
முருகமர் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் வாயினா லுன்னைப்
பரவிடு மடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௧)

கூடிய விலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை யுமையவள் காண
வாடிய வழகா வருமறைப் பொருளே யங்கணா யெங்குற்றா யென்று
தேடிய வானோர் சேர்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பாற்
பாடிய வடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௨)

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர் வெருவிட வேழமொன் றுரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் தேவர்தம் மரசே
தண்பொழி லொற்றி மாநக ருடையாய் சங்கிலிக் காவென்கண் கொண்ட
பண்பநின் னடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௩)

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டிசை பாட
வந்நலங் கமலத் தவிசின்மே லுறங்கு மலவன்வந் துலவிட வள்ளற்
செந்நெலங் கழனி சூழ்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பாற்
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய் பாசுப தாபரஞ் சுடரே. (௪)

சந்தன வேருங் காரகிற் குறடுந் தண்மயிற் பீலியுங் கரியின்
றந்தமுந் தரளக் குவைகளும் பவளக் கொடிகளுஞ் சுமந்துகொண் டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௫)

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையான் மிகைபல செய்
செற்றுமீ தோடுந் திரிபுர மெரித்த திருமுல்லை வாயிலா யடியேன் [தேன்
பற்றிலே னுற்ற படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௬)

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரியவார்குழன் மாமயிற் சாய
லணிகெழு கொங்கை யங்கயற் கண்ணா ரருநடமாடல றாத
திணிபொழி றழுவு திருமுல்லை வாயிற் செல்வனே யெல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௭)

நம்பனே யன்று வெண்ணெய்நல் லூரி னாயினேன் றன்னையாட் கொண்ட
சம்புவே யும்ப ரார்தொழு தேத்துந் தடங்கட லஞ்சுண்ட கண்ட
செம்பொன்மா ளிகைசூழ் திருமுல்லை வாயிற் றேடியான் றிரிதர்வேன் கண்ட
பைம்பொனே யடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௮)

மட்டுலா மலர்கொண் டடியிணை வணங்கு மாணிதன் மேன்மதி யாதே
கட்டுவான் வந்த காலனை மாளக் காலினா லாருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற் செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே யடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௯)

சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற்
டெல்லையி லின்பமவன் பெறவெளிப் பட்டருளிய விறைவனே யென்று [கட்டிட்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி னாதனே நரைவிடை யேறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (௧௦)

விரைதரு மலர்மே லயனொடு மாலும் வெருவிட நீண்டவெம் மானைத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற் செல்வனை நாவலா ரூர
னுரைதரு மாலையோ ரஞ்சினோ டஞ்சு முள்குளிர்ந் தேத்தவல் லார்க
ணரைதிரை மூப்பு நடலையு மின்றி நண்ணுவர் விண்ணவர்க் கரசே.

திருச்சிற்றம்பலம்.

உ

சுப்பிரமணியக் கடவுள்

வரப்பிரசாதமுடைய

அருணகிரி நாதசுவாமிக ளருளிச்செய்த

# வடதிருமுல்லைவாயிற் றிருப்புகழ்.

தன்னதன தான தந்தன
தன்னதன தான தந்தன
தையதன தான தந்தன — தனதானா.

மின்னிடைப தாகை தொங்கலொ
டன்னமயி லென வுஞ்செலு
மெல்லியர்கு ழாமி சைந்தொரு — தெருமீதே
மெள்ளவுமு லாவி யிங்கித
சொல்குயில்கு லாவி நண்பொடு
வில்லியல்பு ரூர கண்களை — தொடுமோக
கன்னியர்கள் போலி தம்பெறு
மின்னணிக லார கொங்கையர்
கண்ணியில்வி ழாம லன்பொடு — பதஞானக்
கன்னியிலு ளாக சந்திர
பொன்னியல்ப தாத ரங்கொடு
கண்ணுறுவ ராம லின்பமொ — டெனையாள்வாய்
சென்னியிலு டாடி ளம்பிறை
வன்னியும்வி ராவு கொன்றையர்
செம்மணிகு லாவு மெந்தையர் — குருநாதா
செம்முகவி ராவ ணன்றலை
விண்ணுறவில் வாளி யுந்தொடு
தெய்விகபொன் னாழி வண்கையன் — மருகோனே
துன்னியதி சூரர் மங்கிட
சண்முகம தாகி வன்கிரி
துள்ளிடவெ லாயு தந்தனை — விடுவோனே
சொல்லுமுனி வோர்த வம்புரி
முல்லைவட வாயில் வந்தருள்
அய்யபர ஞான வும்பர்கள் — பெருமாளே. (க)

தனதையனா தனதானன
தனதையனா தனதானன
தனதையனா தனதானன—தனதானா.

அணிசெவ்வியார் திரைசூழ்புவி
தனிநிவ்வியே கரையேறிட
வறிவில்லியா மடியேனிட ரதுதீர்வா
னருள்வல்லையோ நெடுநாளின
மிருளில்லுளே யிடுமோவுன
தருளில்லையோ வினமாளவை யறியேனே
குணவில்லதா மகமேருவை
யணிசெவ்வியா யருணாசல
குருவல்லமா தவமேயருள் குணசாதா
குடிலில்லமே தருநாளொது
மொழிநல்லையோ கவரேபணி
குணவல்லவா சிவனேசிவ குருநாதா
பணிகொள்ளுமா கணபூதமோ
டமர்வள்ளிகா னகநாடக
பரமெல்லியார் பரமேசுரி தருபாலா
படரல்லிமா மலர்பாணம
துடைவில்லிமா மதனாரனை
பரிசெல்வியார் மருகாசுர முருகோனே
மணவல்லிசேர் வுறுமாகன
தனவல்லிமோ கனமோடமர்
மகிழ்தில்லைமா நடமாடின ரருள்கோனே
மருமல்லிகா வனநீடிய
பொழின்மெல்லிகா வனமாடமை
வடமுல்லைவா யிலின்மேவிய பெருமாளே. (உ)

---

தான தானன தானன தந்தன
தான தானன தானன தந்தன
தான தானன தானன தந்தன—தனதானா.

சோதி மாமதி போன்முக முங்கிளர்
மேரு லாவிய மாமுலை யுங்கொடு
தார வேவரு மாடவர் தங்கண்மு னெதிராயே

# திருப்புகழ்.

ஆத பேசிமு ருளிலி ணங்கிய
மாதர் போலிரு தோளில்வி ழுந்ததி
ஆர வேவரு மாடவர் தங்கண்மு னதிராயே

மொதி யேகனி வாயத ரந்தரு
போதி லேபொருள் சூறைகள் கொண்டுபின்
மோன மாயவ மேசில சண்டைக ளுடனேசா

மோன மேதரு தோதக வம்பிகள்
மீதி லேயய லாகிம னந்தளர்
மூட னாகிய பாதக னுங்கதி பெறுவேனோ

ஆதி யாயமர் வானவர் தம்பகை
யான சூரனை நூறிவெ றுங்கள
மாக வேமயி லேறிமு னைந்திடு நெடுவேலா

ஆயர் வாழ்பதி தோறுமு கந்தூர
லேறி யேயுறி மீதனை யுங்கள
வாக வேநவ நீதநு கர்ந்தவன் மருகோனே
வாதி னல்வரு மோடியை வென்றிடு
மோதி நாயகர் வீறுத யங்குமை
வாரி ராசனு மேசசி யுந்திரு நகராள்வோன்
வாச மாமல ரோனொடு செந்திரு
மார்பின் மேவிய மாயவ னும்பணி
மாசி லாமணி யீசர்ம கிழ்ந்தருள் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.

# திருமுல்லைவாயிற்புராணம்

## கடவுள்வாழ்த்து.

### காப்பு.

சீர்பூத்தசெந்தமிழ்சொலிருதிணையினுயர்திணையேசிறந்ததென்றும்
பேர்பூத்தவஃறிணையன்றெனக்கூறும்பெற்றிமையைப்பெரிதுமாற்றக்
கூர்பூத்தமருப்பேந்துமுகமுந்தமாங்கமெனக்கொண்டுநாளும்
ஏர்பூத்தவுயர்திணையினடிகொண்முல்லைவனக்களிற்றையேத்தெடுப்பாம்.

### நடராசர்.

நன்றோங்குமன்பர்பணிநயந்துபுரிந்திரும்பிறவி
வென்றோங்கவிமலையிருவிழியேயோங்கவியன்கரந்தீக்
கன்றோங்கவரவினொடுங்காற்புலியுங்களிந்தோங்க
மன்றோங்கநடனோங்குமலர்க்கமலபதம்போற்றி. (௨)

### மாசிலாமணிநாதர்.

உருவமொருநான்காகியருவமொருநான்காகியுபயமொன்றாய்
மருவிமலர்மணமென்னத்தனைப்பிரியாப்பரையைவலங்கொண்டுநாளும்
பரிவினிறைஞ்சுநருள்ளப்பதுமமலர்மேவுமுக்கட்பரனைமுல்லைத்
திருநகரந்தனிலென்றும்வளர்மாசிலாமணியைச்சிந்தைசெய்வாம். (௩)

### கொடியிடைநாயகி.

படியிடையாருயிர்மும்மைமலமோசனம்புரியப்பரிந்தஞான்றுங், கடியிடையவ்வடிகள்கொளும்படிவங்கொண்டெய்துமருள்வடிவையென்றுங், துடியிடையொள்ளயிற்கணுடைத்தோகையைப்பாலியின்வடபாற்றோன்றுமுல்லைச், கொடியிடையைநினைந்துபவக்கொடியவினைதனக்குவிடைகொடுத்துவாழ்வாம். (௪)

### வரசத்திவிநாயகர்.

விரசத்திவயிற்றுஞ்சும்விடையூர்ந்துமலையுதவும்
வரசத்தியொருபாகம்வயங்கவமர்ந்தொருவாது
பரசத்திமுதலானபரித்தபிரான்பயந்தமுல்லை
வரசத்திவேழத்தின்மலரடியைவழுத்துவாம். (௫)

## முருகக்கடவுள்.

பொருளியற்புலமைசெறிந்தமைஞாலம்புகரறக்கிளத்துதல்கடுப்ப
வருமொருகற்பிற்றெய்வதப்பிடியைவன்களவினிற்பொருப்பர்கடம்
பொருவருமானைத்திண்புயவரையிற்புணரமற்புணர்க்கையைமருவிப்
பரவருமுமைநல்கெஃகவேற்கரத்தெம்பண்ணவற்பழிச்சியின்புறுவாம்.

## வயிரவர்.

கடிகமழ்கொன்றையானையலதொருகடவுளின்றிப்
படிமிசையெனத்தெருட்டும்பான்மைபோற்கமலனேற்றை
முடிதனைக்கொய்துமானெய்த்தோரினின்முகந்தசீர்த்தி
வடுகநாயகனைப்பேணிவாழ்த்தியின்பெய்துவாமால். (௭)

## திருநந்திதேவர்.

அறுதிமலமுத்தசித்துருவாயபரம்பரனையடைந்துயிர்க்கீண்
டுறுதிபந்தந்தெறக்கருதிச்சிவஞானபோதநெறியளிக்கப்பெற்றீண்
டெறுதியானென்பனகளிகந்தாருட்சினகரத்தினெய்திவாழு
மறுதிகட்கெட்டாதமுதற்குரவுபூண்சயிலாதிமலர்த்தாள்போற்றி. (௮)

## சேந்தமிழாசிரியர்.

கருங்கடல்கடைந்திரந்துகடவுளர்க்கூறுநீப்பான்
இரங்கிடாமையினதன்மேலிருஞ்சிலைதொட்டோனைக்
கருங்கடறனைவாய்ப்பெய்துகடவுளர்க்கூறுநீக்குந்
தருங்குலாமலையமேயதமிழ்முனிக்கன்புசெய்வாம். (௯)

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

வில்லேருழவராற்றனைமிகவெய்துறுமிவ்வியனிலத்திற்
சொல்லேருழவராற்றலினென்சொல்லைநிறுப்பத்துணிதருகூன்
வில்லேகொடுமுன்னிமிர்த்தமான்மிகநாணெய்தவொருகூன்றன்
சொல்லேகொடுபின்னிமிர்த்ததிருத்தோணிப்பனவற்றுதித்தெழுவாம். (௧௦)

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

கஞ்சன்விடுத்தமதயானைகதங்கொண்டெய்தக்கரங்கொண்டு
விஞ்சவதன்கொம்பினைப்பீழ்ந்துவிறல்கொண்டெய்துமாறனை
வஞ்சமுறுபல்லவன்விடுத்தமதயானையினைவண்டமிழான்
அஞ்சவுஞற்றுமருணாவுக்கரசர்பெருமானடிபணிவாம். (௧௧)

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

கரவின்வாய்ப்பட்டொழிந்தமறைக்கலைவலாளன்கான்முளையைத்
தரமற்றொருதன்புயவலியாற்றரணிவரச்செய்மாறனை
விரவியன்பாய்த்தமிழ்ப்பதிகம்விளம்பிக்கராமன்றவண்மிசைந்த
ஒருமெய்ப்பனவன்றனைத்தருமவ்வுரவோனுபயபதமடிப்பாம். (௧௨)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

மண்ணைத்துருவக்கேழலுருவாய்த்தம்மலர்த்தாள்காணு
நண்ணித்துயரானவிவெய்துநளினிகேள்வனறுமுறுப்ப
மண்ணைத்தெண்ணிலாவணியும்வயங்குமுடிக்கேசுமந்தெய்தப்
பண்ணியவனைப்பதம்பரசிப்பழங்கணனைத்தும்பாற்றிடுவாம். ()

## சண்டேசப்பிள்ளையார்.

பசுக்காத்தென்றுந்தொழுவர்தமைப்பரிவிற்காத்துப்பான்மொழியார்
பிசிக்கேயுழன்றிட்டலமந்தபின்னைகேள்வனகமெலியப்
பசுக்காத்திட்டபரம்பரனைப்பசுக்காத்தவற்றின்பாலூட்டி
வசிக்காமுறுவார்தலைமைப்பாடெய்துமவர்தாண்மலர்மணப்பாம். (௧௪)

## அறுபத்துமூவர்.

தூயநான்மறைநிகர்சுருதிச்செந்தமிழ்
மேயவாரூரனூர்விழைந்துபாடிய
பாயசீர்ப்பனுவலிற்பரம்புமேன்மைசால்
நாயன்மாரடிமலர்நாடுவாமரோ. (௧௫)

## சேக்கிழார்சுவாமிகள்.

ஒருநம்பிதொகையுதவவுலகமெலாந்தொழுதேத்துமும்பலோதிக்
கருநம்பிவகையளிப்பவானந்தமென்றுந்தயங்கக்காட்டும்
பெருநம்பியடியெடுத்துக்கொடுப்பவன்பர்சரிதமழைபிலிற்றுங்குன்றை
வருநம்பிகழன்மலரைமருவினொழுபிறப்புமொருவினரே. (௧௬)

## சந்தானகுரவர்.

வெண்ணெய்மேவியமெய்கண்டநாதனைவிரித்திட்
டெண்ணரும்புகழ்ச்சித்திநல்கிறையைமாடத்துக்
கண்ணுளாரெனமயினடஞ்செயுமெழிற்கடந்தை
நண்ணும்வாழ்வினையுமாபதிசிவன்றனைநயப்பாம். (௧௭)

## பாடியகாரர்.

வடமொழியினியலனைத்துமாநிலத்தோரெளிதுணரவகுத்தானைத்தக்
குடமுனிவனிகருமெழிற்பதஞ்சலிமாமுனியனெனக்கூறன்மான
இடனுடைமாமறையெனைத்தினுட்பயனையாருமெளிதெய்தவோதி
மடனகற்றியாண்டசீகண்டமுனிவரனடித்தாமரைமணப்பாம். (௧௮)

## திராவிடபாடியகாரர்.

பேசுசீரெழுத்தஞ்சின்முப்பொருள்பெரிதுணர்த்திப்
பாசவேர்களைந்தென்றனைப்பரிவினிலாண்ட
தேசுபூத்ததென்றுறைசையிற்றிகழ்சிவஞான
தேசிகோத்தமன்சேவடிதொழுதிருள்செகுப்பாம். (௧௯)

## திருத்தொண்டைமான்.

அண்டர்பிரான்விழைந்தமருந்திருத்தலங்கள்மிகப்பலசென்றணைந்துபோற்றி
கண்டுவருபவன்முல்லைநகரணையத்தானருங்கடக்களிற்றை [க்
விண்டலருந்தளவமலர்க்கொடிசுற்றவாளோச்சவிமலன்றோன்றப்
புண்டரிகத்தாடொழுததொண்டைமானடிக்கமலம்புகழ்ந்துவாழ்வாம். (௨௦)

## தீக்ஷாகுருவணக்கம்.

கள்ளநெறியொழுகும்வஞ்சப்புலனைந்தின்வழிச்சென்றுகவல்கிற்பேனுக்
குள்ளமகிழ்ந்தரனடியேபசுபோதந்தெறுமென்னவுணர்த்தியின்ப
வெள்ளமதிலெனையழுத்திச்சிவானுபவவிளைவுதவுமேன்மைசான்ற
வொள்ளியசீர்க்காஞ்சிநகர்ஞானப்பிரகாசன்சீரோதிவாழ்வாம்.

## வித்தியாகுருவணக்கம்.

சட்டோதன்னடிநினைக்கமனத்தமுதாஞ்சங்கரனைச்சாரிற்பாசம்
விட்டோடுந்திருவடிப்பேறுண்டாமென்றெமக்குணர்த்துமேதக்கோனை
மட்டாரும்பொழிற்புரசைவருவேளாண்குடியாளும்வயங்கத்தோன்றும்
அட்டாவதானசபாபதிக்குரவன்றனைநினைந்தெம்மரங்கைதீர்வாம். (௨௧)

---

## அவையடக்கம்.

தேவபாடையின்மேவிபவித்தலச்சிறப்பை
நாவலீரருந்தமிழ்ச்சொலானன்வகுத்திடுதல்
தேவதேவன்றன்றிறம்புகல்கிற்பதுதேர்ந்திட்
டேவருங்கொள்வாரெனுமுரைகடைப்பிடித்தன்றே. (௨௨)

தூதமார்க்கமுன்னயமார்க்கங்களுட்டக்கோ
ஓதுகென்றெனைக்கூயிவணுணற்றுகென்றுரைப்பக்
கோதிலன்னவர்சொற்குறிக்கொடுகொடியேனு
மாதொர்பாகன்சீர்வழுத்துவான்றொடங்கினன்மன்னோ. (௨௩)

முன்சொலாகியவடமொழிதனைமொழிபெயர்த்துத்
தென்சொல்யாப்பினிற்செறிக்கெனுந்தெருண்டமேலவர்தம்
இன்சொலேதுணையெனக்கொடின்றியம்பினேனெளியேன்
புன்சொலும்பொறுத்தாளுவர்புலமையிற்பொலிந்தோர். (௨௪)

உவமவேறிலாதோங்கியமெய்யுணர்வுடையோர்
சிவனையல்லதோர்துரும்பசையாதெனச்செப்பல்

சிவனுமாலவன்றீம்புகழ்ச்சரிதையைவிழைந்தப்
பவனதின்னருளாற்படிமிசைச்சொலும்பரிசே. (௨௫)

முல்லைமேவியமுழுமுதன்முக்கணெம்பெருமான்
கல்லைமேவியவென்னுளங்காண்கொண்டென்புன்
சொல்லையேயுவந்தெனைச்சொலப்புரிந்திடுந்துணையா
னெல்லையீதிவணுரைத்தன்னுரைத்தல்வேறுளதோ. (௨௬)

புவனம்யாவையுமீன்றவளோர்புடையோங்கு
மவனையோதியபுராணமீதைந்தினுட்சிறந்த
பவுடிகங்களையும்வடமுல்லையம்பதியின்
சிவமலிந்தசீர்செப்புவதென்றரமேயோ. (௨௭)

---

## சிறப்புப்பாயிரம்.

திருத்தகுநல்வாதராயணன்மொழிபவுடிகங்களைதீம்பாலிசூழ்ந்த
மறுத்தநறும்பொழிலுடுத்தமுல்லைமான்மியந்தமிழால்வனைதல்செய்தான்
நிருத்தனடிக்கன்பனியலைந்துமருட்கலையோடுநீளவாராய்ந்
தருத்தியுடனுலகினார்க்குத்தருமயிலைச்சண்முகப்பேரழகியோனே. (௨௮)

# நாட்டுப்படலம்.

திருத்தமேவியசெஞ்சடைச்செல்வன்றென்றிசைவயிற்செல்கென்று
அருத்திவேதியன்குறுமுனியியம்பியவருந்தமிழ்வடாதெல்லைப்
பொருப்பெனும்வடவேங்கடந்தன்னிடைப்பொலியவோங்கியதொண்டைத்
திருத்தகும்வளநாட்டின்சீர்தனையொருசிறிதுரைசெய்வாமால். (௧)

பண்டைநான்மறைப்பயனெனும்பரம்பரன்பாங்குறையுமையஞ்ஞான்
றண்டர்வாணுதல்விழித்துணைமூடவாரிருளுயிரினைமூட
விண்டுநீகயிலையைக்கழுவாய்செயவேண்டுமென்றவள்செங்கைத்
தொண்டைநாடலாற்றொண்டைநாடாயதித்தொண்டைநல்வளநாடு. (௨)

ஆலுமாமறைகூறியவறனெறியணிபொழிற்காஞ்சிக்கண்
ஏலவார்குழலெனநிலனடைந்தொருங்கியற்றிமயப்பாவை
மாலுலாமனத்திறையிடந்தணந்துவாழ்வருளொருவலப்பாகப்
பாலினுடலாற்பாலிநாடாயதிப்பாலிசூழ்வளநாடு. (௩)

வாஞ்சியம்பிறபதியுடையெம்பிரான்மதிவளர்சடையெம்மான்
பூஞ்சிலம்படிகண்டிலேனென்றவன்புறத்தொருபுடையேத்த
வாஞ்சையான்முடிகண்டனனென்றபொய்வாசகந்தனக்கஞ்சிக்
காஞ்சிநாடலாற்காஞ்சிநாடாயதிக்காஞ்சிநல்வளநாடு. (௪)

துண்டமாமதிவேணியன்சுருதியார்துரகதமாவேறிக்
கொண்டனீள்களத்தெம்பிரான்கயிலையங்குவட்டினைத்தணந்தேகி
மண்டுகாதலினம்பிகைவழிபடுமாண்புகண்டொருவாது
தண்டகன்புரந்திடுதலானுயதித்தண்டகவளநாடு. (௫)

குன்றநாடவன்கர்ப்பூரசுந்தரன்சான்முளையாமுக்ர
மன்னுநாமப்பேர்வழுதிபோல்வடபுலமன்னரைப்புறங்கண்டு
பொன்னின்மந்தரமேருவிற்கொடுவரிபொறித்திடுகரிகால
மன்னன்கான்கெடுத்தவனியையாண்டதுமற்றிந்தவளநாடு. (௬)

கேண்டையங்கணுளாகமபூசனைகிளர்பொழிற்காஞ்சிக்கண்
பண்டைஞான்றுசெய்பான்மைகண்டவள்பெறும்பரிசினைமிகநாட்டி
விண்டமாமனுநெறிசெய்யகோல்கொடுவியனிலந்தனையென்றுந்
துண்டிரன்புரந்திடுதலானுயதித்துண்டிரவளநாடு. (௭)

விடையனெம்பிரான்விபுதர்களுயகன்விண்ணிலாவணியெம்மான்
அடையலார்புரமட்டவன்றனைமனவாலயந்தனில்வைத்துக்
கடையனேன்றனைப்புரக்கவென்றவர்வருகாட்சியாற்சான்றோரை
யுடையநாடெனப்பெருமகள்பரவியதோங்குமிவ்வளநாடு. (௮)

முன்னமோர்வணிகன்பொருட்டாகமுற்றிழைக்கொடுமனைநீலி
அன்னமார்வயற்பழயனூர்வாழும்வேளாண்டொழின்மிக்கோர்கள்
என்னர்தம்மையுமீமெனவுயிரினையிசைந்துவவ்வலினென்றுஞ்
சொன்னசொன்மறாதோங்கியநாடிந்தத்தொலைவில்சீர்வளநாடு. (௯)

இமைத்தலில்லாவிண்ணவர்படருறவிசைந்தவனொருவந்தஞ்
சமைத்தவைதிகத்தேரினன்முப்புரமட்டவன்பணிமேவுந்
தமித்துநல்குரவரும்பொனற்புலவர்க்குச்சொரியுங்கூவத்தியாக
சமுத்திரந்தனைநல்கியதித்திருத்தகுவளங்கெழுநாடு. (௧௦)

தளவினலைவாயுடையவனருளியகடவுணூற்கொருகீரன்
பளகிலாதுணைசெய்கின்றநிலவியபான்மைகண்டொருவாது
களவிலோர்வனவேடன்றனுருக்கொடுகானவர்மடமாதுந்
தளவமூரலைமணந்துகாட்டியதிந்தத்தண்புனல்வளநாடு. (௧௧)

முன்னமாலயனறிகிலாமூர்த்தியான்முருந்துறழ்மணிச்செவ்வா
யன்னைகேட்குமாமறைப்பொருள்வண்டுருவாக்குழலினிற்கேட்கும்
என்னையாண்டவைவேற்குகன்சரிதமோரிரும்புலவன்கூறத்
தன்னிலேய்துகடபுத்தென்றநிலவுமித்தண்புனல்வளநாடு. (௧௨)

மண்ணின்மாதரார்கலவிநீத்தவர்சுகவாழ்வீறுவாரென்ற
அண்ணலார்தமைத்தூதுகொண்டற்றைஞான்றணியிழைதனைவேட்டுப்
புண்ணியத்திருமகிழின்கீழமர்கெனப்புரிந்திருகண்மாற்றிக்
கண்ணொன்றன்பின்வன்றொண்டருக்கருள்வதுகரிசிலிவ்வளநாடு. (௧௩)

சிற்பரன்பரம்பரனெனமறையெலாஞ்செப்பியநெறிகாட்டக்
கற்பகம்புரைகையினூர்வாழ்தருகாழியர்பிரானென்னைப்
பொற்புயர்ந்தமாதெனப்பனையாண்பெண்ணையெனப்படிமிசையோங்க
அற்புதம்பலபுரிந்திவணிலகுமிவ்வணிகெழுவளநாடு. (௧௪)

காக்கையேகொண்டமாயவனின்றவூர்கடந்தொருபுலவற்காத்
தேக்கிருஞ்சரித்தலசயனங்கணமங்கையாதியசென்று
மாக்கருங்கடனெடும்புயல்களாவொடுமரகதவுருக்காட்டப்
பாக்களுக்கெளியானெனுஞ்சொல்லையேபரிக்குமித்திருநாடு. (௧௫)

சொல்லொடும்பொருள்கடந்தசீகாளத்தித்தோன்றலார்தமைநாடி
ஒல்லுமன்புருக்கொண்டொருகண்ணிடந்தப்பவோங்கியசொல்லீர
னில்லுகண்ணப்பவென்றுமும்முறைசொலிநிலாவியபரபோகம்
புல்லுமன்பனையுதவியநின்றதிப்பொருவருநன்னாடு. (௧௬)

வேறு.

*கந்தாரங்காட்டுமாதர்கருங்குழல்வளைதானென்றுங்
கந்தாரங்காட்டுநீலக்கலபமாமயிலின்வீறுங்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

கந்தரந்தாதியில்லாக்கழலிணைபரசவேநா
கந்தரந்தாணிழிந்துகருதிடுந்தொண்டைநாடு. (௧௭)

காமரம்பாடலெங்குங்காரிகையாரெஞ்ஞான்றுங்
காமரம்பாடலெங்குங்கண்ணுதற்கன்றுடைந்த
காமரம்பாடலெங்குங்காமுகர்பாற்சுரும்பர்
காமரம்பாடலெங்குங்காமருதொண்டைநாடு. (௧௮)

கண்டொன்றுஞ்சொல்லார்தம்மைக்கடிமணமயர்ந்தாலன்றிக்
கண்டொன்றுஞ்சொல்லாரெங்குங்கடிமலர்த்துருமந்தோறும்
வண்டொருங்கெய்துமென்றுமாதரார்கைம்மருங்கே
வண்டொருங்கெய்துமென்றும்வளங்கெழுதொண்டைநாடு. (௧௯)

ஆரணமுழக்கமெங்குமாகமமுழக்கமெங்கும்
வாரணமுழக்கமெங்கும்வாம்பரிமுழக்கமெங்குந்
தோரணமுழக்கமெங்குந்தூரியமுழக்கமெங்கும்
பூரணகும்பமெங்கும்பொலிதருதொண்டைநாட்டில். (௨௦)

வேறு.

இந்நாட்டின்சிறப்பனைத்துந்தொண்டர்சீர்பரவுவாரெடுத்தஞ்ஞான்று
முன்னாட்டுமாறெழிலாவடுதுறைவாழ்சிவஞானமுனிவனந்தப்
பொன்னாட்டுப்புலவருந்தாழ்கச்சியப்பரிருவரன்றுபுகழ்ந்தாரென்னிற்
சொன்னாட்டியிச்சிறியேனெவ்வாறுசொலத்துணிந்ததுணிவுமன்றே. (௨௧)

வேறு.

நாகணிந்தவனுறைதருநாகமேயென்ன
மேகமெய்தியாங்காழிநீர்விறப்பொடும்பருகி
மாகநின்றிழிந்திறைவனைமாலதிவனஞ்சார்
நாகமென்னமீண்டனகடன்ஞாலமிக்கோங்க. (௨௨)

மீண்டமாமுகினங்கள்வேந்தெய்துவெஞ்சாப
மீண்டகற்றுமருச்சனைத்தொழிலினென்றெண்ணி
மாண்டநல்விளக்கேந்தல்போன்மின்னிமாமுல்லை
நீண்டவெண்மலராமழைநின்றிவண்சொரிந்த. (௨௩)

வரையிடங்களும்பொழிந்தனவயங்குநீள்கோட்டு
நிரையிடங்களும்பொழிந்தனநிலாவியபழனத்
தரையிடங்களும்பொழிந்தனதணந்தவர்க்கிரங்குங்
கரையிடங்களும்பொழிந்தனகனைகுரன்மேகம். (௨௪)

குறிஞ்சி.

தங்கணையகன்றனையராசாக்கியதன்மை
அங்கணுடியகுயினினடைந்ததேசடுப்ப

எங்கணுஞ்சிறைவிரித்தெழின்மாமயிற்கணங்க
டங்கியாட்டயர்கின்றன தடவரைக்குறிஞ்சி. (உரு)

சேங்கண்மால்பொருஞ்செல்லினங்கண்டமாமயில்க
ளங்கணைந்திடுந்தோற்றநம்மயிலுடைக்குமரன்
றங்கமுன்வரைப்புயமகிழ்சுடர்க்கொடிகாண்பான்
இங்கணைந்தனன்குலிசியாமெனவெதிரணையும். (உசு)

தோலினங்குடிபுகுந்திடுந்தோற்றமுன்பொருநாள்
தோலினைக்கொன்றுதோலினைவேய்ந்தசேவகனுக்
காலுமாமறைப்பயன்றருமவன்மகிழ்வெய்தச்
சாலநல்கினமாலொருகனியெனச்சாரும். (உஎ)

தேங்கமழ்ந்திடுசாரலிற்சிறையளியினங்கள்
ஓங்குபாண்செயலிரவலர்க்கடுப்பவொண்கோட்டு
வேங்கைவள்ளியோரெனவிழைந்தணிமலர்சொரியப்
பாங்கர்நின்றுகையேற்றல்போன்மலர்வபைங்காந்தள். (உஅ)

ஆரணந்தொடர்வரியவன்றனையடைவான்வெள்
வாரணங்கருவாரணமானதோர்மாண்பாற்
பூரணன்றனையாம்புகலடைதுமென்றியைந்து
வாரணங்குழூஉக்கொண்டவண்வதிதரன்மானும். (உகூ)

நம்மைமானுமோருருக்கொடுநின்றனனங்கை
செம்மைநன்னலமெய்துதற்பொருட்டொருசேய்மற்
றெம்மையாளுமாலெனநினைந்தெண்ணிலாமலரின்
சும்மைவீழ்த்தடிதாழ்தல்போற்கணிமலர்துதையும். (௩0)

நவஞ்செயத்தனிமுதலொருசேயெனநம்பா
லவதரித்திறப்பிறந்தான்றசீர்நிலவியநம்மை
எவஞ்செய்கின்றவேந்திழையவர்தோளெனவெண்ணித்
தவஞ்செய்கிற்பபோல்வேயினந்தடவரையோங்கும். (௩க)

காதலித்தியாம்வளர்த்தவக்கனங்குழைதன்னைக்
காதலித்தனன்கந்தவேளெனக்கழல்வேடர்
போதுகொண்டவன்பொன்னடிபோற்றிடினென்றுங்
கோதுதீருமென்றுறைவதுபோல்வதக்குறிஞ்சி. (௩உ)

கழுகுகேழலோடடிமுடிகாண்பரும்பரனைக்
கழுகிரண்டுபூசனைபுரிகவின்மறைச்சிலம்பும்
பழுதிலாதவன்பரிந்துசோதிரந்தவான்பதியு
மெழுகடற்புவிசொலச்சிறந்திலங்குமக்குறிஞ்சி. (௩௩)

2

ஆவியாயெமக்கன்புமாங்குகப்பிரானமருங்
காவிமால்வரையுங்கன்னித்தமிழினுக்கென்று
மேவியேவடவெல்லையாய்ச்சிவனும்வேங்கடமும்
பூவிலோங்கியசிறப்பதப்புவிபுகழ்குறிஞ்சி. (௩௪)

சேவலங்கொடிச்சேவகன்றேமொழிவள்ளி
மேவரும்புகழ்மேவவேட்டிருக்கொடுமேவி
நீவிழைந்தளிதேனொடுமிடியெனநிகழ்த்தும்
பூவருஞ்சிறப்புடையதப்பொருவில்சீர்க்குறிஞ்சி. (௩௫)

சோகமெய்தியதலைமகன்சுடர்த்தொடிதன்னை
ஆகமின்புறத்தழீஇயகமகிழ்வுறக்கணைய
சோகமென்மலர்வித்தினன்றூரகதக்கிளியோ
ஞுகமெங்கணுமெனைநனிநாறுமக்குறிஞ்சி. (௩௬)

மாயனாதியர்வழுத்தவெஞ்சூர்க்கடல்வறப்பச்
சேயவேல்விடுசேயுறைசேண்வரையுலகம்
பாயவார்வமொடறைந்தனம்பாற்கடற்பரமன்
மேயசீர்வனவளமிவணறிந்தவாவிரிப்பாம். (௩௭)

## முல்லை.

ஏவையுடற்றியவிழிவேயிரண்டுபுரைதருமிணைத்தோட்
பாவையர்கொங்கைக்குடைந்துபாற்கலசம்புறங்கறுக்கும்
கோவைநிகர்வாய்சங்கங்குலவுறுகையார்நாசி
ஆவையினங்கதற்கிணையாவணிகுமிழ்தான்மணந்துவக்கும். (௩௮)

அண்டரெலாமிகப்பரசவணிமலைத்தருகாயாக்
கொண்டமரரரிசாரூபத்தவர்போற்குலவுதலான்
அண்டரெலாமிகப்பரசவம்பொன்செய்மணிமாடங்
கொண்டதொருவைகுந்தவாழ்வினதாங்கோதில்வனம். (௩௯)

கயக்குளங்கயம்வருந்தக்கைத்தானைவிடுத்தோம்பும்
புயற்குளங்கழிமகிழ்ச்சிபுரிபுனிதைமுற்பிறந்தோன்
முயற்களங்களுமுறைமைமுயலினந்தாமிகமுயல்வான்
செயற்கருந்தோழமைகொண்டுசிவனுதலொத்துளதம்மா. (௪௰)

நங்குலத்திலோங்கொருமானுருப்புணர்ந்துநாகணையான்
செங்கைபிடித்தனளென்றேசெந்திருவென்றிளமான்க
ளங்கறிந்தேயவனுறையுமிருக்கைதனையணைந்துய்வான்
றங்குவபோலவண்சாருந்தகையதெனநிலவிடுமால். (௪௧)

கொன்றையின்பூங்கொருபூவைகுலவியோங்கிடும்பரிசன்
றன்றிணர்புரமட்டானடிமலரைவழிபட்டு

மன்றவன்பால்மர்வேமெனநாடுமால்பொருவ
தன்றியெவனுரைப்பதுவாந்தகையதறிவாற்றுணியின். (௪௨)

வேலைவயினடைகிடந்தான்விண்டுவென்பாரதற்கேற்ப
மாலையணிகுழலாயர்மாதரகந்தொறுமண்மிப்
பாலைப்படையையிழுதைப்பருகுவானின்றனனேற்
சாலவிதன்பெருமிதந்தான்சாற்றுகிற்பாரெவரேயோ. (௪௩)

மருந்துநிகர்மொழிமடவார்மணிநகையுமலர்முல்லை
திருந்திழையாரென்றான்றுஞ்செறிந்துவளர்ப்பதுமுல்லை
பெருந்திருவாழ்மருமத்துப்பெம்மான்காத்ததுமுல்லை
அருந்திறலானெனமையாண்டகழகமரும்வடமுல்லை. (௪௪)

வலிதாயதீயவினைவந்தடைந்தார்க்கிவணசற்றும்
வலிதாயநெடும்பதிநன்மாதங்கந்தனைத்தொடர்ந்து
புலிதாயகொடியணித்துப்புராரிதிருவருள்காட்டுங்
சலிதாவாவகையெனையாள்கவின்முல்லையாங்கனையும். (௪௫)

கான்காட்டுமலர்த்துளவக்கரியமுகின்மருமத்து
மான்காட்டும்பெருமானூர்வாழ்முல்லைவளனுரைத்தாந்
தேன்காட்டுந்தருவைந்தின்றிருநிழலமர்ந்தென்றும்
வான்காட்டும்புகழ்காட்டும்வளரிமருதங்களைவாம். (௪௬)

## மருதம்.

சொல்லரும்பெருமையேய்ந்தவைந்தருவினீழல்
எல்லையினிதிமுன்னாயவெனைத்துங்குற்றேவலாற்றச்
செல்லனகுழற்காடேந்துந்தெரிவையர்நடிப்பக்காணூஉ
மல்லல்வான்புரக்குந்தோன்றல்காப்பதுமருதவேலி. (௪௭)

அசட்டுறுமுனிவன்றந்தகடும்பெருஞ்சாபநீப்பான்
விசிட்டவாகமத்திறேனும்விதிமுறைபிறழாவாற்றான்
வசிட்டனும்பரவுமுல்லைமாநகர்ப்பரனையேத்தி
அசட்டினையகல்வானன்னமருமாமருதவேலி. (௪௮)

வேறு.

கற்றைவார்சடைமுனிவன்கழறுநெடுஞ்சாபத்தாற்
பொற்றலநீத்திவணொருபாற்புணரியடைந்திடுதேனு
பற்றிகந்தோன்றனக்குதவும்பான்மையினைமிகக்கருதி
யற்றமின்முன்னுறவுமதித்தரும்பாலிபாய்வருமால். (௪௯)

பெருவருவாயஃகினுமப்பெருந்தகையோரடுத்தவர்க்குத்
தருகுவரேதேனுமெனுந்தகுமொழிபோற்பாலியும்வான்

ஒருவருவாயலிங்கியுடன்றிடும்வற்கடத்தடைவான
பொருவருதன்னுடல்கீண்டபொழுதம்வளஞ்சுரந்திடுமால். (௫௦)

பதவியன்மெய்ப்பண்புடையார்படைத்தபெருஞ்செல்வமெலாங்
கதமிலவர்கைக்கொள்ளுங்கடனேபோற்பல்காலு
மதகரியினீருரியான்வண்ணமெனவருபாலி
மதகளைத்துஞ்சென்றுதவுமாண்புடைத்தாகியதம்மா. (௫௧)

நமையுதவும்பெருமானைநயந்துவழிபடன்முறையென்
றுமைவெருவவருங்கம்பையொடுசேய்நந்தினிபாலி
இமையவரும்பரவிச்சீரெய்துபிறநதியெனைத்தும்
அமைதரவந்தன்பினடைந்திடும்பரிசாயினவன்றே. (௫௨)

வேறு.

என்னையாளுடையவனுலகுயிரெலாம்புரப்பான்
மன்னுசீர்க்கருணையினவவடிவமாய்மருவுந்
தன்னமில்சிறப்பெனவொருபாலிதண்பழன
நன்னலஞ்சிறந்திடப்பலகால்களாய்நடக்கும். (௫௩)

வலஞ்சிறந்திடும்பணாபலசத்தியாய்மருவி
நலஞ்சிறந்திடுமுயிர்க்கருணைண்ணியதேய்ப்பத்
தலஞ்சிறந்திடவருமொருபாலிதான்றணவாக்
குலஞ்சிறந்திடுங்கால்களாய்ப்பலபடக்குலவும். (௫௪)

வேணிலைப்புயல்கொடுசெருவென்றதுவேண்டி
யானநற்கருவியின்முழக்கமைத்ததுமான
மானமள்ளரார்ப்பொலியொடுவயங்குதண்ணுமையின
பாணிகழ்ந்திடுமொலியும்விண்ணிடைப்பரந்தெழுமால். (௫௫)

பொறிசெறுத்தமாண்பினரெனப்புலித்தலமதணி
ணிறைவளர்தருபாலிபன்மடைகளைநேடிச்
செறியவேமள்ளர்சென்றுதீம்புனலினைமுழுது
நெறிகடந்திடாவணமகன்பணைவயினிறைப்பார். (௫௬)

வெங்கடாவினையூர்பவன்வெருவரவுழுநர்
தங்கடாவினைநிரைநிரையாத்தலந்தன்னு
லங்கணீடியபண்ணைதொறுவலங்கொட்டி
யெங்குமோங்குறுங்கம்பலையேய்ந்திடுமாலோ. (௫௭)

சேறமைந்திடுசெறுவினுட்டிடங்குரன்மள்ளர்
வீறமைந்திவண்விளைகெனவேந்தனைத்தொழுது
வேறமைந்திடுநென்முளைவித்துநர்வித்தி
நாறமைந்திடுபதமெனநாட்கொடுவைப்பார். (௫௮)

பரம்பரன்றனைப்பத்திசெய்பான்மையார்தம்பால்
நிரம்பவன்பினாலணுத்துணைநீட்டினுமஃது
பரம்பநற்பயன்பயப்பதுபோற்பழனத்து
வரம்பிலாதுசெஞ்சாலியும்வளம்பயந்திடுமால். (௫௯)

வேறு.

செழியதிருப்பாற்கடலிற்றிருக்கண்வளர்வான்றனக்குப்
பழுதுபடாமுன்னேனுப்பகருமொருபெருமிதத்தா
னொழிவருஞ்சீர்மருதநணியோம்புவனென்றுளத்தந்தப்
பிழைதபுநல்லுறவெண்ணிப்பெருகிவரும்பெரும்பாலி. (௬0)

தான்பெற்றபெரும்பேறுதரணிமுற்றும்பெறுமென்பான்
வான்பெற்றமெய்ப்புலவர்வழங்குகிற்பாரதுகடுப்ப
ஆன்பெற்றநெடும்பாலியாற்றினெடுநீத்தமெலாங்
கான்பெற்றமதகனைத்துங்கைக்கொள்ளக்கடந்திடுமோ. (௬௧)

மதகினடந்திடும்வெள்ளம்வயலொருங்குபுகுந்தெய்த
இதமலிமள்ளர்கள்பொறையினேய்நிலமாமகளனந்தன்
விதுவனையநிறந்தன்பால்விளங்கியவத்துழியேந்துங்
கதமலிவான்படைக்கலமாங்கலப்பையைக்கொண்டனர்நடந்தார். (௬௨)

கோலக்காலனூர்தியெனக்குலவியகடாப்பியலின்
நிலைத்தவானுகங்கிடத்திநிலவேர்க்கானள்ளமைத்து
நலக்கமேழியினுனியைநணியிடக்கையுறப்பற்றி
விலக்கருஞ்சீர்மள்ளரெலாம்வியன்பொன்னேர்பூட்டுவரால். (௬௩)

கூற்றுக்கோலையைவிடுக்குங்கோவேந்தைமுடிசூட்டுந்
தாற்றுக்கோல்கைக்கொண்டுதறுகட்கடாத்தெழித்து
நீற்றுக்கோமளமேனிநிறத்தவயல்சூழிகுளமா
யேற்றக்கோக்கவிப்போக்கின்யாண்டுமுழுதநர்நாளால். (௬௪)

கரம்புதிருத்தியகளமர்கழனியெலாங்கங்கரிந்து
நிரம்புவரைமேலுயர்நிறுவிமேட்டினையொழித்துப்
பரம்புமிசைநணியிவர்ந்துபல்லூழிகாலமெலாம்
இரும்புவனந்தலையெடுப்பவிழுதெனநன்னிலஞ்செய்வார். (௬௫)

பொருப்பரையன்றவப்பாவைபுனிதனிடந்தனைத்தணந்து
விருப்பினொடுமெய்தவரும்வியன்மருதப்பிரதாயந்
திருப்புகழென்றொருவருமச்செந்நென்முளைவெண்ணென்முளை
நரத்திடைக்கொண்டிந்திலனைக்கைதொழுதுவித்துநரால். (௬௬)

கலங்கியநெஞ்சரையுண்மைகாட்டித்தான்றெளிவிக்கும்
இலங்குநன்னூலாசிரியனெனவிலனெய்தியநின்ற
கலங்கனீர்தெளிந்துவரக்கண்டுமற்றைநாள்கவிழ்த்துப
பலங்குலவுநீர்பாய்ச்சப்பரிந்தொழுகும்பாலாறு. (௬௭)

நிலவியவெண்முளைபசந்துமுதிர்ந்துபினின்றிந்தோறும்
இலகுமொருசிவசத்திகலைமகளிர்திரையோடு
மலகில்சீர்மலைமடந்தையாகியிருந்திடல்கடுப்பக்
குலவுபூம்பழனத்துக்குறித்தோங்கவளர்ந்திடுமால். (௬௮)

நாறனைத்தும்பறித்தமையநன்கெடுத்துப்பரப்பரனும்
வேறுபடுமுயிரனைத்தும்வீற்றுவீற்றுறுபோகப்
பேறுபுவனந்தோறும்பெரிதணையவிடுப்பதுபோல்
வேறுபடநடமுயன்றுமிக்கோகையெய்துவரால். (௬௯)

நடமுயன்றபோழ்தத்துநாறுநணிசெழித்திடலும்
இடனுடையபயிரூன்றியெழச்சாலக்களையெழும்பக்
கடிதுகளமார்கள்பருவங்காட்டுதலுங்களைகளைவா
னடையலாயினர்விழிவேலாறறுக்காலாட்டியரே. (௭௰)

காமருமாமயிற்சாயற்கனங்குழையார்கலசமுலை
யாமெனவுநன்சரும்பியங்கையெனமலர்ந்ததொரு
தாமரைபற்றியகளைபத்தைத்துமுட்சரத்தென்ன
நாமமிகுவாரவர்கணடுங்களர்சொற்றிடவற்றே. (௭௧)

வண்டினமற்றந்நலார்முகமலரெனறடைகிற்பக்
கண்டவர்கைக்கொண்டோச்சக்காந்தளெனப்பிற்செறியும
கண்டனையமொழியனையார்கானடைகற்றிடவணைந்த
புண்டரிகத்தனமவர்நூபுரவொலிக்கேங்கிடுமன்றே. (௭௨)

கட்காமுற்றயின்றுகளைகளையவருங்கடைசியர்பால்
உட்காதவெழுந்தவளைநணியலைப்பவொருவந்தம்
வெட்காக்கள்ளினுங்காமம்விளைத்தபெருந்தீமையிதென
றுட்காவெங்களைகலாதுலாவிநணிதிரிதருவார். (௭௩)

சேங்கயலினினங்கண்டுதெரிவையர்கண்ணென்றுலைவார
பங்கயங்கண்டிதுமுகமாம்பதுமமெனநின்றயிர்ப்பார்
அங்கயலில்வராலினம்பார்த்தவர்கணைக்காலென்றயிர்ப்பார
மங்கையர்பால்வைத்தமனமயலுறுமோசிறியோர்க்கே. (௭௪)

வாயாம்பல்கண்டவர்கள்மலராம்பற்களைகலார்
சேயாம்பன்மலர்கண்டுதிருமுகமென்றுளமயர்வார்

வேயாந்தோளிணைக்கலசவியன்முலையார்தருமன்பாம்
பேயான்மொத்துண்டுழல்வார்பெரிதுலைவுறைப்பதுவோ. (எரு)

நன்றிமறப்பதுநன்றன்றென்றுரைத்தநாவலன்வாக்
கொன்றிடப்பதுகருத்தினுள்ளியவாறெனமேக
மன்றுதவிசெய்தமைக்காவச்செந்நெற்பயிரெனைத்தும்
ஒன்றிவானுறவோங்கிநின்றுசெழித்திடலொக்கும். (எசு)

பணியுமாமென்றுமிவண்பெருமைபணிசெய்யாமை
அணியுமாந்துணிவியந்துசிறுமைபெறுமுறைமானப்
பணியில்வளர்பயிரனைத்தும்பணியாமையிறுமாந்து
மணிமுதிரவன்னவையம்மருங்குபணிதலைத்தேற்றும். (எஎ)

அரியென்னைக்கிளந்தோதுமதற்கியையக்கட்டமைவித்
தொருவனையேயென்றுரைப்பவுயர்போரிட்டிடுமன்னர்
பரியகடாப்பிணையலிட்டுப்பரப்பிப்பாரிடைமிதிப்பித்
தரியனைநீக்குத்தூற்றியடைவிற்றுங்கொடுத்தனரால். (எஅ)

தொகுத்ததற்பினளந்தாறிற்சேறன்றுகடமையினொன்று
பகுத்தரசன்றனக்குதவிப்பைங்கரும்பின்கட்டியொடிம்
வகுத்தகுழியினின்வளர்வமரந்தருவமுதலேனை
மிகுத்தவைபண்டியிற்கொணர்ந்துவிளங்குவனடைவதொறும். (எகூ)

வேறு.

நச்சியேகம்பமோணகாந்தன்றளிகடவுட்
சச்சபாலயமநேகதங்காவதங்சவினுங்
கச்சிமேற்றளியெழிற்காயாரோகணமென்ன
வைச்சவான்றளிபலவுடையதுமற்றம்மருதம். (அ0)

பிள்ளையாரருட்பாட்டொருபெண்ணையாக்கியசோர்
தள்ளரும்புகழ்ப்பெரும்பதிதகைமைசால்வல்லம்
உள்ளநாடியகுரங்கணின்முட்டமல்லூறல்
எள்ளருஞ்சிறப்பெய்தும்வான்றலத்ததம்மருதம். (அக)

தேசுலாவுவெண்பாக்கமெய்திகழ்திருப்பாசூர்
மாசிலாதவர்வாழ்தருமாகறல்கள்ளில்
பேசுவான்புகழ்பிறங்குமாற்பேறெனலாய
ஆசிலாத்தளிபலவுடைத்தலகில்சீர்மருதம். (அஉ)

மலைபயந்தமாமரகதமேனியாமடந்தை
நிலவுலாவியநீள்சடைநின்மலனீக்குச்

சுலவுநல்லறஞ்செயத்துணிந்தெய்தியதென்னிற்
குலவுமிம்மருதச்சிறப்புரைப்பதென்குறித்தோ. (௮௩)

## நெய்தல்.

எவ்வகைச்சுவையெய்துதற்கிருக்கையதன்றி
யெவ்வகைப்பெருநதியெலாமெய்துதற்கிடனும்
பவ்வமிங்கரசெனக்கொடுசிறந்தபச்சிமத்தோன்
செவ்விதிற்புரந்திடுதிணைவளஞ்சொலச்சிறிதோ. (௮௪)

சிவனைநீங்கியத்தேத்தவர்செய்திடுஞ்சிறப்பாற்
பவமகன்றவர்பராவியபராபரையெல்லாப்
புவனமீன்றவள்மகவெனவளர்ந்திடும்பொலிவா
னவமகன்றவத்திணைவளனியம்புதற்கெளிதோ. (௮௫)

சுருங்கிடைப்பரத்தியர்துணைவிழிகண்டுநெடுஞ்சே
லொருங்குநீரிடைக்கரந்திடுமுவர்மிடற்றெழிலுக்
கிரங்கியேவளையினமிரும்புனலிடைக்கரக்குந்
தரங்கொண்மூரலுக்கமையெலாந்தரளமுற்சொரியும். (௮௬)

கோட்டுமாமுலைப்பரத்தியர்கோல்விழியிணைநேர்
கோட்டுமாகடல்வயிற்கொழுமலர்கொடுபரவக்
கோட்டுநீள்சுறுக்கடலிறைகாட்சியேகொடுப்பக்
கோட்டுஞாழலும்புன்னையுங்குலவுமச்சூழல். (௮௭)

கரவுநெஞ்சினர்படைத்திடுங்கடல்புரைசெல்வம்
விரவுவாரிலையவருழைமேவினரளிப்பத்
திருவநீள்பயனெய்துமித்திரைக்கடலதுபோற்
பருகலின்றிச்சிற்றூறலாற்பயன்பலபயக்கும். (௮௮)

மான்முதற்புலவோரமுதெழுந்தயின்மரபான்
மேன்முறைக்கணங்கவர்தமக்கருளும்வெள்விடையோன்
கான்மலர்க்கருச்சனைத்தொழில்கனிவினொடியற்றும்
வான்மியூரினையுடையதவ்வளங்கெழுநெய்தல். (௮௯)

வேயிலாகியதாயலைதொருவியன்புவியிற்
றுயிலாகியசங்கரன்றன்னுளமென்றுங்
கோயிலாக்கொடுகண்டுகோதகன்றசீர்குலவும்
வாயிலார்வருமயிலையுமுடைத்தவ்வான்சூழல். (௯௦)

மற்றைவான்றலமொழித்தெழில்விழாவளனோங்க
அற்றைநாள்கரத்துறுவரிநெருக்கியாண்டெழுதும்

கற்றைவார்சடைக்கண்ணுதல்காதல்செய்தமரும்
ஒற்றியூரினையுடையதவ்வொலிகடனெய்தல். (௧௧)

உளரிஞேயேபேருருவுமிங்கொன்றுமிலாத
காரணன்றனைக்கனிந்தருச்சனைத்தொழிலியற்றிப்
பாரிலென்பவம்வீட்டியபைங்கடம்பணிவோன்
போரிமாநகருடையதப்பொருவில்சீர்நெய்தல். (௧௨)

சிலையெடுத்துமுப்புரந்தனைச்செற்றசேவகனிங்
கலையெடுத்துழக்கெறிகடன்மீனகப்படுத்த
வலையெடுத்துவந்தனைந்தனனெனினம்மால்வலைஞர்
நிலையெடுத்தொருநாவினிங்குரைப்பதெந்நெறியே. (௧௩)

எயிறுடைக்கொடுங்கராத்திடையிவர்கடலிறைவன்
வெயிலின்முற்பனியெனவிருவினையெலாமேகச்
சயிலவில்லியைவழிபடச்சார்ந்தனனென்னும்
வியனிலந்தனைக்கூறினும்பாலையைவிரிப்பாம். (௧௪)

## பாலை.

நீங்கரும்புகழ்நீலிகோட்டங்களுநிரந்தெப்
பாங்கரும்முறப்பனிவரைதருமடப்பாவை
மாங்குயின்மிழற்றமலைதன்கூறெனமதித்துக்
கோங்கரும்பினைகொன்றையானுருவெனக்கிளத்த. (௧௫)

சுருக்கமின்றியெப்பொருளையுஞ்சுடுகின்றதீர்த்தாய்ப்
பெருக்கமேதரும்பெயலஃகும்பெட்பதாயுயிரின்
வருக்கமேயுறைதற்கொலாவன்மையானெய்த
அருக்கனும்மகல்விசும்பினின்றகல்கிலான்போலும். (௧௬)

மாதர்மென்முலைநிகரெனவழுத்திடுங்கோங்கு
மாதரம்பயிலதரநேராமிலவமுமிங்
கோதுமந்நலாரடியிணையொறுத்திடாவண்ணந்
தீதில்பஞ்சியாற்செல்வுழிக்கவறெறச்செய்யும். (௧௭)

கார்பொருங்குழற்கன்னியைப்பழிச்சியேவென்றி
போர்செய்கிற்பவர்பெறும்பரிசெனப்புகல்சுரத்தில்
வார்பெறுந்துணைமுலையவளுறைதரமலருழ்த்
தேர்பெறுங்கிளைவாகைநின்றெங்கணுமியையும். (௧௮)

பாடலம்புகழ்மருவுபண்ணம்பணைத்திணையவாய்
பாடலம்மிதுகாறுமென்றுழவர்தாம்பழிச்சப்
பாடலம்பலமலரிணையூழ்த்திடும்பண்பாற்
பாடலம்பெருப்பான்மையினிலகுமப்பாலை. (௯௯)

கார்வரக்கடுங்கனலினுற்றெறுத்திடும்பாலை
நேர்வழிச்செல்வார்பசியினன்னீர்பெறுதலைய
ஏர்பெறுங்கருணையினிசைந்தீகுதலேய்ப்பச்
சீர்பெறுங்கனியாமலகஞ்செறிந்துதவும். (௧௦௦)

நியதியைக்கடப்பாரெவர்நீணிலத்தென்னல்
நயனுடைப்பெருங்கல்விசேர்நல்லவருணர்வான்
வியனெடும்பகற்பொழுதினுமேவியகபோதம்
உயவெறுங்கொடுங்கல்லினைகொண்டுயிர்வாழும். (௧௦௧)

மாலைவெண்மதிக்குடையவன்மலரம்புதொடுக்கும்
வேலையிற்பணிமொழியவர்மெல்கிவைவேலோன்
பாலையந்தணந்தவனொடும்பரிவினோடேகும்
பாலையின்சிறப்பெம்மனோர்பகருதற்பாற்றே. (௧௦௨)

பகுத்தநானிலத்தைத்திணைவளத்தையும்பார்மேற்
றொகுத்துமேலவருரைத்தவாசிறிதுசொற்றனமான்
மிகுத்தவத்திணையொன்றினொடொன்றுமேன்மயங்கல்
வகுத்தறிந்தவாவறைவதுமரனருள்வழக்கே. (௧௦௩)

## திணைமயச்சம்.

ஆலைவாய்க்கரும்பட்புகைபுடலெனக்கருதி
நீலமாமயிலினஞ்சிறைவிரித்துநின்றாடுங்
காலையாய்ச்சியர்கையடைமத்தொலிகேட்டுச்
சோலைவானரத்தினங்கொடுவரியெனத்துளங்கும். (௧௦௪)

மீனமேய்ந்திடுஞ்சிமையமார்வெற்பிடைச்சுனையின்
மீனமேய்ந்துநின்றுகளுமால்வியத்தருகொன்றை
தானமேயெனப்பொன்றரத்தகைமைசால்பழனத்
தானதாமரைக்கையினன்றேந்துவதம்மா. (௧௦௫)

வேழவொண்கரும்பருந்திடும்விலங்கல்வெற்பமரும்
வேழநல்லினமாணிளங்குழவியைவிரிநீ
ராழியங்கணப்பரத்தியரளிப்பமுத்தினங்கண்
மேழகத்தகரோம்பிடைச்சிறார்விழைந்திவார். (௧௦௬)

வங்கமேய்கடல்வாரிவாயமுதினைவழங்கிப்
பைங்கண்மாத்தினைவளம்பெறுகுவர்பரத்தியர்மா
தங்கவேழத்திண்கோட்டினையெயினர்தாந்தரக்கொண்
டிங்கண்மாமருதச்சடைச்செந்நெலையளிப்பார். (௧௦௭)

துயிலினங்கியத்திடைச்சிறுமீனினங்குறித்தங்
கயிலகின்றிடும்பறவையையோப்புமஞ்சாயன்
மயினிகர்த்திடுநுளைச்சியர்செவிக்கிசைவழங்குஞ்
செயலைநாடியமுல்லையச்சிவனுமைபொருவும். (௧௦௮)

ஈட்டுமின்னனீவளனெலாமேய்ந்தநற்றொண்டை
நாட்டகந்தனைவிடாதபேரன்பினிஞடிக்
கூட்டமாயபல்கிளையொடுபொலியாங்குடினை
வேட்டுமேவியநகர்வளஞ்சிறிதிவண்விரிப்பாம். (௧௦௯)

நாட்டுப்படல முற்றிற்று.

---

# நகரப்படலம்.

பூமேவுபொழின்மேவும்வடமுல்லைப்புனிதநகர்புவனத்தென்றுந்
தேமேவுநகரினேழினுஞ்சிறந்தகாஞ்சியெனத்திசைபோய்நின்ற
கோமேவுநகர்க்கணித்தாக்கல்லினிறகரிந்தோனுட்குழைந்திட்டேத்து
மாமேவுநகரமெனக்கொளக்கிடந்ததெனினதன்சீர்வரம்பிற்றோ. (௧).

இறையணிந்தகங்கைநதியெவற்றினுமிக்கதிகமெனவிசைப்பர்நாளால்
இறையுருவாநந்திவரைவயிற்சுரபிதருஞ்சிறப்பானேய்ந்துதோன்றும்
அறைதருபாலியின்வடபான்முல்லையமலன்படிவமரசர்கோமான்
இறைமலிவானோச்செய்தியிருந்ததெனினதனிருஞ்சீரியம்பற்பாற்றோ. (௨)

மனைமாண்புக்குரியமடமாதர்தமிடைக்கென்றும்வசைதீர்கல்வி
புனைமாண்புபெறும்புலவோர்கொடியுவமமெனப்புகன்றுபொலிவர்நாளால்
நனைமாண்டமலர்க்கோதையுமையப்பேர்கொடுமருவுநலத்தானென்றுஞ்
சினைமாண்டபொழின்முல்லைநகர்ப்பெருமையொருநாவிற்செப்பற்பாற்றோ.()

வேறு.

கல்லையோர்சிலையெனக்கொடுகாமருபுரமூன்
றொல்லைவாளியினெய்தவனுறைதருமுலப்பின்
முல்லைவாயவன்றரவிபமருச்சித்தமுறையான்
முல்லைநாண்மலரெய்திநல்லளியினமுரலும். (௪)

பைந்தொடிக்கைமாமடந்தையர்பணிமொழிமிடறு
நந்தொடிக்கெனநாட்டுவர்நரலைவைப்பிடைமற்
றந்தமைக்குழலாரியல்காட்டுபுவணைந்து
சிந்தைதான்மகிழ்ந்தோகையிற்றோகைகள்சிறக்கும். (௫)

நாரணன்றனதாண்மலர்கண்டிடநாடித்
தாரணிக்கணிங்குணர்கிலாத்தன்மையிற்றனக்
காரணத்தினம்மாயவனுறைதருங்காணிற்
பூரணத்திருவருளினோங்கியதெனப்பொலியும். (௬)

நான்முகப்பிரானம்பணூர்நாண்மதிச்சடிலம்
வான்முகத்துத்தம்முருக்கொடுகாணுணுவழக்காற
றேன்முகத்தடந்தாமரைச்செழுமலர்நெடுந்நீக்
கான்முகத்தவைவீழ்வனகடுக்குமவ்வன்னம். (௭)

வேறு.

துன்னிகர்தருமாமுல்லைத்தனிநகர்மாடமெல்லாம்
பொன்னுடையார்விரும்புபுகழ்மகட்கிருக்கையன்றிப்
பன்னருங்கலைமகட்கும்பதுமைக்குமாரனுக்கு
முன்னியவறத்தினுக்குமொழிபரங்காகுமன்றே. (௮)

நல்லதோர்வேள்விசெய்துநாகநாடெய்துவாருக்
கெல்லவிர்மணிப்பூணருமிணைமுலையரம்பைமாதர்
புல்லியபோகமீவர்புண்ணியப்பிறப்பிங்கெய்த
வல்லவர்க்கென்றுநல்கும்வளத்தினாற்சிறக்குமுல்லை (௯)

மாகநன்னகரமென்பார்வானவருறைதலான்மற்
றோகையினுதவுஞ்செல்வமோங்கலானளகையென்பார்
போகிநன்னகரமென்பார்போகியெய்திடுதலானென்
ணாகநின்றிறைஞ்சு முல்லைநகரிணையாருமாதோ. (௧௰)

தலம்புகழ்சிறப்பினோங்குந்தண்டமிழ்முல்லையொப்பா
நிலம்படர்சீர்த்தியெய்துநீணகரின்மையானற்
குலம்படுபிறப்பினோங்குங்குவலயமாதரெல்லாம்
பொலம்படுமுல்லையென்னப்புகல்வரெஞ்ஞான்றுங்கற்பான். (௧௧)

பனிமதிமிலைகோடீரப்பண்ணவன்பரிவிற்றன்சேட்க்
கனிகழுன்னுவநல்குமக்கயிலையைப்போலாது
கனிவொடணிகங்கட்குங்காவலாந்தொழின்மைபூண
மனமகிழ்ந்துதவுநீரான்வயங்கிடுமுல்லையென்றும். (௧௨)

ஒருமணியுடையவானோருலகமுங்கடைகிற்போருக்
கருமைசால்வளங்களெல்லாமளித்திடுமினியமுல்லை

பெருவிளைவஃகும்வற்கடத்தினிற்பெயலென்றேத
அருமையாமணியினீட்டமளித்தலானவிருமாலோ. (கங).

காவுடைப்புலகஞ்சாலக்கனிந்தறம்புரிவார்க்கன்றித்
தூவிலின்புதவாதென்றுந்தானறத்தாற்றிற்கொண்ட
பூவையைக்கொன்றுபோகம்புல்லியர்தம்பாற்கொண்ட
பாவகாரிக்குமுத்திப்பயன்பரிந்துதவுமுல்லை. (கச)

வேறு.

இனையமுல்லைமாநகரிடையியம்புமூவகையாம்
எனநிலாவியநகரினிலியம்பிடுபுறமாக்
கனைகடற்புவியுரைத்திடுங்காமருநகரை
அனகனல்லருளாற்சிலவறிந்தவாவறைவாம். (கரு)

## புறநகர்.

வேறு.

புலமன்னுமன்பர்புரிகின்றதொண்டிற்கிரங்கிப்
பலமன்னுலகிற்பரிவிற்பரிசாகநல்குங்
கலமன்னுகொங்கைக்கருமாரிபுராரிதன்னோர்
வலமன்னுமுல்லைவளனேனைழவகுக்கவற்றே (கசு)

சொல்லைப்பொருளைக்கடந்தோங்கியசோதியன்பி
னெல்லைக்கணின்றவிறைதாணியநாடிநல்கு
முல்லைக்கொடிவைத்தவணீடியமொய்த்தகானந்
தொல்லைத்தனிவிண்ணவர்தந்தருத்தோன்றன்மாணும். (கஎ).

மாணிக்கவல்லிமவான்றவமாண்பின்வந்த
ஆணிக்கனகநகவல்லிவலத்தினம்மான்
நாணச்சியேதன்கொடுஞ்சாபந்தணப்பவச்சிர
பாணிக்கருட்டிறைத்தருப்பான்மைமேவும். (கஅ)

மைநண்பனென்னவழுத்துஞ்சுடர்வானவன்றன்
கையற்றவன்பினொடுதொட்டகமலவாவி
உறைசெய்யின்மாமாயவன்றன்றிருவுந்தியிற்று
மறையங்குபூத்திட்டொளிர்கின்றமைமானுமாலோ. (ககூ)

உருவொன்றுவாவும்பரியேழொருபாகனுந்தான்
மருவும்பதமில்லிதனக்குவகுத்தமாற்றூர்
பொருமாறிவணெய்துநிசாசரரென்றுபோற்ற
வருமாறுருமாறியதென்னவயங்கும்வாவி. (உ0)

ஒருகூறுமையாட்குதவும்பரன்றன்னையோதிப்
புருகூதனவன்கழற்றாமரைப்போதிறைஞ்ச

வருவான்முகிலினைமாண்பிணிறுத்தன்மானப்
பெருவாரணத்தின்றிரளானபிறங்குமோர்சார். (௨௧)

மூலக்கனுழநடனஞ்செயுமுக்கண்மூர்த்தி
நீலக்களத்துஙிமலன்கழனித்தமேத்தும்
வேலைக்கிறைவாழ்க்கையதாகவிளங்கும்வாரி
சாலப்புறமேய்வனவாம்பரிசாருமோர்சார். (௨௨)

ஒருவெம்பரிதியெயிறேயிழந்தும்பரானைப்
பரிவிற்புகலெய்திடப்பன்னொருவர்க்குமேலாந்
தரமெய்தியதன்மையைநாடித்தயங்குகோடிப்
பரிதித்தடந்தேர்க்குழுஉக்கொண்டதோர்பான்மையோர்சார். (௨௩)

உருமுங்கடனஞ்சமுமூழிவெந்தீயுமேனை
மருவித்தகவோருருக்கொண்டதுமானவெம்போர்
புரியும்பல்படைக்கலமானபொரக்கொடெய்துங்
கிரியன்னபுயத்திணைமள்ளர்கெழீஇயதோர்சார். (௨௪)

வண்டானமதக்களிவேழமும்வாவுமாவுஞ்
செண்டாடுவெளித்தலனுஞ்சிறந்தெய்திநாளும்
கண்டார்வியப்பெய்திரதத்தொழில்கற்கும்பொற்பும்
உண்டாயவிலாழியிற்சேதகமோங்குமெங்கும். (௨௫)

மயிலைக்கொடுமல்லைக்கொம்பிடைவாழ்குரங்கை
முயலைப்பொருவெஞ்சரந்தன்னைமொழியுநீரான்
வயவெங்கதியிற்புறங்கொண்டனவாவயங்கு
நயநன்னெடுவாரியின்வாம்பரிநண்ணுமோர்சார். (௨௬)

வில்வேல்வளைவாண்முதலாம்படைமேவியன்பிற்
சொல்வாய்மையிற்கற்குநர்தந்தொகைசொல்லுநீராற்
கல்லானசிலைக்கொடுமுப்புரங்கட்டழற்பெய்
நல்லானுருமேயவுருத்திரனென்னநண்ணும். (௨௭)

அம்பொற்கிடுகுவளைவேலம்பலகைகூர்வாள்
செம்பொற்கலனையொடுகூவிரஞ்சேர்ந்துநின்ற
வெம்பும்படையேனவியந்துஞற்றுந்திறத்தார்
பம்பும்பரிசாயினநல்லிடம்பாங்கரோர்சார். (௨௮)

கலவித்தொழிலூடியமாதர்கழற்றிவீசு
நிலமுத்தமாலைசெல்வார்நீள்கழறகைப்ப
இலைமாமுகப்பைம்பூணணியேந்துபொற்றேரினாரும்
பொலனூர்தியன்றிப்புகார்வீதியில்முல்லையுள்ளால். (௨௯)

சிலைவாணுதனங்கையரூடல்செய்போதெறிந்த
விலையேயறுமுத்தநகுமாலைபுயத்தவீழ
மெலிவாளொருமெல்லியளென்றுவிடலைநாடி
யுலையாமனத்தான்வெறுக்கானங்ககலகில்லான். (௯௦)

வானேந்துநீண்டமதிவானதிருடிசூலந்
தானேந்திநின்றதணிமாநகர்நின்றதோற்றந்
தேனேந்துகொன்றைச்செழுந்தொங்கல்மிலைந்தவேணி
மானேந்துமெந்தைவயங்குந்திறன்மானுமாலோ. (௯௧)

வெய்யோனிகர்மாமணிமாடமேன்முற்றமெய்தி
மையார்நெடுங்கண்மடமாதர்கழங்கையேந்திக்
கையாருமாடல்கண்டேகவின்வானோர்கணங்களெல்லா
மெய்யாமரமாமகளிரெனமேவுவாரால். (௯௨)

நன்முல்லையென்னுநளிர்பாலிநகரநீதான்
வன்முல்லையையெய்திலைபொன்னிவளத்துநின்றும்
என்முல்லையெனுஅநின்றனைநெய்தலையெய்தியென்று
தென்முல்லையைநாடியநின்றுசிரிக்குமன்றே. (௯௩)

பொருளாவணவேய்ந்திடுமாவணப்பொங்கர்வீதி
மருவாடவர்புக்குநின்றேசொல்வழங்குதோற்றம்
ஒருநன்முழக்கமெனப்பலபாடையொருங்குமேவப்
பொருவில்வளத்தேத்துமுற்றுங்குப்பொலிதன்மானும். (௯௪)

கடமாமலையாதிகளோங்கிக்கவின்சிறந்த
இடமார்புறமாநகரந்தனைமீண்டுரைத்தாம்
கொடியாடுமாடமுதலானகுலாவியோங்கும்
இடைமாநகரமிறையோனருளானிசைப்பாம். (௯௫)

## இடைநகர்.

புளினமம்பொற்செய்குன்றுபுனிதமென்மலர்ப்பூஞ்சோலை
நளினநீரோடைவாவிநன்மணிமாடமின்ன
ஒளிபெறவிளங்குமாற்றுனொருகுணதிசையின்வேந்தன்
நளிபெறுநகரமென்னநாவலருரைக்கமேவும். (௯௬)

வள்ளையொண்பாட்டையோதிவயங்குபொற்சுணமிடிப்பக்
கள்ளவிழ்கூந்தனல்லார்கவினுடையிளநீர்சிந்தல்
தள்ளரும்பாரந்தாங்கித்தளர்நடையிட்டுச்செல்வார்க்
கெள்ளருநீர்வேட்கைக்காங்கீந்திடுமுதவிமானும். (௯௭)

வேலையைவென்றகண்ணார்விழைந்துறைபவிக்குமாட
மாலைநன்மகாரினோடுமற்றவர்க்குடையநால்கு

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

வேலையும்புணையும்வாவிமென்மலர்ச்சோலைமேவும்
வேலையவ்வானோர்வாழ்க்கைவியனிலநகரமொக்கும். (௫௮)

சேல்விழியார்பணிக்கிற்செய்கழங்காடக்காந்தட்
கோல்வளைக்கைபுகக்செங்கோலமுமரிபரந்த
கோல்விழிபுகமைஞ்ஞின்றகோலமுந்தோன்றுந்தோற்றஞ்
சால்பினர்ச்சார்ந்தார்க்கென்றுமடுத்ததன்மையினைச்சாற்றும். (௫௯)

விண்ணரமகளிரோடுவியனிலமடந்தைமார்கள்
எண்ணியமணியினாம்மனைகளையினிதினாட
நண்ணியாங்கெய்துந்தோறுநயனங்களிமைத்திடாமை
மண்ணுறைவாரென்றன்னோர்மலர்க்குழலிகடேற்றும். (௬௦)

வம்பலர்த்தொடையல்வேய்ந்தமைந்தருங்கோதைமாரும்
உம்பல்காரிருளாக்கொண்டவொருவனொடொருத்தியொப்ப
இம்பரிற்கலக்குங்காட்சியேயும்வெண்மாடத்தும்பர்க்
கும்பமாமதியந்தன்னைக்கும்பம்வந்தணைதல்காட்டும். (௬௧)

மஞ்சணிமாடத்திந்தமாநகர்வாழ்க்கைசெய்வார்
எஞ்சலில்செல்வமிகையெழினலமேனவெய்தும்
விஞ்சியசிறப்புநோக்கிவிள்ளொணாவழுக்காறுற்ற
நெஞ்சினரன்றேவிண்ணோர்நீடுகண்ணுறங்காரென்றும். (௬௨)

நஞ்சணிமிடற்றுப்பெம்மானயந்துவாழித்தலத்துக்
கிஞ்சுகவாயினார்தங்கேழ்கிளர்முகத்தைநோக்கி
விஞ்சியமதியப்புத்தேள்வியத்தகுகளங்கனேனென்
றஞ்சியநெஞ்சினன்றேயந்தரத்திருந்தானம்மா. (௬௩)

சந்திரன்றவழ்ந்தேயோங்குஞ்சமணியமாடஞ்சாரு
நந்தலில்சீர்த்திமேவுநன்னகர்தனையெய்தி
இந்திரன்குறையிரந்தானென்பதுகேட்டிங்கன்றோ
அந்தவானவர்துறக்கமந்தரமாயிற்றம்மா. (௬௪)

ஒண்மணிமாடமென்றுமொண்மையிற்றிகழ்தலானிவ்
வெண்மலிநகரின்வாழுமேந்திழையவர்கண்மேனி
விண்படுமின்னுப்போலவிளங்கிடுமினையாரைம்பான்
மண்படுமுகிலேயென்னவயங்கிடுமரபின்மாதோ. (௬௫)

நாவரும்வளஞ்சாலிந்தத்தனித்திருமுல்லைமேவும்
பாவரும்வெறுக்கையுள்ளாரென்பதெனிறைவன்றன்பான்
மேவருமுமையுமாங்குவிழைந்துநல்வலஞ்செய்சார்பாற்
பூவருஞ்செல்வமொன்றேவிரும்புவர்புகலினன்றே. (௬௬)

தவஞ்செய்வாருறையுமுல்லைத்தலத்துறைமாந்தரெல்லாம்
அவஞ்செய்வாரல்லர்முக்கணுண்டகைமுனிவன்வேண்ட
நவஞ்செய்மாமுனியைநல்குநலத்தினனங்கண்வாழ்வார்
எவஞ்செய்வெங்கலியைமாற்றியெழில்சிறந்திருப்பரன்றே. (சஎ)

வில்லணிபுருவமாதர்வியன்மொழியுண்கணந்தேன்
நல்லமரடையுங்காதுநயத்தகுமிடறும்வள்ளை
அல்லமர்குழலார்வாயுங்கொங்கையுமாகுமாம்பல்
சொல்லருமனையார்தங்கடிறத்தினைச்சொல்லற்பாற்றே. (சஅ)

ஒருவிலினுலகமெல்லாமொறுத்திடுமனங்கணை
இருவிலினுலகமெல்லாமிடருறச்செய்வாரன்னார்
ஒருமலர்கைக்கொண்டன்றியொறுப்பயாவரையுமார்வ
மருவிருமலராற்சாலமலக்கலாற்சிறந்தார்நல்லார். (சகூ)

பட்டமாடியநன்மாதர்பானடைகற்குமாற்று
ணிட்டமாயுறையுஞ்செங்காலனத்தினமினையாரெக்க
ரிட்டநல்லடிச்சுவட்டினைமுற்றுக்கண்டிங்கேங்க
எட்டிவீசியதரங்கந்தகாதெனவிருந்தலைக்கும். (ருo)

மண்ணுலகினிற்சிறந்தமாந்தர்வாழ்தொண்டைநாட்டின்
கண்ணுறைநகரின்முல்லைக்கவினகர்சிறந்ததந்த
வெண்ணருஞ்சிறப்பினேய்ந்தவெழினகர்மேவிநின்ற
உண்ணகரிந்தவாறெம்முடையவனருளாற்சொல்வாம். (ருக)

## உண்ணகர்.

நஞ்சயின்றவனடிமலர்நாடகிலாதார்
வெஞ்சமழக்குறுபிறவிவேலையைக்கடவாமை
இஞ்சிருந்துழல்கிற்பதுகடுப்பவிஞ்சியைச்சார்ந்
தெஞ்சுறாதிவணிலகிடுமிரும்புனலகழி. (ருஉ)

அஞ்சொலேழைபாகத்தவனங்கணனமலன்
கஞ்சனாதியர்காண்பரும்பரம்பரன்கடவுள்
விஞ்சுசீர்நினையாதவெய்யவர்கடம்பொல்லா
நெஞ்சினாழமேயென்னலாநெடும்புனலகழி. (ருகூ)

இடங்கொளுங்கிடங்கிருஞ்சுறாவொடுவரால்கமடம்
இடங்கர்ஞெண்டுமாமலங்கெழிற்கெண்டைமுன்னுப
உடங்கியுள்ளுலாவுவனமேலுலாவுவமுறையான்
வடங்கொள்பூண்முலைவிலைமடந்தையரையேமானும். (ருச)

இளையதண்கிடங்கெழில்குலாநொச்சியினோடு
தளையொவாப்பிரிவின்மையாற்சார்ந்துநின்றொட்டார்
இளையவேற்றுநின்றிடும்பரிசாணிஞ்சிதனக்கு
விளையமெய்ப்படைத்துணையிதென்றுரைத்திடமேவும். (௫௫)

தாயனுன்றனைப்பரமெனத்தான்கருதாமை
மேயவாதமேபுரிந்திடர்காண்பதுவிடுத்துத்
தூயமாமுடிகாண்பதுதுணிந்துநாடற்கு
மாயனேயுருவெடுத்ததுமானுமிவ்விஞ்சி. (௫௬)

அஞ்சிறைப்புளோதிமவுருக்கொண்டனக்கொடியோன்
பஞ்சின்மெல்லடிபங்கினன்பான்மதிச்சடில
மிஞ்சுகாண்கிலான்பல்லுருவெடுத்ததேயுறழ
மஞ்சினீண்மதிற்புறத்தனவயங்குவெங்கொடிகள். (௫௭)

வேறு.

பாடலொலியும்யாழேர்த்திப்பலவாங்கருவிதமைத்தழீஇ
யாடலொலியுமன்புதருமணங்களுர்போலாடவரோ
டேடலொலியுந்தெரித்ததற்பினுறுநல்லின்பச்சுவைவிளையுங்
கூடலொலியுமற்பகலுங்குலவுஞ்சேரிகுறித்துரைப்பாம். (௫௮)

நிகமமென்னவொருசிலர்க்கேநீடுபயனல்காத்திருவா
சகமதென்னயார்க்குமதுதன்னையுதவுமுறைபோலப்
புகரில்குலமாமகளிர்மணம்புரிந்தார்க்கின்பர்கரல்போலா
தகனந்தெவர்க்குந்தருங்கணிகையார்தஞ்சீரென்னளவிற்றே. (௫௯)

மன்னுஞ்சுரபியதுதரும்பால்வயங்குபொன்வட்டிலிற்பெய்ய
என்னரேனுமதுகொள்ளவியையுந்தன்மையதுகடுப்பப்
பொன்னினணிபூண்விலைமகளிர்புரிந்துநல்குமிதழ்நறுந்தேன்
என்னரேனுமார்ந்துகிற்பாரெனினிங்கிவர்பேறிசைப்பதுவோ. (௬௦)

வேறு.

ஏவைவென்றகண்ணேந்திழையார்பெருஞ்செல்வர்
காவைவென்றகைத்தலத்தரும்பொருளெலாங்கவர்ந்து
பாவையென்னமற்றவருளம்பதைப்புறச்செயலாற்
பாவையென்றிடப்பட்டனர்பாண்மையினம்மா. (௬௧)

அரிவைமாரெச்சில்யாவருமருந்துகின்றமையால்
புரியுமேபொதுமாதலாமானுமாலறையின்
மருவும்வன்னியோவனுகுறிற்சடுமற்றம்மடவார்
ஒருவர்தம்மையேயணுகுறுவிடினுமற்றதுவே. (௬௨)

வேறு.

பகலிரவென்றிடும்பான்மையின்றியே
அகனமர்ந்தணைகுநரின்னரென்முறை
தகவுறவின்மையாற்றகையணங்கனார்
திகழ்தருசேரிவானகத்துச்சேரியே. (௬௩

அந்தணர்முயங்கினுமரசர்வாணிகர்
முந்துறமுயங்கினும்பெரிதுமுன்னியே
பிந்தினர்முயங்கினும்பெட்பின்பாக்குவார்
எந்தரமெவர்க்குமின்பாக்குமெந்தைபோல். (௬௪

பாடலாற்பாற்படுகருவிபம்பநின்
றாடலாற்காண்பவர்க்கதிவிநோதமே
நீடலாற்பொருளுடையாரைநேடியே
கூடலாற்பொருளெலாங்கொள்ளைகொள்வரால். (௬௫

மூற்குறியாதவர்முயங்கிக்கூடினும்
பற்குறிநகக்குறிபரிவிற்றான்பெறீஇச்
சொற்குறியுடையவத்தோகைமார்வதி
கிற்குமச்சேரியைக்கிளத்தற்பாலதோ. (௬௬

சிலர்க்கிவண்பயன்படுசெய்கையாரினும்
பலர்க்கிவண்பயன்படுவார்சிறப்பரென்
றுலகுரைசெய்வதின்றோர்ந்தியார்க்குமே
நலனுறப்பயன்படுவாரிந்நங்கைமார். (௬௭

மங்கலம்புனைந்ததம்மகிழ்நன்வானுறின்
மங்கலநீங்குவர்மரபினீங்கவர்
மங்கலமென்றுமேவயங்குநீர்மையா
னெங்கிவர்தவத்தையாமெடுத்துரைப்பதே. (௬௮

அம்மையினறம்புரியாற்றன்மேயினார்
செம்மையினொருசுவர்க்கஞ்சென்றெய்துவர்
இம்மையினிவர்தமையெய்தினார்க்கிரு
மெய்ம்மலிசுவர்க்கமேவிழைந்தீவாரரோ. (௬௯

வேறு.

மடவாரன்பகன்றார்க்கேவானலந்தான்றருகுவது
கடனுமென்றவன்றனைக்கனிவினிருள்வாய்த்தூது
விடுநீயென்றவண்புரியவிடுப்பித்தமாதுவரு
மிடனுமக்குலமானாரெழிற்சிறப்பென்னளவிற்றே. (௭௦

மகமொருநூறுஞற்றுநர்க்குமதிமுகமண்டலமகிழ்ந்து
சுகாணியீமொருசசியித்தோகையருமகனுடி
மகிழ்வினொடுபொருளீயவல்லுநர்க்கேதருவரெனி
னகனிலத்தினன்னவளொப்பாமென்பதிழிவேயோ. (௭௧)

ஊருணியினறலென்பதுதவுநீரதுமானக்
காருணியமீதூர்ந்துகவறெறுத்திட்டின்பசுகம்
பாரிடையேயளிக்குமெழிற்பாக்கியஞ்செய்பரத்தையரா
மாரமுதமொழிமாஞரவர்புகழென்னவேயோ. (௭௨)

கல்விவேண்டுநர்க்கென்றுங்கலைமடந்தைமரபாயா
தொல்லையினிற்புணர்கிற்குமோரகரநன்ஞறுமக்
கல்விவேண்டுநர்க்கென்றுங்காதலித்துமரபாயா
தொல்லையினிற்புணர்கிற்பாருவர்தொழிலுஞ்சிறிதேயோ. (௭௩)

வண்டினெச்சின்மதுவேலைமறையோன்வாயெச்சிலவி
யொண்டழலினெச்சிலெனவொழித்திலரால்வைமானத்
தொண்டனெச்சிலுகந்தான்றன்றாய்க்கழற்றொண்டுளாற்றுநர்வாய்த்
தொண்டையெச்சிலுகவாதார்தொழிலென்னேதொழிலென்னே. (௭௪)

முன்பருத்தங்கவர்ந்தொருமாமுனிவனுக்குச்சுகமீந்து
பின்பவனைவெளிவிடுத்தபெருந்துறைமாமணியான
முன்பருத்தங்கவர்ந்தெவர்க்குமுறையின்றிச்சுகமீந்து
பின்பவரைவெளிவிடுக்கும்பேதையர்பேதையராயோ. (௭௫)

வேறு.

விழுமியமறையினோடாகமமெல்லாம்விழையவோதி
வழுவிலான்மார்த்தத்தோடுவயங்கியபரார்த்தமாகப்
பொழுதுமும்மையுந்தப்பாதுபுராந்தகற்பூசையாற்றுந்
தொழுதகுமாதிசைவர்சூழ்ந்துறையிருக்கையோர்பால். (௭௬)

சமயமாறையும்வளர்த்ததலைவியைமணந்தமுக்கண்
விமலனைம்முகத்தினின்றுமேதகத்தோன்றியென்றுஞ்
சமயமாதியமுத்தீக்கைசார்ந்தவர்க்குஞற்றியோங்கும்
அமலநன்னெறியார்வாழுமகன்மனையாங்கணோர்பால். (௭௭)

ஓதுதலோதுவித்தலொண்பொருளீதலேற்ற
லேதமிலங்கிவேட்டல்வேட்பித்தலென்னுமாறு
தீதறுதொழிலராகித்தேவருக்கவியூணல்கு
பீரதுமறையோரென்றுமன்னுமாளிகையுமோர்பால். (௭௮)

வைகறைத்துயிலெழுந்துமடைப்பள்ளிபுனிதமாற்றிச்
செய்கரைநன்னீராடித்திகழுமாடையைப்புனைந்து

வைகலுமனையினெய்திவான்புழுக்கலைச்சமைத்தே
யைகனிந்ததிதிக்கூட்டுமரிவையர்குழூஉக்களோர்பால். (௭௯)

இழிபொருடன்னையேற்றேயுயர்பொருளீதலென்றும்
பழிதபுமிறையோன்றன்மைபகருமற்றவன்பேர்கொண்ட
விழுமியசிறப்புக்கேற்பவென்றுலகங்கைக்கொண்டு
செழுமுவிண்பகைவர்க்கியுங்கேண்மையபரிக்கையோர்பால். (௮௰)

விரவியவமைச்சரொற்றர்வியன்புரோகிதரேயுள்ளாக்
கரவில்சாரணர்படைக்காவலரெனக்கழறநின்ற
தரமலிகுழுவோரைந்துந்தம்புடைதழூஇநிற்ப
உரவுநீர்ஞாலமெல்லாமோம்பியேவாழ்நரோர்பால். (௮௧)

நட்பினொடந்தணாளர்நன்மருத்துவரேசாலப்
பெட்பொடுவரவுரைக்கும்பெருமிதமுடையார்நாளு
மொட்பமாமடைத்தொழிற்சேயுரியவரென்னப்பேசுந்
திட்டபமாமுறுதிச்சுற்றஞ்சேர்ந்துவாழ்கிற்பாரோர்பால். (௮௨)

மறையினைமரபினோதல்வயங்குபல்வேள்வியாற்றல்
துறையினையெந்தனோன்றுந்தானேயும்பல்பலவையயிற்றல்
வறியவர்க்கீதன்மாற்றார்வயப்படைபொருதலென்ன
அறுதொழின்மேற்கொண்டோங்குமனையர்தமறுகுமோர்பால். (௮௩)

உரைதருமரசர்வீதியோங்கியமாடமென்றுங்
கரைதருமேருவோடுகலாஞ்செயுர்விந்தமொக்கும்
விரைதருகற்பகக்காமேவுபொன்னாடுசேரக்
குரைதருவான்றணப்பக்குலவுசோபானம்போலும். (௮௪)

வடபுலக்கோமானென்னவயங்கிருநிதியம்வாய்ந்து
தடமணித்தொகையும்பொன்னுந்தயங்கிரசிதமுந்தான்பெற்
றிடனுறப்பிறீட்டந்தம்மீட்டம்போலெண்ணிநாளுங்
கடமைபூண்டொழுகும்வாணிகத்தவர்வாழ்க்கையோர்பால். (௮௫)

எதுசென்றேயெய்திக்கேட்பினினந்தனைச்சுட்டாதொன்றுங்
கதுமெனவுரையாரொன்றைக்கழித்துநாள்கழித்திட்டொன்றைப்
பொதிதரச்செய்துமெண்ணிற்பொருந்திஞாலன்றியிம்மி
யதிகமாவளியாவாழ்க்கையவர்மனையாங்கணோர்பால். (௮௬)

வேட்டலொருமுதலோதல்வியன்பசுவினங்காத்தோம்பல்
ஈட்டலொண்பொருளேற்றேருக்கீதலென்றின்னவாய
நாட்டியதொழின்மேற்கொண்டுநயந்தெவருங்களிப்ப
வேட்டுவாழ்வணிகர்வாழ்க்கைமேவியமறுகங்கோர்பால். (௮௭

வேறு.

தோன்றுறுபுலமையர்தோமிலாதென்று
நன்றுவள்ளைக்கவிநயந்துசூடுவர்
துன்றியகுவளையாந்தொடையனுமே
யொன்றியதோளினருறையுளாங்கோர்பால். (அஅ)

மறையவராதியாவருத்தமுக்குலக்
கிறைமைசால்புடையவரெவர்க்குமேவல்செய்
முறையுவர்களைகளுமுந்தித்தோன்றிய
பொறையவர்சிறப்பியாம்புகலற்பாலதோ. (அகூ)

தேருமந்துநாடொறுஞ்சிந்தைநாடியே
வருவிருந்தோம்புவர்வணிகர்பின்னவர்
கரியமாமுகிலையுங்காக்குநீரரோற்
றரணியிலவர்புகழ்சாற்றலாவதோ. (கூ0)

ஒழுக்கமேய்ந்திகுலமென்னறகோங்கிய
ஒழுக்கமேய்ந்திடுதலானுடையநாயகன்
கழற்கிவணுரிமைபூண்காட்சிமேவலான்
வழுத்துமக்குலநிகர்மற்றுமில்லையே. (கூக)

வேறு.

உயர்ந்தவாறேடுமிங்ஙனிழிர்தபெண்ணிழிந்தபெண்ணே
டுயர்ந்தபெண்ணிவர்தம்முள்ளேயோங்கியகரவிற்சேரத்
துயர்ந்திவண்டோன்றினின்றேரனையோர்தொடுநீர்வைப்பிற்
பெயர்ந்துவாழிடங்கள்பல்லபிறங்கிநின்றிடுமங்கோர்பால். (கூஉ)

வேறு.

பழுத்தகேள்வியரியற்றியகாவியபனுவல்
கொழித்தவின்சுவைநிகண்டுகற்றேர்ந்துகோதகன்ற
எழுத்தினோடுசொற்பொருளணியாப்பெனவியம்பும்
வழுத்தபுத்தவைந்தியலுணர்வோர்மறுகொருபால். (கூங)

ஆசுநன்மதுரங்கவிசித்திரமரிதாப்
பேசுகிற்கும்வித்தாரமாப்பிறங்கியகவிதைத்
தேசிலங்கியபுவியிடைச்செப்பிடவல்ல
மாசனத்திரள்வயங்கியமறுகவனொருபால். (கூச)

மாதுபாகனூர்மரபினிற்சிலாதமாமுனிவன்
காதலன்றனக்கருளியகரிசிறீர்பனுவல்
வேதமெய்ப்பயன்மொழிபெயர்த்தருளுமெய்கண்டான்
போதநன்குணர்வோர்புகழிருக்கையங்கொருபால். (கூரு)

வரதனைத்தொழா நின்றுவைகறைதனிலெழுந்தாங்
கரிமலர்த்தடங்குடைந்தருங்கடனெலாம்புரிந்து
கரதலத்திணைமலர்பறித்தரன்கழல்பரவும்
விரவுதாசமார்க்கத்தவர்வியன்மனையொருபால். (௯௬)

பஞ்சசுத்திசெய்தருட்குறிபான்மையினிறுவி
நெஞ்சுநின்றுநீராளமாயுருகிநின்மலவி
பஞ்சிமென்மொழிப்பாவையோர்பங்கவென்றேத்தும்
விஞ்சுபுத்திரமார்க்கர்தம்வியன்மனையொருபால். (௯௭)

காலினைப்பிடித்தங்கியைக்கனன்றிடவெழுப்பி
மூலமேமுதலாகியமூவிருதலங்கண்
டேலுநல்லியமாதியெண்ணுறுப்பினின்வல்ல
சீலமெய்ச்சகமார்க்கர்தஞ்செழுமனையொருபால். (௯௮)

வையந்தன்னின்முப்பொருளுண்மைவகைப்படத்திரிபோ
டையமின்றளந்துத்தியிற்றெளிந்தவசமதாய்
வெய்யகண்விழித்துறங்கியமேதகுமார்க்கத்
துய்யர்மேவியங்குறைதருஞ்சூழன்மற்றொருபால். (௯௯)

மனையறந்துறந்திருகையேற்றொருமழவிடைமே
லனையினோடிலகியவருள்வாரிசேவடியைக்
கனிவினோடுளங்கருதியகாட்சியராகி
யினைதனீத்தமெய்த்தவத்தவரிருக்கையங்கொருபால். (௧௦௦)

இலகுத்தேசநல்லிலக்கணஞ்சோதனைதம்மா
னிலவுநூல்பலவனுவதித்தேதகநிறுவிச்
சலமுறும்பரபக்கமேகண்டிக்குஞ்சான்றோர்
பலருமேவியங்குறைதரும்பழமனையொருபால். (௧௦௧)

சமையநல்விசேடஞ்சமைதருநிருவாணம்
அமையுமூன்றனுட்டகுதியினாற்றுவவாற்றி
விமலனாரடித்தொழும்புசெய்மேதகுபெரியோர்
அமருமாமனைத்திரள்குழூஉக்கொண்டதங்கொருபால். (௧௦௨)

இலக்கியத்தினோடிலக்கணமெனைத்தையுமுணர்த்தும்
விலக்கரும்விஞ்சைசான்றமெய்க்கழகமுமென்றும்
இலக்குவாதமேபுரிகுநரிசைந்தமரிடனுங்
கலக்கமின்றிமற்றேனவுங்கவின்பெறச்செறியும்.

முல்லையின் முகைநிகர் தருமூரலுமேருக்
கல்லையேபொருங்கவின் பெறுபருப்புமோராறு
நல்லவான்சுவைக்கருணையேயாடியபிறவும்
அல்லொடும்பகலருந்துசத்திரம்பலவமையும். (௧0௪)

துயக்கின் முல்லைமாநகரொருசுடர்ச்செம்பொற்றகடா
வயக்கமாண்டது மாளிகையோளிமாமணியின்
வியக்குங்கோவைமற்றதனடுமணியெனவிழைந்து
நயக்குநாயகமாமணிநம்பிரான்றளியே. (௧0௫)

கயந்தனக்கருள்கருணையங்கடலமர்தளிசார்
கயந்தனக்கருகயனொடாசண்டலணியற்றும்
வயந்தநல்விழாவாட்டயர்வயங்கியேநிலவும்
வயந்தமண்டபம்வான்கதிர்முட்டவேமருவும். (௧0௬)

அளவையளவையுங்கடந்தவனமர்தளிப்புரிசை
யளவையென்னொருநாவிடையுரைக்கடங்கிடுமோ
தெளிவிசும்பினைமுட்டியேசென்றதக்கொடிக்கா
னொளிகதிர்க்கொருநிழலெனவோங்கிடுமாலோ. (௧0௭)

கல்லையேயொருவில்லெனக்கொண்டருள்காளை
ஒல்லையேயமர்ந்தோங்கியதளிக்குமுன்னென்று
நல்லவேந்தனையிபத்தொடுந்தடுத்திடுநலத்த
முல்லையங்கொடிமூவுலகேத்திடமுயங்கும். (௧0௮)

வேந்தன்வெல்களிற்றோடுவெரிநிட்டவைபோர்த்து
சாந்தநீறணிசங்கரனுமையினுடனவ
ஏந்துவெள்விடையேனையதளிகள்போலாதச்
சேந்தன்றாதைக்குத்தான்புறங்காட்டியேசெறியும். (௧0௯)

மாயன்றன்னடிகாண்பரும்வழக்கினைநிறையம்
மாயன்வைகியமுல்லையின்மரகதவிலிங்கத்
தூயதாகியபடிவொடுதோன்றியேசூலவிற்
பாயநற்சிறப்புணைத்திடவடங்கிடும்பரிசோ. (௧௧0)

படியிலாருயிர்பயந்தகாரணியெனப்பகரும்
கொடியிடைப்பெயர்குலவியவுமையமர்கோயில்
அடியர்யார்க்குமேயகவிருணீக்கியேயெய்தும்
படிகிலாவியசெனினகன்பகமமைப்பவோ. (௧௧௧)

அன்பரானவர்செய்திடுமரகரவொலியுந்
துன்பகற்றிடுநால்வர்சொற்றமிழ்முறையொலியும்
இன்பநல்கிடுமறையெலாமியம்பிடுமொலியு
முன்புவேலையினொலிக்கொருமுழங்கியையும். (௧௧௨)

நம்பனூருறைமுல்லைவாயிலினலங்கெழுமு
பம்புமூவகைநகரின்சீர்பரக்கவேவிரித்தாஞ்
செம்பொன்மாமலைவில்லிசேவடிக்கருணையினு
னம்புவிக்கணைமிசவனச்சிறப்பறைவாமால். (௧௧௩)

நகரப்படல முற்றிற்று.

---

# நைமிசப்படலம்

வேழவெண்மருப்பிரலையின்கோடுவெவ்வுயிர 023.
மாழையின்னவரம்பிலகொண்டுமாநிலத்தைப்
போழுநற்றிரைக்கையினெடுத்தெறிதரும்புகழ்சால்
ஆழநீர்க்கங்கைக்கரையதாநைமிசக்காடு. (௧)

காட்டவல்லதுகறைமிடற்றிறைவனைக்கனிவி
னீட்டவல்லதன்னவனடிப்பத்திமையென்று
மோட்டவல்லதுவெம்பவமொருங்கெழிற்சைவ
நாட்டவல்லதுநலஞ்செறிநைமிசக்காடு. (௨)

அருக்கவல்லதுபிறந்தைநோயன்பினெஞ்ச
முருக்கவல்லதுமும்மலத்தொடர்பினைமுழுதுஞ்
சுருக்கவல்லதுகாமமுன்னுயகுழாமே
கருக்கவல்லதுகவின்செறிநைமிசக்காடு. (௩)

மாற்றவல்லதுவஞ்சகப்பிறந்தைநோய்வபங்கத்
தூற்றவல்லதுவைதிகசைவஞ்சொற்பயனைச்
சாற்றவல்லதச்சொற்பயன்றனைநனிசாற்றி
ஏற்றவல்லதென்றும்மெழினைமிசக்காடு. (௪)

பொன்னவாமலர்ப்புண்டரீகன்றனையணுகிப்
பன்னுநான்மறைப்பனவர்சென்றேத்துறப்பரிவி
னன்னவன்குசையானன்பினுருட்டிடமேனு
ளின்னகானகமேய்ந்ததேலிதன்சிறப்பெவனே. (௫)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

மாதாரர்முறுவலித்தலான்மலர்வனமுல்லை
போதுநீடியகுராவணைதரமலர்பொதுளும்
மாதர்மாதவிபாடநின்றரும்புவமராக்கட்
போதரும்பமாப்பழித்திடப்பூவலர்ந்திடுமால். (௬)

புன்னையாடலாற்பூத்திடும்பொருவில்சண்பகமே
அன்னதோகையர்நிழல்படவலருமாலசோக
முன்னர்நின்றுதைத்திடமலர்ந்திடுமுதுபாலை
தன்னைநட்டலான்மகிழுணத்தண்மலர்ததையும். (௭)

கரியும்வாளரியும்புலிப்போத்தொடுகலையும்
அரவுமஞ்ஞையுமஞ்ஞையுமோதியுமடைவே
பரிவினோடவணைன்பிணிற்செறிந்திடும்பரிசு
மருவுமென்பதம்மாசவர்பெருமையாம்வழுத்தின். (௮)

அரசுநின்றிடுமத்தியுநின்றிடுமகில்சந்
தொருவிடாதித்தியோங்கிடுமல்லிகையோங்கும்
மருவுமாதராருருவிற்கிணையெனவழுத்தப்
பொருவின்மாதவர்செய்வபோற்கதலியுப்பொலியும். (௯)

துன்னெநீத்தகண்டிகைபெரிடுநீறுசண்ணித்துக்
கன்னியோர்புடைமேவியசருணையங்கடலைப்
பன்னகாபரணன்றனையலதுளம்பரசா
நன்னலத்தவராவணமர்ந்துறைகுவர்நயந்தே. (௧௦)

கண்ணுவன்சதானந்தன்முற்கலன்விபாண்டகன்மெய்
நண்ணுறுமுக்கிரசீலன்போதாயனனலமே
யொண்ணுறெய்த்தவக்கபிலனன்றேங்குசவுனகன்முன்
எண்ணுமாதவரெனைவருமங்கணேய்ந்திருப்பார். (௧௧)

அன்னமாமுனிவோர்குழீஇயிருந்தனரான்றவர்தா
மன்னுமாமறைமகம்புரிதரமணிகண்டன்
றன்னருட்பரிசளிக்குமென்றுணாத்தமைதங்க
ணன்னெடுஞ்சிந்தைகொண்டினிதிருந்தனர்நயப்பான். (௧௨)

தவமலாதல்லதொருவருந்தாம்புரிகில்லார்
சிவமலாதொன்றுஞ்சிந்தனைசெய்கலார்தருமந்
தெவமிலாதநன்னெறியினரிகபரங்கருதார்
பவனசாதனமல்லதுபரிவினிற்புனையார். (௧௩)

மனையொழுக்கமதிகந்திடுமாண்பினார்மரபால்
கனிமறைக்குரியொழுக்கமேதான்புரிகிற்பார்

கனிவொடும்மகந்தான்புரிதற்குளங்கருதி
அனகன்சேவடிக்கன்பிறைனவருமணைந்தார். (௧௪)

வேறு.

இனையமாமுனிவீரெலாந்துவாதசவாருடிகமெனவியம்பாநிற்கும்
தனையனையமகம்புரிவான்றொடங்கியஞான்றதுகாணுந்தகையராகி
மனையறநீத்தறவொழுக்கினின்றமாமுனிவரருமறைவலார்வெஞ்
சினநெடுவேனிருபரொடாங்குச்செறியநெடுங்கானஞ்சிறந்ததன்றே. (௧௫)

அன்னஞான்றெழில்வாதராயணன்பாலொருமூவாறும்புராண
முன்னமுணர்மேதாவியெனப்புவிசொல்சூதனெனுமுனிவர்கோமான்
மன்னுசிவசாதனத்தனுயிருங்குண்டிகைதண்டுவயங்கக்கைம்மேற்
பொன்னனையதிருமேனிப்புனிதன்றன்றிருநாமம்புகலாநின்று. (௧௬)

வரக்கண்டசவுனகனேமுதலாயமுனிவரெலாமகிழ்ச்சிகூர்ந்து [ல்லாம்
பொருக்கெனத்தம்மிருக்கையினின்றிழிந்தெதிர்சென்றருக்கியமுற்புகல்வவெ
இருக்கொடுதாம்புரிந்தரியவாதனத்தினினிதிருத்தியெந்தாயின்று
தரைக்கணெமைப்பொருவுநரின்றென்றனரீண்டுனையெய்துந்தகைமையானே.

வேறு.

வேதநான்கெனவகுத்தமேதாவிபாற்கலைக
ளோதிடப்பெறுமெய்த்தவர்பிரானுமுண்மகிழ்பூத்
தேதநீத்தரும்மவைதனையெய்திடப்பெறுவா
ளியாதுமாதவஞ்செய்தனனென்றனனிசையால். (௧௭)

அன்னநல்லுரையறைந்திடக்கேட்டவவ்வறவோர்
துன்னருந்தவமேயொருதூயநற்படிவாம்
அன்னையேயனையாயடியேந்தமக்கன்பாய்
முன்னவன்கதைபலமொழிந்திருவினைமுடித்தாய். (௧௮)

அன்னகாதையுளவிர்பருப்பதமவிமுத்தம்
தன்னையேயுங்கேதாரமத்தனிக்கொம்பன்றாழ்கோ
கன்னமேகம்பங்கவின்பொழின்மயூரம்வண்டில்லைப்
பொன்னினம்பலம்புனிதமாராரட்கேசுரமே. (௨௦)

கழுகிரண்டிறைவனைத்தொழுங்காமருசிலம்பு
மழுவலான்மலையுருக்கொளும்பழமலைவயங்கும்
பழுதிலாவொற்றியூர்கொடும்பவம்பொடிபடுத்தும்
அழகன்மேவியசடாயுமாநகர்கசாரணியம். (௨௧)

வெண்கயம்வழிபாடுசெய்தியன் திருவெண்கா
டெண்ணரும்புகழ்மருவுசீகாழியெம்மிறைவ
னண்ணுமாமழபாடிகாளத்திநாவலர்சொல்
புண்ணியத்தலமாங்குடமூக்கெனும்புரமே. (௨௨)

இனையநற்றலமான்மியமியம்பினையுந்தேம்
புனிதன்வாழ்வடமுல்லையின்புகழ்பொருவிறந்த
தெனநிகழ்த்தினையெமக்கருளஃதெனவடிகள்
புனைமலர்ப்பதமேத்தியம்முனிவரன்புகலும். (௨௩)

மாலதிபுரமெனத்தகுவடமொழிவழங்க
ஞாலமேனலஞ்செறிந்திடுஞானகேத்திரக்கே
யேனுமான்மியமறிந்தவாவெனைப்பலவிளம்பி
மூலமாமலமொழித்துநாமென்றுபின்மொழிவான். (௨௪)

நாவிலுலிவணத்தலநவின்றிடப்பெற்றோர்
தேவராயினுமுனிவரேயாயினுஞ்சிறந்தோர்
யாவராயினுமிழிந்தவராயினுமியம்பிற்
காவிநேர்விழிக்கன்னியோர்பாகனைக்கலப்பார். (௨௫)

அத்தலந்தனையண்மியங்கமருவோருறும்பே
றெத்தனைப்பலவியம்புவதென்றரமன்முன்
முத்தனைப்பரிந்தோதியமுதிர்தவமொழியின்
மெய்த்தவேள்விசெய்மேதகுவிழுப்பயனுமால். (௨௬)

மிகைசெய்வார்வினைதபச்செயுமேதகுசமூவாய்
வகையினென்பயனன்னவன்மனுவினைமொழியின்
இகல்செயாதொழிவெய்திடுமென்பராலறனே
உகவையானுற்றொருவருஞ்சிறப்பினையுடையீர். (௨௭)

அன்னமாமனுவேள்வியையாற்றுபோதன்றி
மன்னுநான்மறையோதுமந்தணர்மனைவயினு
மென்னையாளுடையிறையவன்வாழ்தளிவயினும்
பன்னலாமெனத்துணிந்தனபழமறையெனைத்தும். (௨௮)

இத்தலச்சிறப்பிவணுமக்கெடுத்தியம்பியவந்
நற்றலத்தினுஞ்சீரியதாமெனுநான்கு
மெய்த்தமாமறையேலிதுவேள்வியிறுைய
உத்தமப்பயனல்லதிங்கெனைத்தையுமுதவும். (௨௯)

பேறலருஞ்சிவசாருபப்பேற்றினைப்பயக்கும்
துறையினையபீங்கில்லையாலறவணர்மேய

இறைமைசால்கயிலைக்கிணையாதலினீண்டே
யுறையுமெம்பிரானொடுங்கலின்மாதொடுமுவந்தே. (௩0)

அன்னமாத்தலச்சிறப்பினையறிந்தவாவிழைந்தீண்
டென்னையாளுடைக்குருபரனெழிற்கழலேத்திச்
சொன்னயம்பொருணயமிலாத்தொடர்பினாற்றொகுத்துப்
பன்னலாமெனத்துணிந்தனனவனருட்பரிசான். (௩௧)

இத்தலச்சிறப்பிளமதிக்கண்ணியாணிமவான்
பெற்றமாமலர்க்கொடியிடைபெருந்தவக்கொழுந்து
முத்தலம்புகழ்வியாதனுமெம்முதற்குரவன்
சொற்றிடத்தகும்பரிசினரல்லவர்துணையோ. (௩௨)

சொல்லுமிப்பதிதோமறுமுத்தியைப்பயக்க
வல்லதன்றியும்வயங்குமெய்ஞ்ஞானமும்வழங்கும்
நல்லகேள்வியாஞ்செல்வமுநல்குநாவல்லீர்
அல்லறீர்க்குமென்பதிற்சிறிதையமுமுளதோ. (௩௩)

இன்னநற்றலச்சிறப்பினைக்கேட்பவர்க்கென்று
மின்னறீர்க்குமாலிரவியேமுதலகோளிசைந்தே
யன்னர்வேண்டியவேண்டியாங்ககமகிழ்ந்தளிக்கும்
என்னினித்தலச்சிறப்பிடைவிடாதுகேட்டிருப்பீர். (௩௪)

என்னுஞ்சூதனையன்னமாமுனிவரர்யாரும்
பொன்னவாநறும்போதுகள்கொணர்ந்துபூசனைசெய்
துன்னரும்புகழ்மேயவத்தலச்சிறப்புவந்து
பன்னியெம்பவம்பாற்றிடவேண்டுமென்றிரந்தார். (௩௫)

என்றிரந்தமாமுனிவரர்க்கிருந்தவச்சூதன்
நன்றுகேட்டிடநாடினிர்நலங்கெழுமுல்லை
யொன்றுசீரொலாமுமையொருபாகனல்லருளால்
ஒன்றொழிந்திடாதுரைப்பலென்றுரைத்தன்மேயினனால். (௩௬)

நைமிசப்படல முற்றிற்று.

# புராணவரலாற்றுப்படலம்.

சீர்த்தமெய்யன்பெனத்திகழுநீரது
தீர்த்தனற்படிவெனச்செறியநிற்பது
பார்த்தனொடிகலியபருக்கைவில்லடிக்
கார்த்துளமகிழ்தருமமலன்வெற்பரோ. (௧)

பிரளயத்தருமணிப்பிறக்கங்கொண்டது
மருவுமந்தாரமார்வயங்கிநிற்பது
நிரைநிரைப்பறவையினீளமாவது
பொருவருங்கயிலையம்பொருப்பதாமரோ. (௨)

வானவர்வருக்கமேவயங்கிநிற்பது
ஏனகுவேத்திரமிலங்குகைத்தலத்
தூனமில்சிலாதரனோங்குமாதவ
மானவன்காவலினடங்கும்வெற்பரோ. (௩)

புனிதநீர்மேவலாற்பொருந்திமானினந்
தனைநனிதழுவலாற்றயங்கும்வான்மதி
புனைதலான்முடிமிசைபுராரிபோன்மெனக்
கனிவினோடுரைப்பதுகயிலைக்குன்றரோ. (௪)

இன்னதோர்குன்றிடையிகபரந்தனைத்
தன்னமின்றுயிர்க்கருள்சங்கரன்சிவன்
அன்னையொடினிதுவீற்றிருப்பவம்பிகை
முன்னவற்றொழுதிதுமொழிதன்மேயினாள். (௫)

தேவரிற்சிறந்தமாதேவநின்றனை
மேவினர்க்கருள்செயும்விரகவிப்புவி
யாவுமுந்நீர்புடைசூழுமேல்லையின்
தாவிலாதிருப்பதோர்தலஞ்சொலென்றனள். (௬)

அத்தலநின்றனக்கார்வமாதலின்
அத்தகுமாத்தலத்தமரவெண்ணினேன்
உத்தமநின்றனொடென்றுரைத்தனள்
வித்தகற்கன்பொடுவிமலைதானரோ. (௭)

மீட்டுமொன்றுரைக்குவாள்விபுதநாயக
நாட்டுசீர்க்கயிலையாநகத்துமன்பர்தந்
தேட்டுறுசிந்தையினூடுந்தேனுவின்
கூட்டத்தினுஞ்செறிகூவிளத்தினும். (௮)

தும்பைமாலனைத்தினுஞ்சோதியாமுன
நம்பகந்தனில்வருமரியமாமணி
நம்புசீரிரக்கைநன் கணியுமாதவர்
தம்புடையினுமிவர்தன்மையாயினும். (௯)

என்றுகூறியகயலிணையுண்கண்ணினாள்
தன்றிருமுகந்தனைத்தானுநோக்கியே
இன்றிவணீநினைந்திட்டயாவுமே
மன்றவாருயிருயும்வண்ணமாகுமால். (௰)

ஊழியின்மக்கினிதுவகைநல்குவ
தாழிசூழுலகினிலுண்டணங்குகேள்
தாழ்வறுதலமெழுசாசரத்தினோ
டேழிருமூன்றெனவியம்பலாகுமால். (௧௧)

அன்னவற்றுயிரத்தோடைம்பது
நன்னலந்தருதலநாட்டினுண்டுமற்
றின்னவற்றேழுநூறெண்பநற்றல
மன்னவற்றுறைஞ்சுஞ்சிறந்தவாமரோ. (௧௨)

அன்னமாத்தலப்பெயரறைகுங்கேட்டியால்
தன்னிகரிலாதசீசயிலமம்பல
மன்னுமாமறைவனம்வயங்குமொற்றியூர்
பன்னுசீர்க்காஞ்சியம்பதியதாகுமால். (௧௩)

இடைமருதெழிலவிருத்தமீர்ம்பொழில்
புடையுடுத்தவிருங்கோகன்னம்புண்ணிய
மிடைதருசந்தனச்சூழல்விண்டவழ்
கடிபொழிற்கவுரிமாயூரநன்னகர். (௧௪)

நாடவர்பழிச்சுசுவேதாரணநல்
வீடவர்க்குந்தரும்வேதவெற்பெழி
னீடுமாமுதுகிரிநிலவுமானைக்கா
ஆடகேச்சுரந்திருவருணையம்பதி. (௧௫)

வேடனூன்றரமிசைவியன்பொருப்புவெண்
காடுசீகாழிசாய்க்காடையாறுமெய்
நீடுசீதளபுரநிகழ்சடானனம்
பாடுசீர்க்குடந்தைதென்பரிதிமாபுரம். (௧௬)

பாலிமாநதிவடபாலின்மேவியே
நாலுமாமறைகளாறொடோதுதாய்

ஆலமர்களத்தெமக்கதிலிருப்புடைக்
கோலநீடியபதிகுலவுமுல்லையால். (௧௭)

அன்றியுமித்தலமலகிலூழியும்
பொன்றிடாதிருப்பதுபொருந்திவாழ்வதற்
கென்றுமேமனக்கிளர்ச்சியுமியைப்பது
குன்றுறழ்முலையினாய்கூறக்கேட்டியால். (௧௮)

அமரரேமுதலினர்க்கரியமங்கலஞ்
சமைதரச்செய்தலாற்றரணிமீதிவண்
கமையினாயொருகலியாணமாபுரம்
அமைதருபெயரினாலழைக்கலாகுமால். (௧௯)

பிரளயமெய்தினும்பெயர்கிலாதிவண்
மருவலான்மாலதிநகரமாண்பினாற்
றிரநகரெனப்படுஞ்சித்திகேத்திரப்
பொருவருபெயரொடும்பொருந்திநிற்குமால். (௨0)

முன்னுகத்திந்நகர்மொழியவீரிரு
நன்னர்யோசனையுடைத்தாகிநான்மறை
துன்னியபிருகுவின்பொருட்டுத்தூமணி
தன்னைநல்கலினரதனபுரப்பெயர். (௨௧)

மருவியேநின்றதுமற்றிம்மாநகர்
பொருவருதிரேதையிற்புகலுமோசனை
ஒருமும்மையாகியேயோங்கிக்கூவிளத்
திருமலிவனமெனச்சிறந்ததாமரோ. (௨௨)

அம்புவிதனிலிரண்டாகுமோசனை
இம்பரிற்றுவாபரத்திலகுமிந்நகர்
சம்பகவனமெனச்சாற்றன்மேயது
அம்பனவிழியையாமறைதற்பாலதோ. (௨௩)

ஓங்கியகலியினோரியோசனை
ஆங்கினிதமைந்துமாலதிவனப்பெயர்
தாங்கியநின்றதுநயங்குபூணினாய்
ஈங்கிறந்தோரெமதுருவமெய்துவார். (௨௪)

நற்கருமந்தனைநயந்துசெய்திடிற்
சொற்கிளர்கிளியனாய்தோமின்மெய்ப்பயன்
அற்கலின்றோங்குவாரங்குமேவுநர்
எற்பெறுவதுநனியெளியதாமரோ. (௨௫)

நின்மகன்முருகனுநெடும்பெருந்தவந்
தன்னியவசிட்டனேமுதலதோமறு
நன்னர்மாதவத்தருநவையில்கற்பினாய்
என்னைநாடியவரமெய்தினரோ. (உசு)

இத்தருமாத்தலமென்றுநாம்புட
வித்தலம்பலகையாய்மேவிநின்றிடு
முத்தமதலக்கொரோசனையினெல்லையி
னித்தனுமேவுமானிலவியேயரோ. (உஎ)

கடையுகத்தென்னடிக்கமலமேவுவார்
புடையுகந்தருளவும்புரிந்துமாமயி
னடைகெழுமமுதனைநாமங்கெய்துவேம்
கடிவிலாமெய்யிதென்றுரைத்துக்காட்டியே. (உஅ)

நந்தியைநோக்கினனைகநோக்கினன்
சந்தமாமறையொடுசதுமுகத்தனுஞ்
செந்திருவுரத்தனுந்தேவருந்தொழு
மந்தமிலழகனையடைவினெய்தியே. (உகூ)

வேறு.

ஓர்ந்தான்குறிப்பைநந்திபிரானும்பரான்றன்பரிசனமுஞ்
சார்ந்தார்வானோரொடுமுனிவர்தமையுநினைந்தானவர்கள்கனி
கூர்ந்தாராகியெம்பெருமான்குவட்டின்முகப்பேசென்றணைந்தார்
பேர்ந்தான்கயிலைவரையகன்றுபெரிதுவிடையூர்ந்தெய்தினனால். (ஙக)

அம்மையோடுமுல்லைநகரணைவானெய்தவயன்முன்னோர்
எம்மையுடையானிருமருங்குமேய்ந்தாரெழின்மாமறையுணர்ந்த
செம்மைநெறியோர்பிருங்கிமுன்னுஞ்செய்யதவத்தோர்துதிபரவக்
கொம்மைமுலையாள்கூறுடையான்குறைவில்சீர்த்தும்புருமுதலோர். (ஙஉ)

எடுத்தேயோதக்கணநாதரிறைவன்றிருமுனரமுழக்க
மடுத்தேமுழக்கக்கந்தருவரெழிற்கின்னரரேமுன்னாயோர்
தொடுத்தேபேரிபடகமுன்னாமியங்கள்முழங்கச்சுரிசங்க
மடுத்தேவாயிற்கடலொலியின்முழங்கவரமாதர்கணடிப்ப. (ஙஉ)

தூனதனடப்பையேந்திவரத்தருவினீழல்வதிவாருங்
கனிவின்முகமனியற்றவருட்கடலாமொருக்பாவியெழிற்
பனிவெற்புதவும்பாவாயப்பைம்பொனகர்தான்வடமுல்லை
எனநன்குணர்தியதன்சீர்த்தியானிங்குரைத்தறகாம்பரிசோ. (ஙங)

நீண்டவிழியாயிந்திரமாநீலவிலிங்கமாயமர்வோங்
காண்டற்கரியவொருநீயுங்கனிவினமர்வாய்கந்தனெனை

ஈண்டுமென்பான்வழிபாடிங்கியற்றுமேல்வைமானதத்தான்
மாண்டமணிநீர்ப்பொய்கைதனைவகுத்தானதனைக்கடையுகத்தில். (௩௪)

ஓரேழுயருங்கனிற்றிறைதானுள்ளத்தன்பாய்ப்புதக்கியதாற்
பாரோர்பழிச்சமங்கலவாவிப்பேர்கொண்டுபயனுதவும்
யாரேயானுமிமையோரையெண்ணிநின்றுவழிபடினற்
சீரேமலியுஞ்சாரூபஞ்சித்தித்திடவுமருள்கிற்பேம். (௩௫)

பரிவாரத்தொடமர்ந்தநமைப்பரிவாயணைந்துநமக்குரிய
பிரதோடத்துத்தரிசிப்போர்பேறிங்கெனைத்தென்றுரைப்பரிதாற்
கரிசேயகற்றுஞ்சனிப்பிரதோடத்திற்கனிவாய்க்காண்கிற்போர்
அரியார்விழியாய்நமையடையுமமைதியுடையாரென்றுணர்வாய். (௩௬)

பொருவிலந்தச்சனிப்பிரதோடத்தினம்மைப்புவனமெலாந்
தருமன்னுயாயிரந்தளவாற்சார்ந்துவழிபாடாற்றிடுவோர்
பரிவிலுமென்றுலகுரைக்கப்படுவாரிதனுக்கையமிலை
குரவமலர்ப்பூங்குழலாயென்றுரைத்துப்பின்னுங்கூறிடுமால். (௩௭)

போதுச்சீரெட்டினிஞென்றுற்புரிந்தாயிரங்கொண்டந்நாளின்
மதிச்செஞ்சடையானெனுநம்மைவழிபாடாற்றினெமக்குரித்தா
விதித்தமுல்லைச்செழுமலரின்மேலாம்பரிசெய்திலதென்றே
கதித்தமறைகளுரைக்குமெனிற்சுருதியுரைக்குந்தரமன்றே. (௩௮)

திருத்தங்குடையும்வேலையினுந்தேயந்தோறுந்திரிதரினுங்
கருத்தினினைந்துவழிபடுவோர்தமையெக்காலுமகல்கில்லேம்
மருத்தண்முல்லைமலர்நிருமாலியந்தானேனுமற்றதனை
இருத்திடினப்பொய்கையினுமஃதிம்மங்கலவாவியுமாமால். (௩௯)

என்றேகூறிவிடையினிழிந்திமையோர்பெருமானெம்பெருமான்
குன்றேயனையமுலைப்பாவாய்குறியினின்றுகரக்கின்றேம்
நன்றேநின்றன்மூர்த்தமதினலக்கச்சுருஞ்பபடிவமென
மன்றுடியமாமணிவதனநோக்கிவழுத்துமலைவல்லி. (௪0)

வேறு.

வரமொன்றுபெறக்கருதிமாமணிநின்றனைவிழைந்தேன்
பரிவினருள்செயவேண்டும்பரம்பரவிக்கேத்திரத்துப்
பிரியகிலாதுயிர்குயிற்றும்பெரும்பாவந்துடைத்தென்று
முரைசெய்யவரியநினதுருப்புணர்த்தல்கடனுனக்கே. (௪க)

அன்பினொடிந்நகரமர்வோர்க்கங்கணநீபருப்பதமா
முன்பதியிற்றருபேற்றின்முதற்பேறுதரவேண்டும்
என்பணியுமெந்தாயிங்கெக்குலத்தோரேயுறையின்
மன்புவியினின்கழற்கீழ்மருவவரந்தரவேண்டும். (௪உ

இதுவேயென்விண்ணப்பமெனமலையானின்றவெழில்
விதுவேபோன்முகத்தன்னைவிளம்பிடக்கேட்டிளமதியார்
மதுவேயுநறுங்கொன்றைமாமத்தம்புனைசடையான்
எதுவேயுன்கருத்தஃதாகென்றியம்பியுருக்கரந்தான். (௪௩)

அதுநிகழ்ந்ததிடபமதியாம்பூரணைக்கடகம்
சதிர்பெறுநற்சுளகுநாடண்மலரோன்முன்னாய
அதிநலத்துவானவருமுனிவருமார்த்தனர்மெய்மைத்
துதியிருக்கினொடுபரசித்துதைந்தவிருவினைகழன்றார். (௪௪)

மறையொழுக்கிங்கிகவாதமாதவத்தீரிந்நகரத்
துறுசிறப்பைபானோதுந்தகைமைத்தோவுமையாளோ
டிறைமைசானந்திபிரானெழில்வியாதனேமுன்னோர்
முறையினுரைத்திடவல்லாரல்லாரேன்றூதுலகில். (௪௫)

அருந்தவத்திர்கேட்டமையானறிந்தபடியுரைசெய்தேன்
திருந்தவறிவெனைத்துணையுஞ்செறியாதேனுரைப்பதுவோ
பரிந்திதனைப்படிப்பாரும்படித்திடக்கேட்டாருமிவண்
பொருந்துவர்மெய்ப்பத்தியொடும்புரைதீருமெய்ஞ்ஞானம். (௪௬)

திருப்பெறுவாகல்வியொடுஞ்சீர்பெறுவரன்றியுமத்
தருக்குறுவானவர்சித்தர்சாத்தியர்தாமரையோன்முன்
உரைத்தவர்தமருள்பெறுவரோங்குவர்மங்கலமென்றே
கருத்தனுரைத்திடுமறைகள்கட்டுரைக்குமிலையையம். (௪௭)

என்றுதனைமறந்திருந்தானிருந்தவத்துச்சூதமுனி
நின்றமுனிவரரவனைநெடிதிறைஞ்சமாமறையோன்
ஒன்றியவந்நான்முகன்முன்னுமாபதியைவழிபாடு
சென்றுபுரிந்தமையெமக்குச்செப்பென்னக்கட்டுரைக்கும். (௪௮)

புராணவரலாற்றுப்படலமுற்றிற்று.

## தலவிசேடப்படலம்.

நிருமலன்றனைப்பழிச்சியநெறிவழாஅச்சிறப்பிற்
பொருவினேமிமால்வனத்துறைபுங்கவர்க்கன்பா
யொருநெறிக்கணெஞ்சிருவியவுயர்தவச்சூதன்
கருதிமுல்லையின்மேன்மையைக்கட்டுரைக்கிற்கும். (௧)

காந்தம்வாமனமச்சம்வாராகமார்க்கண்டம்
வாய்ந்தசீரிலிங்கம்பவுடிகம்பிரமாண்டம்

எய்த்திடும்புகழ்ச்சைவமேகூருமமென்னப்
யார்த்தள்ளுடியோன்புகழினைப்படிப்பதிப்பத்தே. (உ)

நாரதியங்காருடம்வயிணவநவில்கிற்கும்
பாருளோர்சொலும்பாகவதம்பரத்தாமன்
சீரைநாடியேயுரைத்திடுந்திகழ்தருபிரம
மோருமெய்ப்பதுமங்கஞ்சன்புகழுரைத்திடுமால். (௩)

பிரமகைவர்த்தமாக்கிநேயம்பெரிதுரைக்கிற்
பரிதியைக்கனற்கடவுளைமுறைமையிற்பகரும்
பெருமைசான்றவெங்குரவனேபீடுறவகுத்த
அருமையீதெனப்பின்னுமீதவன்மகிழ்ந்தறையும். (௪)

பாருரைத்திடும்பவுடிகத்துத்தரபாக
நேரிலாச்சிவகேத்திரகண்டத்துநிகழ்த்துஞ்
சீரினோங்குமார்க்கண்டசங்கிதைநடுச்சிறந்தே
யாருமுல்லைநல்வனச்சிறப்படைவினினறையும். (௫)

மற்றதிற்சொன்னபடிசிலவகுத்திடுகின்றேன்
பற்றகன்றமாமுனிவிர்காண்கேண்மெனப்பரிவிற
கற்றைவார்சடைக்கண்ணுதல்புகழினைக்கேட்பி
னுற்றசிந்தனைவேறொன்றினுறுமையேயுயர்வாம். (௬)

இன்னமாதலமயிலையினெழில்வடமேற்கு
மன்னுமொற்றியூர்தனக்கிவண்வயங்குதென்மேற்கு
மின்னுமாமதில்வெள்ளவாயிலுக்கொருதெற்கிங்
கென்னலாம்வடக்கிரும்பாலியாற்றினுக்கென்றும். (௭)

பாரிடைக்கயிலாயமேபோன்றதுபகரிற்
சாரமென்பதிற்சாரமென்பதுமலர்த்தடங்கண்
வீரியம்பிகையோடொருவெள்விடைப்பெருமான்
ஆருமன்பொடுமினிதமரிருக்கையாவதுவே. (௮)

இத்தலக்கெவரேனுமோர்தரமியைந்தேகின்
வைத்தவவ்வடிவைப்புகளொன்றுக்குமரபி
னுத்தமப்பரிவேள்வியின்பயனுறுவாரென்
றத்தனோதியசிவாகமமனைத்துநின்றரற்றும். (௯)

பெரிதவண்வசிப்பாமெனப்பேணியோர்தாமிந்
திரனெனத்திகழ்கிற்பாராற்செறிதருபத்தி
மருவியோர்கணம்வாழ்பவர்வடபுலக்கோமான்
றிருவமெய்துவரென்பதுந்திண்ணமெஞ்ஞான்றும். (௧௦)

அந்தணர்க்கீறுக்லையடிசிலையளித்திடுவோர்
முந்துவேள்வியோர்கோடியேமுன்னியாற்றுநர்பே
றந்திலெய்துவர்பிதுகருமஞ்செயவிழைவி
னந்தமாமனுவந்தரங்கழிமகிழ்வடைவார். (கக)

ஒருதரஞ்செயினேனுங்குகற்பங்கண்மூன்றாறு
பெரிதுமாமகிழ்வடைவராற்பேணிச்செங்கனியான்
மருவுநல்லறுசுவைமலியடிசிலாற்பிதிரார்
புரியினீரையாயிரங்கயாச்சிராத்தமேபுரையும். (கஉ)

அடியருக்கிடையூறனுகாவணமுளைத்த
கொடியபுன்முதலானவைகுறைக்குநர்குறிக்கி
னடைவினையிராயிரமகமாற்றுநர்பேறிங்
கடைவரென்னவாகமமெலாமெடுத்துரைந்திடுமால். (கந)

அந்தணர்க்கருமனைமுதலாயினவளித்தோர்
பந்தபாசமதகன்றரன்கயிலையைப்பரிவின்
முந்தியெய்துவர்கூவிளமொடுமுல்லைவளர்த்தோர்
எந்தைதன்னுருப்பிதிரரோர்கோடியொடேய்வார் (கச)

மாமறைப்பொருண்மரபினினுணர்ந்தமாதவத்தீர்
சாமகண்டனஞ்சசிகண்டன்றனுறைமுலலை
வாமநன்னகர்விசேடத்தைவகுத்தனமொருவா
றமிதற்கையமெனைத்துணையில்லையென்றறிவீர். (கரு)

பார்த்தனோடுவேடுருக்கொடுபரிந்தமர்விளைத்த
தீர்த்தன்மேவியதிருத்தலச்சிறப்புரைத்தனமாற்
கார்த்திகேயன்முன்றொட்டகாமருதடமுன்னாந்
தீர்த்தமேன்மையையினிதிவண்சிறிதுரைக்கின்றாம். (கசு)

தலவிசேடப்படலம்.

---

# தீர்த்தவிசேடப்படலம்.

இன்னக்கேத்திரக்கீட்டிசையிலஞ்சியொன்றுண்டா
லன்னதாறுமாமுகத்தவன்மனத்தினனிழைத்த
தென்னலாவதிங்கெழில்சுலாமானததீர்த்த
மென்னும்பேரினுலிகபரமுதவியின்குதவும். (க)

சுகமளித்திடுசுப்பிரமணியன்றொட்டதனாற்
குகனருந்தடமெனும்பெயர்கொண்டிவண்குலவும்

தகவினன்றிபராசனுக்கருளியசால்பாற்
புகழைராவததீர்த்தமென்றியம்பிடப்பொலியும். (௨)

இட்டசித்திகளியாவையுமீந்திடுதிறத்தா
லிட்டசித்திதீர்த்தப்பெயரிவணனியெய்தும்
ஒட்டிமங்கலம்விளைப்பதாலுலகினினென்றும்
பெட்டுமங்கலதீர்த்தமென்றொருபெயர்மேவும். (௩)

அரதனங்களைப்பிருகுமுன்னமைத்ததன்மையினு
னரதனத்தடமெனப்புவியவினவணமரு
மருவியாடுநர்காண்குநர்மாசொரீஇப்பொலியத்
திரமிகுஞ்சிவஞானதீர்த்தப்பெயர்செறியும். (௪)

பிரமனுடிநல்வரமெலாம்பெற்றிடுசிறப்பாற
பிரமதீர்த்தமென்றொருபெயர்பேசிடப்பிறங்கும்
கருதியித்தடம்வேண்டுநர்வேண்டுவகனிவி
னருளலாற்பலபெயர்கொடுபாரிடையமரும். (௫)

ஆதலாலருந்தவத்தினிரரியமாதவத்தாற
காதலாணிந்தத்தடம்புனல்கனிவினுடுநரிங்
கேதமின்றியிம்மையிற்பேறுவனபெறீஇயிறைவா
ழோதுகயிலைமால்வரையினைமறுமையினுறுவார். (௬)

இடபமாமதிப்பூரணைத்திதியினுங்கெய்தி
அடைவினுடுவாரத்தகுதீர்த்தமேயடைந்து
குடையுநற்பயனுறுவரென்றியம்பிடுங்கோதில்
விடையுகைத்தவனருளியவாகமவிரிவே. (௭)

மாசிமாமகந்தன்னினும்வெள்ளிவாரத்துந
தேசுறுந்தடமூழ்கியேதென்புலத்தாருக்
காசறத்தருப்பணமுதலானவையாற்றி
நேசமோடதிதிகட்கன்னமுதவிடினெறியான். (௮)

அழலெதிர்ந்தபஞ்செனவவர்தமக்குமப்பிதுரர்
குழுவினுக்கும்வெம்பவமெலாங்குறைந்திடுங்குருச்சோ
வழுவின்மாகமாமதிச்சோமவாரம்வந்தாடிக்
குழன்மொழிப்பனைக்கூற்றினன்குறுகியகோயில். (௯)

அலங்கரித்தொருநூற்றெட்டுவலமடைவினின்வந்
திலங்குநென்முதலெழுவகைத்தானியமியம்புந்
துலங்குமாமணியான்முல்லைச்சோதியையுமையை
நலங்கிளர்ந்திடுமருச்சனைத்தொழினயந்தாற்றி. (௧௦)

கனிகள்பற்பல்நிவேதனங்கணிவொடும்புரிந்த
அனகநெஞ்சினரரனொடுங்கலப்பராலென்றுந்
தனிமையாமறையொடுசிவாகமமெல்லாஞ்சாற்று
மெனுமிதற்கையமில்லையாலிகபரமுணர்ந்தீர். (௧௧)

மாத்ராரீதுமரபுளியாற்றின்மற்றவர்தாம்
போதவிவ்வுலகத்திடைப்புருடனோடென்று
மேதமற்றநற்செல்வங்களியாவையுமெய்திக்
கோதின்மெய்ச்சுகமெய்துவாரெனவவைகுறிக்கும். (௧௨)

நேருமாச்சிவநிசிமதிச்சிவநிசிசோம
வாரமாப்பிரதோடநன்மேடமாமதியின்
பூரணைத்திதியென்றிடும்புண்ணியதினத்து
நீராடிமுல்லையினருச்சனைநிரப்பினர்க்கே. (௧௩)

பேறெனைத்தெனப்பேசிடுகிற்குமாமறைக
ளீறிலாப்புகழ்செல்வமாரோக்கியமியைந்து
கூறுநற்சுபமெய்தியேகுலவுவதன்றி
ஆறுசூடிதன்றிருவருளடைவினடைவார். (௧௪)

ஐயமில்லையான்மற்றிதற்கருமறைதெரிந்தீர்
மையிகந்தமற்றித்தடமருங்குளதென்றே
வையமோதியவிந்திரதீர்த்தமாமறைசொல்
செய்யசெம்பதுமத்தடமென்றிடச்சிறந்தே. (௧௫)

மேடமாமதிப்பூரணைமேவுசித்திரையி
னாடியாடுநர்நயத்தகுமிந்திரபோகங்
கூடுவாரதற்கையமிங்கில்லையாற்குறிக்கி
னீடுமற்றையதீர்த்தங்கணிகழ்த்துதுமன்றே (௧௬)

இந்திரன்முதலெண்மருமிறைவனைநாடிச்
சிந்தவெந்துயர்தீர்த்தங்கடம்பெயரானே
முந்துதொட்டனர்மூழ்குநர்பேறியம்பரிதால்
அந்தமாமதிபரிதியோடகழ்தடமுண்டால். (௧௭)

பெருமைசான்றவித்தடங்களிற்பேணிநீராடும்
பரிசினர்க்குறும்பரிசிலெற்குரைசெயப்படாதான்
மருவுமித்தடங்குருவருடப்பிரவேசம்
அருமைசாலுமாசப்பிரவேசமேயாமல். (௧௮)

மகோதயம்மருத்தோதயமார்த்தாண்டகிரகணம்
யுகாதிசந்திரகிரகணமூன்றோங்குநன்னாளிற்

சுகோதயந்தருசோதியைச்சிந்தைசெய்தாடிற்
பகாநலந்தருமிட்டசித்திகடரும்பரிந்தே. (௧௯)

ஈதுமுல்லைநன்னகரிடையிலங்கியதீர்த்தக்
கோதில்சீர்த்தியென்றுரைத்திடுங்குலவியமஃறக
ணீதிசான்றமெய்த்தவத்திர்காணீவிருமாடி
மாதுபாகனல்லருள்பெறுவீரெனவருக்கும். (௨௦)

துருகினேய்வளையைக்கொக்கைக்குமைத்தவனன்றுதொட்ட
மருமலர்த்தடத்துமேன்மைவகுத்துரைசெய்தேம்பொல்லாக்
கருமலஞ்செகுப்பமுல்லைக்கவினகர்மேயநங்கள்
நிருமலமணியின்சீர்த்திநினைந்திவணிகழ்த்துமாலோ. (௨௧)

தீர்த்தவிசேடப்படலமுற்றிற்று.

---

# மூர்த்திவிசேடப்படலம்.

வேறு.

இன்னதொல்பதியினெவர்க்கும்பரமுத்தி
தன்னமின்றியேதரத்தகவீற்றிருந்தருளும்
பன்னகாபரணப்பிரான்பசுக்களிறதேனு
வென்னமாமணியிற்சிந்தாமணியெனப்பின்னும். (௧)

தருமந்தன்னினீடியசிவதருமநன்மலருட்
பொருவிலாப்புண்டரிகப்புதுமலரெனவியம்பத்
தரணிமேற்பலவமரருட்டான்சிறந்திடுமால்
அருமறைக்கடல்வரம்புகண்டறிந்துளீரினனும். (௨)

கூவிளங்கொடுட்குழைந்தருச்சிப்வர்குறிக்கிற
முவிஞன்முகன்பதந்தனக்கரசெனச்சாற்ற
மேவுகிற்பராலவன்றளிக்கிவண்விளக்கேற்றும்
மாவிரத்தியர்கயிலைமால்வரைமருவுவரால். (௩)

மேடமாமதிவயினவிழாவிழைந்துசெய்விப்போர்
வீடிலாப்பரமுத்திமேவுகிற்பாரால்
நாடிமத்தமாமலர்கொடுநயந்தருச்சிக்கி
னீடின்மாமலர்கொண்டருச்சிப்பதிங்கிலையும். (௪)

பாடலந்தும்பைமாமகிழ்பதுமங்கல்லாரம்
நீடுகுங்குமமலரிமுன்னுயநீண்மலராற்

நாடிமத்தமாமலர்கொடுநயந்தருச்சிக்கி
னீடின்மாமலர்கொண்டருச்சிப்பதிங்கிவையும். (௫)

பாடலந்தும்பைமாமகிழ்புதுமங்கல்லாரம்
நீடுகுங்குமமலரிமுன்னாயநீண்மலராற்
கோடிகொண்டருச்சனைகுயிற்றுவதினுங்குழைந்து
காடிச்சாசரநாமவர்ச்சனையினானன்றால். (௬)

முல்லைமேவியமுழுமுதன்முண்டகத்தாளை
யொல்லைநாண்மலர்முல்லைகொண்டருச்சனையுஞற்றல்
எல்லையில்லதாமற்றதன்பெருமிதமென்னாற்
சொல்லலாவதோவன்றிதுமறையினுட்டுணிபே. (௭)

அங்கணன்கழற்கிம்மலரன்பிலாதிடுவோர்
அங்கண்மாநிலத்தரசர்தந்திருவடைகுவர்பின்
செங்கணிந்திரதிருவமுஞ்செறிவதேயன்றி
எங்கணாயகன்றிருவுருவெய்தியேசிறப்பார். (௮)

தன்னிகர்த்தமாமறைசொலுஞ்சனிப்பிரதோடத்
தென்னையாளுடையிடபருக்கெண்ணெயையாட்டி
மன்னுமாரக்காப்பிடிமருவியபுனலாட்டிப்
பின்னுமுல்லைமாவனத்துறைபெருந்தகைதனக்கும். (௯)

கோடியைநேரிடைக்கோமளக்கொடியிடைதனக்குங்
கடிநறுஞ்சந்தமட்டித்துக்கதிவிடைத்தேவர்
மடிவில்கோட்டிடைக்காண்குநர்மன்னராய்வாழ்ந்து
முடிவிலொன்றிரண்டெனாச்சுகமுத்தியேயுறுவார். (௰)

கூவிளங்கொண்டங்கருச்சனைகுயிற்றியோர்குறிக்கின்
மாவலத்தமன்னவர்க்குமன்னவரெனவாழ்வார்
சேவினானடிக்கன்புசெய்சிறந்தமாதவத்தீர்
நாவினான்றன்பெருமிதநவிலனந்துணையோ. (௧௧)

என்னுமாமுனிவன்றனையிறைஞ்சிமெய்த்தவத்தோர்
அன்னவாகனனவண்விழாவாற்றல்சொற்றனையேன்
முன்னியாம்புரிவேள்வியுமுழுப்பலன்றருமா
லென்னமற்றவர்க்கிருந்தவனியம்பிடத்தொடங்கும். (௧௨)

மூர்த்திவிசேடப்படல முற்றிற்று.

# பிரமன்விழாப்படலம்.

அந்தணீர்பாலிமுல்லைவாழமலனடல்விடையூர்ந்தருக்கரப்பக்
கந்தமாமலரோனிமையவர்பிரான்றன்கழன்மலர்பணிந்தருள்பொறுத்து
நந்தலில்புகழ்சான்மங்கலவாவிநறும்புனலாடிநீறணிந்து
சந்தமாரக்கமணிபுனைந்தரும்பட்டாடையுந்தகவுறச்சாத்தி. (௧)

நாடகவிற்றுநம்பனாலயக்குநண்ணிநின்றோர்புறமேவிச்
சோடணம்வாயுபீசத்தாலொருதாகனம்வன்னிபீசத்தாலென்றும்
நாடரும்பிலாவனம்மெழில்வருணபீசத்தானலக்கவேயுஞற்றிப்
பாடமையுடம்புசிவமயமாக்கிப்பரம்பரனடிமலர்நினைந்து. (௨)

ஐங்கரக்களிற்றைநினைந்திடையூறங்ககன்றிடவவன்றனையிறைஞ்சி
அங்கணன்கோயிலுட்புகுந்ததற்பினன்பினாற்கமலைவாழ்மார்வச்
சங்கபாணிதனுந்தியின்வருவோன்போதாயனசூத்திரவிதியாற்
பங்கமில்கலசத்தாபனமுன்னாப்பரிவினினங்கவனுஞற்றி. (௩)

எண்ணெயானைந்தோடெழிற்பழச்சாறேடேய்கழைச்சாறுமற்றிளநீர்
ஒண்ணறுஞ்சந்துமுதலனவற்றாலுமையொடுமிறைவனையாட்டி
எண்ணரும்புகழ்சாலுருத்திரநமகசமகமுன்னெடுத்தினிதியம்பி
வெண்ணிறமுல்லைகூவிளங்கடுக்கைவியன்றும்பைமத்தமுன்மலரான். (௪)

அருச்சனைபுரிந்திட்டனநிவேதனஞ்செய்தானபினறுமுகன்முன்னா
விரித்திடும்பரிவாரங்களையுள்ளம்விழைந்துபூசனைபுரிந்ததற்பின்
மருக்குலாவியபூங்கொன்றைவேணியனார்வாழுமத்தலம்வலம்வந்து
திருக்ககல்சிந்தைதோயினனாகித்திப்பியமொழியினாற்பரவும். (௫)

வேறு.

எவன்பாலுலகமெனைத்துமுதித்தொடுங்காநிற்குமெஞ்ஞான்றும்
எவன்றன்கருணைவடிவமாயிருக்குமுன்னாமறையானும்
பவனென்றோதப்படுவனெவன்பரமானந்தப்படிவமாய்
அவமில்சிந்தையாளர்சொலப்படுவானவனைப்பணிகின்றேன். (௬)

மும்மைஞாலமுணர்வரியமோனவுருவாய்ச்செறிகிற்பான்
அம்மையிம்மையாவருக்குமளிப்பானெவனிங்கறிவுருவாய்
எழ்மையினுமீண்டிலகிடுவானெவனெம்மறையுமதிசூடி
அம்மையொருபாலங்கணனென்றுரைக்குமவனைப்பணிகின்றேன். (௭)

முல்லைவனத்திற்கொடியிடையாண்முளைத்தொருமெய்ப்பரம்பரன்யார்
கல்லைநிகர்க்குமனத்தானுங்காண்டற்கருஞ்சிற்சுகக்கடல்யார்

தில்லைநகர்வாயரவேர்கொற்புலியுநோக்கத்திருநடனம்
ஒல்லைவிழைந்துபுரிகிற்பான்யாவனவனைப்பணிகின்றேன். (அ)

கோடிப்பரிதியெனப்புகலுங்கோலமேனியான்யாவன்
கோடித்திங்களெனமுகங்கள்கொண்டுகுலவினோன்யாவன்
நாடிப்பிரமனரியரனாகவிளும்மைப்படிவமாய்ப்
பாடிப்பழமாமறைபரசப்படுவானவனைப்பணிகின்றேன். (கூ)

வேறு.

என்றுமுல்லைநன்னகருறையிறைவனையிறைவியைப்பணிந்தேத்தி
நின்றுநின்றுதன்விழியினீரரும்பியேநின்றிடவுமைபாகன்
கன்றைநாடுசேதாவெனத்தன்னுளங்கனிந்தெழில்விடைமீது
நன்றெதிர்ந்துநின்பூசனையுவந்தனமென்றனனயந்தம்மா. (க0)

நீவிரும்பியவரம்பெறுகென்றிடநின்மலனெடுங்கஞ்ச
மேவுநான்முகன்கூறுமானின்றனைவிழைந்திவண்கண்டேத்தச்
சேவிடைத்திகழ்பரம்பரயான்பெறும்பேறுசெப்பிடற்பாற்றோ
யாவிவண்புகன்றிடத்தருவனவெனவினையனவெடுத்தோதும். (கக)

வேறு.

இத்தலமென்றும்பிரமமாபுரமென்றியம்பிடவேண்டுமாலென்றும்
இத்தடம்பிரமதீர்த்தமென்றியம்பவேண்டுமீண்டெற்கெளிவந்த
அத்தநீபிரமநாதனென்றெவருமறைந்திடவகிலமீன்றெடுத்த
உத்தமபிரமநாதநாயகியென்றுரைத்திடவேண்டுமென்றென்றும். (கஉ)

இத்தலத்தெவரேயாயினுஞ்சிந்தித்திவணாக்கணமுறைவாரேல்
உத்தமவவர்தாம்பாசமதொரீஇநின்றோங்குநின்னடிநிழலுறுக
சித்திரைப்பின்னாந்திங்களினென்றுந்திகழ்தரநின்றனக்கீண்டு
பத்தியாற்சாறுபுரிந்திடக்கருணைபாலியாயென்றடிபணிந்தான். (கங)

அவ்வரங்கேட்டவயன்றனக்கிரங்கியன்னவாறவன்றனக்குதவிக்
கொவ்வைவாயுமையோடெந்தையுமந்தக்குறிவயிற்றிருவுருக்கரந்தான்
எவ்வமிலயனுஞ்சாறுஞற்றிடத்தானெண்ணியேதன்பதிநின்றும் [மா.
செவ்விதின்வேண்டும்பொருளெலாங்கொணர்ந்தான்றிருத்தகுமத்தலத்தம்

நகரமதாக்கியாங்கவனடைக்காவணந்தனையிட்டுநற்கதலி
புகரில்செங்கரும்புகமுகொடுநாளும்பொலிதருமகரதோரணமுன்
தகவினிரைட்டிப்பாலிகையோடுபூரணகடங்களுஞ்சமைத்து
மகமதற்குரித்தாங்குண்டவேதிகைகள்வயக்கினனுங்கவனம்மா. (கரு)

நிலவுறுமுற்பக்கத்தினிற்கொடியேற்றிநெடுமறையந்தணரோதல்
கலகவேல்விழியார்நடஞ்செயக்காளம்பேரிசின்னங்களார்ப்பெடுப்ப
இலகியமானமுதலனமேற்கொண்டிறைவரப்புரிந்திடபத்தி
னலனுறவெய்தவமைத்துநாளேழினல்லதேர்விழவினையுஞற்றி. (கசு)

ஓதுமீரைந்தாநாளெனப்பட்டீண்டோங்கியவிசாகநன்னாளிற்
றீதிகந்தோங்கும்பிரமதீர்த்தத்திற்றீர்த்தநல்விழவினையியற்றி
ஏதிலவ்விரவின்கண்ணவரோகணந்தனையாற்றியேயடுத்த
போதினிற்சாந்தியுற்சவநடத்திப்போந்தனன்பூமிசைமேலோன். (௧௭)

அத்திருவிழவைக்காணவந்தெய்துமிரவலர்க்கந்தணர்க்காங்குப்
புத்தமுதன்னவடிசினன்குதவிப்பூணுநல்லாடைதக்கணைகள்
மெய்த்தவன்பதனுலுதவினன்விடுப்பவன்றியும்விண்ணவர்முனிவர்
அத்தனைவழிபட்டலுகிலாவரங்கள்பெற்றவரேகினரன்றே. (௧௮)

வேறு.

ஒருங்குலிசிமுன்னாயவெண்டிசைக்காவலரிறைவன்
பரங்கருணைமேற்கொண்டுபரிவினமரித்தலத்தில்
ஒருங்குதடந்தயபெயரினுண்டாக்கியும்பர்பிரான்
வரங்கடரப்பூசித்துமற்றவர்சென்றனரம்மா. (௧௯)

என்றுரைநைமிசவனத்திலிருந்தவத்தோருவகையொடு
நன்றுவந்துகேட்டெடைக்குஞாங்கர்க்கைக்குமரனே
ஒன்றியமெய்த்தவமுடையாயுடையானைவழிபட்ட
தன்றியகாதையையுரைத்தியெனச்சூதமுனிசொல்லும். (௨௰)

பிரமன்விழாப்படலமுற்றிற்று.

---

# குமாரநாயகன்வழிபடுபடலம்.

அருகாதமெய்மைத்தவர்யாவருமன்பினுடி
இருகாதுமடுப்பமகிழ்ந்தினிதெம்மனோர்க்குக்
குருகார்கரத்துக்குமரிக்கொருசெல்வமென்னு
முருகோன்வழிபாடொழியாதுமொழிமினென்றார். (௧)

அம்மாமொழிசேட்டவருந்தவச்சூதனென்பான்
இம்மாநிலமேலஃதோதுமியல்பதன்றே
மும்மாமலமோசனஞ்செய்தமுனியுமெற்கக்
கைம்மாவுரியானருளாற்சட்டுரைத்ததன்றே. (௨)

அவ்வாறுமக்கீண்டறிவிப்பனருந்தவத்தீர்
செவ்வேயதுகேண்மினரன்கழல்சிந்தைசெய்து
தவ்வாதுமுல்லைப்பதிச்சங்கரன்சீரொளுமுன்
செவ்வாய்மலர்ந்தான்றிரிபின்றித்தெளிய்வன்றே. (௩)

விணைமாதுபங்கனொருஞான்றுவளங்கனிந்த
பெருமால்வரையாங்கயிலைக்கட்பிறைமுடித்தான்
ஒருமாவடிவன்னதண்ணுளொடுவந்துவைகத்
திருவாழ்க்கையர்யாவருமெய்தினர்தாழ்வுகூற (௪)

கண்டான்விமலைக்கொருகூறருள்காளசண்டன்
எண்டோளனஞ்சுமுகத்தோடுமெழில்சுலாவும்
பண்டேகரவினொளிதந்தபரிசுமேவுந்
தண்டாதசீர்த்தியதோமுகமுங்கொடுதாணிமிர்ந்தான். (௫)

கண்ணின்வழிநல்கினன்றீப்பொறிகற்றமேலோர்
எண்ணின்வழிநின்றிடுமெம்மிறையீதுணர்ந்து
புண்ணின்வழியிட்டதொர்கோலெனப்புந்திநைந்தான்
விண்ணின்வழிவிட்டுவருந்தும்விபுதர்தம்மின். (௬)

மூலைக்கலுழநடனம்புரிமுக்கண்மூர்த்தி
காலைக்கருதியிதுகோடிநின்கையினென்னச்
சீலத்தவனேகலுஞ்செந்தழற்கோவினோடக்
காலைப்பகீரதியினுய்த்தனர்காமரன்பான். (௭)

அச்சானவியக்கனல்வெம்மையழுற்றவாற்றுள்
நச்சாடரவப்பணிபெய்ந்தைதருங்களம்போல்
இச்சாகரஞ்சூழ்புவிமேலிலங்கிற்குநீல
மெய்ச்சார்புடைஇநிலவுஞ்சுனைமேலமைப்ப. (௮)

சேயாயமைந்திங்கிலகுஞ்சிறுதீப்புலிங்க
மேயாநிலையுற்றமைநாடியவிண்ணுளோர்தாம்
நாயேமுனுற்றுமொருநற்றவநாடினேதென்
றோயாதுணைதந்தருளீனையுவந்துகூவி. (௯)

பாலனல்கிடவுய்ப்பணித்தார்பணைதந்தபெம்மான்
தானங்குதெய்வவிளையாடறனைக்குயிற்ற
மானங்கொருபான்மகிழும்மணிகந்தரத்தோன்
வானந்தொழுமால்விடையூர்ந்துவந்தெய்தினனால். (௰)

வந்தெய்திநீலத்தடங்கண்மடமங்கைதன்னை
மைந்தன்றனைக்கொண்டினிதெய்தெனமாதுதானும்
அந்திற்கனிவினடைந்தேற்பவவையனைத்துங்
கந்தப்பெருமானெனவோதக்கவினுமாலோ. (௧௧)

கனிவோடுதெய்வமுலைப்பால்கறந்தூட்டவுண்டு
தனிநாதன்மறைக்கொருநாதன்றனையெடுத்துச்

இனமால்விடையானிடைநல்கத்திகழும்வெள்ளிப்
பனிமால்வரையையினிதெய்தினன்பாவைபங்கன். (௧௨)

சொல்லும்பொருளுங்கனியுஞ்சுவையும்மெனத்தான்
அல்லும்பகலுமவனைப்பிரியாதவின்னை
கொல்லுந்துணைநின்றதுவாலிக்கொடும்புலிங்கம்
வெல்லுந்தரமன்றிதுவென்றுவெரீஇயமேவலை. (௧௩)

அந்தப்பொழுதத்தவள்காலினமர்ந்துநின்ற
சந்தச்சிலம்பினவமாமணிதாமுதிர்ப்ப
அந்திற்கொடியாயினரங்கணமுதமன்னோர்
சிந்தைத்துயர்தீர்ந்தனித்தார்திறல்வாகுமுன்னோர். (௧௪)

இதுநிற்கவன்னோரொவையாருடைபெண்மையேவல்
கதுவத்தனிமாமயிலோன்றுணையாக்கவின்று
மதுவைத்தகடம்பணிவேலன்மலர்க்கழற்கே
நிதிவைத்தவன்புசெறிந்தாங்குநிலாவினாரே. (௧௫)

வேறு.

அன்னவேலையிலருமறையாற்றினாலமரர்கள்களிதூங்க
மன்னுமாமகம்புரிதருநாரதன்வளர்த்தவேள்வியினன்று
தன்னிகர்க்கிலாத்திருகுகோட்டெறும்வலித்தகடொன்றானிதோன்றி
நன்னிலந்தனைவருத்துபுகிடந்தவாகருள்வியர்த்தாரே. (௧௬)

கண்டசண்முகன்றகர்கொடுவருகெனக்கட்டளைதரவாகு
அண்டமெங்கணுந்துருவியேசென்றிடுமயந்தனைக்கைக்கொண்டு
புண்டரீகனேமுதலியவிபுதர்கண்டுபோற்றிடநின்றானை
மண்டுமன்பினிற்றொழுதவண்விடுத்தனன்மடங்கலேறெனநிற்பான். (௧௭)

தகரதிந்ததன்பியன்மிசையிவர்ந்தனன்குறைதவிர்ந்தனராலம்
நிகரிலாதவாகண்டலன்முதலினோர்நெடிதுவாழ்த்தினரோர்நான்
முகவையானறுமலர்மிசையந்தணனுமாபதிதனையேத்தி
அகலுவானறுமுகனமர்தன்மையையறிந்தும்வாராசென்றான். (௧௮)

அகந்தையோடுசெல்கஞ்சனையழைத்துளைதருந்தொழில்யாதென்னச்
சகந்தனைப்படைத்திடலெனநீமறைத்தனிப்பொருளோதென்ன
உகந்தவன்சொலவுணர்கிலாதிவனுழிதரவொருவந்தம்
இகந்தவன்றனைக்குட்டிவெஞ்சிறைவயினிடுத்தனனினிதம்மா (௧௯)

விதித்திடுந்தொழில்விசாகனேகொண்டுவீற்றினனெழில்விண்ணோர்கள்
நதித்தலைப்பெருங்கருணையங்கடலினைநண்ணிநாயகவோலம்
கதித்தமூவிலைச்சூலபாணியநெடுங்கறைமிடற்றவவோலம்
பதித்துவந்தனையுயிர்க்களித்தவர்துயந்தெறும்பராபரவோலம். (௨௦)

ஓலமோலமென் றுமாபதிமேவியவோங்கலையடைந்தன்பின்
மாலுமாலும்விண்ணோருமொத்தாயொருமலரவன்றனைக்கந்தன்
சாலவேசிறைதன்னில்விட்டருந்துயர்தந்தனனிவனென்னக்
காலகாலனுங்கடம்பனையடைந்தவன்கடுஞ்சிறைவிடுவித்தான். (௨௧)

கஞ்சனைச்சிறைநீக்கிமற்றவன்வயிற்கனிவினொடுரைசெய்யும்
மஞ்சகேண்மதிநீயறிதிறனெதுமற்றெனக்குரையென்ன
விஞ்சுமம்மறைச்சிரப்பொருள்முருகனேவிளக்கிடவிழைந்தெம்மான்
இஞ்சனக்கினிச்சாமிநாதப்பெயராகுகவினிதென்றான். (௨௨)

விண்ணுளோர்குறையகற்றிடக்கருதியவிமலன்மைந்தனைக்கூவி
மண்ணினீடத்தலையலர்தமையெலாம்வயங்குடம்பிடிகொண்டு
துண்ணெனக்கொலையுறுத்தியேபூசனைத்தனையெனக்கொடுசென்று
நண்ணிவெங்கொடுந்தானவர்ச்செருக்கினிதடைதிரப்பாலென்றான். (௨௩)

அமரர்நாயகனருமறைநாயகனசுரரைச்சொலையாற்றுங்
குமரநாயகனெழில்விறல்வாகுமுற்குறித்திடுமோரொன்பான்
சமரவீரர்களுபகன்மிக்கிலத்தவர்களுபகனொன்றும்
பமரமேமிழற்றுங்கடம்பணிந்தவன்படர்ந்தனன்பார்மீது. (௨௪)

தன்னைத்தம்பியரோடிலக்கத்தவர்சாரதர்முன்வீரர்
முன்னிச்சூழ்தரமூவிருமுகத்தனுமுருகன்முல்லையையெய்திப்
பொன்னையேபொருஞ்சுமத்தியாயங்புடைவருபுனிதன்றன்
சந்நிதிக்கெதிர்மானத்தாலொருவாவிதான்சமைத்தானே. (௨௫)

ஆடிஞானனிமானதவாவியையாமராருமுனிவோரும்
நாடிசாரதர்தாமும்பல்லாண்டுகணவின்றிடாவீர
ரோடுமேனையோரேத்தெடுப்பவுமொலமுடையவனடிநாடி
நீடுபூசனைசெய்திடத்தொடங்கினனெட்டிலைவேற்கந்தன். (௨௬)

இன்னவாறவண்வழிபடுவேலையிலிமையவல்லியொடெந்தை
கொன்றுனைச்சுடர்வேற்கரக்குமரன்முன்குறுகினின்றுரைசெய்வான்
அன்பினாற்புரிபூசனைக்குகந்தனமையநின்கருத்தெல்லாம்
ஒன்றுமேகுறையில்லைதாவெய்துறமுனையுலகத்தோர்கள். (௨௭)

வானவர்க்கொருசேனைநாயகனெனமதித்துரைசெய்கிற்பார்
ஞானநாயகவெனவவன்கரத்திடைஞாங்கரைமுன்னைய
வனமாப்படையாவையுநல்கிடவிமையவர்பெருமானுங்
கானவார்குழற்கவுரியுந்தானுமாப்புக்கட்டுரைசெய்கிற்பான். (௨௮)

உலகினுக்கொருதந்தையுந்தாயுமாயோங்கியநமையென்றும்
அலகிலன்பினொடெழிற்சிவசாதனமணிந்துபூசனைசெய்வோர்

நலனுறும்பெருமிதமினைத்தெனவிவணவின் றிடவல்லேமோ
இலகுமாமறையனைத்துமரங்கவர்கள் சிரியம்பிடப்படாதன்றே. (௨௯)

நம்மையன்பொடுவழிபடுமடியவர்நாற்றுங்கலைஞானச்
செம்மைபெய்திலராயினும்பல்கலைச்செறிவுடையாரன்றே
எம்மையேவழிபடுபவர்நீசரோயெனினுமற்றவர்விண்ணோர்
தம்மினுஞ்சிறந்தாரெனமறையெலாஞ்சாற்றிடுந்துணிதம்மா. (௩௦)

யாவுமாமெமையிலிங்கத்தின்வழிபடுமியல்புடையார்செம்மை
யாவுமேயிலாப்புலையரோயாயினுநாமெனப்படுமென்றே
மேவுமற்றவர்தங்குலத்திழிபினைவிளம்புகிற்பவரென்றும்
பாவகாரியராயருநிரயத்திற்படிவரீண்டிதுமெய்யால். (௩௧)

மன்றநம்பியல்புணர்த்திடக்கருதியேமரபினின்வழிபட்டாய்
இன்றுதொட்டிதுகுமரமாபுரமெனவியம்பிடப்படுநன்னீர்
துன்றுவாவியுங்குகப்பெருந்தீர்த்தமாச்சுலவிடுமெமைநாடி
என்றுநின்றனைச்சங்கற்பஞ்செய்திதிலாடுநரெமைச்சேர்வார். (௩௨)

எம்மையாளுடைப்பிரான்முல்லைவாணனுமின்னனவெடுத்தோதிக்
கொம்மைவெம்முலையாளுடனச்சிவக்குறியெயிற்கரந்தானால்
அம்மையீன்றவாறிருமுகத்திறைவனுமங்கண்றனிகர்ந்தான்
எம்மையுந்தனைச்சூழ்தரத்தாருகனிருக்கையெய்தினனம்மா. (௩௩)

அடைந்துதாரகன்றன்னொடும்புட்பெயராடற்கிரிதனையட்டு
நடந்துசெய்ஞலூர்ப்பதிவழியமர்ந்திறைநறுமலர்க்கழலேத்திக்
கடந்துசென்றவர்க்கடற்கரைச்செந்திலிற்கம்மியன்புனைவித்த
நெடுந்தடங்கிரியனையமாளிகையினெறியினெய்தினனன்றே. (௩௪)

பொன்சொலக்கொடுஞ்சூர்த்திறனுணர்ந்திரும்புயவலிப்பின்னோனை
இன்சொலானவன்றன்கருத்தோர்கெனவிலங்குசூர்பாலேசென்
றன்பினுக்கெளிவருங்குகனேவிடவண்ணல்தாண்மலரேத்தித்
தென்கடற்கனைகடந்தவன்மகேந்திரத்திருநகரடைந்தானால். (௩௫)

தூதுபோந்தவன்றன்கருத்தோர்ந்தெழிற்றென்னகர்தனைநீத்துக்
காதுவேற்கரக்குகன்றனைவணங்கியக்கடன்மகேந்திரஞ்சென்று
நீதியானவற்குரைத்ததுமவன்சொலுநெறிமையுமெடுத்தோத
வேதநாயகன்செந்திலின்றவனுறைவியனகர்சென்றுற்றான். (௩௬)

சென்றுபாசறைதன்னில்வீற்றிருந்தனன்சேந்தன்மற்றயவாகு
வென்றசீர்த்திறல்வீரர்மூர்ப்பூதவெம்படையெலாமிடைந்தொன்றி
நின்றுபானுகோர்பன்முதற்குமரனைநெடுங்கடற்படைதன்னைச்
கொன்றுவாகைவேய்ந்தனரவர்செயலினைக்குறித்துரைத்திடவற்றோ. (௩௭)

மடங்கன்மாமுகத்தவுணன்றன்னைஇரவயங்கெழில்வேற்கந்தன்
அடங்கவங்கவன்படையொடுமழித்தனனன்னதம்பிற்சூரன்
குடங்கையாற்கடலயின்றமாமுனிவனுக்கோமொழிகுறித்தோதும்
விடங்கன்றன்னைப்போடிவந்தெதிர்த்தனன்விண்ணவர்தனிமாழ்க. (௩௮)

வந்தசூரனோடருஞ்சமர்விளைத்திடவருஞ்சகக்கொடுஞ்சூரன்
அந்தமாகடல்வயிறொருமாவெனவடங்கினனமரேசன்
சிந்தியாவுடம்பிடிதனைப்பேவினன்சென்றதுசெகுப்பத்தான்
நந்தலில்பலமாயைசார்சேவலுமயிலுமாயுருவுற்றான். (௩௯)

ஆண்டலைக்கொடியாக்கொண்டுமயிறனைப்படற்பரியாவூர்ந்து
நீண்டமாலயனேத்திடநின்றனனெட்டிலைவேற்கந்தன்
காண்டகுஞ்சயந்தன்முதல்விபுதரைக்கடுஞ்சிறையினீக்கி
வேண்டியாவருஞ்சீரலைவாய்ச்செந்திலின்மேவினன்விரைந்தன்றே. (௪0)

அன்னமாநகரகன்றருந்தமிழ்நடமயருந்தென்றிருக்கூடல்
தன்னதெல்லையாச்செறிதருபரங்கிரிதனையடைந்தவணெய்தும்
மன்னுசீர்ப்பராசரன்றருமதலையர்தமக்குமாமறையுச்சி
துன்னுமெய்ப்பொருளுணர்த்தினனெழின்மறைச்சூழ்ச்சியாய்நிற்கின்றான்.

இவ்வகைப்பரம்பரனருமறைப்பொருளொடுத்தினிதுரைப்பக்கண்
டெவ்வரீத்தனரனையருமிந்திரனெழிற்குகன்றனையண்மி
கவ்வைநீருலகிடையெமர்பொருட்டினைகால்வருந்திடவந்து
தெவ்விராதொருங்ககழ்ந்தநின்சேவகஞ்சிறியனேன்சொலவற்றோ. (௪௨)

ஆனநின்புயக்கந்தினுக்கமைதரவையயான்றருந்தெய்வ
யானைதன்னைநீமணத்தியென்றரன்மகற்கருமறைவழிமெய்ஞ்
ஞானநாயகனுமையொடுமெய்திடநன்மணம்புணர்விப்ப
வானநாட்டிடைக்குடிபுகுவித்தனன்மயிற்பரியுகைத்தானே. (௪௩)

அண்டர்நாட்டினையிகந்தெமையாளுடையண்ணலுமன்பாகத்
தொண்டைநாடெனுமாதுமாவதனமாத்தோன்றுதென்றணிமேவிப்
பண்டைநற்றவத்தாற்றனையடைதரும்பரிசினர்க்கருள்செய்யக்
கண்டுநாரதனெனுநெடுந்தவனுமெங்கந்தனைப்பணிந்தோதும். (௪௪)

முன்னைஞான்றருஞ்சரவணத்துனைத்தவமுயன்றனர்திருமாதர்
பின்னுமாழியான்றருந்தவமுடையவர்வெள்ளைவாரணத்தான்பாற்
பன்னருமமுதக்கொடியடைந்திடப்பரிந்தவடனைவேழம்
இன்னதீர்தரக்காத்ததுமணந்தனையியைந்தவடனையம்மா. (௪௫)

பின்னளாகியசுந்தரிமான்வயிற்பிறந்தனள்பெருங்கோடு
துன்னும்வள்ளியஞ்சாரலினிரவுளர்துதைந்தவன்பினினொடிக்

தன்னையேவளர்த்திடவளர்கின்றனள்சசியொடுமலர்மேவும்
பொன்னுமேநிகர்க்கிலரவள்வடிவினைப்பொறித்திடுந்தரமன்றே. (சகூ)

இனையமாதிதண்மேவியேபறவையினினந்தனைக்கடிதோப்பும்
அனையடன்னைநீமணத்தியானலனென வருமுனியறையக்கேட்
டெனையுமாளுடைமுழுமுதற்பரம்பரனெழிற்றணிகையைநீத்துக்
கனிவினேடவளுறைதருஞ்சிலம்பினைக்காண்டகச்செல்கின்றான். (சஎ)

கண்டுதானுமையுற்றபின்றெளிந்தவள்கவின்குறிப்பினையோர்ந்து
கொண்டிரந்துபின்னிற்றன்முன்னுயநல்லகப்பொருட்டுறையாவுந்
தண்டலின்றியேநிகழ்த்தினன்களவினிற்றையலைமணப்பானும்
மண்டுமன்பினன்வன்றிமுன்வேட்டையாடிரவுளனெனவந்தான். (சஅ)

கணியெனத்திருவுருக்கொடுநின்றனன்சரையிலாக்கடல்போலுந்
திணிநெடும்பெருஞ்சேனையொடெய்தியத்திறல்கொள்வேடுவற்கண்டு
மணிநெடுஞ்சிலம்பினிலவன்றிடவள்ளலுயனைதன்பாற்
குணிதமில்லதோர்படிவங்கொண்டெய்தியேகுறுகினன்குழைந்தம்மா. ( )

எய்தியாங்கவட்குறுகிமற்றவடருமிருந்தினையிடிபோக
மைதுதேன்றருகென்றனனுகர்தரவப்பிசாபதிதர்த
செய்தவன்றனக்களித்தனளயின்றயிற்றேவர்சோனீர்வேட்கை
கொய்துபோவதேகருதினனிருந்தனைகுறித்தெனைக்காட்டென்றான். (ரு௦)

கோண்டுபோந்தனள்கோமளக்கொடியொராண்டலைக்கொடிக்குமரேசன்
மண்டுதீம்புனல்பருகுவார்போற்பொய்தல்வளர்த்தவன்றனைமின்னே
கண்டுபோன்மொழியிருந்தனையாடலைச்சருதிவந்தேதனென்றான்
விண்டுவாத்தனையறுப்போன்றால்விரதருச்சடாதென்றே. (ருக)

இன்னவாறவள்சொலைச்செவிக்கமுதமாவிழைந்தவெங்குமரேசன்
அன்னடன்னையேயசுறுத்திடநினைந்தண்ணலைநினைகிற்பான்
மன்னநீயிவணேரிபாராவரன்மதித்தனனெனவன்றான்
பின்னிடைச்சிமுனன்னமேவரவெரிஇத்தமுவினனம்மா. (ருஉ)

தன்னருந்திருவுருத்தனைக்காட்டிடத்தடவரைமுலைக்கொம்பு
முன்னருந்தவமுயற்சியானெய்தியமுறையிதுவெனநாடி
இன்னனீங்கினனெம்பிரானவட்கொடன்றேகினனிருந்சாரன்
மன்னுதென்றணிகைப்பெருவரைப்பிடையயிலினையூர்ந்தன்றே. (ருங)

கொண்டுசென்றவன்வேலனென்றுணர்கிலாக்கொடும்புலியன்னுருங்
கண்டுபோன்மொழித்தையலையாரிவண்கைக்கொடுசென்றனென்
றெண்டிசாமுகந்துருவியேகண்டனரிரவுளரிறைபோனு
மண்டுமன்பினற்கொண்டனையியுனைநீமலைப்பதேசடனென்றான். (ருச)

தங்குரிச்சியிற்கொண்டுபோந்திறைவியைத்தனிமுதல்தான்வேட்ப
மங்கலப்பெருந்தூரியமுழக்கிடமணமயர்ந்தனனெம்மான்
செங்கையைப்பிடித்தவளொடுந்தணிகையஞ்சிலம்பிடைச்சென்றுற்றான்
அங்குநின்றுமச்சுதப்பிரான்கந்தவெற்பணுகினனடைவாக. (௫௫)

கல்லைமேவியநெஞ்சினர்காணருங்கடவுளையகன்பாலி
முல்லைநாயகன்கொடியிடைமாபகனருளினன்முருகேசன்
சொல்லருகொடுஞ்சூர்ச்சவட்டியபடைத்துணைபெறஇத்தொல்வானோர்
மல்லலம்படைச்சரதெனச்சிறந்தினிதிருந்தனன்மதிமிக்கீர். (௫௬)

வேறு.

கந்தப்பெருமான்வடமுல்லைக்கடவுடன்னை
வந்தித்ததனுளொருவானோர்வருக்கநாடும்
விந்தைப்படைகட்கிறைபாதல்விளம்பினோம்பின்
உந்தப்பிருகுவழிபாடுமறைதுமன்றே. (௫௭)

குமரநாயகன் வழிபடுபடல முற்றிற்று.

---

# பிருகுமுனிவன் தவஞ்செய்படலம்

மயல்காட்டுநெறியணையாமதிகாட்டுஞ்சிந்தையினான்
முயல்காட்டுமதிகாட்டுமுகமடவார்கடனவிற்றுஞ்
செயல்காட்டும்வடமுல்லைத்திருக்காட்டும்பதியணைவான்
வயல்காட்டும்வாரணவதங்கண்டான்றவப்பிருகு. (௧)

மணிகன்னிகையைக்கடந்துமரபினிற்சங்கையையகன்று
பணியணிவானுறைதருஞ்சீர்பருப்பதங்கண்டவண்மேவி
மணிகண்டத்துமுதனடியறவாமனிணைந்தேத்திப்
பணியொடத்திசிலம்பிதொழும்பருவரையையணுகினான். (௨)

கண்டெமதுபிறப்பகற்றுங்கருணையார்கலியமரும்
புண்ணியமால்வரையதுவோபொன்முகரிக்கரையிதுவோ
பண்டைவினைக்கரிசகந்தபான்மையனேனென்றே
மண்டியபேரன்பானவ்வரநதியின்கரையணைந்தான். (௩)

சங்கற்பந்தனைப்புகன்றத்தனியாற்றினீராடி
அங்கற்பநீறணிந்திட்டமலனெழுத்தஞ்சுன்னி
அங்கற்பினொருகிராதனுக்கருளுமரும்பரனைச்
சங்கத்துவிழியானைத்தான்பரிந்துதொழுதெழுவான். (௪)

வேறு.

இன்னபோதங்கிறைவனையுன்னியே
பன்னிநின்றுபரசிடுமேல்லையின்
மின்னவாஞ்சடைவேதியன் முல்லைபுற்
றின்னநீர்தரச்செய்தவமென்றனன். (௫)

அன்னசொற்கேட்டவனுபரிதினின்
மன்னுகானத்திடால்வரைதானேறி
உன்னருஞ்சீருயர்பாலியின்வடா
தென்றுமோங்குமெழின்முல்லையெய்தினான். (௬)

வேறு.

எய்தியத்தலத்திறைவனைபெறும்வலிக்குமரன்
ஐதினன்பொடுவழிபடத்தொட்டவற்புதநீர்ப்
பொய்கையாடிநல்விதிப்படிபுண்டரம்புனைந்து
செய்வதின்றியேசிர்லையின்றுயரொழிந்திருந்தான். (௭)

முல்லையைங்கரக்கன்றினைமுன்னடைந்திறைஞ்சிச்
சொல்லரும்பிரமேசனைச்சுரிகுழலிமைய
வல்லியாம்பிரமநாதநாயகித்தனைவணங்கி
எல்லையில்லதொரன்பினுணிருக்கொடுதுதித்து. (௮)

போயகன்றொருபுறத்திடைச்சாலையைப்புரிந்து
நாயனார்தமைநெஞ்சினினிறீஇப்பலநாள்செங்
காயொடுங்கனிசருகருந்தியுமவைகழித்தும்
தூயநற்றவஞ்செய்தனன்றொடக்கறுத்திடுவான். (௯)

ஐங்கனற்கண்வாயருந்தவமாற்றிடவனையான்
பொங்குவேனிலில்வெயிலிடைப்பொருந்தியும்பொல்லாக்
கங்குனீடியபனிவயினீரிடைக்கழித்து
மங்கணின்றகலாதிருந்தனனனேகிலநாள். (௧0)

இன்னதோர்த்திறையவனிவற்கருள்செயவிமயக்
கன்னியோடடல்விடையிடையிவர்ந்துதான்கடிது
மன்னுமாதவன்றன்புடையெய்தினன்மகிழ்வான்
அன்னவேலையிற்பிரமதகணங்களுமடைந்த. (௧௧)

சூடகேசுரரனந்தர்வித்தியேசுரரகில
நாடுகூர்மாண்டருத்திரர்மந்திரர்நவில்வெண்
கோடுகைக்கொண்டமால்பலர்குவலயம்படைக்கும்
ஏடவிழ்ந்தமாமலரவரிந்திரர்பலரால். (௧௨)

பன்னகாதிபர்பலப்பலர்பரிதிபன்னிருவர்
மன்னுசீர்த்தெய்வமருத்துவர்வயங்குருத்திரர்கள்
இன்னரோடெமையாண்டருளிறையவனெய்தத்
தன்னிரண்டுகண்ணாற்கண்டுதாழ்ந்திறைஞ்சினனால். (௧௩)

ஏழிசைச்சுவையாயிமையோர்களின்னமுதாய்
வாழிமாமறைக்கரும்பொருளாய்வயங்கியவப்
பாழிமால்விடைப்பரமனும்பரிவினன்முனிவ
வீழிவாயுமையொடுனைமேவினம்விரைந்தே. (௧௪)

அன்னமாமுனியிறைவரலறிந்தன்புகூர்ந்து
பொன்னவார்திருமேனியபுண்ணியபுனித
மின்னோர்பாகத்தவிமலவெள்விடையவவிபுத
என்னநின்றுநின்றேத்தியேயிறைஞ்சன்மேயினனால் (௧௫)

போகியாயிருந்துயிர்க்கெலாம்போகமீட்டுவையால்
யோகியாயிருந்துயிர்க்கெலாமியோகங்காட்டுவையால்
மோகமேதருமடந்தையர்முயக்கின்மொத்துண்டிங்
கேகனேகெடுவேன்முன்னரெய்தினையெளிதே. (௧௬)

முன்னமாரிருள்வயினிற்குமென்றனைமுன்னி
அன்னமாயையிற்றனுகரணாதிகளளித்து
மன்னிடும்மிருவினையொப்புமலபரிபாகந்
தன்னையெய்துவித்தருள்பதிவுறத்தந்தாய்தக்கோய். (௧௭)

தோடுபொற்குழைதாழ்சடைசரிகுழறேல்பொன்
னுடைபாம்பணிநீறுசாந்தல்கிலபுனைந்தே
மாடிவர்ந்தெளிவந்தனைநின்றனையரபான்
னாடியாவரென்றுணர்ந்திறைஞ்சுவனெனநவின்றான். (௧௮)

ஒருவனென்றிவளொருத்தியென்றுரைப்பதற்கொல்லா
ஒருவரென்றினிதுரைப்பதற்கொருவந்தமுலகின்
மருவுமெம்மொழியினுமிலாமையிற்றமிழ்வழக்கிற்
குரிமைபூண்டனைநின்றனைகண்டனனுடையாய். (௧௯)

இன்னவாறிவணற்பொடுபுகழ்ந்துநின்றிறைஞ்ச
என்னவேண்டிமாதவஞ்செயத்தொடங்கினையென்னாத்
தன்னமின்மொழியாலுரைசெய்பவன்றனது
பொன்னின்வார்கழல்போற்றியேமெய்த்தவன்புகலும். (௨௦)

தித்தித்தென்னுளளூறியசிவபரஞ்சுடரே
அத்தியீருரிப்போர்வையாயடியனேற்கயன்மால்

நித்தநாடியுங்காணொணாநின்பதத்தென்றும்
பத்திவேண்டினேன்பரிவினிலருளெனப்பகரும். (உக)

அன்புநீயும்வேறென்பர்களறிவிலாரனைக
அன்புநீயுமிங்கொன்றென்பதியாருமேயறியார்
அன்புநீயும்வேறன்றென்பதறிந்தனனதனான்
அன்புநின்கழற்செய்துவானருளுகென்றனையும். (உஉ)

மின்னுமூவிலைவேற்படைவித்தகசேட்டி
இன்னுமோர்வரமேழையேன்வேண்டுவலெந்தாய்
இந்நகர்ப்புறம்வற்கடமெய்தொறுசென்று
மன்னதானமேசெயற்கருள்புரிகென்றறைந்தான். (உங)

அந்தமாதவன்கருத்தினையறிந்தருளமலன்
இந்தவற்கடமவன்கருத்தியைந்தனைசெய்வான்
அந்திலோர்கடிகைப்பொழுதாதனமழையைத்
தந்துநற்பணிசெய்கெனச்செப்பினன்றேனு. (உச)

நாடகத்தனைப்பொதுவின்னடித்திடும்பன்
மாடிவர்ந்தெழின்மரகதவல்லிதன்மருங்கே
நாடியெய்திடப்பிரமதகணநணியிறைஞ்ச
நீடிருஞ்சிவக்குறியயினொடிருக்கரந்தான். (உரு)

அன்னமாமணிக்குவியல்களனைத்தையும்வான்றிப்
பொன்னுலாமலர்க்குகப்பெயர்வாவியுட்பொதித்துத்
துன்னும்வற்கடந்தோன்றிடாவண்ணமேதொலைப்ப
வுன்னியாங்கமர்ந்திருந்தனனுயர்தவத்தோங்கல். (உசு)

மின்னல்கான்றுகாரப்புபெய்யாதுவிண்மகத்தின்
மன்னுமொற்றையாழிப்பெருந்தேரவன்மைந்தன்
என்னுமந்தனுமெய்திடவிரும்புவியிடையே
துன்னிநின்றுடற்றுங்கொடுவற்கடந்தோன்ற. (உஎ)

நிரப்பெனும்பகைநேர்ந்ததுநேர்ந்திடயாண்டும்
இரப்பிலார்களுமிரப்பதுதுணிந்தனரென்னத்துங்
கரப்பிலார்களுங்கரப்பதுகருதினர்கலையின்
விருப்பினார்களுமறந்தனரிழிசெயல்விழைந்தார். (உஅ)

களவுநாடிலார்களவுசெய்துழல்பவரானார்
தளவுநேர்நகைமாதரார்த்தணப்பிலாதொழுகும்
இளமைமைந்தருமெய்திநின்றுடற்றிடும்பரிசான்
உளமுதற்கரணங்களையொழித்தவரொத்தார். (உகூ)

பொய்மொழிந்திடற்கஞ்சிப்பலங்கெழுமாந்தர்
மெய்மொழிந்திடற்கஞ்சினர்விழைந்துநின்றியாண்டுந்
தெய்வதப்பெரும்பூசனையுளற்றிடுந்திறலோர்
செய்வதற்குளங்கொண்டனருடலினிதோம்பி. (௬௰)

இன்னணங்கொடுந்திரப்புவர்த்திருநிலம்வருத்த
மின்னவாஞ்சடைப்பிருகுவென்றிலகுமேதக்கோன்
என்னகாலமீதிதனினுங்கொடியதின்றென்றுந்
துன்னுஞானந்தனின்மதித்திதுதான்செயத்துணிந்தான். (௬௧)

கொண்டலேபொருங்கண்டனெண்டோளான்முன்குறித்து
மண்டுமன்பினனல்கியமாமணிக்குவியல்
புண்டரீகங்கண்மலர்தரும்புனிதநற்குசப்போர்
கொண்டபொய்கையிற்கொண்டாங்குயிற்றிடத்துணிந்தான். (௬௨)

ஞானமேயெனக்கல்வியினன்மறைதன்னில்
ஊனமேதெறுஞ்சாமமேயுறமுவிட்புவியில்
தானமெண்ணிரண்டினுமன்னதானமேதலைமை
ஆனதானமென்றருந்தவனகந்தனிற்கொண்டான். (௬௩)

வறுமையான்வருந்துநர்தமைவகைபடக்கூவிப்
பிறைமுடித்தபெம்மானருளல்லதுபெரிதும்
உறுவதொன்றிலையாகலானுகந்திவணெய்தி
அறுசுவைக்கடலமுதுணவம்பினென்றழைப்பான். (௬௪)

இன்னமாதவன்செய்தவத்தெழின்மணிக்குழையான்
அன்னதானமேசெய்திடவறிவுடையொருவன்
தன்னைநாடியேயெப்பமையாற்சாரசாரங்கள்
என்றுமீறிலாவின்பமெய்தலையிவையும். (௬௫)

பிருகுமாமுனியரதனங்கைக்கொடுபெரிதுந்
திருகிலாவுயிர்க்கன்னதானஞ்செயத்தொடங்கிப்
பருகும்வேட்கையாளறுசுவையுண்டியைப்பரிந்து
தரமகிழ்ச்சிகூர்ந்தறச்சிறந்ததுமற்றித்தரணி. (௬௬)

தருவிருக்கையினெய்துளார்போகமோதகைமை
மருவுநன்னிதிக்கோனகரின்பமோமலரோன்
திருவயங்கியமார்பவன்செல்வமோவெய்தும்
பரிசதெய்துமாலவன்றருமுண்டியின்பயனே. (௬௭)

ஆண்டுபன்னிரண்டாகவற்கடமதுதொலைய
மாண்டமெய்த்தவனும்பலமாந்தரையழைத்து

22843
MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

மீண்டுநுந்நகர்க்கேகுமினெனவிடைவழங்க
வாண்டகன்றுதந்நகரினையணுகினரன்றே. (௩௮)

கன்னிபாகனார்கந்தரமெனப்புயல்கறுத்திட்
டன்னவன்கரமாமெனவிண்ணிடையதிர்ந்து
வன்னியேய்சடையெனமின்னுவயக்கிமாமழையை
இன்னநீர்தரவவனருளெனப்பொழிந்ததுவே. (௩௯)

பொழியமாநிலஞ்செழித்ததுபுரந்தரனாடு
கழியவோங்கியகரும்புனல்காசினியெங்கும்
இழியமாங்குயில்வாயெலாமடங்கினின்றேங்கப்
பழிதபும்பசுமயினடஞ்செய்தனபரிவின். (௪௦)

பிருகுவென்றுலகேத்திடும்பெருந்தவமுனிவன்
அரனலாதுயிர்க்கொருதுணையாவதின்மையினான்
அரனைநாடியேயருந்தவமலகிலபுரிந்து
பிரிவருந்திருவடிநிழலெய்தினன்பிறங்க. (௪௧)

வேறு.

மணிமழைபெறுதலான்மன்னுமிந்நகர்
மணிநகரெனும்பெயர்மன்னுமெந்தையு
மணிமழைதருலான்வயங்குமாசிலா
மணியெனும்பெயரினான்மருவுமாலரோ. (௪௨)

மணிமழையருளியவள்ளல்பால்வரு
மணியிழைமணியணங்கெனநன்மாமுனி
மணிகள்சேமித்தவம்மலர்த்தடந்தின
மணிமயத்தடமெனவயங்குமாலரோ. (௪௩)

வேறு.

சூதனன்முனிவரர்தமைநோக்கியேதுகடீர்
மாதவப்பிருகாற்றியபெருந்தவம்வகுத்தாம்
ஏதில்சீர்க்கடல்வருமொருதேனுவையிறைவன்
போதமெய்துநல்வசிட்டனுக்குதவுதல்புகல்வாம். (௪௪)

**பிருகுமுனி தவஞ்செய்படல முற்றிற்று.**

## வசிட்டமுனிவன்

# காமதேனுப்பெறுபடலம்.

கசட்டிழிவெந்தொழிற்கள்வாராயுழல்
அசட்டரையிராவகையாற்றுமெய்த்தவ
வசிட்டனுக்கவிரவனத்துமேவிய
விசிட்டனைவழிபடல்விளம்புற்றதே. (க)

நாலொரான்முகன்றருங்காதலன்மைந்தனும்
ஆலமெய்த்ஞானமேபோதரியமெய்க்கொண்டு
சமரகீர்த்தானல் [illegible] கைகாலமைந்தவன்
விமலமெய்த்தவன் [illegible] ளான். (உ)

அன்னவனொருமுறை [illegible] றிவனுர்
றுன்னியவில்லறக்குழ்ந்துநாற்றிசை
மன்னினனென்பரான்மரபிற்றுறை
குன்னருமகிழ்ச்சிபிறேணங்கிற்பவே. (ங)

துருவர்கார [illegible] கமறி [illegible] ப்பியர்
பிருகுக்கிரசீலரேபிரங்கப்த்திரி
மருவுமாயத்தா [illegible] முதலவான் [illegible]
யுருவுகொண்டனையவருமனைப்புற்றனர். (ச)

உற்றவரனையவரனைவரும்பொருங்குகாத்
சொற்றிடத்தகுமுறைசூழ்ந்துசென்றனர்
மற்றவனறிந்தவர்வரவையேற்றுநற்
பொற்றவசிட்டனன்பொருந்துசீர்மையான். (ரு)

யாதுமாதவத்தெய்தேனமமலின்றிவன்
கோதறுமாதவர்க்குறாமென்புன்குடில்
போதுதற்கென்றனன்புனிதநான்மறை
யோதுமெய்ந்நாவினனுண்மையானரோ. (சா)

கரையறுதவத்தினன்கழறும்வாசகம்
புரையறுதவத்தினர்பொருந்தக்கேட்டுநீ
அரியதோர்ஞானமெய்த்தவமதல்லது
பொருவருமகத்தொழில்புரிந்துழற்றினை. (எ)

நுனையலாற்சிறந்தவரில்லைநால்வரைப்
எனைத்தனிநாடியேயேழையேமிவண்
உனதருள்கொண்டுவாழ்வெய்தவுன்னியே
மனமகிழ்வோடுவந்தெய்தினமென்றனர். (அ)

யாதெனவசிட்டனுமியம்பமற்றவர்
மாதொருபாகனேமறைபுகன்றிடு
நாதனென்றேய்வதூரவிலுமாதவ
ருதியவமரர்தென்புலத்தவர்க்கெலாம். (கூ)

மாமகிழ்வளிப்பதுமழைபிலிற்றிடத்
தாமுளுற்றிடுவதுந்தருமநன்பொரு
ளேமுறுமின்பம்வீடெனுமிவற்றினை
நாமுறத்தருபொருணல்கிநிற்பதும். (க0)

தவமொடுதானமேமுதலறாவிலீர்
எவமறுகருமமேயீட்டவல்லதும்
நவமுறுமறைசளாறுட்டவல்லதும்
புவனியின்மசமெனப்படுகல்வர்மேலோர். (கக)

ஓரொருமகத்தனையுஞற்றவேண்டிடிற்
பாரினிலரசர்தம்பாலணைந்தவர்
சார்படைத்தரும்பொருடான்பெற்றல்லதின்
டியாருமேயுஞற்றிலரின்னதுண்மையால். (கஉ)

ஆதலான்யாமுமவ்வரசர்பாலணைந்
தேதமில்பொருளிரவாதுமாமகம்
பூதலமிசைப்புரியொற்புரிடிய
தீதறுகருமமேசெய்வியென்றலும். (கங)

தத்துவமுணர்ந்தவன்றகைமைசாலுமம்
மெய்த்தவர்சொன்மொழிவிழைந்துகேட்டுநின்
றெய்த்தவர்க்கேமவைப்பனையவெம்பிரான்
பத்திமேயாவையும்பயக்குமென்றனன். (கச)

ஆயினுமாசகீரடைந்ததன்மையான்
மாயிருஞாலத்துவயங்குசித்திரல்
சேயதோர்கேத்திரத்தெய்திப்பூசனை
யாயினசெய்தருளடைவறுலெறு. (கரு)

மறையவர்யாரையும்வழிவிடுத்தவ
ருறையுளையுற்றபினொருவருஞ்சிறப்
புறுவசிட்டனும்வடமுல்லையொண்பதி
மறுவறுபொழில்வயின்மருவினனரோ. (கசா)

அனையதுகடந்தவனமலனெய்திய
சினகரமேவியேதிகழுமாமணி

அனகனையமலனையயன்பிறைஞ்சினான்
புனைமலர்மணித்தடப்புனலையாடினான் (கஎ)

மறைசொலத்தகுவசாரீமாண்புற
நிறைதவந்தருமக்கமணிநிலாவிட
அறைதருமஞ்செழுத்தன்பினுன்னியே
பொறைசெய்மாதவமுனன்பூசையாற்றினான். (கஅ)

பாயுமால்விடைப்பிரான்பரிவினெய்தியே
தூயவகேட்டியாற்கருதினான்முறை
ஆயபூசனையைக்கண்டகமகிழ்ந்தனை
மேயவரிவணைமைமேவுவாரென்றான். (க௯)

கழைநெடுவில்லியைக்காய்ந்தவெம்பிரான்
விழைதகுவரமெனைவேண்டிநிற்றியால்
பழுதறுமாதவவென்றுபான்மையான்
எழுதருமறைமொழியாளிப்பிரான். (உ௦)

அம்மொழிகேட்டவவ்வருந்தவத்தவன்
மெய்ம்மயிர்சிலிர்த்திடவெயர்வுதோன்றிடச்
செம்மலர்க்கண்ணினீர்சிறிதரும்பிட
எம்மையாளிறையனையினிதினேத்தினான். (உக)

வேறு.

மலரயனும்மாலாய்மணிகண்டத்தெள்ளமுதாய்
பயலெனக்கொண்டம்மைதனைப்பால்விடைமேல்வந்தருள்வோய்
நயமிலேனின்னைநாடியிரந்தேத்தவுமிங்
கயலவர்போனின்றலாரிரங்கவல்லாரே. (உஉ)

கொன்றைச்சடையாய்கொடியிடையாள்கூறுடையாய்
மன்றத்தெழினடஞ்செய்வள்ளாலிருவர்தமக்
கன்றைக்குதவுமமிழ்தனையாயேழையனேற்
கன்றினர்போனின்றலாரிரங்கவல்லாரே. (உ௩)

மருடீர்முனிவர்மனக்கருத்தைத்தான்முடிப்பான்
முருகாருங்கொன்றைமுடியாயிமயமெனும்
பெருமால்வரையான்பெறுமாதுடையாயிங்
கருகாவிரங்காயேலாரிரங்கவல்லாரே. (உ௪)

வேறு.

என்றுதோத்திரம்புரிதருமிருந்தவத்திறையை
நன்றுநன்றெனநளினமாமலர்க்கரமமைத்திட்
டொன்றுகேட்டியென்னுழையரும்பத்திமையுடையாய்
மன்றவென்றுமைபங்கினன்வழுத்தன்மேயினனால். (உ௫)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

என்னவேண்டிநீபூசனைபுரிந்தனையென்னக்
கன்னிபாகனூர்காண்மலரிறைஞ்சியிக்கடையேன்
நின்னையாடியமலைநின்மகம்புரிநீர்மை
யுன்னிமற்றதற்குறுபொருள்வழங்குகென்றுரைத்தான். (௨௬)

சொன்னமாமுனிசருத்துணர்சோதியுண்மகிழ்ந்து
நின்னவாம்பொருணிலமிசையுரைசெய்துமினிமேல்
அன்னவானவரரும்பொருளனைத்துநம்மருளான்
மன்னுமெய்த்திருவாசனற்கடல்வயின்மறையும். (௨௭)

அமரர்யாவருமாலொடுமனைத்தனர்தருக்கித்
தமரநீர்க்கடல்கடைவராற்றவாதசீர்செழுமி
அமையுந்தேனுவும்பிறவுமாண்டெய்துமாங்கவற்றுள்
எமையடைந்துகேட்டதவெனுந்தேனுநிற்கேயும். (௨௮)

என்றுகுன்றவில்கோட்டியசேவகனியம்ப
மன்றவாணர்நேரபுளியுயிர்ச்செலாம்பதியாய்
நின்றநீர்மையாற்பசுபதியெனநிலவினையின்
டின்றுதொட்டொருபசுவையுமல்கலொணைத்தாய். (௨௯)

பசுபதீசனென்றொருபெயர்பரிவினின்மேவிக்
சசியுமன்பினுனினைவலங்காணிகொண்டோங்குங்
சசிமுகத்தனைசித்திமைத்திமையாய்த்தமைப்ப
பசுவருக்கமேமத்துறநிலவென்றனன்பாங்கால். (௩௰)

அன்னதாருகவனெறையாருநடையண்ணல்
சொன்னவண்ணமேபப்பெயர்மருவினுன்றனைநி
னன்னையட்பெயரெய்தினளருந்தவன்காண
மன்னினுணிறைசிவக்குறியிடையுமையோடும். (௩௧)

வேறு.

தின்னாள்சமியத்திறிமைந்தருஞ்சேஷ்யோரும்
இன்னமையாணிங்கிடருற்றனமென்றுவாடி
முன்னோலமென்றகரிமுன்முறையானடைந்த
பொன்னுபகனைத்தொழுதேத்திப்புகலுகிற்பார். (௩௨)

மரணந்தவிர்க்குமருந்தொன்றுவழங்கவேண்டுங்
கரணங்கடந்தவிறைவன்றன்கருணைபோல்வாய்
சரணந்தனைநாடியவெங்கடமக்கிரங்கித்
தருணந்தனிலென்றனர்மாயன்றனையடைந்தே. (௩௩)

அன்னோர்குறைகேட்டரனாருள்கூடுமாண்யாற்
பொன்னுபகனும்புலவோர்முதலோரைநோக்கி
முன்னாடியமந்திரமேகொணர்கென்னமுன்னி
இன்னேகொடுவந்தனர்தேவருமேனையோரும். (௩௪)

வேறு.

சீதரன்யாவருஞ்சென்றுகூடவே
ஆதரவொடுங்கடலடைந்துமத்தெனப்
பூதரமிட்டுவாசுகியைப்பொற்பொடுங்
கோதறுதாம்பெனக்கொண்டுமாறி. (௧௫)

மத்திடுதம்பமாயக்குமோடரி
அத்தடங்கடலினிட்டவர்கடைந்துழிக்
கைத்தநஞ்சமிர்தனர்கண்டவாலியும்
அத்துயர்தவிர்த்திடவடவினைப்பிறான். (௧௬)

கரங்கொடுகடைந்தனன்கறைகொள்பாந்தளும்
உரங்குலைந்தனவிடமுமிழ்ந்தெழு
வரும்பொழுததுபெருவாறுமோர்குமிங்
கிரங்கிடும்பெருமவென்றிறைஞ்சினாரரோ. (௧௭)

யாவருமுதல்வனென்றேத்துமெம்பிரான்
காவெனக்கரைபுரக்கடவுளோர்பொருட்
டாவயினடைந்தனலிடமுண்டோங்கினான்
மேவருமுமாபதிவிரைந்துநாடியே. (௧௮)

பின்னருங்கடைதரப்பெட்பினிற்சுரா
வன்னுமாமருத்தினிதெழுந்திறன்னது
தன்னைமேபயந்துணைத்தரணிபோர்சுரர்
என்றனர்வெறுத்தவர்க்கசுரரென்றனர். (௧௯)

கரிபரிசுரபிநற்கணிகைமாதராடம்
தருமணியாரமிங்கனைத்துந்தாம்வரப்
பெருமைசாம்புரந்தரன்பெட்பிற்கொண்டனன்
திருமணியெய்தினன்செங்கண்மாலரோ. (௨௦)

இந்திரன்கைக்கொடுநின்றதேனுவுஞ்
செந்துயர்வாயுமைகணவன்சிந்தையான்
முந்துறைசெய்தவாமுனிவந்தெய்தினன்
நந்தலின்மகஞ்செயுநாட்டத்தானரோ. (௨௧)

சுரபிமாமுனிபெறுந்தூயகாதையீ
தருமறையந்தணீரடிகண்மாமனை
கருதியமதிசமூவாயைநாடிய
ஒருகதையுளதப்புரைத்துமென்றனன். (௨௨)

வசிட்டமுனிவன் காமதேனுபெறுபடல முற்றிற்று.

# சந்திரன் கழுவாய்ப்படலம்.

மாமலரோன்றருமைந்தனத்திரி
காமருகற்பினுற்சவினும்பூங்கொடி
ஆமனசூயையையன்பின்வேட்டனன்
யாமவள்கற்பினையியம்பற்பாலதோ. (௧)

தேவரிற்சிறந்தசெம்பவளமேனியான்
பூவருமுந்தியான்புண்டரீகனு
மூவருமவணிலைமுன்னிநாடியே
யாவருஞ்சொலமகவாயினாரோ. (௨)

அன்னமாமகவினம்மலரவன்படி
யென்னநின்றிலகியவிரவினாயகன்
பொன்னிடைக்கலைபயில்பொற்புநீடினுள்
தன்னிருங்கலையெலாஞ்சூழ்ந்துசற்றனன். (௩)

இந்திரன்பாற்செலவெண்ணிப்பொன்னுயச்
சந்திரன்றனையழைத்தினையசாற்றுமால்
மந்திரநான்மறையாளர்வந்திடிற்
சிந்தையிலேனோர்குறைசெப்பலின்றியே. (௪)

ஓம்பிநின்னருமகக்குரியநற்பொருள்
எம்பலிற்றேடியென்மனையைக்காத்திடென்
றும்பரிசியம்பினனவனுமம்மொழி
மேம்படுமொழியெனவிரைவிற்றேடினான். (௫)

மாமதிதன்குருவாசகந்தனை
ஏமமாமறைமொழியென்றுகொண்டரு
காமரபினினவண்காத்தனன்பெருஞ்
சேமநன்னிதியினைக்காக்குஞ்செய்கைபோல். (௬)

வேறு.

கண்டானொருதாரையுமாமேலோன்கவினையுள்ளம்
கொண்டாள்குழைந்தாள்கொடிதாமயனெஞ்சின்மூள
விண்டாளொருநாண்முதலாயவிரையவன்றாட்
குண்டாயகாமத்துயரெங்ஙனுரைப்பதம்மா. (௭)

நலனுவதுகாமமெனப்படுநன்றிஞ்ஞாலம்
புலனாடியோதப்படுமேயப்புராரியுந்தான்
தலைமீதுகொண்டானொருதையல்சதுமுகத்தோன்
கலைமானைநாவில்வைத்தானரங்கொண்டான்கரியமாலோன். (௮)

ஆகண்டலனுய்யரங்கண்ணனுமாயினானென்
சோகந்தந்தனையின்னனமென்றுதொகுப்பதுண்டே
ஆகந்தனையங்கரிவைக்கருளாந்தனாளன்
வேகந்தருந்தண்ணருளென்றுகொண்மேவுமெற்கே. (௯)

என்றேநினைந்தாளினியேகுதுமென்னவாலோன்
தன்பாலனுகத்தனிவந்தமைசாற்றிடென்ன
நின்பாலனுகும்பொருளுன்றனைநேடியென்னை
இன்றேதெறும்வெங்கொடுங்காமமிரியவென்றான். (௧௦)

அன்றாயிதுகேளடாதென்பதறிதிநிற்குச்
சொன்றாரெவரித்தனைத்தீச்செயலேறுமிதென்றே
நன்றான்மறைகூறிடுநாணனைக்கோதிநிற்ப
தென்னேயெனமற்றவர்காக்கவளோதியப்பும். (௧௧)

யாரேயெழின்மிக்கவர்நின்னினுமில்லைகண்டாய்
போரேறனையாயொருமுன்மைப்புவனிமேலிங்
கோராதுரைசெய்பரிசென்கொலுடற்றுகின்றான்
றாரேயிலாநெஞ்சொடுமாரனலியவம்மா. (௧௨)

எனநாடியகூறியதாரையையயிற்றுவென்பான்
மனமாண்பிலாதார்செயகிற்றுனைமன்றல்வேட்ட
தனிநாயகனேயொருவர்க்குந்தணத்தனன்றே
சனியாயினைமேயினையிங்கெனைத்தக்கதன்றே. (௧௩)

அபலானையுளத்துனுமாதருமன்பிலாரும்
வியன்மாநிலமேலெகாருமேவுவாரென்
றுயநான்மமறையோதுவதும்முணராய்கொலென்று
மயனீடியதாரைமனக்கொளமன்றவோதும். (௧௪)

நீரோதிநின்றநிலையுமதுநின்றுகேட்ட
தீராதகொடுந்துயர்ச்செய்தியுந்தீர்கலாத
பேராநிரயநிறுத்தும்மெனிற்பேதையேனை
யாராநினைந்தீண்டுரைசெய்வதடுப்பதன்றால். (௧௫)

பதியானவன்மேற்பரிவற்றபதகிசொல்லும்
மதியேநினைநெஞ்சிடைச்சாலமதித்திருந்தேன்
மதிமாழ்கினையாலுரமோவினைமாண்டகாமோ
ததியூடொருநாம்படிந்தாழ்ந்திடத்தக்கதன்றே. (௧௬)

காமக்கடலிற்புகுந்தாழ்ந்தகயத்தியுய்யச்
சேமப்புணைநின்கல்வித்தொழிலென்றுதேர்ந்தேன்

காமத்தினுக்கிங்கிலேசச்செனக்கட்டுரைப்பார்
நீமற்றெனக்கேகிசரிற்பகையாகின்றாய். (கஎ)

ஏட்டின்படிப்பிங்ஙவேறுதிணையென்கொலாமம்
மாட்டின்மிசையேறிவருட்பெருமானுமையற்
காட்டின்புடையெய்தியோர்பாதிசனங்குழைக்கே
ஈட்டித்தரநின்றனனின்னறிவின்மையாதோ. (கஅ)

காமாந்தகாரமெனுங்களிணைமாந்தினின்றேன்
வேமாலெனுதுமனமென்செயவெண்மதிப்பேர்ச்
சோமாவெனமற்றவனுணர்ந்துரைத்தவன்றன்
மாமேனிமுற்றுந்தழீஇநின்றனண்மாண்பிலொதாள். (ககூ)

என்றுமொழிந்துமவன்றனைச்சிந்தனைசெய்வாள்
தன்றனிநுகத்தழீஇநின்றுதழைந்துநாணங்
கொன்னேயழிந்தனள்கோமளக்கொம்பரன்னாள்
அன்றுமுன்னைவினைப்பயவமைந்துநின்றாள். (உ0)

பானீர்திலதண்டுலமென்னப்பரிந்துகூடி
ஆறுதவின்பக்கடலாழ்ந்தனராயவேலை
நாறுகாறுமொருபொன்னனுகித்தெரிந்தான்
மாறுளடைந்தமதிக்கேடுமரபினம்மா. (உக)

ஆலோனையழைத்தென்னடந்தாயறிவேயிலாதாய்
நூலோர்க்கநீயமொருநுண்ணறிவெங்கொழித்தாய்
மேலோர்ப்பிழைத்தவிஃதென்றுவிடிவசென்றே
வேலாவலயநிலைப்பேற்சயரோகமேவி. (உஉ)

நிற்பாயெனவேபொறுத்தபதிசபித்துநின்று
பொற்பாற்றனதில்லகலென்றுபுகன்றுளாநல்
நற்பாலொடுமாண்டளப்பானுநயக்குமாலோன்
சொற்பான்மையாற்பொன்னினையேத்தியுஞ்சொல்லுமாலோ. (உங)

யான்செய்தகுற்றமிதுவன்றெனதூழலாது
தான்செய்ததன்றுதமியேனைப்புரந்திடென்று
மான்செய்தமேனிமதியோன்குறைமாண்பினைத்
தேன்செய்தசின்மொழியாற்பொன்னுரைசெய்யுமன்றே. (உச)

கோடுஞ்சாபமேற்றுத்தரியேனெனக்கூறிநின்றேன்
நடுங்காவுளைப்பச்சினந்தாண்டளப்பானயர்ந்து
கெடுஞ்சாபமெனதேயுளநாடினைகேட்டிபாவை
அடுஞ்சாபமேருவுடையானருளாகுமன்றே. (உரு)

அற்றுகலின்பொருகொண்டைநன்றுடைடைந்து
கற்றார்கழறுங்கடலொற்றிக்கவினகர்க்கும்
பற்றேதுமிக்கும்வலிதாயப்பதிதனக்கும்
உற்றோங்குநாட்பொருமுல்லைவனமுமுண்டால். (௨௬)

நீபத்தலமுற்றரன்பூங்கழலேயமெப்தி
வேயொத்ததோளிமகிழ்வித்தகற்பூசனைக்கே
ஆயத்தகுநாண்மலர்கொண்டருச்சிக்கினின்னை
மேயிப்பெருஞ்சாபமுநீங்குமிடைகொளொன்றான (௨௭)

வேறு.

விடைகொண்டவுடுபதியும்விமலனிருகழல்பரசி
நடைகொண்டுதென்றொற்றிநகர்கண்டுபணிந்தேத்தி
விடைகொண்டேகேதனத்தார்விழைந்தமரும்பதியெனவெப்
புடைகொண்டுபரவும்வடமுல்லைவனம்புகுந்தனனால். (௨௮)

புகுந்துகுமரத்தடநீர்ப்பொய்கைதனிற்குழைந்தாடி
நகும்பரிசானையின்மூன்றுநாடியெரிசெய்தயிரான்
மகிழ்ந்துறையுந்திருக்கோயில்வலங்கொண்டுபசுபதியை
சகந்தனையனறளந்தவிடைத்தனியழகாவெனத்துதிப்பான் (௨௯)

வேறு

வாதனையாளுளும்வருந்துவேழக்கிரங்கிப்
பாதமலர்சென்னிமேற்பரிவாகச்சூட்டுமொரு
மாதொருபாகன்மணிகண்டனைங்குமரன்
தாதைதனைத்தாழாததலையென்னதலையே
சங்கரனைத்தாழாததலையென்னதலையே. (௩௦)

குழையானைநுதல்விழியாற்காய்ந்தானைக்கைம்மே
லுழையானையன்பர்மனத்துழையானையோங்கும்
பழையாறைவடதளியெம்பண்ணைவனமுல்லை
விழைவானைநோக்காதவிழியென்னவிழியே
விடையானைநோக்காதவிழியென்னவிழியே. (௩௧)

கோமுத்திமேயகுருமணியைமெய்ஞ்ஞானப்
பாமலைக்குநால்வர்பரசவருள்செய்வானைக்
காமணக்குமுல்லைக்கடவுளையன்பான்மறைசொன்
மாமணியைவாழ்த்தாதவாயென்னவாயே
மதித்தவன்சீர்வாழ்த்தாதவாயென்னவாயே. (௩௨)

அற்பகத்திறைவாவரிப்பிரமரிந்திரர்தஞ்
சொப்பனத்துங்காணாச்சுடர்க்கொழுந்தையெஞ்ஞான்றுந்



MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBR...

கற்பனையைத்தான்கடந்தகாமருசீர்முல்லைக்
கற்பகத்தைக்கூப்பாக்கையென்னகையே
காரணனைக்கூப்பாதகையென்னகையே. (௫௩)

அண்டத்தார்க்கப்புறத்துமானானைமாமதியத்
துண்டத்தானைத்துளக்கில்சோதியனைமாமறைசொல்
பண்டத்தானைப்பரிவாய்ப்பாற்கடனஞ்சுண்ட
கண்டத்தானைக்கருதாக்கருத்தென்னகருத்தே
கருமணியைக்கருதாதகருத்தென்னகருத்தே. (௫௪)

விண்டானையானிழன்மேவிமறைநான்குங்
கண்டானையெவ்வுலகின்காரிகையையோர்புடையே
கொண்டானையுள்ளமென்றுங்குழையாதார்தம்மையிவ
ணாண்டானையறியாதவறிவென்னவறிவே
அமலனையேயறியாதவறிவென்னவறிவே. (௫௫)

வேறு.

அடைவினின்னணைந்தோத்திரம்புகன்றவாலோனுங்
கடையனேனதிபாதகனாவதுகருதி
யுடையநாயகபுகல்பிறிதின்றெனவோர்ந்திப்
படியின்மேலெழிற்கருணைபாலித்தனைபரிவான். (௫௬)

நீலகண்டவெண்டோளவாணிலாவணிசடில
மூலகாரணமுப்பதின்முறுவலானெரித்த
பாலலோசனபராபரபரிந்தெளிவந்த
சீலமென்னணஞ்செப்புகேன்சிறியனேனெந்தாய். (௫௭)

என்றுகூறியெட்டுறுப்புநன்னிலமுறவீழ்த்தக்
குன்றவார்சிலைகோட்டியகுழகனுமனையாற்
கன்றுசாலவுமிரங்கிநீயாற்றியபூசை
நன்றுகொண்டனநின்பவமிரிந்ததுநவிலின். (௫௮)

பொன்னளித்தவெங்கயப்பிணிபுனிதநீர்ப்பொய்கை
தன்னுடைப்பரிசத்தினானகன்றதுதாவில்
நின்னிலக்கணேயடைகெனவிறையவனிசழ்த்திப்
பன்னருஞ்சிவக்குறிவயிற்கரந்தனன்படிவம். (௫௯)

உடுக்கணத்திறைமாசிகந்தோங்குமாமணியைக்
கடுப்பநின்றுதன்பெயரினச்சவினகர்த்தென்பால்
இடத்தொர்பொய்கையையகழ்ந்துசின்னாளினிதிருந்து
கடுக்களத்திறைவிடைபெறீஇத்தன்கதிசார்ந்தான். (௬௰)

பொன்னிடுங்கொடுஞ்சாபத்தாற்புழுங்கியவாலோன்
மன்னும்பூம்பொழின்முல்லையைமனமகிழ்ந்திறைஞ்சித்
துன்னருங்கழுவாயுறும்பரிசுசொற்றனமேல்
அன்னவன்மனைக்கிழத்தியாவழிபடலறைவாம். (௪௭)

சந்திரன்கழுவாய்ப்படுபடலமுற்றிற்று.

---

# அசுவனிமுதலியோர்வழிபடுபடலம்.

பொன்பூத்தமகரந்தப்பொகுட்டலர்வாழ்க்கையனுகப்பொலியுமேலோன்
மன்பூத்தபுகழ்க்கிரதுபுலகனங்கிராத்தருமன்வசிட்டன்றக்கன்
கொன்பூத்தபெருந்தவத்தத்திரிமுன்னோர்மரீசியென்றுங்குறிக்கருஞ்சீர்த்
தென்பூத்ததக்கனுந்தன்றுணைதனையிறைஞ்சியிதுசெப்புமாலோ. (௧)

நிலவுலகத்திடையொருமுத்தொழினடத்துமவர்தம்மினேடொன்று
தலைமையுடையானெவனெத்தன்மையானவனென்னச்சதுமுகத்தோன்
நலமந்தமின்மறைசொற்றிடுமமரர்தமிற்றலைவனருவெண்டிங்கள்
இலகுசடைப்பரம்பரனேயனாதிமலமுத்தனெனவியம்பக்காண்டி. (௨)

நித்துசருவஞ்ஞதையனாதிபோதந்திருத்திரவிலலுத்த
சத்திசுவதந்திரதையோடனந்தசத்திமுன்னாங்குருணங்கள்
அத்தகுசிற்பானுக்கேயுரித்தாமென்றினிதெடுத்திங்கதையுமாண்டான்
மெய்த்தவாகமஞ்சிறந்ததெனவறிதியென்றும்வியன்புலமைமிக்கோய். (௩)

சிருட்டிமுன்னமுத்தொழில்கடன்கருணையாற்பொதுவிற்செய்யும்பாலத்
திருக்குடையானருவியருதொழுகும்வடகயிலையெனுந்தெய்வஞான
வரைப்பினென்றுந்திகழுமொருநாற்றோள்களொடுமருவிமரபினென்றும்
இருக்குமுன்னாங்கலையெனைத்துமுழுமுதலென்றெவனையெடுத்தியம்புங்கண் [டாய்.

சருவகாரணன்சருவபூத்தமனியன்சருவாபீட்டநல்கும்
ஒருவனவன்றன்னன்பர்வேண்டியனவேண்டியாங்குதவாநிற்பன்
அருமகவாயென்னுழைவந்தாயவனைநீயிஞ்ஞான்றன்பினுடிப்
பொருவருமெய்த்தவம்புரியிற்பெறலரும்பேறெய்திமிகப்பொலிவைகண்டாய்

அன்னதுகேட்டொருதக்கன்றுணைதனையிறைஞ்சிவிடையன்பாலேற்றுத்
தன்னிகரின்மானதவாவியையணைந்தாயிரம்பருவந்தவஞ்செய்கிற்பக்
கன்னியொருபாற்பிரியாக்கருணையார்கலியனுகிக்கனையுநீயு
மென்னவிழைந்தென்னெனுக்கித்தவஞ்செய்தாயெனவவனுமியம்புமாலோ. (௫)

பொலம்பூத்தகொன்றையந்தார்பூத்தமதிச்சடைபூத்தபுனிதமுன்னீர்
நிலம்பூத்ததிருவுந்திப்பெருமானுநான்முகனுநேடிக்காணா

வலம்பூத்தமழுவாளியெனநினையேனாடுகிற்பார்மருவுமெந்தாய்
குலம்பூத்தநலம்பூத்தகொள்கையெனலனையுங்குறித்ததென்னே. (௭)

காண்டன் முன்னுமளவைகளாற்காண்பரியபரம்பரனைகருத்துக்கெட்டாச்
சேண்டயங்குபேரொளியேசிற்பரைதான்பிரியாததெய்வஞான
ஆண்டகையேயாரணமாமறைப்பயனையறிவுறியாச்சிறியனேன்பா
லீண்டெளிவந்தருளியவாறென்னேயோவறியகிலேனெந்தாயெந்தாய். (௮)

பாசமகலாதுபதியிற்கலவாதிருக்குமின்பப்பரவைதன்னை
மாசகலவருளுருவத்தென்றேவுமையோர்பாலுடையவள்ளாலந்நாள்
பூசனைசெய்வாருள்ளப்பூங்கோயின்மருவியவற்புதமேயென்பாற்
பேசவெளிவந்தனையானின்கருணையிருந்தவாபேசற்பாற்றே. (௯)

வேறு.

என்றதக்கனுமம்மையப்பனையெய்தநோக்கியனைத்துமென்
றன்சிருட்டியியினைர்த்திடப்பலதாலுமென்றவமாண்பினான்
இன்றோர்மாமகவாகர்யுமெனச்சுமாமருகாசவே
மன்றவாணவரந்தராயெனமன்றநாடியிறைஞ்சினான். (௧௦)

அன்னதாகுகவென்றபின்னையெமண்ணல்மால்விடையூர்ந்தெழிற்
கன்னியோடுமகன்றனன்கயிலாயமால்வரைகாதலான்
பின்னுமற்றவன்வேதவல்லியெனும்பெருந்திருவேட்டபின்
தன்னதானைநடத்தினன்னொருதக்கமாபுரியின்கணே. (௧௧)

அன்னளோடவனன்றிறன்விழைபோகமங்கையர்வான்புரிந்
தன்னரும்புகழ்துன்னுமாயிரமைந்தர்தம்மையுவந்துதம்
தின்னநீர்தரமெய்த்தவம்புரிசென்றுமானதவாவிவா
யென்னையாளுடையானைநாடியவினிதவர்க்குமியம்பினான். (௧௨)

தந்தைசொற்படிமைந்தர்சென்றுதவம்புரிந்தனர்தந்தைபோல்
எந்தைதாளையிறைஞ்சியாக்கலெனுந்தொழிற்குரியாரெனுஞ்
சிந்தைநாடியகின்றனர்சிவஞானமீதலவென்றவர்
புந்திதன்னிலைமாற்றுவானவணெய்தினன்புகழ்நாரதன். (௧௩)

வேறு.

மைந்தர்சேண்மன்னிநாலவாழ்க்கைகீழின்மேலெழுந்
திந்தநீர்மையென்றுகண்டுநந்தையெம்பிரானிணைச்
சந்தமாமலர்ச்சரண்டனைப்பழிச்சிவீடுபே
றந்திலெய்திடாவணந்தடுத்தவாறதென்கொலோ. (௧௪)

கற்பமெத்துணைக்கழிந்தகரியமாலுமயனுமே
நிற்பமென்றுதோன்றிநின்றழிந்தநீர்மைசெப்புசற்

கப்பரன்றனைகருட்பரிசினன்றியாமே
எப்பிலவைப்பெறுமாறியம்பினானென் றகுதிலெனப்புகன்றீர். (கரு)

தந்தைதாய்தமர்முதலாமுறவினைத்துமிவ்வுடல்
வந்தவாறுபோலக்கிலன்மறபுளிப்பொருந்துமோ
அந்தமாதியேயிலாவரன்கழற்கலன்புறுஞ்
சிந்தையாளர்தேர்வரிச்செகத்தின்மைமடாவமே. (கசு)

வந்தவாறுநாடிநீர்வருந்திதினாறுமெப்பரசவம்
புந்திநைந்துபுரிவதுமபுராணனைப்பொருந்தாமே
நந்துனைச்சலக்துமோர்நல்லுறநந்துணிவசோ
மனத்தசொன்மினெனறனணிருந்தவத்துமேபினான். (கஎ)

வேறு.

என்றுகூறியநாரதனினைபடிவேதந்தி
ஒன்றுமாதவகேட்டியாவுமபராணடியை
இன்றுநனகுறுமபரிசெமக்கியம்பிடுகென்ன
மன்றவாணனையிறைஞ்சியம்மாதவனபுகலும். (கஅ)

ஞானமேயொருமூவகைமெனமறைநவிலும
ஞானமேதவமெனபதுமாரடவர்மரடான
ஞானமேபவிபாசஞானம்முபாபவின
ஞானமேபதிஞானமெனறிலகிடுமலர்ந்தன. (க௯)

ஓதிடும்பாசஞானநால்வாக்கினமயகுதி
வேதமாதியகலையெனவிளம்புசொறபவஞ்சம
நாதமீறெனக்களத்தியார்பொருட்பவர்ச
பேருமோடெனப்பெரிதுதினறுணர்திடமெய்றங்க. (உ0)

ஏதிலாப்பசுஞானமீண்டிவறறினைகொண்டு
போதுமாருயிரினைபநம்புடைவியாபியமென
மேருதுர்மையையுணர்ந்தவைகழனறுசினமேருங்க
மாதொர்பாகனையெனத்தமைமதித்திடுமதுவே. (உக)

சந்தமார்பதிஞானமாவதுதகுபானெய்
இந்தனத்தெரிகனிவயினிரதமெள்வயினை
ஆநதிலென்னநின்றிடுமிறைவனையடிஞானச்
சிந்தைசெய்தவனறிருவருளானறிவதுவே. (உஉ)

அன்னமாதொருபாகனையநதரிபாகம்
என்றுமெய்தரும்பூசனையியற்றிடமேலோர்
தன்மையீதெனச்சொற்றிநிந்தகையமேரவரன்சீர்
என்றுமோவியநசணிநெறிமயங்கினான். (உ௩)

அவ்வருந்தவரனைவருமவனுரையென்னும்
செவ்வழிக்கணின்றுசிற்சபாநடம்புரிவோர்
எவ்வமில்பெருங்கருணையானெய்தினரிணையோன்
கவ்வைதீர்தருங்கமலச்சேவடிநிழல்கவினை. (௨௪)

பின்னருந்தக்கனுயிரமகார்தமைப்பெற்று
முன்னனுப்பியவாறுபோலிவரையுமுன்னி
மன்னுமானதவாவிவாய்ச்செல்கெனவிடுப்ப
அன்னமாதவனன்னணம்புரிந்தனனன்றே. (௨௫)

தக்கன்மீச்சினந்தித்தருகொடுமைதான்புரிந்தான்
நற்கடற்புலத்தோரிடரயர்துமேவாமே
எக்கணுந்திரிதருகெனவிட்டனன்சாபம்
திக்கெலாமிகச்சலித்தனதிரிந்தனவுலகம். (௨௬)

நங்கைமார்தமைநல்கியேநானிலவரைப்பி
னெங்கணும்விருத்தியைமிகச்செய்கவென்றெண்ணிச்
சங்கைதீர்தரவிருபதின்மூவரைத்தந்து
பொங்குசீர்த்தருமன்முதற்புங்கவர்க்களித்தான். (௨௭)

வேறு.

பின்னருமாங்கவனிரலைமுன்னொன்பான்மூவர்தமைப்பெரிதுநல்கி
மன்னுநிசாகரனையெழின்மன்றலயர்வித்திவரையாவிருநும்
இன்னலந்துய்த்திடுகென்னவவனிரலைநாளினைமேயயோநாளும்
நன்னலந்துய்த்திடப்பொருதேனையோர்தங்காதைகளினைத்தாட்கீழ். (௨௮)

சென்றுதொழுதெந்தாயம்புலிமானந்தனையலாற்சிந்தைநாடா [மென்
றென்றுமெமைவருத்தியசீர்மையையணர்த்துப்முறையுணர்த்தவெய்தினோ
றன்னமடவாருரைப்பவவன்றருவிக்குறிநெனவகத்தினினை
யுன்னினன்சாலவுமஃதின்றேயொழிந்தெனச்சினந்திட்டுரைப்பதானான். ()

போழகுபடைத்தனையென்றியார்க்குநின்றனையாற்பேதாயென்னை
யாரெனநின்னுளத்துன்னியென்மொழியைக்கடந்தனையாலின்றுதொட்டுன்
னீரிரண்டிருண்மையாங்கலைகள்குறைந்தின்னலினுளேங்குகென்றே
ஆரமுதகிரணனைத்தாநோக்கிநெடுஞ்சாபாணியறைவதானான். (௩0)

என்னருமைமக்களையோராத்தொழுக்கினொழுகினையாலிருநீர்சூழ்ந்த
நன்னிலமேனின்னழகிற்கேதுவாங்கலைகுறையநாளுமென்றே
அன்னநெடுஞ்சாபம்பின்விளைவுநோக்காதளித்தானாலோனேற்றுத்
தன்னரியதலைகுறுகியோர்கலையாயயனுலகந்தானுற்றான். (௩௧)

தனக்கந்தச்சிறுவிதிதந்தமையுணர்த்தவுணர்ந்ததாமரையோனிசென்
றெனைத்துயிருக்குயிராமப்பரம்பரனையேத்திவழிபடுகவென்ன

உனற்கருஞ்சீர்வடகயிலைமால்வரையுற்றும்பராவுமைழச்சென்றேறுதச்
சினத்தொருமூவெயிலெரித்தசேவகனுங்கருணையினுற்செப்புமன்றே. (கூஉ)

எம்மருளானிற்றைமுநாளின்றதீர்மையையெய்தியிலகிடன்றேன்
வெம்மைமிகுஞ்சாபமொழிகுன்றுமேயின்னீர்மைமேவிடென்று
கொம்மைமுலைக்குவட்டொருபாற்குழகனருளியநீர்மைகுறித்திட்டாலோ
னிம்மையெனைநலிசாபந்துடைத்தனையென்றேம்பலிஞேடியம்புமன்றே. ()

கலைபுனைந்தநீர்மையினுற்கலைமதியஞ்சூடியெனக்கடல்சூழ்ஞாலம்
சொலவெனக்கோர்வரந்தருதிபெனவிறைவனன்னமேதோன்றலென்னைக்
கலைபரவக்கடவதன்னமென்னவாலோனுங்கனிவினெய்தை
பொலமலர்த்தாட்சரண்பணிந்துதன்கதியையேநாடிப்போந்தானன்றே. ()

வேறு.

இன்னவாறிவணிகழ்ந்துழியிருவருளொழிந்த
கன்னிமாரெலாங்கணவனைத்தாம்புரிந்திட்ட
இன்னலுக்குளைந்துநைந்தென்னினைந்திண்டின்
றென்னியற்றினேமென்னநின்றுய்குவானிசைந்தார். (கூரு)

கற்பிலக்கணமூவதுகணவன்றன்வழிபே
நிற்பதன்றிமற்றெவன்கொலோநெடும்பவன்சாபம்
பொற்புநீடவனுருவினையலைக்கவும்புரிந்தாம்
அற்பவன்புடையுடையமோராமறுத்தனையும். (கூசு)

காதலன்மனம்வருந்துமோர்காரியம்புரிந்தாற்
பேதுறும்பிரவுமையுண்ணியமேபெரிது
மேதினிக்கணேபெய்துமாயாரெனவிளம்பினநூல்
ஆதலாற்புரிதீவினைக்கறவியுமின்றால். (கூஎ)

கண்ணிழந்தபிற்கதிரவன்பூசனைபுரிவார்
மண்ணின்மேலிலராதலான்மலையவன்பயந்த
பெண்ணருங்கலமாமுமைபிரசமாமலர்த்தாள்
நண்ணியேத்திடக்கழியுமிந்நலிதுயரென்றே. (கூஅ)

மாலதீவனமடைந்துமைமலரடிபழிச்சிச்
சாலவேகினரவ்வழிச்சகடுமித்தனைக்கு
மூலமாயினேனென்றவரொடுவடமுல்லைக்
கோலநீடியபதிவயிற்குறுகினதம்மா. (கூகூ)

வேறு.

ஒன்பான்மூவருலகுடையானையுளநாடி
அன்பான்வழிபாடாற்றிடவன்றோர்க்கருள்செய்வாள்

முன்பாய்நின்றவுமையைக்கண்டார்மொழிவாரால்
துன்பேயோவவர்க்காயென்றேதுதிசெய்வார்கள். (௪0)

கொண்டானுக்கேயின்னலிழைப்பதெனாங்கொடியேமிங்
கெண்டானில்லாத்தீவினைசெய்யாவணிடனுளேம்
கண்டாரில்லையெம்போற்பாவக்கலரென்றே
விண்டாரன்றேயன்னையருஞ்சீர்மிகவுன்னி. (௪௧)

வேறு.

பொன்னேகருணைப்புயலேயொருமுப்புரையெனும்பேர்
மின்னேமெய்ஞ்ஞானவிளக்கேநின்னடிவிரைமலர்தாய்
என்னேகொடுந்துயரின்றகற்றுமென்றிறைஞ்சவுநீ
கொன்னேயிருந்தனைமுல்லைக்கொடியிடைக்கோமளமே. (௪௨)

பூவேயப்பூவின்மணமேமெய்ஞ்ஞானப்புனிதமலர்க்
காவேகமலையும்வெண்டாமரையுறைகன்னிகையும்
ஏவேபொரும்விழியாக்கொண்டனைமுல்லையென்னுநகர்க்
கோவேமனமகிழும்பூங்கொடியிடைக்கோமளமே. (௪௩)

மானேமடவனமேபலமாமறையும்வழுத்தும்
தேனேயிலகும்பசுங்கழையேதீவினைதெறுப்பாய்
வானேவளிமுதலாம்பூதமாகவயங்குமுல்லைக்
கோனேமகிழும்பணையேகொடியிடைக்கோமளமே. (௪௪)

மாமாதவனெனச்சொல்வர்கண்டாயம்மணிநிறத்துப்
பூமாதுதன்கொழுநன்றுனின்முன்வரும்பொற்பதனாற்
காமாரியோர்முப்புராரிவலாரிகணிந்துதொழும்
கோமான்வலத்தமர்ந்தோங்குங்கொடியிடைக்கோமளமே. (௪௫)

வண்டோங்குகைத்தலமானையிராந்துன்மகிழ்நனன்று
விண்டாழ்புகழ்சாலியற்பகையாரிடமேவினனீ
கண்டேனுமொன்றுங்கழறிலைமுல்லையிற்கண்ணனைவேக்
கொண்டோங்கியவிளங்கிள்ளாய்கொடியிடைக்கோமளமே. (௪௬)

நந்தாமணிமாசிலாமணிதன்னைநயந்துவலம்
அந்தாரணியிற்கொளுமனமேநின்னடிமலர்ச்சீர்
சிந்தாகுலந்தெறுமென்பதுணர்ந்தேன்றிருமுல்லைவாழ்
கொந்தார்குழற்செங்கரும்பேகொடியிடைக்கோமளமே. (௪௭)

ஐயானனத்தெம்பிரான்மாசிலாமணியன்பினுளம்
வையாவெழுதருமோவியமேநின்மலர்க்கணருள்
செய்யாயெனினெப்படிபிழைப்பேஞ்சிறியேமுல்லைவாழ்
கொய்யாமலரனமேபூங்கொடியிடைக்கோமளமே. (௪௮)

ஆலமடங்குங்களத்தனெம்மானருளாளனன்பர்
சீலமறிந்துதவும்வடமுல்லைத்திருநகரான்
பாலமருந்தெய்வவாரமுதேநின்பரங்கருணைக்
கோலமின்றஞ்சலருள்வாய்கொடியிடைக்கோமளமே (௪௯)

போதயனேத்துங்கருணைகரிநின்புனிதமலர்ப்
பாதபதுமந்தனைநாடிநிற்கும்பரிசினருக்
காதரநல்கினைமுல்லையினெய்தமெய்யன்பினொடெங்
கோதறுத்தாண்டருள்கண்டாய்கொடியிடைக்கோமளமே. (௫0)

மங்கலவல்லிநினைமகவாகவிம்மாநிலத்திற்
செங்கயற்கட்காஞ்சனமாலைசெய்தவஞ்செய்தவரார்
இங்கெளியேன்துயர்தீர்த்திடன்னேயெழிலாருமுல்லைக்
கொங்கவிழ்பூங்குழற்கொம்பேகொடியிடைக்கோமளமே. (௫௧)

வேறு.

என்றேதொழுவார்தமைநாடியிமயவல்லி
நின்றேபுகலும்மிவணீரெமைநேடிவந்து
பொன்றாதபாவப்புணர்ப்போவப்புரிந்துநின்ற
நன்றாயதொர்பூசனைக்கிங்குநயந்துமாதோ. (௫௨)

வந்தெய்திறுமித்தலத்தேமகிழ்வாகயாருஞ்
சிந்தைத்துயர்தீரவொண்மலர்செங்கரங்கொண்
டந்தில்வடமுல்லையெம்மானருச்சனையுஞற்றி
னந்தப்பெருவிண்ணவராவதருமையன்றே. (௫௩)

எம்மானைநுங்காதலன்முன்னைநான்றெய்திநின்று
செம்மாமலர்கொண்டருச்சித்திவண்சிந்திநின்றன்
அம்மாதவனல்கியசாபமுமாங்கவன்றன்
மைம்மாண்குழலாட்புணர்பாவமுமாயவன்றே. (௫௪)

மடவீரினிநீவிருமம்மதிவாழ்க்கையெய்தக்
கடவீரவனோடுபல்போகக்கடலழுந்தி
விடுவீர்சில்போதுபின்னம்பதமேவுவீரென்
றுடையாளுரைத்திட்டெழிலாருமுருக்கரந்தாள். (௫௫)

அம்மாதருமம்மதிவாழ்க்கையடைந்துமேவிச்
செம்மாந்தவன்றனலனெய்திச்சிறந்துவாழ்ந்து
மெய்ம்மாசுநீக்கும்வியனீற்றினினன்புறீஇப்பின்
எம்மான்வலமேவியவன்னையையெய்தினரே. (௫௬)

வேறு.

மங்கையைவழிபடீஇமாணுடுக்கணுஞ்
செங்கையின்மலர்கொடுசிந்தித்தேத்தி
அங்கவர்தீவினையகன்றதீதுமேற்
செங்கதிர்துயர்கெடல்செப்புவாமரோ. (௫௭)

அசுவனிமுதலியோர் வழிபடுபடல முற்றிற்று.

---

# கதிரவன்றுயர்நீங்குபடலம்.

அந்தணீர்கமலாசனன்வயின்வருமசட்டுச்
சிந்தைமேவியதக்கன்றன்சீற்றத்தினிடுமவ்
வெந்திறற்கொடுஞ்சாபத்தான்வெண்மதிகலைக
ளந்தில்யாவுமேகுறைதரவழுங்கியுள்ளயர்ந்து. (௧)

மாதொர்பாகனைவடமுல்லைமாநகரணைந்து
மாதவஞ்செய்துவரம்பறுகலைகண்முன்னிரம்பச்
கோதிலாவரம்பெற்றமைகூறிடக்கேட்டப்
போதுமெய்த்தவப்புலகனையெதிர்ந்திடப்புலகன். (௨)

பிறந்திறந்துழல்பெற்றிமையுடைப்பிறவமரர்
மறந்தவாதநின்னாணையைமறுக்கிலரெனைத்து
மறந்தவாதமெய்ச்சிந்தையராகத்தவிசமரும்
விறந்தவீசனோநின்வழிப்படருவோன்விளம்பின். (௩)

அனாதிமாமலமுத்தனையனகனையவல
மனாதிக்கெட்டொணாமாண்பனைமம்மர்நீத்தென்று
மெனாதியானெனும்பளகறுமெய்த்தவரிதயத்
தனாதுபீடமாக்கொண்டசங்கரன்றனைச்சிவனை. (௪)

என்னினைந்திவணேழைமையாலியம்பினையால்
என்னமற்றவனொருவகையெய்தியசீற்றந்
தன்னைநீத்தருந்தவத்தினாற்றன்வயிற்றோன்று
மன்னைதன்னையன்றரற்கயர்வித்தனன்மன்றல். (௫)

அப்பெருந்தகையவனிசைவின்றியம்பிகையோ
டற்புதத்திருவுருக்கரத்தலுமவனொருகாற்
பொற்புநீடியகயிலைமால்வரைபுகுந்தனனக்
கப்பிரானவன்மாதுலனெனக்கருதாமே, (௬)

நின்றநீர்மையை நெஞ்சிடைக்குறையெனநினைந்து
கன்றுநெஞ்சனுப்பக்கடுந்தொழின்மேவியதக்கன்
சென்றுதீயனீகடுமொழிசெப்பிடத்திருமி
நன்றுநன்றெனாத்தன்னொருங்கரணைந்தனனால். (௭)

அங்கணெய்தியதக்கனுமருமறையனைத்து
மெங்களீசன்மாமகந்தனக்கிறையெனவியம்ப
இங்குளந்தனிற்கருதிடான்மகமியற்றிடுவான்
பங்கயாதனன்முதற்பலவமரரைவிளித்தான். (௮)

விளித்தவானவரவன்வியனாணையினமைந்து
களித்தவன்செயுமகந்தனிற்புகுந்துகாபாலி
சுளிக்குநீர்மையையுணர்கிலராய்த்தொடுகடற்பார்
அளிக்குமாயனைமுதன்மையாக்கொண்டவணிருந்தார். (௯)

தக்கன்மாமகந்தனையவண்குயிற்றிடுமெல்லை
பொக்கமில்லதோர்மெய்த்தவப்புங்கவன்றதீசி
மிக்கவன்பினினெய்திமற்றவன்விபரீதந்
தொக்கவெஞ்சினைமாற்றுவான்றுணிந்துரைக்கின்றான். (௧௦)

வேதநாயகன்வேள்வியினாயகன்விமல
போதநாயகன்புரந்தரன்பூங்கமலத்து
மாதுநாயகன்மலரவன்முதலினோர்வழுத்து
மாதிநாயகனரனெனவறிகிலாய்பேதாய். (௧௧)

பிரணவப்பொருளரியெனப்பிரசமாமலர்மே
லொருவனேயெனவுரைப்பவருளத்தழுக்கறுப்ப
மருமலர்க்கொன்றைமானிடமேந்தியேபரமென்
றுரைசெய்கிற்குமப்பொருளனாத்துணையுமோர்கிலையால். (௧௨)

மகந்தனக்கிறைமறைமுதல்யோகியேயென்னச்
சகந்தனக்கருமறையெடுத்துரைசெயுந்தன்மை
உகந்துநீயுணராதுமம்மரினுழன்றனையால்
இகந்துநின்றனையாவுமாமிறைவனையென்னே (௧௩)

அவிதனக்குரியானரனல்லதிங்கெவரே
புவிதனக்கிறையெனப்படுமாணின்றன்பொருவில்
செவிதனக்குரைப்பாரெவர்திறம்புதலின்றிக்
கவிதனைக்கொடுபொருதவற்கடவுளாத்துணிந்தாய். (௧௪)

வேதநீதிகளின்னனமிகவெடுத்தியம்ப
மாதவத்ததீசியைத்தக்கன்மரபுளிநோக்கிப்

போதவீண்டுனையழைத்ததியான்புரிதராகிற்கும்
ஓதுமாமகங்காண்டலுக்கன்றிவேறுளதோ. (கரு)

எனக்குநீதிகள்புகல்வதற்கன்றெழுமையுநின்
றனக்குமெய்ப்பொருளெனக்கொண்டுவழிபடத்தக்கான்
மனக்கொவ்வாவெற்புமாலைதான்வனைவனேமறைசொல்
தனிப்பரம்பொருளாவனேசாற்றெனப்பின்னும். (கசு)

வெந்தநீறுசண்ணிப்பனேவிழைந்துயிரனைத்துஞ்
சிந்தையேங்கிடக்கொலைத்தொழில்செய்வனேசெறுத்து
வெந்திறற்கொடுங்கரிமுதல்விலங்கினமுரித்துச்
சந்தமாருடையாக்கொள்வனேநின்றன்குரு. (கள)

விடையுகைப்பனேமெல்லியலொருத்தியைக்காவிற்
சடைதரிப்பனேசங்கரிதனைநனிவிழைந்தோர்
புடைசெறிப்பனேபுலவர்கள்வெறுத்தநஞ்சமுதா
அடையக்கொள்வனேநீமுதலெனப்படுமன்னோன். (கஅ)

இனையநிந்தைகளனைப்பலவெடுத்துநின்றியம்பத்
தனைநிகர்த்திடாக்கொடியவெந்தக்கனைத்ததீசி
முனிவன்புன்முறுவலித்தவன்மொழிதடைக்கெல்லாங்
கனிவினன்விடைநிறுவினன்சற்றவரேற்ப. (ககூ)

கொடியமூர்க்கனுமுதலையுங்கொண்டதுவிடாவென்
றொடிவில்சீர்ப்பெரியாருரைக்கிணங்கவவ்வுரவோன்
நொடிதருஞ்சொலைக்கேட்டவனின்றுநொய்யோன்றன்
மடமைநோக்கியேமாதவன்கட்டுரைத்திடுமால். (உ0)

எங்களீசனையிமையவர்பிரான்றனையிகழ்ந்தாய்
பங்கமெய்தினையாற்கொடியாய்பரிந்தாற்றுந்
துங்கவேள்வியுந்தொலையுமென்றுரைத்தவண்சூழ்ந்த
சங்கபாணியாமுதற்பல்தேவரைத்தகைந்து. (உக)

புண்ணியம்புரிந்திமையவராயினிர்புரைதீர்
எண்ணில்செல்வமதெய்தினீரிமையவில்வாங்கிக்
கண்ணின்முப்புரங்கட்டழித்திட்டகாபாலி
வண்ணமாமலர்ச்சேவடிவழுத்தியதிறத்தான். (உஉ)

அன்னநீர்மையைமறந்தனிரம்பிகாபதிசேர்
தன்னமாகவேமதித்தனிர்சழக்குறுசெல்வங்
கொன்னையேகுதல்கண்டிலிர்கொடியவிவ்வேள்வி
தன்னைநீங்கிடினுய்விரென்றருந்தவன்றணந்தான். (உங)

இருதலைக்கொள்ளியிடையெறும்பொத்திமையோரு
மொருதலைத்துணியாதவனாணையினுள்ளம்
பெரிதலைப்பவேநின்றனர்பெரும்பதமிழப்பான்
வருதலைத்துணியாதிதுசெயமனங்கொண்டான். (உச)

மாயவனறனையரும்பரத்தொருவனுமதித்துப்
பாயசிர்மகமாற்றினன்வேணியிற்பாணி
போயவித்தகன்விலங்கலைவிளைந்தடுத்தண்மி
நாயனார்தமக்குரைத்தனனாரதனம்மா. (உரு)

சொன்னவாசகங்கேட்டவத்தொலைவில்சீர்த்தொல்லோன்
தன்னுளத்தடைத்தவற்குறுந்தண்டமேவிதிப்பான்
உன்னியங்குடல்வியர்ப்புறநின்றனனுவன்பால்
மன்னுசீற்றமோர்படிவெனவீரன்வந்துதித்தான். (உசு)

அவனையன்பொடுமாதரவானனிநோக்கித்
தவறுளூற்றிடுந்தக்கன்மாமகந்தனிற்போந்திட்
டெவமுறச்செயவேண்டுமென்றியம்பினனின்னே
புவனிமேலெனப்போர்விடையூர்தியாம்புராரி. (உஎ)

வேறு.

விமலைதன்கூறெனவிளங்குங்காளியோ
டமர்செயவீரனுமடைந்துதக்கனுக்
குமையொருபாகனார்சீர்த்தியோதினான்
அமைவினாற்கேட்டிலாதகந்தைகொண்டனன். (உஅ)

இந்திரன்குயிலுருக்கொண்டிரிந்தனன்
சந்திரன்காலினாற்றளர்ச்சியெய்தினான்
நந்துடையான்கடனடுவொளித்தனன்
அந்திலப்பகனுங்கண்ணழிந்திட்டானரோ. (உகூ)

கந்தரங்கறுத்தநங்கடவுண்மைந்தனும்
அந்தரார்யாரையுமழித்துநீக்கியே
முந்துறுகாலவெந்தீயின்மும்மையான்
சிந்தையினவன்செயல்செப்பற்பாலதோ. (௩0)

தக்கனையெச்சனைத்தலைதடிந்தனன்
புக்குழிப்புக்குழிப்புலானிணக்கடல்
மிக்கவணிருந்திடவேள்விமாற்றினான்
அக்கணத்துடைந்தனனயனுமென்பவே. (௩க)

வீரனையடைந்தவன் விரைமலர்ப்பதம்
ஏரணிமலரினிறைஞ்சியேத்தியே
யாருனைப்பொருவுகிற்பாரிம்மாட்சியால்
தாரணிவயிற்றக்கன்றன்னைக்காத்தியால். (௬௨)

என்றயன்வழிபடற்கிரங்கியெம்பிரான்
அன்றவன்றலைதனக்காட்டின்வன்றலை
ஒன்றிடநிறீஇயவனொல்லைநீங்கினன்
மன்றலந்தாரினான்மரபினென்பவே. (௬௩)

சிந்தையுமொழியுஞ்சென்றெய்தரும்பிரான்
அந்தமிலின்பவீடானகயிலைவெற்
பந்திலன்னவனருணிலையடைந்தனன்
கந்தரநீலமார்கடவுண்மைந்தனே. (௬௪)

கண்ணிழந்தலமரும்பகனுங்கண்ணுதல்
புண்ணியமலர்க்கழல்பொருந்துமுள்ளமே
நண்ணியசதீசிமுன்னாட்டுங்கட்டுரை
எண்ணிடின்முற்செயுமிருந்தவத்தினால். (௬௫)

தருணமாமதிபுனைதாணுசிந்தையாஞ்
சிரவணவினையினைச்சிக்கென்றெய்தினேன்
ஒருகழுவாயிதற்குதவவேண்டுவ
தரியதேயெனத்தனதுள்ளத்துன்னினான். (௬௬)

வேறு.

கைத்தலத்தெழில்வளைபுனைகார்த்திகைமுதலாம்
உத்தமப்பெரும்பெண்டிராறுடுக்கணத்தவரும்
அத்திரிக்கனசூயைபாற்றோன்றுமாலோனுஞ்
சித்தியெய்தினர்முல்லையைத்தொழுதெழுஞ்சிறப்பான். (௬௭)

மடங்கெடுத்துயர்நெஞ்சினாற்பகன்வடமுல்லை
இடந்தனிற்சென்றுகண்டிரும்பிறந்தைவேரறுப்பான்
குடங்கையிற்கனியெனத்தனைக்குறித்தருள்சித்தித்
தடங்குடைந்தொருபாசுபதேசனைத்தாழ்ந்து. (௬௮)

சித்திரமத்தியநாயகிதனைச்சிந்தனைசெய்திட்
டத்தலந்தனையிடைவிடாதணுகினின்றேத்த
மத்தமாமதிசூடியமஞ்சனுமுமையோ
டுய்த்துவெள்விடைமற்றவற்கூயுரைசெயுமால். (௬௯

நீசெய்பூசனைக்குளமகிழ்வுற்றனனிறைது
பாசவேரறுத்தாண்டனம்பரிவொடுநம்மை
ஆசிகர்திவண்வழிபடுந்திறத்தினருக்கர்க்
கீசனுநின்பெரும்பவமிரித்தனவின்றே.　　　　(௪0)

அஞ்சலஞ்சனின்பதந்தனையடைந்துநின்றடைவே
எஞ்சலின்றியீண்டிராப்பகலிகந்துநின்றொழில்செய்
தஞ்சுபூதமுமுகும்பொழுதமலநல்வீடு
மஞ்சநீபெறுவாயெனமகிழ்வினோடுரைத்தான்.　　　　(௪க)

பகனுமாபதிதோன்றிநின்றுரைத்தமைபார்த்துப்
பகரொணாததோரானந்தப்பரவையிற்படிந்து
நகமடக்கொடியொடுமொருநம்பியுமெய்தச்
சகமிசைத்தமியேன்செய்ததவமென்கொலென்று.　　　　(௪௨)

வேறு.

பூதரவில்லாய்பூமசனுதன்புணர்கிற்கு
நீதநிலாவாழ்சேகரநின்னேடுநர்நெஞ்சப்
போதுறைகிற்பாய்போதனபாதாபுலையேனு
ராதரவில்லேனென்றெளிவந்தாயருளென்னே.　　　　(௪௩)

கஞ்சனுமாலுங்காணருமோர்சிற்கனமன்றி
னஞ்சனகண்ணுளிஞ்சுனைநாடகஞ்செய்வாய்
வஞ்சவெளிக்கண்மேயினைநீயுண்மகிழ்வெய்தி
யஞ்சலையென்றேயிங்கெளிவந்தாயருளென்னே.　　　　(௪௪)

மாண்டுபிறந்திங்கேயுழலாமைமனநாசம்
ஈண்டுறநீயீண்டினையினிதெந்தாயெவருன்னைக்
காண்டகுபேறெய்துவர்மணிகண்டாகலைநாடு
மாண்டகைநீமேயினையெளிதுன்றனருளென்னே.　　　　(௪௫)

உம்பருநாடியோர்வரியாயுன்றனையென்று
மன்பினொடுநன்றருள்செய்வாயடியேனுன்
செம்பதுமத்தாளல்லதுதுணையுஞ்சிறிதோரேன்
அம்பிகையோடுநீயெளிவந்தாயருளென்னே.　　　　(௪௬)

வேறு.

என்றுதோத்திரம்புகன்றிடும்பகன்றனக்கெம்மான்
அன்றுநல்லருள்புரிந்தபினகிலமீன்றுடைய
துன்றுமாமலர்க்குழலொடுதொல்விடையூர்ந்து
நின்றதன்னுருக்கரந்தனனெறிமையினம்மா.　　　　(௪௭)

முன்னரிப்பதிவயினமுதாகரன்முராரி
தன்னமும்முணராப்பெருந்தகைதனைநாடிப்
பொன்னவாமலர்த்தடந்தொட்டவாறுபோற்புரிவி
னின்னறீர்தரத்தன்பெயராற்றடமெடுத்தான். (சஅ)

எம்பிரான்கழலேத்திநின்றெந்தைதன்விடைபெற்
றும்பரெய்தியாங்கோதுறுமருக்கரினோங்கித்
தம்பிரான்முல்லைத்தடம்பதிதனையுளமறவா
தன்பினோங்கினன்பகனெனுமருக்கனுமடைவே. (சகூ)

அன்பினாற்பகலோன்செயும்பூசனையறைந்தாம்
என்பொலாமணிதனையெழிற்காருத்தனீன்ற
மன்பெருஞ்சுதர்மாண்பினாலருச்சனைபுரிந்த
வன்புரீடிபகாதையையறிந்தவாவகுப்பாம். (ரு௦)

கதிரவன்றுயர்நீங்குபடலமுற்றிற்று.

## குசலவர் பூசனைப்படலம்.

கார்நாடும்பைம்பொழில்கள்கலைநாடும்பல்கழகம்
தார்நாடுஞ்சுரும்பினங்கடமைநாடுமதர்விழிகள்
ஏர்நாடுமணிநாளுமினனாடுமெஞ்ஞான்றும்
நீர்நாடுதனைநிகரா நிலவியகோசலநாடு. (க)

தகரமணங்கெழுமைம்பாற்றகையணங்கனாரென்றும்
புகரின்மலர்க்கற்பதனைப்புரக்குநீர்மையினிலவி
அகரமெழுத்தனைத்துமுதலாயவாறெனமரபின்
நகரமேழினுஞ்சிறந்துநலனுறுமயோத்திநகர். (உ)

பொன்பூத்தமணிமாடம்பொலிதருமந்நகர்ப்பெருமான்
கொன்பூத்தநெட்டிலைவேற்குலவேந்தர்தம்பெருமான்
தென்பூத்தசில்லியந்தேர்தசாதிசையுஞ்செலுநீர்மை
மன்பூத்தகாரணத்தான்மருவியபேர்வனைந்துடையான். (ங)

காண்டகுநல்வனப்பெய்துங்காரிகையாரொருமூவர்
மாண்புடைமாமனைவாழ்க்கைத்துணைவியராகவுமவர்பால்
ஆண்டகைதானோர்மகப்பேறிலனாகவருந்தவமே
பூண்டவசிட்டனைக்கொண்டேபுந்திதெருண்டிதுபுரிவான். (ச)

உரோமபதனுவந்தளிக்குமொருமடமாக்கொடிமணந்த
தராதலமேத்துதிக்குமருந்தவராசசிகாமணியாம்
பராவருஞ்சீர்க்கலைக்கோட்டுமாமுனிவன்பதியெய்த
விராவருநண்பாலவனைவேண்டியேவிழைந்திரந்தான். (ரு)

அவ்வேந்தனமுனிவனொடுமணங்கனையாளொடுமனையத்
தெவ்வேந்தர்பகைதுமிக்குந்திறல்வேந்தர்பெருமான்வாழ்
எவ்வேந்தர்திறைகள்கொணர்ந்தெய்துநகர்க்கெதிர்கொண்டான்
அவ்வானத்தவரெல்லாமலர்மாரிமிகச்சொரிய. (சு)

அம்முனிவன்றனைநோக்கியருட்கடலேநின்னருளாற்
றெம்மடங்கவெவ்வுலகுந்திறத்திறேனெம்பினனெற்பின்
அம்மடங்கிவ்வுலகோம்புமருப்புதல்வற்பெறினென்போ
லெம்மடங்கின்புடையாருமிலைசரதமிதுவென்றான். (எ)

அம்மொழியவ்வேந்தர்பிரானடைவினைத்திடக்கேட்டு
மெய்ம்மொழியாமெனத்துணிந்தவேதியர்தம்பெருமானும்
மும்மையுலகுப்புரக்குமுதுக்குறைவினொருமகவை
நன்மகத்தின்வழிதருவாநாமொழிதியெனப்புகன்றான். (அ)

அப்பரிசேமகப்பேற்றுக்காணமகந்தனைக்குயிற்ற
ஒப்பறுசீர்ச்சுவணமயத்தொருதட்டிலோர்பூதம்
அப்புடையேவாளடிசிலதுதலைமேற்கொண்டெய்த
மைப்படியுமணிமாடத்தயோதியர்கோன்மனமகிழ்ந்தான். (கூ)

அன்னமன்னனைநோக்கியார்வத்தானருந்தவனும்
இன்னடிசினின்னில்லக்குரியவர்தாமேமிசைக
ஒன்னலர்தாழ்மணிமுடியாயுவர்மதலைபயப்பாரால்
என்றின்னறெறவவனுக்கெடுத்தோதிநிறுவினனே. (கo)

அவ்வண்ணமரையர்பிரானுங்கவர்மூவருக்கன்பாய்ச்
செவ்வண்ணம்புரிந்தளிப்பச்செங்கைவளக்கோசலையு
மைவண்ணப்பூணணிகைகயன்பயந்தபாவையுமம்
மைண்ணக்கோதைசுமித்திரையுமரபினினயின்றார். (கக)

மூவருக்குநாற்கூறுமுறையினளித்திடவயிலத்
தேவருக்குமுனிவருக்குந்திரைகடல்சூழ்நிலவரைப்பில்
ஏவருக்குமிரும்பகையாமிராவணனைவெலத்தோன்றும்
நாவிருக்குமறைப்பொருளாநம்பியைக்கோசலைபயந்தாள். (கஉ)

பரிதிதனைத்தன்னுருவாப்பரித்தானைப்பாம்பணையான்
கருதலரைச்செகுத்தானைக்கரமலர்நின்றகலானை
அரிதிருவமனையானையமலன்றனுணையென
வருமொருவன்றனையன்பாய்க்கைகேசிவழங்கினளால், (கங)

தென்றலோரெழிற்குடையாய்ச்செறிந்திருப்பவாதனமாய்
நின்றலோர்பாதுகமாய்நெடும்பரியங்கமதாகிப்
பொன்றனையென்னுள்ளப்புண்டரிகமேயானை
நன்றுருமனத்திளையநங்கைகையவளும்பயந்தாள். (௧௪)

பஞ்சசனனெனுமரக்கன்படிவமாய்க்கடலகத்தே
செஞ்செவேகிடந்திறைவன்றிருக்கரமேபொலிந்தானை
அஞ்சுவணநிறத்தானையவன்வென்றிவயிற்குறிக்கு
மஞ்சனையும்பயந்தனளம்மடவரலன்பினனம்மா. (௧௫)

வேறு.

மைந்தர்நால்வருமரபினிற்றோன்றிடமன்னன்
அந்தவானமிழ்தயின்றனனெனவகங்குழைந்து
சந்தமாமலர்ச்சரயுநீர்படிந்துதாழ்வறுசீர்
அந்தணாளருக்கரும்பொருள்வித்தினொடளித்தான். (௧௬)

எமக்குமெம்மையேபொருமெழின்முனிவரராவார்
தமக்கும்வானவர்தமக்குமேம்படுமுளத்தக்கான்
உமக்குமேயலதெவர்க்குமேயுவப்புறுநலத்தான்
இமைக்குங்கண்ணிவற்கிராமனென்றிடுபெயரென்றான். (௧௭)

ஏகவானரசிமையவரிறையிளவலொடும்
போகநீள்சுரம்புண்ணியம்பூத்ததேபோலும்
மாகமேவழுத்தொருவனின்னலதுமற்றறியேன்
ஆகவென்றலும்பரித்தவற்பரதனென்றழைத்தான். (௧௮)

நீழலெனத்தம்முன்றனைவிடாதொருநெறிநின்று
பழுதில்சீரயோத்தியைவிடுத்தழற்கடம்பருவில்
செழுமலர்க்கரத்தேந்தியேசெல்லுமச்செம்மற்
சுழிவில்பேரிலக்குவனெனவமையுமாலென்றான். (௧௯)

அரசிராகவன்பொறுத்தலுமவன்றனைநேர்ந்த
விரவலாரையுந்தன்னகமேவிநின்றொறுத்துப்
பொருதுமோரறுவரையிவணறுவராய்ப்பொருச
ஒருவனைப்பெயரிடுகசத்துருக்கனென்றென்றான். (௨௰)

இன்னவாறவர்க்கேய்வதோர்நாமமேயிட்டு
மன்னுமாதவவசிட்டனும்வயங்கிரலையின்கோட்
டன்னமெய்த்தவனுந்தமதிருக்கையையணுக
மன்னன்றானுந்தன்மரபுளிக்கருமமாற்றினனால். (௨௧)

வேறு.

நிறைமதிநேரநெடுந்தகைமைந்தர்
தறைசெய்பெருந்தவமென்னவளர்ந்தார்

மறையொருநாலின்வயங்கிடுநீரார்
இறையுமிவண்பிரிவெய்திலர்நின்றார். (உஉ)

மன்னவமானனனன்மதலையரொல்லை
உன்னருமாமறையோதியுணர்ந்து
வின்னெறிமுற்றும்வியப்பவறிந்திட்
டென்னிவரொப்பவரில்லெனநின்றார். (உங)

இன்னவரின்னணமெய்தியஞான்று
மன்னன்மருங்குவயங்குசினந்தான்
என்னுமுருக்கொடிணங்கிநடந்தா
லென்னவடைந்தனனேமுறுமாண்பான். (உச)

கோசிகமாமுனிகோவினையண்மி
ஆசிகள்கூறியரிந்தமனைத்தந்
தேசறுதாடகையேமுதலாயோர்
தேசுறுவானிடைசேரவிடுப்பாய். (உரு)

என்றுயிரேற்றிடுமெண்ணருளில்லா
வன்றிறற்கூற்றெனவந்தவனேற்ப
அன்றவயிற்படைமன்னுயிரற்று
ரென்றுநிலாவியெடுத்திதுசெப்பும். (உசா)

மாதவகேண்மதிமாதவனீரெட்
டோதுறுமாட்டையனல்லனுவன்றான்
போதனகண்ணன்பொரற்கெழுகென்ற
லேதினிசாசரர்பாலிவணென்னே. (உஎ)

என்றவமன்னனியம்பியசொற்கேட்
டொன்றியசீற்றமுளத்திடைபொங்க
நன்றுநின்செய்கைநின்மகன்மேன்மை
நின்றறிவேனொருநீயறியாயால். (உஅ)

என்னவருந்தவனெய்தியகோபம்
தன்னையுணர்ந்ததனித்தவசிட்டன்
மன்னனைநோக்கிநின்மைந்தனுக்கின்றே
நன்னலமெய்துதனொடிலையென்றான். (உகூ)

அவ்வுரைகேட்டவயிற்படைமன்னன்
தெவ்வடுவேல்வலசேவகனைச்சென்
றவ்வயினொல்லையழைத்திவனைக்கொண்
டெவ்வமுறுங்கொடியாரடுகென்றான். (௩0)

தம்பியொடுந்தனிமாமறைகூறும்
நம்பியருந்தவனல்லகுறிப்பின் ,
வெம்புறுகானிடைமேவினன்மேவி
உம்பர்தொழும்பொழிலொன்றினையுற்றான். (௩௧)

வேறு

பரவியசித்தாச், சிரமமெனும்பேர்
மருவியசூழல், தெரிதிகொலென்றான். (௩௨)
இம்மொழிகூறு, மம்முனிவன்முன்
செம்மையிருடைகை, யும்பெ திருற்றான். (௩௩)
நீர்முகிலன்னு, னுரெனலோடும்
சூர்மகளுடைய, போரடுகென்றான். (௩௪)
பகழிவிடுத்தே, தகவினழித்திட்
டுகவையினக்கான், இகலொடடைந்தான். (௩௫)
ஆதிமுதல்வன், காதிசுதற்கூய்
மாதவவேள்வி, நீதுணிகென்றான். (௩௬)
அன்னவனுடி, முன்னுறுமாமக
நன்றுகுயிற்றிட, ஒன்னலருற்றார். (௩௭)
தம்பியோடெந்தை, அம்பினையேவி
உம்பரைமேவ, வன்புபுரிந்தான். (௩௮)
அமரரறிந்திட், டமைவினடுங்கோல்
நமதிறைவற்கீ, யமர்செயவென்றார். (௩௯)
நற்றவனல்கப், பொற்றபடைக்கல
முற்றனவெல்லாம், பெற்றனனன்றே. (௪௦)
மாமுனியோடும், சோமகனம்பாற்
காமருமிதிலை, யேமமொடுற்றான். (௪௧)
செல்வழியெம்மான், கல்லிடையேதன்
நல்லபதத்தாள், ஒல்லையினுறவே. (௪௨)
அகலிகையென்னச், சகமிசைமேவப்
புகலிவராரெற், ககமதனைநந்தே. (௪௩)
என்றவம்மாலுக், கன்றவள்சீரா
நன்றுரைசெய்தா, ஞென்றியநல்லோன். (௪௪)

வேறு

மாமுனியொடுங்குமரர்மாமிதிலைமேவி
நாமருபுகழ்ச்சனகன்மாமனையைநாடிப்
போமறுகினெந்தைபுவிசெய்ததவமென்ன
லாமருமறைக்கொடியையன்பினொடுகண்டான். (௪௫)

நங்கையவளுங்கடலிணைகணையகன்று
செங்கைதனில்வில்லொடுசெறிந்தமுயிறன்னை
அங்களவிலன்பினொடுகண்டனளகன்றன்
எங்கள்மறையோன்பின்வருமெண்ணருகுணத்தான். (௪௬)
சென்றெழில்விதேகநகர்சிக்கெனவடைந்தே
அன்றவண்மகிழ்ந்துசெயுமானவுபசாரம்
நன்றுகொடுநம்பியிவனாரெனநயந்தே
துன்றுமுடியோற்குமுனிசொல்லுமினிதன்றே, (௪௭)
நாடுபுகழ்சாறயரதன்சிறுவர்நால்வர்
ஈடுமெடுப்பில்லவரிவர்க்குண்முதலோனத்
தாடகையைவென்றமதுதாழ்வரவுனற்றிப்
பீடுறுமகத்தொழில்செய்பேருதவிசெய்தான். (௪௮)
மன்னவவிவன்வரவுன்மங்கையைமணப்பான்
தென்னவனெனவுலகமாண்டசிவன்வில்லைத்
தன்னதுகரத்தினிறுப்பனதுதன்னை
முன்னறியெனத்தவனுமுன்மொழிவதானான். (௪௯)

வேறு.

இறுவரம்பினிவ்வரும்பழிச்சுறும்
மறுவறுமனுவுருவார்ந்தவள்ளன்முன்
அறுபதினாயிரராசனானையாற்
செறிதிணித்தோள்கொடோர்சிறையினிட்டனர். (௫௰)
கோமுனிகுறிப்பினாற்கொண்டல்போல்பவன்
மாமலைபொருசிலையயங்குகைக்கலத்
தேமுறத்தொட்டனனிற்றதேயெனின்
யாமவணிகழ்ந்தமையியம்பற்பாலதோ. (௫௧)
அரசனுங்கோமுனியாணையான்மத
கரிவனத்தானையான்கடவுண்மாநகர்
பரிவொடுந்தூதுவரெய்தப்பண்ணினான்
திருமுகங்கைக்கொடுசென்றுசேரவே. (௫௨)
மன்னவர்மன்னனும்வசிட்டமாமுனி
தன்னொடும்புரசனர்தாமுமெய்திடப்
பொன்னனகுணத்தொருவிதேகன்பொன்னகர்
முன்னிவந்தெய்தினான்முதிருமன்பினான். (௫௩)
பங்குனியுத்தரம்படர்ந்தவேலையிற்
செங்கணான்சனகியைத்தீமுன்வேட்டனன்
அங்கவன்கரத்திடையன்பிற்பெய்தனன்
மங்கலமரபினின்வயுங்குநீரரோ. (௫௪)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

இக்கொடியென்மகளிருந்தவத்துறை
ஒக்கநின்றியற்றுவாளவளொடொன்றிநீ
அக்கலைமதியுரோகணியெனச்சொலத்
திக்குறுசீரினாய்திகழ்கவென்றனன். (ருரு)

மாதவன்சனகியைமரபின்வேட்டபின்
கோதறுகுணத்தொருவிதேகர்கோன்றரும்
மாதினையூர்மிளையெனுமடந்தையைக்
காதலினிலக்குவன்கடிதயர்ந்தனன். (ருசு)

சனகன்பின்வருகுசத்துவசன்றான்றரும்
பனிமதிமுகத்துமாளவியைப்பைங்கழைக்
கனிமொழியெனுஞ்சுதகீர்த்தியைக்கனிந்
தனகனுக்கிளைவரையடைவின்வேட்டனர். (ருஎ)

இன்னணமணமயர்ந்திருந்தவேலையின்
மன்னவர்மன்னனுமிதிலைமன்னன்மாட்
டொன்னலர்தாழயோத்தியினையுற்றிட
நன்னயவிடைபெறீஇநடந்திட்டானரோ. (ருஅ)

சாதுரங்கத்தொடும்வசிட்டன்றன்னொடும்
சீதைமுன்மருகியர்சேர்ந்தணைந்திடக்
கோலைதவிற்குமரனுங்கோதில்கோசலை
ஆதியரெய்திடவகன்றிட்டானரோ. (ருகூ)

நடவையிற்கண்டனனவைமிகுந்திடுந்
திடமிகுநிமித்தமதறிந்தசெம்மலும்
மடனிகவுணர்ந்தவர்க்கேட்பமற்றவர்
இடரிலையாகுமாலென்றுகூறினார். (சுO)

கூறியதுணையினிற்கொடியபேரொலி
பாறணைவாட்கரப்பகீரதன்குலத்
தேறனான்கேட்டிவணெய்திற்றென்னென
மாறடுமழுக்கையான்வந்துற்றனனா. (சுக)

உரைத்துழியன்னவனுலகமேங்கிட
விரைத்துழாயலங்கலான்விழிப்புலக்கெதிர்
வரைக்கொடிமணாளன்வில்லிறுத்தமாண்பினாற்
றரைத்தலஞ்செருக்கினிற்றலைப்பட்டாயென்றான். (சுஉ)

என்றுரைவழங்கியேயீதுமாயவன்
றன்றிணிகரத்துழைச்சாரும்வில்லிதன்
மன்றிறமுணர்தியென்றுரைத்துமாதவன்
வன்றிறல்வில்லவன்வலக்கைநல்கினான். (சுங)

இராகவனேற்றதற்கிலக்கமாவது
பராவருநலத்தநீபணித்தியென்றலும்
விராவுதன்றவமெலாம்விடுத்துநின்றவன்
நிராமயனென்பதுநிறுத்தியேகினான். (௬௪)

மரபினின்வாங்கியவயங்கும்வில்லினை
வருணன்பாற்சேமியென்றிறைவழங்கியே
கரிபரிமுதலவாந்தானையங்கடல்
விரவிடவயோத்தியைமீட்டுமெய்தினான். (௬௫)

கேகயன்பரதனைக்காணுங்கேண்மையான்
ஓகையிற்றூதரையொல்லையேயினான்
நாகணையவன்றன்பினல்லதம்பியோ
டேகினான்விடைபெறீஇயிரதமூர்ந்தரோ. (௬௬)

தன்னகர்க்காவலைத்தந்திராமனை
மன்னவனுக்கிடமன்னனுன்னினான்
அன்னதைக்கூனியோர்ந்தரசிபாலணைந்
தின்னலிங்குறூற்றதற்கெண்ணினாளரோ. (௬௭)

பூமகள்பொருவுசற்புடையபூவைகேள்
நாமகள்கொழுநனையீன்றநம்பிதான்
வேமகன்கானிடைமேவநின்மகன்
கோமகனாவரங்கொள்கென்றோதினாள். (௬௮)

தேர்ந்துணர்த்துளவினத்தேவர்கோவினை
யேந்தலைக்கானகமேகுகென்றனள்
ஏாந்தகவிழியினாலலசீரையும்
ஆந்தகவளித்தனளிருகுமாரரோ. (௬௯)

இன்னசொற்கேட்டவவ்விலக்குவன்குலை
முன்னவனிராகவன்முன்னர்க்கற்கடந்
தன்னையேநாடியதானணைந்தனன்
அன்னையாஞ்சனகியுமடைவினேகினாள். (௭௦)

ஜானவிக்கரையணைந்தமலன்றனுமக்
கானவர்கோன்குகன்கலன்விடுப்பவே
வானுலாஞ்சித்திரகூடமால்வரைத்
தேனமர்சோலையைத்தேடியெய்தினான். (௭௧)

தம்பியுமிராமனுஞ்சனகியோடுமவ்
வெம்பியகானகமேவிநின்றமை
பம்புசீர்த்தயரதன்கேட்டபான்மையான்
அம்பரமேகினானாகதீக்கரோ. (௭௨)

சுமந்திரன்வசிட்டனேமுதலதொன்மையோர்
தமந்திரண்டாலனதண்மலர்ப்பொழில்
அமைந்தகேகயத்திருநாடணைந்திடச்
சமைந்ததூதுவர்தமைத்தாமும்போக்கினார். (௭௩)

கண்டனர்கேட்டனர்கனகத்தேரின்மேற்
கொண்டனரணைந்தனர்கோவகன்றமை
ஒண்டொடித்தாயினோர்ந்துழுவலன்பினார்
புண்டரீகக்கணீர்பொழியநின்றனர். (௭௪)

தம்முனுந்தம்பியுஞ்சனகியுங்கட
மம்மரபினினடைந்தமையறிந்தனர்
செம்மலுக்கேய்கடன்செய்துமேவினர்
மைம்மலிபொழிற்சித்திரகூடமால்வரை. (௭௫)

பரதனுமிளவலும்பரிந்தடைந்தமை
வரதனுங்கண்டுமன்னவர்பிரான்புக
ழுருநிறீஇச்சென்றமையொல்லையோர்ந்துதன்
இருகையாற்செய்கடனியாவுஞ்செய்தனன். (௭௬)

இராமனைத்திருநகரெய்துகென்றவற்
பராவிநின்றழைத்திடும்பரதன்றன்னையான்
விராவருகானகமேவிமீள்வனாற்
றராதலங்காத்தனின்றனக்குரித்தென்றான். (௭௭)

பாதுகமளிப்பவப்பரதன்கைக்கொடு
மேதகுமயோத்தியைமேவலின்றியே
கேதநீத்திடுநந்திக்கிராமமேய்ந்துதன்
தாதைபோல்வானிலைதான்கொண்டானரோ. (௭௮)

இவ்வயினிங்கிவணிருப்பவேந்தலும்
கவ்வையிற்கடநெறிகடந்துசென்றவ
னெவ்வயினோரும்வந்திறைஞ்சியேத்துறுஞ்
செவ்வழியோருறைவிடஞ்சென்றேகினான். (௭௯)

அத்திரிபோனெடுமாடயோத்தியான்
மத்திரிதயிரெனமனங்கலங்குறாச்
சித்திரவிற்கையஞ்சேவகன்றவத்
தத்திரிவாழியவடவியேகினான். (௮௦)

அங்கவனுறைவிடமடைந்தசேவகன்
பொங்கியகாதலான்பொருவின்மெய்த்தவ
எங்களுக்கருள்விடையெனவவன்புடை
தங்கனசூயையாந்தாயும்போந்தரோ. (௮௧)

# குசலவர் பூசனைப்படலம்.

சனகியைவாழ்த்தியத்தையலாள்பெறப்
புனைகலன்றாசுநல்கிடப்புரிந்தவ
டனைநனியிறைஞ்சினுடன்றொடேமவில்
அனகனுந்தம்பியுமவணகன்றனர். (௮௨)

விவ்விராவியகுழலவள்வெதும்புறத்
தெவ்விராமனத்தொடுஞ்சேண்டிரிந்தவவ்
வெவ்விராதனையிராவகையின்வீட்டினான்
இவ்விராகவனிமையோருமார்ப்பவே. (௮௩)

தண்டகவனந்தனைத்தகவினெய்தியே
அண்டரும்பரசுமவ்வந்தணார்கள்
கொண்டுசென்றவர்கடங்குறைகள்கூறிடப்
புண்டரீகக்கணான்புரத்துமென்றனன். (௮௪)

மாதவர்குழலையகன்றமாதவன்
ஓதநீரொருகையினுண்டமாதவப்
பூகரமனையவன்புரிந்துவைகிய
பாதவம்பொலிபொழில்பையவெய்தினான். (௮௫)

அமரர்கள்வழிபடுமமருமாதவன்
குமரநீயணைதருங்கொள்கைசாற்றிட
அமைதருமோவெனாவவனுக்கன்பினான்
அமைவில்பல்படைக்கடலனைத்துநல்கினான் (௮௬)

பெற்றபினவண்விடைபெற்றநாயகன்
சற்றுணைநாடியதம்பியோடுமுப்
பற்றிகந்தாருறைகிற்கும்பான்மையாச்
சொற்றபஞ்சவடியாஞ்சூழலெய்தினான். (௮௭)

நடையிற்சடாயுவைநண்ணியாங்கவன்
கடவதோரன்புபூண்டிலகிக்காகுத்தன்
மடமயில்புடைவரமற்றத்தம்பிசெய்
இடனுடைச்சாலையினிதினெய்தினான். (௮௮)

வேறு.

மாதாவனையார்மருவும்பொழில்வாய்
காதார்படைக்கையனிராவணன்வாழ்
போதாயினபோதலுறும்பரிசே
ஈதாமெனவெய்தினளெண்ணமிலாள். (௮௯)

அனகன்றனைநாடியடைந்திடுசூர்ப்
பனகைப்பெயராள்பரிவேதுமிலாள்
துனியுற்றமனத்தவள்சூர்ப்பிணைபோல்
தனியுற்றெவனுந்தடையின்றடைவாள். (௯௰)

பூவாளியனங்கன்விடப்பொருமி
ஆவாவிவணேதுசெயற்கமைவேன்
காவாயெனவுங்கடிதெய்தினளால்
தேவாதிபனார்செறிசூழலரோ. (௧௧)

கண்டானொருகாமன்விடுங்கணையாற்
புண்டானுறுகின்றதுபோரின்வலாய்
எண்டான்பிறிதில்லையெனாவயர்வாள்
விண்டாள்விரைவாள்விளிமேவுறுவாள். (௧௨)

பஞ்சேயனபாடுபடும்பரிசாள்
நஞ்சேயனகாமனலிக்கிடநான்
உய்ஞ்சேனெனதாருயிருய்ஞ்சிலதென்
றஞ்சாதுணைசெய்தலமந்திடுவாள். (௧௩)

வேதாவழிவர்தவிழுத்தகையேன்
மேதாவியர்நாடியமெல்லியல்யான்
யாதேயிவணோதுவலென்றுன்னனஞ்
சோதாதனவோதியுலைந்திடுவாள். (௧௪)

பொன்னாடியர்நாணுறுபோதமிலாள்
என்னாதனையெங்கதையையெய்தலுமே
அன்னானிவனொனவன்பினொடுஞ்
சொன்னாளவடோன்றியவண்ணமெலாம். (௧௫)

அரசன்றருசேயருமாமறைதேர்
தருமந்தணர்பாவைதனைச்செறிதல்
மரபன்றெனவாய்மொழிதந்தனனத்
திருவொன்றுமுராத்தொருதேவர்பிரான். (௧௬)

எனநின்றுலாயாடியவெல்லையினங்
கனகன்றனையேயகலாதுறைவாள்
தனையன்பொடுகண்டனடாழ்வுறுசீர்
புனைவிண்ணவர்முற்புரிநல்வினையான். (௧௭)

கனகன்றருதையலைமேவலினான்
அனகன்கொடியேனையணைந்திலனால்
எனையிஞ்சுனைசெய்வதெனாவினைவாள்
தனையங்கணகன்றனடானுமரோ. (௧௮)

நிசியங்கவணீலவிடம்பொருவச்
சசியெய்திடவுந்தளர்வாண்மெலிவாள்
விசுவந்தனைநல்கியவிண்ணவனும்
விசையிற்செலும்வெங்கனனல்கினனே. (௧௯)

தென்றுல்கொடியாபெனுந்தென்றமிழின்
குன்றேதாயந்தனைசோதரனுநிற்
கென்றனிவணெய்திபதிக்கொடுமை
நன்றேலெனுநல்லுணர்வோடுய்ந்திடுவாள். (௪00)

வேறு.

இன்னவளிவ்வாறின்னலினுள்ளாய்த்தினைகின்றாள்
தன்னைடளிப்பத்தாமரைநண்பன்றனிபாழி
மன்னுநெடுந்தேரூர்ந்தினிதெய்தமகிழ்வுற்றே
கொன்னவில்வேலோன்றன்னுழைவந்தாள்குறைதீர்வாள். (௪0௧)

வந்தவளிறையற்றந்தனைநாடிமலர்மேவும்
பைந்தொடிதன்னைக்கொண்டகல்வேனென்பதுநண்ணி
அந்திலடைந்தேசூழ்ந்தனண்மற்றவ்வரவங்கண்
டெந்தையைநாடுந்தம்பியடைந்தானினதீர்ப்பான். (௪0௨)

நேர்ந்தாளிக்குற்றவளோரரக்கிநிலனன்பு
கூர்ந்தேநல்கும்பூங்கொடிதன்னைக்கொடுபோதந்
தேர்ந்தாளென்றேமுலையொடுமூக்குஞ்செறிகாதும்
ஈர்ந்தானென்றவ்வெழிலியின்முட்மைபெடுத்தார்த்தாள். (௪0௩)

வேறு.

அரனார்கயிலைவரைபெடுத்தவனோவெனுமாலவன்பின்னே
வருநேரிலையோயாயின்னுமருவினுயோதுயிலெனுமால்
கரனைகரந்தாயோவெனுமால்காற்கிந்திரனைத்தளையிட்ட
மருகாவெனுமாலிதுவேநம்மரபிற்கமைந்தபழியெனுமால். (௪0௪)

ஒருநங்குடிக்கேபழிவிளைத்தாரேங்கலனைத்தோள்பார்த்திருப்பப்
பொருதன்றனைவென்றிடநீர்போதந்திலிரோவாவெனுமால்
திருவமனையவொருத்திதனைத்தீண்டவிதுசெய்தானுலைய
வருவிரெனுமாலீதுமக்குமரபோவெனுமாலுறுகுறையான். (௪0௫)

மும்மைஞாலம்வெருவருமெம்முதல்வாவெனுமானிற்பின்வருஞ்
செம்மையுலந்ததோவெனுமால்செகமுஞ்சிரிக்குமினியெனுமால்
எம்மையிருகைபிடித்தீர்த்தானிருக்கத்தகுமோர்விதியெனுமால்
இம்மைநலிந்தேனனியென்றேயிடரினலமந்துழிதருவாள். (௪0௬)

என்றுபொருமிபழுதிரங்கவிருகைவேழமனையமழைக்
கன்றுபோல்வாள்காகுத்தன்கடைமைபுரிந்தாங்கெய்தலுமே
நின்றவரக்கிதனைக்கண்டுநெருங்கல்வந்தீர்காமேயோ
நன்றுசொலிரிங்கடுத்தகுறைநாடியென்றனைகமுகத்தான். (௪0௭)

குன்றேயனையபுயத்திரவிகுலத்துமருமான்கட்டுரைப்ப
நன்றேகேட்டப்பணிமொழியாளடியவற்கேயுரைசெயுமால்
இன்றுதரத்தானுமையுடைந்தேற்கிதுசெய்தீரேன்செய்கோ
பின்றுணொருவரெமைவிழையாப்பீடுசெய்திரென்றுரைத்தாள். (௧௦௮)
அன்னபொழுதாங்கவணிகழ்ந்ததனைத்துமோர்ந்தகாகுத்தன்
மின்னினிடையாயினியீண்டுவிரவல்பொருந்தாதென்றவளை
முன்னரகலென்றுரைத்தனனான்முத்தநகைமான்பொருவும்விழிக்
கன்னன்மொழியாள்கடிதுகரன்கானமருவினளன்றே. (௧௦௯)
கரனையணைந்துற்றதுகூறக்கடற்சேனையொடுங்கவனெய்தி
பொரவும்பூளைவீயென்னப்போகவவனுஞ்சேனையுமே
விரைவினகன்றுகடலிலங்கைமேவிநிகழ்ந்ததுரைசெய்தாள்
இரவிகுலத்தோர்மணிவிளக்குமெய்தினன்சாலையமன்னே. (௧௧௦)
கொடியவரக்கிசானகிதன்கோலமனைத்தும்விரித்தோத
நெடியகாமக்கடலதனைநீந்தவறியாதலமர்ந்து
கடியசோலையினெய்திக்காகுத்தன்கைக்கணைவருத்த
முடியகில்லாதிருந்தானைமொழிந்தான்முகம்பத்துடைக்கொடியோன். (௧௧௧)

வேறு.

மானாகெனக்கட்டுரைசெய்திடவஞ்சநெஞ்சன்
தானாயினனொர்பொலன்மானெனத்தானவேசன்
ஆனானொருமாமுனியாகியணைந்துசென்றான்
கானார்குழன்முன்னடந்தன்றுகனகமானும். (௧௧௨)
கண்டாளொருசானகிகைதவமென்றுகாணாள்
புண்டானெனநெஞ்சுவருந்திப்புகலுகின்றாள்
மண்டான்புரியுந்தவமாமெனுமானைப்பற்றிக்
கொண்டேதருகென்றனள்கோதுபடாநலத்தாள். (௧௧௩)
ஓமென்றவனுமதன்பின்னடந்தோகமானும்
நாமொன்றுகானமெலாஞ்சென்றதுநம்பிதானும்
தாமஞ்செறிவில்லின்றணிக்கணையானடர்ப்பக்
காமென்றுதம்பிபெயர்கூறிக்கடிதுவீழும். (௧௧௪)
பொல்லாதமாயைபுணர்த்தும்மப்பொருவிலாதான்
சொல்லேயனவெங்கணையாற்றொலைவெய்தவன்றன்
வல்லேயிடும்பொய்க்குரல்கேட்டுமலர்துறந்தாள்
நல்லோயினிகாவெனவண்ணலையென்றுநைஞ்சாள். (௧௧௫)
அண்ணற்பெரியோன்றனதாற்றலவனுரைப்பக்
கண்ணுக்கினியானுரமேவியகாதன்மானும்
புண்ணிற்கணையிட்டெனவெம்மொழிபுந்திநைய
எண்ணிப்புகலநடந்தானிளையோனுமன்றே. (௧௧௬)

நடந்தெய்தினனண்ணலைக்கண்டனனுமவேலோன்
மடந்தைக்கினியெய்திடுந்துன்பெனமாண்பினெண்ணிக்
சடந்தெய்தினன்றம்பியொடுங்கடங்காத்திருந்தோன்
படர்ந்தேகிடவந்தனன்பைப்பையப்பாதகத்தோன். (௧௧௭)

வைத்தண்டம்வயிற்றிடைப்பின்னதுவாங்குவானை
முத்தண்டமேந்துமுனிபுங்கவனுமடைந்து
மத்தன்றனகண்ணிருபாலும்வயங்கிநாட
எத்திக்குநடுங்கவுமேங்கவுநின்றதம்மா. (௧௧௮)

மூன்மூக்கிழந்தாளுரைத்திட்டமொழியின்மேம்பட்
டென்மாட்டிறைவைத்தமெய்ப்பண்பெனவிஞ்சுநின்ற
பொன்மானனையாடனைக்கைக்கொடுபோதலேநன்
றென்மாதிரம்வென்றநெடும்புயக்கென்றுவந்தான். (௧௧௯)

ஜனகன்றருபாவையொடுஞ்சிலைசாற்றியன்னாள்
புனவாயினெடும்புலிவாயகப்பட்டபுல்வாய்
எனமாமனநஞ்சிடவெம்பெருமாட்டிவைகுந்
தணியாமிருக்கையொடுங்கண்டனன்சஞ்சலத்தான். (௧௨௦)

மாபாதகனுமனையைக்கொடுவானினேகக்
காபாலிதன்கைக்கணையாகியகாமர்வேந்தைப்
பூபாலர்போற்றும்புருடோத்தமனைப்புகன்றுள்
கோபாலனைத்தொடைந்தான்புட்குழூஉப்புரப்போன். (௧௨௧)

வந்தானைத்தானவன்கண்டுவயிரவாளான்
அந்தாரணியில்விழச்செய்தனனன்னையோர்ந்தென்
சிந்தாகுலமாவனவில்லிசெவிக்கணேகி
யெந்தாயுனதாவிதணந்திடென்றேங்கிநின்றாள். (௧௨௨)

கோடியானுமங்கணகன்றன்னையைக்கொண்டுசென்று
கடியாரிலங்கைநகரெய்திக்கனகவைப்பாம்
படிமீதெனச்சொற்றிடுஞ்சிஞ்சுபவனநாப்பண்
விடியாச்சிறையிட்டனன்விண்ணவர்நாகர்நைய. (௧௨௩)

ஊழிக்கடுங்காலெனவேவருமும்பலன்னான்
பாழிப்புயமேருதன்பிற்படர்கிற்பநாடி
மாழைக்கிணையாம்விழியாளைவனத்திற்காணான்
ஏழைக்கெவனுற்றதென்றேங்கினனியாருமேங்க. (௧௨௪)

கிளியொத்தசொல்லாள்கிடைத்தற்கரிதாகிநைஞ்சான்
வளியொத்துநடந்துவனம்பிறகிட்டோதுங்க
அளியொத்தசிந்தைக்கழுகிக்கிறையாகமண்மேல்
விளியொத்துலைவுற்றிருப்பத்தன்விழியிற்கண்டான். (௧௨௫)

கண்டானெழில்வேதமும்போதமுங்காண்கிலாதான்
பண்டாலிலையின்வயிற்றுஞ்சும்பரிசுநீங்கி
மண்டான்செய்தவத்தடிவைத்துநடக்கும்வள்ளல்
எண்டானுனைப்பதிவற்கெய்தியதென்கொலென்றான். (கஉசு)

பொன்னோக்கியமார்பிறைவந்தமைபோதநாடிக்
கன்னோக்கியசேரட்கதிரோன்குலக்காவலோயே
மென்னோக்கியையாளரக்கன்கொடுமேயினன்றெற்
கென்னோக்குவதென்றவனெற்புடனிந்தகன்றான் (கஉஎ)

தாதைக்குரியக்கடன்யாவையுந்தான்புரிந்து
போதற்பினிலக்குவன்றேற்றப்புலன்கொடெம்மான்
காதற்சனகிதனைக்கொண்டகல்கள்வனைக்கொன்
றோதப்படுநல்லிசையெய்துவதுண்மையென்றான். (கஉஅ)

என்றோநடந்துசெலுமெல்லையிராகவன்றான்
பொன்றாதநீர்வேட்கையையெய்தப்பொறுதுநின்று
பின்றான்வருவோர்சொல்வாவெனப்பேசவாங்கோர்
மின்றாழ்குழலோமுகிதானும்விரைந்துவந்தாள். (கஉகூ)

வந்தாளைமூக்குச்செவிவார்முலைவாங்கிநின்றே
கொந்தார்துளவத்தெரியற்குலபூதரன்றாட்
கந்தாமமணிந்தவனங்கருச்சித்துநின்றான்
அந்தாமரையாற்றருமாதியசமகிழ்ந்தான். (கங0)

பிற்சென்றனராவிருவோரும்பெயர்ந்துகானிற்
கற்சென்றதோளாளொருவன்மெய்க்கவந்தனென்பான்
கைச்சென்றணுகுற்றனர்காமருவீரர்வாளான்
அச்சொன்றகன்றானறவோரினகன்றுபோந்தான். (கஙக)

போந்தானுனைகொண்டொருபோதப்படிவமன்னுட்
சார்ந்தாரவள்சொற்படிச்சூரியன்றந்தகோன்றல்
வேந்தான்வருந்திக்கிடக்கும்வனைவேறுகாணான்
பூந்தாமரையோனெனவோதும்பொருவிறந்தோன். (கஙஉ)

வந்தானையாரென்றலும்வாயுவின்மைஞ்சன்யான்முற்
றந்தேனையவஞ்சனையாலித்தடங்குன்றோங்கு
நந்தாவிளக்கேயெனயாருநவிலுமென்றாழ்
தந்தான்வயினற்றொழும்பேபுரிவேனெனச்சாற்றிநின்றான். (கஙங)

அற்றேலவனெங்குளனோதெனவாங்கவற்குச்
சொற்றானவன்செய்தியனைத்தையுஞ்சொற்றதன்றி
எற்றேபகர்வேனினியென்னலுமெந்தைநோக்கக்
கற்றோர்பரவுந்திலையோன்கனிந்தோதிநின்றான். (கஙச)

விடைபெற்றவனேகியகன்றவிடையதென்ன
நடைபெற்றகன்றொருஞாயிறுமைந்தனோர்கட்
கடைபெற்றனைத்துமெடுத்தோதினன்காளைதானுஞ்
சடைபெற்றசெந்நெல்வயனாடனைச்சார்வலென்றான். (௧௩௫)

என்றேயுரைத்தங்கொருசாம்புவனீலனைப்த
தன்றேப்கருமாருதியோடங்கத்துநீலக்
குன்றேயனையானடிசார்ந்துகுறுகலோடும்
இன்றேதவிர்ந்ததுனதின்னலெனைத்துமென்றான். (௧௩௬)

நாசந்தனைந்துகடன்ஞாலநலக்கவந்தோன்
சோகந்தணந்துவிடுகென்றுதுணிந்துரைப்ப
வேகந்தருமேழ்பரிபோன்றரும்வெய்யகாளை
மேகந்தனைநாடுமைங்கூழெனவீறினனே. (௧௩௭)

உண்டாயசொரமையவற்குளதுப்பலென்றன்
பண்டாலிலையிற்றுயிலும்பரமேட்டியென்றே
கொண்டான்குலமாருதியான்குறிக்கின்றதொன்று
விண்டான்வெலற்காவதுகொல்விறலோனையென்றான். (௧௩௮)

ஐயத்தினின்றவவன்றன்குறிப்பாங்கறிந்த
சையத்தையொத்தவணிமாருதியங்கிருந்த
மையொத்தவாயமரமேழுமுருவிநிற்ப
வையத்தவன்வாளிவிடக்கெடுமம்மரென்றான். (௧௩௯)

வேறு.

அரிந்தமன்றனைக்கொண்டவராஜனுமமலன்
விரைந்தவண்கொடுவருவதென்னெனவிழைந்திருந்த
மரந்தனைக்கொடுமரந்தனிற்சரந்தொடுத்தெய்ய
இருந்தசெம்மளனென்றனையிந்திரமுணர்ந்தோன். (௧௪0)

கண்டுகொண்டனன்கடுத்தமையாண்டகாகுக்கன்
புண்டரீகக்கட்புயலனையான்பொருவிறந்த
மண்டுகாதலிற்றம்பியைநோக்கியென்வரிவிற்
கொண்டுநல்குதியென்றனன்கொற்றவிலம்மா. (௧௪௧)

நாண்வளைத்தொருசரந்தனைத்தொடுத்தனனம்பி
மாண்டசீர்த்திசாம்பியல்லவர்மயர்வுற்றார்
காண்டகச்சரமராமரங்களினிடையெய்திக்
கீண்டுமாநிலங்கேடிலானுழையடைந்ததுவே. (௧௪௨)

கண்டயாவருங்களிமகிழ்சிறந்தனரனையோர்
விண்டகன்றனர்வந்துழிவிண்ணளாமெற்கைப்
புண்டரீகக்கட்புரவலன்றம்பியைநோக்க
வெண்டவாவிரலானதைபெற்றிநின்றனனே. (௧௪௩)

சென்றவெற்புடம்பிருவிசும்படைந்ததிர்ந்தெய்தி
நின்றதன்னிலையுற்றதுநெடியவனோக்கி
இன்றிதன்பரிசேதெனமாருதியெனைத்தும்
அன்றுகூறியேயிரப்பினனுங்கசன்றனரே. (கசச)

வெய்யகானகமெனைத்தையுங்கடந்தனர்விரைந்து
மையளாவியசிகரிசூழ்கிட்கிந்தைமருங்கே
ஐயனோடவனனுஙிளரமலனும்பரிதிச்
செய்யமைந்தனைநோக்கியேசெப்பலுற்றனனே. (கசரு)

சென்றழைத்திடுன்றம்முனைச்செருச்செயற்கென்றான்
நன்றிராகவன்கேட்டலுஞாயிறுதந்தோன்
அன்றினோர்புரமட்டவனடிமலர்த்தொண்டின்
நின்றவாலியைக்கூய்நெடிதார்த்தனனின்றான். (கசசா)

வந்தனன்கொடுங்கூற்றுநேர்வாலியும்வந்து
சிந்திடச்செய்தான்ஞாயிறுசேய்தனைச்செருவில்
அந்திலாங்கவனொருவழிதணந்தமலன்றன்
சந்தமாமலர்ச்சீறடியிறைஞ்சியேதாழ்ந்தான். (கசஎ)

இரவிகான்முளைதன்னையவ்விரவிதன்குலத்தோன்
பரிவினோர்கொடிகந்தாத்திடநனிபடர்ந்தான்
உரனுறுஞ்சிந்தைவாலிபாலனையனுமுட்கித்
திருவிலானையும்வருத்தினன்றேவரும்வெருவ. (கசஅ)

இன்னவேலையிலிராகவன்வில்லினைவளைத்துத்
துன்னுநாணெறிந்தொருசரந்தூண்டினன்றூண்டி
அன்னவாலிதன்மருமநேர்விடுப்பவுமனையான்
எண்ணிதென்றதைத்தன்கையால்றுகுறப்பிடித்தான். (கசகூ)

சரமெனும்படிதெரிந்தனனெரிந்தெனைத்தசைப்பார்
ஒருவரேனுமின்றாயினுமம்மவோவொருவென்
உரனடுச்செலுத்தொருவன்பேருணர்குதுமென்ன
அரிததன்றலைப்பொறித்தவத்திருப்பெயரறிந்தான். (கருo)

தம்பிதன்னையும்விடுத்தனன்றன்னையுமறந்தான்
உம்பரானருளிருந்தவாவீதெனவுன்னி
அம்புவித்தலைக்குருதியினிடைப்படிந்தயர
நம்பியும்மிளையானொடுமவனுழைநடந்தான். (கருக)

நடந்துவந்தகாகுத்தனைநயந்தவனோக்கிக்
கடந்தனைக்கண்டபின்றைநுன்கருத்ததுதிறம்ப
இடம்பெற்றிட்டதென்றியம்பியாங்கிருந்ததம்பியையுந்
தடங்கையாற்பிடித்திறைவனின்சரணெனவிட்டான். (கருஉ)

பாங்கிருந்தசில்லோர்தமைவிடுத்துத்தான்பயந்த
ஓங்கலன்னவங்கதன்றனையழைமினென்றுரைத்தான்
ஆங்கவன்வரவவனையுமண்ணல்பால்விடுத்தே
நீங்கிலானிவன்றன்னையுங்காக்கெனச்செப்பி. (௧௫௩)

ஐயவென்றொருவாலிதவ்விராவணனை
வையமீமிசைவெல்லுவதில்லெனமகிழ்ன்
வெய்யவாற்றலைப்பகைத்ததுவிமலநின்கணைபொன்
றையமின்றியேவென்றிடுமதற்கியான்சான்றால். (௧௫௪)

இப்படைக்கடற்கெல்லைசெய்கின்கணையெனத்தகுவோன்
செப்பமாருமற்சனைதருங்கிறுவனென்றுணர்ற்
றப்பராங்கதிகருதிபெறகென்றவன்றனுங்
கைப்புலக்கணைவிடுப்பவாருயிர்கவர்ந்ததுவே. (௧௫௫)

வாலிவின்றனமற்றவன்றம்பியைநோக்கி
ஏலவிங்கயர்கின்றதெனிவன்றனக்கிமஞ்
சாலநீகடத்தென்றுமாருதிபொருட்சாற்ற
ஞாலமேலவர்மஞ்சனத்தோடாற்றினர்மலக்க. (௧௫௬)

தம்பிபால்வனசரர்தனக்கரசனேயாகச்
செம்பொன்மாமுடிபரிதிதன்சேய்தனைக்கவித்து
நம்பியுங்கடுங்கார்வரமசங்கனல்வனாயில்
உம்பலன்னவனெம்வதிந்திருந்தனனுப்பால். (௧௫௭)

வனசரங்களுக்கரசெனமணிமுடிபுனைந்த
தினகரன்மகன்செங்கருப்பன்னசொல்லியர்பான்
மனமியைந்தவர்மயக்கினிலாழ்ந்தனன்குரக்கின்
இனமெலாம்வரவொற்றினைவிடுத்திலனம்மா. (௧௫௮)

ஐவகைப்பெரும்பாதகத்தொன்றெனலாய
பொய்வழிக்குரித்தாமதுமாந்தியபுன்மைச்
செய்கையாழ்ந்தவத்திருவிலியோத்தியரிறையுங்
கைதிறந்தியசொல்லையுமறத்துறந்தனனால். (௧௫௯)

மன்னர்மன்னவன்மைந்தனுமரபினுற்றம்பி
தன்னைநோக்கிநந்தமக்குளைசெய்ததுமறந்தான்
அன்னவன்கருத்தறிந்துவாவென்றனனவனும்
பின்னவன்பெயர்ந்தேகினனவன்பெருநகர்வாய். (௧௬௦)

வேறு.

பராவருரும்புகழ்ப்பண்ணவனெல்வயல்
விராவுபோத்திநகருறைவேந்தன்றன்
தராதலம்புகழ்தம்பிவரக்குரக்
குராவருஞ்சினங்கூண்டெளைந்தன. (௧௬௧)

வழியடைத்தனமால்வரைகைக்கொடு
பழிவினைத்தனபண்ணவன்றம்பியுங்
கழலினெல்லையினுந்தினன்கார்வரை
முழுதுந்தான்றுகளாயினமுன்னரோ. (கசுஉ)

வந்தவேகமுணர்ந்திடுமாருதி
சிந்தைநொந்துதிறம்பினனுலை
இந்தமாநகர்க்கெய்திடுந்தீங்கெனு
எந்தைமுன்னரினையனசெய்தனன். (கசுங)

தூராதானுந்தடுத்தனள்கண்டனள்
ஆருமேமறவாராயவன்பினுன்
நீருதவுமந்நீர்மையைநீள்கடற்
பாரிலென்றுபரிவினிலேறினுள். (கசுச)

என்றுகூறவிளையவன்றன்சினம்
பொன்றிநிற்பப்புலங்கெழுமாருதி
நன்றுநாடிவந்தானைநலத்தினுன்
மன்றநன்றிமறந்தனிராமென்றுன். (கசுரு)

அற்றதன்றீண்டலகில்படைவர
ஒற்றர்தம்மைவிடுத்தனமொல்லையில்
இற்றைநாளையினெய்துமதென்றிடக்
சுற்றதம்பியாற்றக்கவனீங்கினுன். (கசுசு)

மாருதியங்கதனெடுமாண்பினுற்
சாருமெல்லையிற்றுன்வந்துமுன்னினுன்
சூரியன்றருதோன்றலவனெடும்
ஆரியன்றனிருக்கையையண்மினுன். (கசுஎ)

வந்தசேனையைவள்ளன்முன்காட்டிநின்
றெந்தையென்னைபணியென்றிரத்தலு
முந்துநாடவிடுகெனமுன்னவன்
சிந்தையோர்ந்தவன்செப்பிவிடுத்தனன். (கசுஅ)

ஆண்டகையாமனுமனைக்கூவியே
வேண்டியேகுவிழைந்தவாசிக்கென
நீண்டவன்விறலாழியுநேரிழைக்
காண்டுணர்த்தடையாளமுநல்கினுன். (சசுக)

பெற்றவஞ்சனைபெற்றமகன்விறல்
உற்றவாலியுதவுசேய்பிற்படர்
சுற்றுநீலனர்சாம்பனுறப்படை
சுற்றிடத்தென்றிசைசெலத்துன்னினுர். (களo)

இன்னவாறகன்றேகுழியாங்கணும்
அன்னவாழிடமாருமறிந்திலர்
மன்னுதென்கடலுற்றுமகேந்திரம்
என்னுமால்வரையெய்திநின்றாரரோ. (௧௭௧)

என்செய்வாமெவனுங்கண்டிலேமெழிற்
பொன்செய்மேனிப்பொலங்கொடிக்காகவே
மின்செய்துண்டத்துமேலோன்சடாயுபோல்
வன்செயற்கொலையெய்தன்மரபென்றார். (௧௭௨)

அன்னகாலையடைந்தனனன்னவன்
முன்னர்வந்துமுளைத்தசம்பாதியென்
பின்னவன்றுஞ்சுபெற்றியெவ்வாறெனப்
பன்னினாரவனுற்றபரிசரோ. (௧௭௩)

விதியினன்றுவிளைகிலதொன்றெனு
மதிதெளிந்துமராமரமேயெனக்
கதுவுதோளான்கவின்றிருநாமமீர்
பதியுமன்பிற்பகருமென்றனரோ. (௧௭௪)

எருவையேந்தலியம்பிடயாவரும்
இரவிதன்குலத்தோன்றலிரும்பெயர்
பரிவினோதப்பறையுமவண்சிற
குரிமையான்வளர்ந்தோங்கியதென்பவே. (௧௭௫)

பின்னவன்சனகிப்பெருங்கற்புடை
யன்னவேலையிலங்கையகன்பொழில்
துன்னிநின்றனனீவிர்தொடுகடல்
தன்னைத்தாவியடைவதுசால்பென்றான். (௧௭௬)

நீலன்சாம்பனுடங்கதனீள்கடல்
வேலைசூழிலங்காபுரமேவிடச்
சாலவாற்றலிலமெனச்சாற்றினார்
காலின்மைந்தன்கடுகியுற்றானரோ. (௧௭௭)

உற்றிலங்கையொருங்குதுருவியே
கற்றைவார்குழற்சீதையைக்காண்கிலான்
மற்றுநாடியசோகவனந்தனை
நற்றவத்தினினன்குகண்டானரோ. (௧௭௮)

கண்டுகாகுத்தன்கற்பினலத்தினைப்
புண்டரீகமலர்ப்பதம்போற்றிநின்
றண்டர்வாணனளித்தருளாழியைக்
கொண்டுநல்கிக்குறையகன்றனரோ. (௧௭௯)

சனகியும்பரிவோடவன் றன்கரந்
தினகரன்போற்செறியுஞ் சூடாமணி
தனையுந்தந்தடையாளமுஞ் சாற்றினான்
தனைவிற்பெற்றவன்சூழலழித்தனன். (௪௮௦)

தெவ்விராததெசமுகனோர்ந்தவண்
இவ்விராவினடுபடையேவினான்
அவ்விராகவன் றூதனழித்தனன்
செவ்வியானைக்கனுப்பொரச்சென்றனன். (௧௮௧)

அனையனைக்கொன்றரியெனநின்றவவ்
வனசரன்றனைக்கைக்கொடுவந்தனைக்
கனிவினெய்துவலென்றுகடற்படை
தனைமிகக்கொடிராவணிசார்ந்தனன், (௪௮௨)

சார்ந்தவன்றனிமாருதிதன்னொடு
நேர்ந்துபோர்கமலாசனனின்கணை
யோர்ந்தெடுத்துவிடுத்தனனெல்லையிற்
பேர்ந்தனன்பிணித்தாங்கவன்றன்னையே. (௧௮௩)

திசையினாந்துஞ்செழுமலர் தூய்த்தொழு
இசைநிறீஇயவிராவணன்றன்னிடம்
வசையிலையன்விடவருந்தூதனுங்
கசிவினாற்சிலகட்டுரைகூறினான். (௧௮௪)

வந்தபான்மைவகுத்துரைசெய்தனன்
நிந்தையாளனிவற்கொலைநேர்கென்றான்
அந்தவெம்மொழியைத்தடுத்தானறந்
தந்ததென்னத்தயங்கியவீடணன். (௪௮௫)

வாலினிற்கனல்வைத்தனன்மாருதி
வேலைசூழுமிலங்கைவியன்றெருச்
சாலமையக்கனலெழுத்தான்வகுத்
தோலிடத்தான்மகேந்திரமுற்றனன். (௧௮௬)

ஒல்லையாங்கவர்க்கொண்டொடிச்சீதையாந்
தல்லியைக்கண்டதன்மையுணர்த்தினான்
கல்லைநேர்புயத்தங்கதனாதியோர்
எல்லையில்புகழாளனையெய்தினார். (௧௮௭)

மூந்தியெய்தினன்மூதறிவாளனும்
எந்தைகண்டனனேழையையென்றுந்தன்
சிந்தைநின்வயிற்செய்தசமத்தியை
நந்திடாக்கற்பின்ஞானக்கொழுந்தினை. (௪௮௮).

என்றுகூறியிலங்காபுரந்தனிற்
சென்றுகண்டதிறந்தனைக்கூறிய
தன்றியன்னைபுளித்தசூடாமணி
நன்றுநல்கிநலக்கவணங்கினான். (௧௦௯)

அனகனுமிளையாளொடனிகழுந்
தனையடையத்தடவரிதான்விடுத்
தனையின்வெஞ்சிறைதன்னையகற்றிடக்
கனைகடற்கரைகண்டனனென்பவே. (௧௧௦)

தென்னிலங்கையர்கோமகன்சேனைகா
தன்னைமாருதிதான்சுட்டவித்தபின்
மன்னும்வானிடமாகவதிந்தனன்
மின்னுபுட்பகமேறிவிளங்கியே. (௧௧௧)

அரக்கர்பாவருமாங்கவனேறுநிறைந்
திருக்கமாமலரானையினிதழைந்
தருக்கனுஞ்சுடர்மாழ்கவுமைக்கெனப்
பரக்கமற்றதைப்பாங்கினியற்றினான். (௧௧௨)

மீட்டுமற்றவ்வியனகரெய்தியே
நீட்டும்வான்புகழ்சேருமமைச்சரைக்
கூட்டிமந்திரங்கோமகன்றானனி
கேட்டுநிற்பக்கிளத்துவதாயினான். (௧௧௩)

மகோதரன்முதன்மந்திரத்தோரெலாம்
பகாதபண்பிற்பகர்ந்தனர்சார்பினாற்
சுகோதியிற்சுலவியவிடணன்
விகாரமற்றமனத்தின்விளம்பினான். (௧௧௪)

ஐயகேட்டியிரணியனாதியாம்
வெய்யவீரரிருந்தனர்மிக்கவர்
வையமேற்செருக்கான்மடிந்தார்பிறன்
தையலைக்கவர்ந்தாரலர்சாற்றவே. (௧௧௫)

என்றவற்கிங்கிளையனந்திகள்
நன்றுகூறிநிறுத்தினனக்கவன்
இன்றெனைத்தவிர்ந்தேகுதியென்னலும்
அன்றுமந்திரரோடகன்றனரோ. (௧௧௬)

அதன்றிராகவன்றன்னையடைக்கலம்
புகன்றடைந்தனன்புண்ணியன்றானுமங்
குகந்திலங்கைவளங்கேட்டவன்றனை
மகிழ்ந்துமாமுடிசூட்டினனென்பவே. (௧௧௭)

தோடுகெடலைக்கடப்பதுசூழ்ந்தவன்
அடைவினிற்றருப்பாசனத்தெய்தியே
கடலரசினைக்காமுறநாடினான்
உடனுருமன்னவொண்கணையேவினான். (ககூஅ)

வருணன்றானுநடீற்றவ்வயோத்தியர்க்
கரசன்றன்கருத்தோதவனையனும்
பரிவினாற்சேதுபந்தனஞ்செய்தியேல்
ஒருவர்தங்கருத்தெய்துமென்றோதினான். (ககூகூ)

வேறு.

மாதுபங்கனைமலர்க்கையாலருச்சனைபுரிந்துங்
கோதுசெய்துழல்குணமிலிதனைக்குறைத்தொழிக்க
நீதகன்றிடச்செங்கையால்வழிபடல்புரிவான்
சேதுபந்தனஞ்செய்தனன்சிறுகுரக்கினத்தால். (உ00)

நளனியற்றியசேதுவைநயந்திறைகண்டிவ்
வளவதென்னலாந்தரத்ததன்றெனவுளாவழுங்கி
உளமகிழ்ந்தரும்படையொடொருங்குசூழ்ந்தெய்த
வளனிலாஞ்சுவேலத்தடவரைதனையடைந்தான். (உ0க)

ஒற்றர்தம்மையேவிடுத்தனனுருத்தவர்தம்மைக்
கற்றவீடணன்கலக்கினன்மற்றவர்கடல்சூழ்
வுற்றமாநகருற்றனருரைத்தனர்நடந்த
பெற்றியாங்கவன்பிறங்கன்மாளிகைமிசைப்படர்ந்தான். (உ0உ)

இருதிறத்தவரொருவரையொருவரங்கிருந்தே
மருவிநோக்கினர்வாளவன்றருமெழின்மைந்தன்
பொருதவன்றனமகுடபங்கம்புரிந்தகன்றான்
கருதலர்க்கரியெனத்தகுங்காளைநெஞ்சழன்றான். (உ0௩)

நோச்சிமேலவன்குரக்கினம்வளைந்தனநொய்தின்
விச்சைநீங்குமப்பாதகன்வியன்படையனைத்தும்
அச்சுறத்திருநகர்தனைக்காக்கெனவறைந்தான்
நச்சியங்கதன்றனைநம்பியொற்றெனவிடுத்தான். (உ0ச)

சனகன்பாவையைவிடுத்திறைசரண்சரணென்னக்
கனிவினெய்தினையாயினிற்கோறலன்கண்டாய்
அனகனல்லையேற்சமர்செயவருகெனவழைத்தான்
நினதுநெஞ்சினுட்டுணிபிவணென்னெனநிகழ்த்தும். (உ0ரு)

போரத்துணிந்தனனின்பெயர்யாதெனப்புகல
அரக்ககேட்டியானின்றனைவாலினுனடர்த்துப்
பரக்கவேசிறைவைத்தவன்பயந்தநன்மைந்தன்
தெரிக்கவேண்டுமோகிளியுமென்றனன்றிறல்வீரன். (௨0௬)

நீதியாவையுமிகழ்ந்தினனிலையிலாவாழ்வைப்
போதமெய்யெனக்கருதியபுலைத்தொழிலரக்கன்
வாதமைந்தனினுங்கொடியானினிவல்லே
போதினைச்சுருக்காதிவற்கொன்மெனப்புகன்றான். (௨0௭)

மயிலைத்தண்பொழிலோடெடுத்தன்றிமால்வரையாங்
கயிலைக்குன்றையும்பறித்திடுமாற்றலான்கனன்று
சயிலப்பொற்புயனெடுந்தம்பியேபோடும்வெஞ்சமரின்
வயினறப்படையிழந்தன்னசருமைழவார்தான். (௨0௮)

கும்பகன்னனைவிடுத்தனன்போர்செயக்கொடியோன்
தம்பியேமுதலானவர்தமமொடுஞ்சமர்செய்
தும்பரான்கரத்தாலுயிர்துறந்தனனுப்பால்
உம்பனோரதிகாயனைவிடுத்தனனுலப்ப. (௨0௯)

இலக்குவன்பொருதவன்றனையழித்தனனிலங்கை
அலக்கணுற்றதாங்கவனுயிர்துறந்தனனதற்பின்
விலக்கரும்புகழிராவணிவினாசடைந்தொடங்கிக்
கலக்கினுனொருகாருத்தனசேனையாங்கடலை. (௨௧0)

நாகவெங்கணைவிடுத்தனனிராவணிநம்பி
சோகமெய்தினன்றம்பிதன்றுயர்பொறுத்திறனுப்
வேகவெங்கருளன்வரவினாற்சகனைறதுவாற்
போகநாடரும்போற்றினர்புண்ணியபரசி. (௨௧௧)

பின்னர்வான்படைசெறிதரப்பெருங்களத்தாங்குத்
தன்னையொப்பிலாத்தனிமகரக்கணனடைந்து
மின்னுமிழ்ந்திடுகணைகொடுத்திறைவன்மேற்சொரிய
அன்னவன்றனையகற்றினனருங்கணைதொடுத்தே. (௨௧௨)

இந்திரன்பகையிளையவன்றன்னையேயெய்திச்
சிந்தவெம்படைதொடுத்தனன்சிங்கவேறனையான்
அந்தமில்படைக்கலம்விடுத்திடவகங்கலங்கிக்
கந்தமாமலரோன்படைவிடுத்தனன்கடிது. (௨௧௩)

அந்தவேலையினிளையவனருயிர்துறந்து
சிந்தைகெட்டழிந்திருந்தனன்செஞ்சுடரவன்பான்
மூந்தயிந்திரமோதியமூதறிவனுஞ்சென்
றந்தமில்புகழ்மருத்துமாமலைகொடங்கார்த்தான், (௪௧௪)

துயில்செய்வோனெழுந்தாலெனவெழுந்தனன்றோன்றல்
அயர்வில்போர்பலவாளவருடன்புரிந்தாற்றி
வியனிலத்துவெற்றித்திருவெய்தியமிடலோன்
நயமிலேனையும்போரிடைநலித்திடுமென்றான். (உகரு)

நிகும்பலைப்பெருவேள்வியையாற்றினாலன்றிச்
சகம்புகழ்ந்திடவிங்கிவற்கோறல்சாலாதம்
மகம்புரிந்திடுவாமெனநெஞ்சிடைமதித்தான்
முகம்புலர்ந்திதுசெய்குவான்றுணிந்தனன்முறையான். (உகசு)

கற்றவீடணனுரைத்திடவறிந்தகாகுத்தன்
நற்றவத்தம்பிரளினமாமுகத்தனைநோக்கி
மற்றவன்றனைப்படுத்தியென்றுரைத்தனன்வல்லே
செற்றமீக்கொடுசெருச்செயற்கிசைந்தனன்சென்றான். (உகஎ)

சென்றுமாமகங்குலைத்தவனொடுஞ்செருச்செய்து
கொன்றவன்றலைகொணர்ந்தனன்குமரனேபொருவான்
இன்றுபட்டனனேமகனிந்திரனினித்தான்
நன்றுவந்தனனேயெனவிராவணனலிந்தான். (உகஅ)

அன்னவேலையின்மூலமாப்படைநனியணுகச்
சொன்னமாமறைமுடிமிசைத்துலங்கியவீரன்
கன்னலஞ்சிலையான்றனைக்கட்டழலானெம்
முன்னவன்பொடித்தாலெனமுடித்தனன்முனைந்து. (உககூ)

இன்னவாறிவணிறைபொருநிற்புழியிலங்கை
மன்னவன்வனசரப்படைமிசைப்பொரவந்தான்
தன்னருந்தம்பிதனைச்சொலோர்பவன்சத்தி
முன்னியேவினனிலக்குவன்முன்றுறைபடிந்தான். (உஉ0)

அனுமனோர்ந்துசென்றணுகினன்மருத்துமாமலைகொண்
டினறவிர்த்தனனிளையவனின்னலான்றெம்மான்
றனையடைந்தனன்மாதலிசதமகன்றேர்கொண்
டனையையேர்பவனேறினனருமறைபரச. (உஉக)

வஞ்சனாகியவிராவணனிரதமேல்வந்தான்
நஞ்சமேயெனத்தும்பையேசூடினனயர்ந்தான்
எஞ்சுறாதுபோர்பொருதனனிராகவனின்னே
செஞ்செவேகொடும்பகழிதூண்டினன்செருக்களத்தில். (உஉஉ)

தலையிரைஞ்சினனிறைவிடுஞ்சரந்தனக்கெதிரே
நிலைகொள்வாளிகடேவினனீண்டவனவனைக்
கொலைசெய்வாளியைவிடுத்தவனாருயிர்குறைத்தான்
மலரின்மாரியைப்பொழிந்தனர்வானவர்மகிழ்ந்து. (உஉ௩)

வீடணன்றனைநோக்கியீண்டிவற்குநீவிழைந்து
நாடுகென்றனனீமநற்கடனெலாநயந்தே
ஆடவர்க்கரசன்சொலையவன்சிரங்கொண்டு
பீடிலான்றனக்காற்றினன்கடனெலாம்பெரிது. (௨௨௪)

வந்தவன்றனக்கவ்விலங்கேசனுமகுடந்
தந்திவண்வருகென்றனன்றம்பியுநேர்ந்தான்
முந்தியன்னையைத்தீவயின்மூழ்கியேவருகென்
றந்தமில்லியுமுரைத்தனனன்னணம்புரிந்தார். (௨௨௫)

அன்னைகற்பினால்வருந்தியவழலவனம்மா
என்னையுஞ்சுடுந்தீயினையிட்டனைவெதுப்ப
உன்னினாய்கொலென்றுரைத்தனனுடம்படாதவனும்
தன்னைநல்கியோனெய்திடத்தானுடம்பட்டான். (௨௨௬)

தந்தைபால்வரம்பெற்றவன்றம்பியோடிலங்கை
வந்திருந்தவானரப்படைசூழமாநிலமே
தந்தநான்முகன்வந்தமாலுந்தியேதகையும்
அந்தமில்புகழ்ப்புட்பகமானமூர்ந்தகன்றான். (௨௨௭)

இலங்கைமன்னனுமிரவிதன்மைந்தனுள்ளிட்ட
தலங்குலாவியகுரக்கினத்தவர்களுஞ்சார்ந்தார்
இலங்குபுட்பகமேறியவிராமனுமியைந்து
நலங்குலாவியபரத்துவனிருக்கைநண்ணினனால். (௨௨௮)

தான்வருந்திசைநாடியதம்பிதன்பொருட்டாற்
கான்வருஞ்செழுந்தாரனுமன்றனைக்கடிது
தான்விடுத்தனனாங்கவனயோத்தியைச்சார்ந்து
மான்விழிச்சனகியொடிறைவந்தமைவகுத்தான். (௨௨௯)

பரதனுஞ்சத்துருக்கனும்பரிவினினீன்ற
பெருமைசாலனைமாரொடுமன்பினாற்பெரிதீண்
டருமைசேர்பரத்துவனெறியறிபரத்துவன்ற
னிருமையுஞ்செறியிருக்கையையெய்தினர்யாரும். (௨௩௦)

தூகனுமெய்தினன்கொண்டல்கண்படுக்குமாமதில்சூழ்
நகரயோத்திவாழ்மாந்தருநண்ணினர்நல்லோன்
அகனமர்ந்தொருவிருந்தெனச்சமைதியாலென்றான்
முகனமர்ந்தவன்கருத்தினுக்கிசைந்தனன்முன்னோன். (௨௩௧)

மருந்தினைக்கடைந்தமரர்க்குவழங்கியவள்ளல்
விருந்தெனச்சமைந்தவணகன்றெழில்விளங்கயோத்தி

மருங்கடைந்தனன் மாமறைநடம்புரிந்தனைவால்
அருந்தவத்தொருவனிட்டனுமெய்தினனாங்கு. (உ௩உ)

நகர்புனைந்தவர்நம்பிவந்தெய்தலுநம்பி
மகுடமேபுனைந்தன்னையொடரியணைவயங்கி
அகனமர்ந்தவனியைப்புரந்தோம்பினனன்றே
நிகரில்வானவர்முனிவரராசிசணிகழ்த்த. (உ௩௩)

இராமனுளைசிறந்ததுமாநிலத்தியாண்டும்
பராவரும்மறந்தனிநடம்புரிந்ததுபாங்கான்
விராவருங்கடனூறினிலொன்றுமேற்கொண்டு
தராதலப்பொறைசுமந்தனனென்பராற்றக்கோர். (உ௩௪)

அரசநீதியாமனுமுறையனுத்துணைவழாது
பொருவில்சீர்த்தயரதன்றரும்புதல்வனும்பவியிற்
கருதுமாறிலொன்றேற்றுமுழையும்பசுக்கன்று
மொருதுறைக்கணீரருந்தவாழ்போதிலங்கொருநாள். (உ௩௫)

அண்மைத்தொண்டனுமொற்றனுமரணியந்தனில்
வண்ணமேகலைச்சனகியும்வள்ளலைப்பிரிய
நண்ணிமற்றவடனைநகர்க்கொடுவந்துநம்பி
உண்ணயர்திவனுறைவதுமூறுதிகொலென்று. (உ௩௬)

ஆண்டுளார்சிலரறைவதுபொருந்தவணறைய
வாங்குவிற்கரத்திராகவன்மற்றதுகேட்டுப்
பாங்குதன்றுணைத்தம்பியைப்பரிவொடுமழைத்திட்
டீங்குளார்நிகழ்த்திடசெயலியாவையுமியம்பும். (உ௩௭)

மைந்தகேணங்கள்சானகிமரபுளிவனமே
சிந்தைதான்மகிழ்ந்தெய்திடவெண்ணினடிறம்பா
தூர்ந்துதேரிடைபேற்றிநீயொல்லையிற்கொடுபோ
யந்தமாவனம்விடுக்கெனவருளினனனகன். (உ௩௮)

அந்தவெம்மொழிகேட்டறிவழிந்தரும்புண்ணில்
வெந்தகோல்விடுத்தாங்கவண்பதைத்துவெய்துற்றே
எந்தையாருளந்திறம்பியதென்கொலென்றேங்கி
நொந்துசானகிமாளிகைநோக்கியேநடந்தான். (உ௩௯)

மருமலர்க்குழற்சனகியுமலர்த்திருவென்ப
அருமறைத்துணிபாகுமாலையனுமம்ம
திரைகடற்பள்ளிவிடுத்தசேவகனெனத்தெரிந்தே
னுரைசெய்கிற்பதெனுழன்றிடப்பதிக்குண்டோ. (உ௪0)

கருணைவல்லியோர்சருக்கொடுகிற்பக்கைகம்மலோர்
இருகரத்தனோகான்விடுக்கென்றிசைத்தனனால்
ஒருவனென்செய்கேனெவரிடமுரைப்பனென்றேங்கும்
பெரியனெஞ்சகங்கல்லினும்வலிதெனப்பேசும். (உ௪க)

பிழையிலாளையும்பிழையுளாளெனப்பெரிதுரைப்ப
மழையைநேர்பெருந்தகைதுணிந்தனன்வனத்தன்று
குழைபொருந்தடங்கண்ணினாளெய்திகொடிய
இழவுநாடிலனென்செய்கேனென்செய்கேனாலாம். (உ௪உ)

தீங்கணிமைந்துமிலங்கைசென்றிருந்தனளெனுமா
சங்கைநீக்கினன்சுடுகனற்கடவுளுந்தாதை
இங்கணைந்தனையேற்றமுமிசைத்தகன்றனனு
லெங்களண்ணறன்சிந்தையேன்றிசைத்தெதென்றிசைப்பான். (உ௪௩)

என்றுமேனிநைந்துருங்கலங்கற்பினுக்கென்னுந்
துன்றுபூங்குழற்சுடர்க்கொடிமாளிகைதொழுது
நின்றுமேபுகுந்தாங்குறைநேரிழையவர்பாற்
சென்றுரைத்திடத்தன்வரவுணர்த்தினன்றிறலோன். (உ௪௪)

சனகிவாவெனவேவினன்றாழ்ந்தனன்றாழா
தனகனின்னைத்தேரிடைக்கொடினறடவியைக்காட்டென்
றுனிநிகழ்த்தினன்சிந்தையாதெனவுவளகம்புக்
கனையுநல்லணியாடையும்புனைந்தவணடைந்தாள். (உ௪௫)

நடந்திலக்குவன்கொணர்ந்ததேரிடையந்தேறிக்
குடங்கையின்கணன்கடங்குமுண்கட்குலமானுங்
கடந்துகாவதம்பல்சுரம்பலகடம்பலசென்
றிடங்கொள்வான்மிகமுனிவரனிருக்கையையடைந்தாள். (உ௪௬)

இன்னகாலையிலிளையவன்கடந்தனிலிளமான்
அன்னமங்கைதன்விழித்துணைகாணவெம்மன்றாய்
பன்னரும்விநோதங்களைப்பாரெனப்பகர்ந்து
மன்னவன்றிருவாணையைநினைந்துளமறுகும். (உ௪௭)

அன்னைதன்னையத்தேரினின்றிழித்தவள்பாதந்
தன்னையேத்திநின்றிருவிழியருவிதான்சொரியச்
சொன்னசொற்றடுமாறிடமனந்துணுக்கெய்த
மன்னவன்றிருவாணையீதெனவழுத்தினனால். (உ௪அ)

வேறு.

கேட்டாள்சனகியிளையான்சொலக்கேடிலாதான்
றாட்டாமரைக்கென்பிழைத்தேனென்னத்தான்றுளங்கி

மீட்டேயுருமேற்றொலிகேட்டவிடவராப்போல்
வாட்டானெனுமுன் கண்கள்பனித்திட மண்ணில்வீழ்ந்தாள். (௨௪௯)

ஒருவாறுதெளிந்துதன்முன்னருலைந்துநிற்கும்
மருவார்க்கசனியெனவோங்கியமாண்பினனைத்
திருவாழயோத்திநகர்மீள்கெனச்செப்பியன்னாள்
பெருமாதவவான்மிகன்வாழிடம்பேணியுற்றாள். (௨௫0)

இளையாதவீரத்திளையானெஞ்சிளைத்துக்கண்ணீர்
விளையாநிலத்துவிளைத்தேவெறும்பாலதனைப்
பளகேயிலாதமருதத்தினற்பண்பதாக்கித்
தளராவிரவிகுலநாயகன்றாளடைந்தான். (௨௫௧)

அடைந்தேநடந்தபடியாவுமறிவித்தன்னான்
இடந்தானிருந்தானிளையானிவனெம்பிராட்டி
கடந்தானடைந்துமுனிராசன்கனிந்துபோற்ற
நடந்தாள்வருத்தமகன்றாங்குநயந்திருந்தாள். (௨௫௨)

கற்பின்கலனுமடத்தையல்கருநிரம்பிப்
பொற்பிற்சுடருமிருமைந்தரைப்புனிதவோரை
நிற்பப்பயந்தாள்சுடரோனைநிலாவைநேர
வற்புற்றனன்மாமுனிராசனுமற்றைஞான்று. (௨௫௩)

வேறு.

தருப்பைதன்னுனியாற்றடவியதன்மையானும
விருப்பினுனிலவத்தினாற்றடவியல்பானும்
அருத்தியாற்குசலவரெனவவர்க்கரும்பெயர்தந
திருக்குணர்ந்தமாமுனிவரனிலங்கினனம்மா. (௨௫௪)

மைந்தராமிருவோருமாமதியின்முன்னீர்மை
அந்திலெய்தியேவளர்ந்திடவவர்க்குபநயனஞ்
சிந்தைமாமகிழ்சிறந்திடச்செய்துதானியம்பும்
எந்தையாமரிந்தமன்கதையெடுத்தவர்க்குரைத்தான். (௨௫௫)

இன்னகாதையையுணர்த்தியதன்றியீண்டவர்க்குப
பன்னருங்கலைபான்மையாற்றெரித்தனன்பைந்தார்க்
கன்னகுந்திரடோளினர்கற்றுவல்லவராய்
அன்னதந்தையினுஞ்சிறந்தோங்கினரடைவான். (௨௫௬)

வேறு.

பரிமேதந்தனைப்புரியப்பரிவோடுந்தான்முயன்றுபரிவிடுத்து
விரிவாயவனிகமொடுமிளையானையுடனனுப்பவிரவுமந்தப்
பரிகாணுமலையாறுங்கடந்துவான்மிகமுனிவன்பன்னசாலை
யருகேசென்றதுமைந்தரிருவோருமதைத்தகைந்தாரடைவினம்மா. (௨௫௭)

கண்டவிலக்குவன்கடவிற்றேன்றுகடுவெனக்கனன்றுகாலற்காய்ந்த
அண்டனொத்தன்கைவில்வளைத்தலகில்கணைதொடுப்பவன்னமைந்தர்
கொண்டவிளையாட்டென்னக்குனிவில்வளைத்துச்சரங்கள்கோத்தெறிந்து
புண்டரிகத்தடம்போலுமுடம்பெங்கும்புண்படுத்திப்பொங்கியார்த்தார். ()

படையுழவருடன்சென்றுபகைத்தெதிர்ப்பப்பாலின்மணமறுதவாயார்
கொடுமரத்தைவளைத்துநெடுங்கோல்விடுப்பத்தரியாதுகுருதியாற்றி
னிடையழிந்துசென்றகன்றொற்றர்கள்சில்லோரிறைவனயோத்திமேவி
நடுவனெனவிருமைந்தர்பொருதுவென்றதிறனனைத்துநாடிச்சொன்னார். ()

கேட்டுள்ளம்பதைபதைத்துப்படையெழுமினெனவுரைத்துக்கேடிலாதான்
கோட்டலங்கற்புயந்துடிப்பத்தேரேறிக்களங்குறுகித்தொடுசீர்வைப்பி
லீட்டுதவமெனக்கிடந்தமைந்தரிருவோருடனுமெதிர்ப்பானப்புக்
கூட்டமழைசொரிதருவான்பின்னவளையவேவினன்குழைந்துமாதோ. (௨௬௦)

வேறு

பரதனுஞ்சத்துருக்கனும்பதைத்துளம்வெயர்த்து
வெருவியோய்ந்தனரிரவிதன்குலம்வருமேலோன்
சருவியேயமர்பொருதனன்றளர்ந்தனனதற்பின்
மருவினனொருவான்மிகமுனிவனுச்சிரமம். (௨௬௧)

கண்டனன்முனிவரன்றனைக்காகுத்தன்கண்டு
மண்டுமன்பினால்வணங்கினன்வணங்கியேபிறப்பப்
பண்டைமாமறைப்பொருளினைக்கண்டபான்மையனு
மெண்டவாதபேரன்பினின்னனவவற்கியம்பும். (௨௬௨)

கற்பினுக்கருங்கலமெனுமனையைக்கைவிடுத்தாய்
பொற்பினுக்கிவணுறையுளாம்புதல்வரைக்கைக்கொண்
டற்பின்மேன்மையாலரசுநீபுரிதியென்றன்றிச்
சொற்பதங்கடந்தோங்கியதொன்மையான்றன்பால் (௨௬௩)

பின்னுமேபுகல்வானினிப்பிழைப்பிலதென்றும்
அன்னையோடுநீயணிகழும்பிற்படவயோத்தி
என்னுமாநகரெய்துகென்றனனிராகவனும்
அன்னமாமொழிகொண்டயோத்தியையடைந்தனனே (௨௬௪)

இருமையுந்தருமயோத்திமாநகர்தனையெய்தித்
தருமமன்னசானகியொடுந்தம்பியரொடுந்தன்ன
னுரிமைமைந்தருமகிழ்தரக்கோலினையோச்சித்
தரணியாண்டுகொண்டிருந்தனன்றயரதன்புதல்வன் (௨௬௫)

வேறு.

அன்னவேலையினவ்விராமன்றருங்
கன்னிகரும்புயக்காளைமைந்தரும்

இன்னவாறிதயத்தெண்ணிமாழ்கினார்
என்னபாதகஞ்செய்தேமிவனெனா. (௨௬௬)

தாதைமாரைப்படையொடுசாய்த்தனம்
வேதநன்னெறிக்கேமிகைசெய்தனம்
பாதகம்மிதுவொப்பதிப்பாரிடை
நீதிமைந்தர்நிகழ்த்தியதில்லையால். (௨௬௭)

தாதைபால்வரம்பெற்றமைதானறிந்
தேதமின்றியிரும்புவனந்தனை
யோதுசிற்றவைக்கொல்லையுதவினான்
நீதியானனெனநெஞ்சகமாழ்கினார். (௨௬௮)

மந்திரம்மறைமாநிலத்தேதனைத்
தந்ததாலதையைத்தானுநிகரெனச்
சிந்தையாலுரைசெய்வதுசிந்தியா
திந்தவாறுசெய்தேமெனவெண்ணினார். (௨௬௯)

வேறு.

தந்தையோடருந்தவன்றனைவணங்கினர்தாழா
அந்தமாதியிலாவடமுல்லைவாழமலன்
கந்தமாமலர்ச்சரண்பணிந்திருவினைகடப்ப
எந்தமக்குநீர்விடைதம்மினோவெனவிறைஞ்சா. (௨௭௦)

விடையையேற்றயோத்தியின்வியன்புரிசையைக்கடந்து
குடிஞையாகியசரயுவைக்குறித்தடைந்தகன்று
கடியவல்வினைதொலைச்சியகாளிந்தியோடு
படிசொல்கங்கையொண்கலைமகள்கலந்திடும்பான்மை. (௨௭௧)

மருவுதீர்த்தத்தையாடிநின்றரன்மலர்க்கழல்கள்
பரவிமாந்தர்தாமரித்திடவுவக்கும்வான்பதியை
யரிதினெய்தியாங்கன்னபூரணியுடனமர்ந்த
கருணைமாகடலைப்பணிந்தேத்தினர்கனிந்தே. (௨௭௨)

அன்னதொல்பதியகன்றருணந்தியங்கணனை
மன்னுமால்வரையுருக்கொடுவழிபடுமாண்பா
றன்னிகர்த்தசீசயிலவெற்பினைத்தகப்பரசி
என்னையாளுடையிறைவன்றென்கயிலைபெய்தினரால். (௨௭௩)

சிலந்தியோடராக்கரிசினவேடனின்றிறைஞ்சும்
நலந்திகழ்ந்தவவ்வெற்பினைநயந்துநின்றேத்தி
வலந்தயங்கியகாளியோடரனடம்வழங்கும்
பொலஞ்செறிந்தநல்வடவனம்புரிந்துகண்டனரால். (௨௭௪)

கண்டுநின்றுளங்கசிந்தரன்கழன்மலர்பரசி
யண்டர்நாயகன்முல்லையயன்பொடுங்காண
மண்டுபேரவாவெய்தியமைந்தரப்பதியைப்
பண்டைவெவ்வினைபாறிடப்பாவினர்கண்டார் (௨௭௫)
வரதன்மேவியவடமுல்லைவாயிலையணுகி
அரதனத்தடமூழ்கிநன்னியமமதாற்றி
பொருசெம்பட்டினுடையைவிழைந்தணையினுடுத்துக்
கருதுமக்கமாமணியிணைக்கணிவிளொடணிந்து. (௨௭௬)
திங்கள்சூடியசெல்வனைத்தெய்வநாயகியைப்
பொங்குமாதரவான்வழிபாட்டினைப்புரிந்திட்
டங்கணுளன்வாழாவயவடாதுபாலன்பாற்
றுங்கமேற்றிசைமுகத்தொருசிவக்குறிதணிந்து. (௨௭௭)
பதிட்டைசெய்தவர்வழிபடுகாலையிற்பரமன்
மதிச்சடைப்பிரான்மங்கையோடெளிவரமைந்தர்
துதித்துநின்றமர்துயர்களைசோதியேயென்னக்
கதிக்குமன்பினுற்பரம்பரன்கழறிடுமன்றே. (௨௭௮)
மதலையன்பினுக்கிரங்கியமைந்தர்காணீவிர்
விதுவணிந்திடுமெம்மைநன்ருகமம்விளம்பும்
விதியினாற்றியபூசனைவிழைந்தனம்பரசிற்
பொதியின்னெரியாயினபுரிந்தவெம்பவமே. (௨௭௯)
என்றுகூறியவிறைவனையிருபதமிறைஞ்சி
மன்றவாணமாமலைதருவல்லியோர்பாக
கன்றினல்விளாவெறிந்தவன்காணொணாப்பாத
குன்றவார்சிலைக்குரிசிலென்றின்னகூறுவரால். (௨௮௦)

வேறு.

மண்ணிடைமைந்தாய்நீரிடைநான்காய்வதிகின்றாய்
எண்ணியகனலிடைமூன்றாய்காலிலிரண்டாய்
விண்ணிடையொன்றாய்மேவியநீயல்லினோர்தெய்திப்
புண்ணியமேனிகாட்டினையாதேபுகழ்வதுவே. (௨௮௧)
காலனையஞ்சும்பெற்றியிலேமுட்கனிவாகச்
சாலநினைக்கண்டெய்தியபெற்றித்தனைநாடுஞ்
சீலமதாலிறையேபொருநீமுன்சிறுபாலன்
பாலனைகாலன்றன்னையடர்த்தபரிசானே. (௨௮௨)
பூங்கணைமாரனுமெமையிரவொடுபகல்பொருகின்று
னீங்கணைவுற்றேயென்பதுகருதேமினிநீமுன்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

பாங்கொடுநால்வர்க்கருமறைபந்தம்பகருங்கா
லாங்கவனொழியவிழித்தெரிசெய்தமையாயுங்கால். (௨௮௩)

எங்குந்திருமுடியெங்குமெழின்முகமெந்தாய்நிற்
செங்குநலந்திகழ்விழிமலரெங்குமிணைச்செவியே
எங்குமறைத்திருவாயெங்குங்கரமெங்குந்தா
ளெங்கும்பரிவினொடிலகியநினையென்னோதுவதே. (௨௮௪)

நேரிசைக் கட்டளைக்கலித்துறை.

மங்கைமகிழ்சிவசங்கரனேமதமாவுரியாய்
அங்கணனேபவபந்தமறுவதிபாதகனேன்
இங்குலைவேனிவணென்புரிவேனிதமேயறியேன்
எங்கணைவேன்மலன்மாநகராயெதாற்குலைவே. (௨௮௫)

இத்திரிபங்கியிலடங்கிய

வஞ்சித்துறைகள்

மங்கைமகிழ் சிவசங்கரனே மதமாவுரியாய்
அங்கணனே பவபந்தமறு அதிபாதகனேன்
இங்குலைவேன் இவணென்புரிவேன் இதமேயறியேன்
எங்கணைவேன் மலன்மாநகராய் எதாற்குலைவே.

என்னநின்றவர்துதிபலபுரிந்ததற்கெம்மான்
சென்னிமேன்மதிமிலைச்சியசிவக்கொழுந்திரங்கி
இன்னறீர்ந்தினியேகுமினும்பதிக்கேகித்
தன்னமின்றியேயரசுசெய்தெமதடிசார்வீர். (௨௮௬)

எம்மைநீர்வழிபாடுசெய்திறலின்பெய்துஞ்
செம்மையாலிதுகுசலவபுரமெனச்செழிக்க
அம்மையப்பனுமெமையகலிடமகமகிழ்ந்து
இம்மையேகுசலவபுரேசப்பெயரியம்ப. (௨௮௭)

என்றுகூறியவங்கணனிமயவல்லியொடுஞ்
சென்றுதான்கரந்தனன்றிருவருட்குறியிடைமற்
றன்றுதொட்டதுகுசலவபுரமெனவறையும்
பின்றைமைந்தர்களிருவரும்பெரிதுளங்குழைந்தே. (௨௮௮)

ஏத்திநின்றனரிறையருட்கருணையையெண்ணி
ஆத்தனைப்பரிந்தடைவினின்வழிபடஇயந்த
மீத்தலந்தனிற்சில்பகல்வைகிநல்விடையேற்
*றோத்திரனுட்பொருளோர்ந்தவரயோத்தியையுற்றார். (௨௮௯)

சென்றுதாதையைவசிட்டனைச்சேவடிபரசி
யொன்றிவாழ்ந்தனர்துருவாசப்பெயருரவோன்
கன்றுசீற்றத்தாலிந்திரற்கிடுங்கடுஞ்சாபத்
தன்றுமேவியவினைதபவழிபடலறைவாம். (௨௧)

குசலவர் பூசனைப்படல முற்றிற்று.

---

# துருவாசபபடலம

முன்னைஞான்றருந்தருமநன்னெறிவயின்முதிர்ந்தோன்
கன்னிபாகனேயெனத்தகுஞ்சரிசிலாமனத்தோன்
பொன்னையேபொருமந்திரவிதிப்புலங்கொண்டோன்
இன்னலாற்றுமிந்தியமடக்கியவிருந்தவத்தோன் (௧)

வித்தையீசனேடெழிற்சதாசிவம்வியன்சத்தி
நத்துநற்சிவமெனுஞ்சாதாக்கியநலனோர்ந்து
சித்தமாசறுத்தரன்றனைநினை இச்சிவசாத
நத்தையேபுனைந்தருமறைநெறிவயினடப்போன். (௨)

கங்கைமுற்பலதீர்த்தமாடியகருத்துடையோன்
துங்கநான்மறையுச்சியிற்றுலங்குமாகமமே
இங்கரன்பெருங்கருணையையெய்துவித்திடுமென்
றெங்குமேபுகல்கிற்பவனிருந்துருவாசன். (௩)

அத்திரிக்கனசூயையாமன்னைக்குமமலன்
வைத்தமாக்கருணையின்மகவெனவருமாத
வத்தனச்சிவனடியலதொன்றையுமதியா
வித்தகன்றவஞ்செய்வதங்கொருவியன்சூழல். (௪)

என்னரும்புகழ்நவமிபூசனைகவினெய்த
முன்னரேகலிவயின்வருமும்மதக்களிறு
தன்னையூர்ந்தொருகுலிசியுந்தகவினெய்தினனுன்
மன்னுமாசமிவனப்பெரும்பூசனைமதித்தே (௫)

தன்னுடைப்பரிவாரந்தன்புடைவரக்குலிசி
அன்னமாப்பகடூர்ந்தமராவதியகன்று
நன்னிலத்தின்மேல்வரத்துணிந்தனனலனெனைத்துந்
ன்னிடுந்துருவாசன்வாழ்சூழலையடைந்தான் (௬)

அரம்பையூர்வசிமேனகைதிலோத்தமையாதிக்
கரும்பிற்கின்சுவைகற்பித்தமொழிச்சியர்நடிப்ப
பரம்புநூலுணரான்டளப்பான்முதற்பனவர்
வரம்பிலோர்புடைவரவவன்பவனிவந்தனனால். (௭)

உரகர்சாரணர்சித்தர்கள்சாத்தியரொடுகந்
திருவர்கின்னரர்கிம்புருடர்கடிசைப்பாலர்
பரவுசீர்ப்பிரபாசனேமுதலவர்பரிவான்
மருவிடச்சமிமாவனப்பூசனைமதித்தான். (௮)

சத்தியல்லதுசிவமிலைசிவமலாதந்தச்
சத்தியில்லையச்சத்தியைவழிபடத்தக்க
உத்தமப்பெருஞ்சாற்றினுக்கிடனெனவோங்கும்
அத்தருங்கன்னிமாமதிநவமியினயனுள். (௯)

மாதவத்துருவாசன்வாழ்சூழலின்வழியே
மேதகும்புரந்தரன்செலவிழவொடுமுனிவன்
போதநன்குணர்ந்தவனெதிர்போந்துகண்டவனைக்
கோதில்வானவர்குழுவினிற்புகழ்ந்துகொண்டாடி. (௧௦)

தானரன்றனையருச்சித்ததண்மலர்ச்செம்மல்
ஆனவன்பொடுமவன்கரத்தளித்தொருகடிகை
மேனமாமறைமனுக்களான்விதிமுறைவழுத்தி
நீநயந்தொருவிருந்தெனவமைகென்றுணினைந்து. (௧௧)

இந்திரன்றனக்கினிவருங்கேட்டினைநோக்கான்
சந்தமாமறையோதியமுனிவவித்தமியேன்
வந்தகாரியநோக்கலைதாழ்த்தனைவறிதே
எந்தையென்றனையதிதியாகென்றனையியம்பி. (௧௨)

செம்மன்மாமலர்தந்தனையம்மலர்சிறிதும்
வந்ததன்மையைநாடலைவம்பின்மெய்த்தவமே
எந்தநாளினுஞ்செய்தனையிவணிருந்தனையால்
அந்தமில்புகழோயெனைத்தடுத்தனையன்றே. (௧௩)

தவமதேபுரிந்தென்றுமூணுறக்கங்கடணந்து
சிவனதாளிணைசிந்தனைசெய்துநின்றனையால்
தவறின்மாதவநீயெற்குமென்றனைச்சூழ்ந்த
நவமுறும்பரிசனர்க்குமென்னணமுணவளித்தி. (௧௪)

என்றுமுன்னைநாள்சதமகமியற்றியெம்பெருமான்
துன்றுமாமலர்ச்சேவடிபூசனைதுணிந்து

நின்றமாண்பினாலப்பதம்பெறுநெடுங்குலிசி
அன்றொவ்வாதனவுரைத்தனனத்தவனெதிரே. (கரு)

உரைத்ததன்றியம்முனிவரனுதவியதொடையல்
கரத்தில்லுவத்திடான்றனடாவியமதக்களிற்றின்
சிரத்தில்வைத்தனன்மற்றதுசெழும்புழைக்கையிற்கொண்
டுரத்தினனதையூழ்த்தியேசிதைத்ததாங்குலப்ப. (க௬)

கண்டமாமுனிவடவையிற்சீறினன்கண்ணின்
மண்டுதீப்பொறிசொரிதரவாயதுதுடிப்பச்
சண்டவாயுவுஞ்சமழ்ப்பவெந்தழற்பிழம்புருவங்
கொண்டுநின்றெனக்கொதித்துநின்றின்னனகூறு. (கஎ)

இறைவனார்திருமாலியமலரையெண்ணிலையால்
அறிவுசோர்ந்தனையரும்பரிசோர்ந்திலபாவீ
முறைமைமாறினையருந்தவமதித்திலைமுழுதுங்
குறைவெடுத்தனையுரைத்தனைகுறித்திலாய்சிறிதும். (க௮)

மாலவன்பெருந்திருவினையெய்தலுமலரின்
மேலவன்விதித்தொழில்புரிகிற்பதும்விளம்பிற்
பாலனுக்கன்றுபரிந்தொருபாற்கடலுதவுஞ்
சீலனைத்தொழுஞ்சிறப்பெனத்தெரிந்திலாய்சிறியாய். (க௯)

அதிதியாகெனுங்கட்டுரையவமதித்தனைந்
அதிதிமைந்தனும்பான்மையையறிந்திலையறவே
மதியழிந்தனைமம்மரின்மயர்ந்தனைவானோர்
பதியெனும்பரிசாற்பெரியார்ப்பிழைத்தனையால். (உ0)

செருக்கினானினிசெருக்கினைநின்பெருந்திருவப்
பெருக்கெனைத்துமீண்டொழிகநீபிறருணராதீண்
டுருக்கரந்தொருநின்னகரொருவினையாகித்
தலைக்கணுண்டயுதஞ்செறிகென்றனன்சபித்தான் (உக)

வறுமையான்வருந்தென்றவன்வகுத்திடுவதனுன்
முறைமைமாறியகுலிசியுங்கேட்டுமுன்னயர்ந்தான்
மறுகுசீற்றத்தான்மாமுனிமாழ்கியப்பகட்டி
னிறையைநோக்கியேபின்னுமின்னனவெடுத்தியம்பும. (உஉ)

மதத்தினாழ்ந்தறிஞரைமதியாதுவானோர்தம்
பதிக்கொரூர்தியாச்செறிந்தனைநின்னெழிற்படிவங்
நதிக்கும்வெண்மையாமேயினைகருதலர்தம்மோ
டெதிர்த்துவென்றனைவெண்மருப்பீரிரண்டெய்தி (உ௩)

ஏனமால்களிற்றினுஞ்சிறந்தவிவன்களிக்.
ஞானநாயகற்கருச்சனையந்ததான்புரிந்த
கானமாமலரென்றதன்சீர்கருத்திடையே
நேயந்திடாதின்னணநிகழ்த்தினயன்றே. (உச)

கரியமால்களிறுகெனக்கடியதோர்சாபம்
அரியமாதவனறைதலுமஞ்சியமகவான்
பெரிதுநெஞ்சகமயர்ந்தமைபீதகனுணர்ந்து
விரைவின்மானம்விட்டிழிந்தவன்முன்னிதுவிளம்பும (உரு)

சினத்தினூற்றவமிழந்தனர்செல்வமுமிழந்தார்
சினத்தினூற்பெருந்தீமையேவிளைத்திடுமொழிநீ
நினைத்துநீதருஞ்சாபமுநின்பெருந்தகைமைக்
கெனைத்துமேதகவன்றென்பதெண்ணலையுரவோய். (உசு)

அரியநீசிறிதேனுமின்றுணர்கிலாதறைந்தாய்
பெரியசாபமீண்டிவன்செயும்பிழைதனக்கிரங்கி
உரியமாதவத்துறையுளாயுவந்தருள்கென்னப்
பரிவடைந்தவனின்னணம்பகருவானன்றே. (உஎ)

மருவுமாண்டளப்போயிவண்வழங்கியசாபம்
ஒருவிடாதெனினுங்களிவானுவந்தென்னைக்
கருதியேவினுவலிற்கழுவாயுரைக்கினறும்
அரியமாதவத்தோங்கலென்றவனறைந்தனனால். (உஅ)

என்றுகூறியபின்னையவ்விருந்தவன்குன்றின்
வன்றிறற்சிறகரிந்தவன்மதிமுகநோக்கி
அன்றோர்மாமுனிக்கருமணியளித்ததுமுலகி
னென்றுமன்பருக்கிருஞ்சித்தியெனைத்துநல்கியதும். (உகூ)

கயிலைவெற்பினுங்கண்ணுதற்கினியதுமிலங்கு
மயிலையின்வடமேற்கினின்மருவிநிற்பதுவும்
பயிலுமுன்னுகம்பசுமரகதப்படிவாயும்
இயறிரேதையிலெழிலுறுபுட்பராகமுமாய். (கூ0)

இலகுதுவாபரத்தேய்தருவயிரமாய்ப்பொல்லாக்
கலியினிந்திரநீலமாய்க்கவினியவுருக்கொண்
டலியொடாண்பெணுமலனுறைகின்றிடமந்தத்
தலனைமேவுதிமேவியத்தனிமுதனாமம். (கூக)

பரவினாடொறும்பதுமநல்வாவிமுன்னுன
மருமலர்த்தடப்பொய்கைநீராடியேமரபால்

உருகுகாதலின்வழிபடினொழியுமென்றுரைத்தான்
பெருகுவெஞ்சினமோர்படிவாகியபெரியோன் (௩௨)

பின்னரும்புகல்வானிழந்திடும்பெருந்திருவம்
நின்னைமேவிடுமின்பதமெய்துதியென்று
அன்னமாமுனியறைந்திடவண்மையினின்ற
உன்னுமீரிருகோட்டிபமுணர்த்திடுமன்றே. (௩௩)

இயல்பினானிதுபுரிந்ததேயல்லதெம்மிறைவ
மயர்வினாற்புரிந்தேனலன்மரபுளியெம்பா
லயர்விலாதென்றுந்தலையினோர்துரும்பணிந்திடினுங்
கயமெனப்படுவதுதன்காலூழ்க்குதாகவே. (௩௪)

எண்ணெயாடினுமீர்ம்புழைக்கையினெடுத்தென்று
மண்ணினைத்தலைகொட்டியேதிரிதரல்வழக்கால்
அண்ணல்யானறியாதிவணுற்றியபாவம்
எண்ணிடாமையேபொறுத்தருளென்றதவ்விபமே (௩௫)

என்றுபன்முறைவேண்டியேயிறைஞ்சிடுமிபத்தை
நன்றுநோக்கியநான்மறைமுனிவனுநயந்திட்
டொன்றுகேட்டியாலுரைத்தனமுனக்குரித்தன்றுன்
மன்றவேனையவிபந்தனக்கியல்பெனமதியாய். (௩௬)

முன்செய்நோன்பினாற்றெய்வவிபமெனமொழிய
நின்றதன்மையையமரர்தம்போகநீயெய்தித்
துன்றுகின்றனையின்றுநீதொடங்கியகொடுமை
நன்றுமற்றதுசெருகவெனநாட்டலாம்பரிசே (௩௭)

அடாதகாரியஞ்செய்பவரெவரவரடைவே
படாதபாடெலாம்படுவரென்றெனைப்பலபெரியோர்
விடாதுரைத்திடும்பரிசுணராதுவிட்டனையாற்
சடாதரன்றனைப்பிழைத்தனையாயினைதருமோ (௩௮)

மாதுபாகனைவழிபடுமருந்தலானுலகி
னேதுதான்மருந்தெனப்படுமெம்மைநீவேண்ட
நீதியாற்சினமொழிந்திவணின்றனமொருநீ
கோதுதீர்ந்தனையாயினைகொலைநெடுங்களிறே. (௩௯

இந்திரன்றனக்கியம்பியவிரும்பதியாதோ
அந்தவான்பதிதனையணைந்தாங்கமர்ந்திலகும்
இந்துசேகரனெனுஞ்சம்பகேசனையிமயந்
தந்திடும்மனோபிரமணிதனைத்தகநினைந்து (௪௦)

புழைக்கைநீர்முகந்தாட்டியேபூமலர்கொண்டுண்
டிழைத்தியாயினெம்பிரான்றனதருச்சனையியைந்தே
பிழைத்தியிந்திரற்பொருவவென்றுரைத்தனன்பெரியோன்
மழைக்கணந்துயில்பொழில்செறியிருக்கைவந்தடைந்தான். (சக)

வேறு

வந்தானடைந்தான்றனமாணவர்சூழவெய்திச்
சிந்தாகுலமுற்றிவணென்னினைந்தென்செய்தாமென்
றந்தாரணிமேன்மதியாதவாகண்டலற்கே
தந்தாங்கொடியநெடுஞ்சாபந்தடுப்பதன்றால். (சஉ)

என்னேபுரிந்ததிகல்வேழமெனக்கனிந்து
தன்னேரிலாதமுனிபுங்கவன்றன்னுடைக்
கொன்னேயதற்குங்சொடுஞ்சாபங்குறித்துளேமாய்
முன்னேயுணராதுமொழிந்தனமென்னநின்றான் (சங)

ஆகண்டலனையவனூரயிராவதத்தைச்
சோகந்துதையக்கொடுஞ்சாபமுஞ்சொல்லிநின்றேம்
மாகந்தணந்துபுவிமீதுளமாழ்கிநிற்பச்
சிகண்டன்முன்னல்கியசெல்வஞ்சிதைந்துதேய. (சச)

தவமாவதுசெய்ததுசாலக்கொடியதென்றே
அவமாசிலாதமனத்தானினைந்தம்மகெட்டேன்
சிவசாம்பசதாசிவதேவதேவேசவென்றே
தவநாடியுள்ளந்தனையும்வெறுத்தான்றவத்தோன் (சரு)

வேறு.

கோபந்தானேகொலைகளவின்கொள்கலனுமக்
கோபந்தானேமெய்த்தவமெல்லாங்குறைவிக்குங்
கோபந்தானேபொய்க்கிடனுகுங்குன்றாத
கோபந்தானேகுடிபுகுவிக்குங்கொடுநிரயம். (சசா)

கோபங்கொண்டார்மாண்டாரன்றேகூறுங்காற்
கோபங்கொண்டார்யாரேமெய்ம்மைக்குடிகொண்டார்
கோபங்கொண்டாரெத்தனையோர்தாங்குறைகொண்டார்
கோபங்கொண்டநம்பிழையாதாங்கொல்லென்றான் (சஎ)

நம்பான்மேவுதீவினையேகநமரங்காள்
தென்பாலென்றுஞ்சிற்சபைமேவித்திருநட்டம
அன்பாளுடும்பர்பிரானையணிமுல்லை
தன்பாலெய்திப்பூசனையாற்றகவென்றே (சஅ)

தன்னமகன்றவிருக்கைதணந்தான்றகவோனங்
கன்னிதடங்கணன்னையொடெந்தைகாமுற்ற

பொன்னகரங்கண்டன்பினகன்றான்புலவோரும்
இன்னலினத்திசிலந்தியராவேத்திடலுற்றான் (சகூ)

சங்கரமாதேவாசிவகங்காதரநாக
கங்கணஞானம்பிகைமணவாளாகருநாசா
எங்களைக்கண்ணேயென்றுபணிந்திட்டுடைமையாளும்
அங்கணன்மேவுமுல்லையநாடியணைகின்றான். (ரு0)

கண்டானன்றேமுல்லைவனந்தான்கவலெல்லாம்
விண்டான்றன்மாணவரொடுமேவிவியன்குளமேற்
சண்டான்கொண்டான்சேவடியுன்னிக்கண்ணீர்விட
டண்டாவென்னைக்காவெனநேர்வந்தணைகின்றான். (ருக)

மங்கலவாவிப்புனலினையாடிமரபாற்றன்
செங்கையினீறுபுனைந்திறைசேவடிசிந்தித்தே
மங்கையொடெய்தியாளெனையென்றேவந்தித்தான்
சங்கையிலாததவத்திருவாசன்றனைநேர்வான் (ருஉ)

நந்திபிருங்கிமுதற்கணநாதர்கடற்சூழச்
செந்திருமாலோனயன்முதலாயோர்செறிவெய்த
அந்தியிளம்பிறைசூடனகன்றனனுரும்போ
தெந்தையெனாதுபவந்துடைகென்றேத்திடுகின்றான் (ருங)

சிந்தைமகிழ்ந்தேசித்திரையிற்சித்திரைநாளில்
நந்தலில்பூரணைமேவிடல்கண்டானம்மானிங்
கந்தரியோடுமால்விடையூர்ந்தணுகுற்றானன்
றந்தவருந்தவனும்மனுவோதியறைகின்றான். (ருச

வேறு.

உலகெலாமாகிவேறாயுடனுமாய்நின்றநின்ற
னலகில்சீரோதுகிற்பார்க்கடியிணையருளுபோற்றி
கலகவேல்விழியோர்பாகங்கண்டசீகண்டபோற்றி
சிலைதனைச்சிலையாக்கொண்டசேவகபோற்றிபோற்றி (ருரு)

இலகுபேரிச்சாஞானக்கிரியையாலியாவுங்கண்ட
மலைமகள்பாகமேவுமாதேவபோற்றிபோற்றி
புலமிலேனுள்ளக்கோயில்புரிந்துவீற்றிருப்பாய்போற்றி
நலமிலேன்செய்தபூசைநயந்துகொண்டருளுபோற்றி (ருசு)

வேறு.

என்றேயோதியெம்பெருமானையிருகண்ணால்
நன்றேகண்டெம்பெருமானுன்செய்தவமென்னென்

றன்றேயின்றுதோத்திரமானவவைசொற்றக்
குன்றேநேர்மால்விடையான்முற்கூறிடுமன்றே. (ருஎ)

என்னபிறப்பெய்திடினுமெனக்கேயெந்தாயுன்
பொன்னடிநாடுமன்புபொருந்தப்புரிவாயென்
றின்னணைப்பாய்வெஞ்சினமெய்தியவாற்றானிங்
கென்னமுனின்றேயோதலுமெம்மானுரைசெய்யும். (ருஅ)

வேண்டியவெல்லாநல்கினமாணிவிழைவுற்றே
காண்டருபேறெய்தித்தவநாடிக்கனிவோடு
மாண்டிகளானபலபலவேசவுமாற்றிப்போய்
ஈண்டொருநஞ்சேவடிநிழலெய்துதியினிதென்றான் (ருகூ)

அன்றியமுப்புரமன்றெரியூட்டியவம்மானுந்
துன்றியதன்னுருவங்குமறைத்தான்றுரிசோவி
நின்றதவத்தோன்மாணவர்சூழநெடுந்தூரஞ்
சென்றுதனதுசூழலைமேவிச்செறிகின்றான். (சூ0)

வேறு.

நாகராசனொடிபம்பெறநல்குசாபத்தால்
நாகராசகங்கணனைநாடியதுருவாசன்
நாகராசகன்னிகைமணாளனைத்தொழவின்றும்
நாகராசன்பின்வழிபடனயந்துரைப்பாமால். (சூக)

துருவாசப்படல முற்றிற்று.

---

# வெள்ளையானைப் படலம்

கோட்டமிறவத்துருவாசன்கூறிடக்
கோட்டொருநான்குடைக்குஞ்சரம்பர
மேட்டிவாழ்சம்பகவனத்தைமேவிட
நாட்டமாயிரவனுந்தானுநண்ணினான். (க)

நண்ணியவிந்திரனளினப்போர்சுலாம்
புண்ணியவாவியோர்புடையுருக்கரந்
தண்ணலைநாடியைந்தடக்கிமாதவம்
பண்ணியேயிருந்தனன்பாவம்பாறவே. (உ)

தன்னிறங்கருகியதடக்கைவேழமா
மன்னியசம்பகேசனைவணங்கியே

உன்னருமங்கலதீர்த்தமோங்கவே
முன்னையினும்பெரிதாமுயன்றதே. (௩)

மங்கலப்புனல்வயினாடிமாதொரு
பங்கனைச்சிந்தையினிறீஇப்பரிந்துநின்
றெங்கள்பிரான்றனையினிதினாட்டவத்
துங்கநீர்முகந்துதான்றனைவினெய்திற்றே. (௪)

கம்பகேசனையவன்றனைவிடாதவிர்
அம்பிகைமனோபிரமணியையாட்டிப்பின்
சம்பகமுன்மலர்கொண்டுசங்கர
சம்புவேயெனவருச்சனைகுயிற்றவே. (௫)

உம்பர்நாயகனதற்குவந்துகாட்சிதந்
தும்பனாயகவருச்சனையுஞற்றென
அம்பிகைமனாளயானன்பினாடொறும்
இம்பரினருச்சனையியற்றுமெல்லையின். (௬)

நித்தமாமலைமகணீடுசாதியூ
மத்தமாமலரொருவருணன்மாவலி
நத்துபாடலமெழினாமடந்தைய
கத்திநல்லனந்தனுங்காட்டுமுல்லையால். (௭)

வாசுகிநாகம்வானவர்துழாயெழில்
ஈசனல்விரசையாதவர்கள்கோமகன்
தேசுலாந்தில்லைசெவ்வந்தியிந்திரன்
வாசமந்தாரமாப்பறவைமன்னரோ. (௮)

மல்லிகைகூவிளம்வயங்குசண்பகம்
அல்லிமென்மலரவளலரியையையங்
நல்லதோர்பங்குநாரத்தைமாதரி
சொல்லரும்வச்சிரந்தும்பைதுரோணனே (௯)

தூரவொருகிருதியக்குபேரன்கோரகம்
பரிவொடுமிராகவனிராகம்பங்கயம்
ஒருதிசைமாமுகனோங்குவீரபத்
திரன்மடற்கைதைமாதவத்திலக்குவன். (௧௦)

இரசிதமலரிருந்தக்ககன்பொரு
வருசுரபுன்னைசெவ்வரத்தைவன்னியப்
பருணிதன்சனகனற்செய்யபாதிரி
மருமலிபாரிசாதம்வங்கூழரோ. (௧௧)

இனையரின்னனமலர்கொண்டெந்தாயுனை
நினைவரும்பூசனைநிகழ்த்தினரெனின்
அனையவர்க்கவாவர்வேண்டியாங்களித்
தினிதமர்ந்தனையிமையோர்களீசனே (௧௨)

நம்பவிந்நாள்வரைநயந்துநின்றனை
முன்பொருவருங்கொடுமுயன்றிடாதவச்
செம்பொன்மாமலர்கொடுசிறந்தபூசனை
இம்பர்நானியற்றிடவெண்ணினேனரோ (௧௩)

அம்மலரெனக்கருள்செய்தியையயான்
செம்மையினின்பணிசெய்யவென்றினி
தம்மையொடப்பனுமனகனைத்தொழ
எம்மையாளிறைவனுமியம்புவானரோ. (௧௪)

கேட்டியீங்கெனைக்கேளாமலர்மேல்
நாட்டம்வைத்தனைநங்குகற்கேதர
வேட்டமாமலரொன்றுளஃமேதகு
தோட்டிதழ்முல்லையென்றிருவர்தொல்லையோ (௧௫)

இந்தமாமலர்க்கொப்பதிங்கில்லையால்
நந்திசண்டிவிநாயகன்வேளுமை
முந்துசீர்க்கயிலைவில்லமுத்தலைத்
சந்தவேலினுமியாங்கொளத்தக்கதே. (௧௬)

அன்னமாமலர்கொண்டெமக்கர்ச்சனை
தன்னையேபுரிவார்கள்சாரூபமே
இந்நிலந்தனிலெய்துவரென்பதாந்
தன்னமேனுமதிற்றந்ததில்லையால். (௧௭)

பத்திநின்னினும்பண்ணுநரின்றெனை
சித்தமாசறுத்தோங்கியசெல்வநீ
இத்தரணிமிசைப்பெறவெண்ணியின்
றத்தினல்கினமன்பினினக்கென்றான் (௧௮)

வேலனுதியர்தம்மைவிடுக்கினுஞ்
சாலவேநம்முழைப்பத்திசாருள
மேலுமன்பனையென்றுமொருவிடேம்
மேலுமீதுண்மையாமெனவேண்டுவாய். (௧௯)

திருவுங்கல்வியுஞ்செல்வமுஞ்மென்றன
திருகழற்பதமென்றுநினைப்பவர்

கருதுமெம்மடியாரவர்காசினிக்
குரியபோகமொருபொருளாக்கொளார் (௨௰)

பத்திகொண்டுவழிபடும்பண்பினால்
நத்துமன்பர்பெறநலம்பாலிப்பாம்
அத்திரீவிலங்காயினுமன்பினெம்
புத்தலர்ப்பதம்போற்றியபான்மையால். (௨௧)

தூகனிற்கொண்டமெய்யன்பின்றுறைகடல்
ஆகனிலத்திலதியாதரவினான்
உகவையெய்தினமொல்லையினென்றனன்
மகபதித்திருவாரணமுன்னரோ. (௨௨)

ஞானநாதனவின்றிடும்பின்னரும்
தானமேதவமேவிரதங்களே
நானமேயெச்சமேதவநாடலே
ஆனயாமகிழாமறிகென்னவே. (௨௩)

பத்திசெய்யிற்பரிவினவர்பர
முத்தியெய்துவர்முன்னறிபான்மைபான
மொய்த்தசெல்வம்வறுமைமுதுகுலம்
அத்திநம்மருட்கேதுவுமாங்கொலோ. (௨௪)

நம்மைநாடுநலஞ்செறிபத்திமைக்
கிம்மைமுல்லைக்கொடிதனைபீதுமால்
அம்மைமற்றதன்பிற்பதித்தென்றும்
எம்மையர்ச்சனைசெய்தியிசைந்தரோ. (௨௫)

என்றுசம்புவிதயமகிழ்ந்திபம்
நன்றுநாடநயந்தவணல்கியே
மன்றவாங்கவன்மால்விடைமேற்கொடு
நின்றகாட்சிநெடிதுகரந்தனன். (௨௬)

வேறு.

அரனன்றுதவியமுல்லைக்கொடிதனையயிராவதமிருகையேற்றப்
புரமுன்னமுழுணவைத்தானருளியபுனிதத்திருவருளைநாடிப்
பரிவிற்றிகழ்தருதளியின்புறநனிபதிவித்தொருபகடொருவாவத்
திருவிற்செறிதருகொடியுந்தளிரிலைமலரோடெனசெழித்தன்றே. (௨௭)

தேவேசன்றருமுல்லைக்கொடியினைதிருமாமணமதுபுவிமீது
மேவோசனைநனிமுகுளத்தேவர்கள்மொய்த்தார்கவலைதெறுத்தாரால்
ஆவூரவொருகரிபுரிபூசனையினைதன்பேசொலவளவைத்தோவென்
றோவாதுளாசெய்துசிலையாமுருவொடுநின்றார்புலனெறியொன்றுதார். (௨௮)

அரமாதர்கள்கொடிவகையாயினரொளியமைமாமறையோரியக்கேசர்
உரகோர்கெடியதவத்தோரொரிகந்திரிவோர்புல்லுருவினையுற்றார்
அருமாதவமலிகளிறுனாகலியாணப்பொய்கையினறலாடிப்
பெருமான்பலமனுவுருவோதிப்பெரிதாநாறுயிரமலர்கொண்டு. (௪௯)

தன்னீடியதொருயிர்ப்பாற்சந்திதினையோயன்பினிலகிட்டு
மண்ணுரவொடுமொருகோமயமடிவைப்பாற்றனியைமெழுக்கிட்டு
முன்னேனுறைதனியைப்பல்லவமொடுமுன்னித்தசவொப்பனையாற்றி
நன்னீர்தன்னொர்புழைக்கைக்கொண்டிறைநலமாமேனியினுறவாட்டி. (௫௦)

வேறு.

கந்தனமட்டித்தெந்தைமகிழ்ந்தசணிப்பூவாற்
சிந்தைமகிழ்ந்துதிகழ்ந்திடுமர்ச்சனைசெய்தெம்மான்
சந்தமலர்ப்பதமேத்திவணங்கித்தனியன்பான்
முந்துவலம்வந்தின்னணமதுமறைமுறையாற்றி. (௫௧)

காலற்செற்றகாலாமூலாகமமோதும்
பாலற்கேபாலாழிதரும்பரமாவிந்த
ஞாலத்தொன்றுமறிவறியாதேனுடித்தான்
சாலச்செயுமுபசாரங்கண்டருடாவென்று. (௫௨)

நிருமலமணியைநினைந்தவ்வேழநெறியானை
ஒருமுந்நான்காண்டொழியும்பதினுயிரஞ்செல்லத்
திருமலிமுல்லைப்பதிவயினர்ச்சனைசெய்போதத்
தொருமைமனத்துச்சசியுமுவந்துற்றனளன்றே. (௫௩)

சசியுமணைந்தேதன்னொருகணவன்றனையெய்தச்
சசிபுனையுங்கோடீரன்வலத்தார்தனிவாழ்வைக்
கசியுமனத்தாற்காமலர்கொண்டுகவநீர
வசிபவளாயர்ச்சனைபுரிகின்றாள்வழுவாதே. (௫௪)

ஆண்டோர்பதினுயிரமமைபோழ்தத்தணிமுல்லைத்
தூண்டாமணியின்விளக்காஞ்சுருதித்தொல்லோனும்
நீண்டோனுனுங்காண்பரிதாயநெடுங்காட்சி
ஆண்டேவேழங்காணியவந்தானருணல்க. (௫௫)

கண்டதொர்வேழங்கரிசதிகந்துகைந்நீட்டி
அண்டர்பிரானேயம்பிகைபாகாவருளாளா
எண்டருகின்னருள்கொண்டினையெய்தியதல்லான்மற
றுண்டுகொலுன்னைக்காணியபரிசுமுகந்தன்றே. (௫௬)

சித்திரையிற்பூரணைசெறியுஞ்சித்திரைநாளில்
அத்தருகடகமமைந்திடுபோழ்தத்தமரேசன்

அத்திமுனெய்திடவோர்ந்ததுகூறிடுமடைவாளெம்
வித்தகநின்னைக்கண்டதுமுன்றன்விருப்பன்றே. (௩௭)

என்றுரைநல்கிபர்ச்சனையென்றைதமுகநோக்கி
நன்றுனுபூசைநயந்தனமானம்மடியாரின்
இன்றுசிறந்தனையன்றேநின்றனையிலையவாரும்
இன்றொருமும்மைமிலந்தனிலிங்கினிகேளொன்றும். (௩௮)

அம்மொழிகேட்டவவ்வேழமுமெந்தையையன்பா
மும்மைவலம்வந்தடிகளிறைஞ்சியமுன்னின்று
செம்மைநலத்தவரோதரியாயொருசிவலோகா
கொம்மைமுலைச்சிலைமாதுமணாளவெனக்கூறும். (௩௯)

வேறு.

ஆறுறகன்றவருளாளாவென்றுநிதங்
கூறுதநாவுங்குணக்கடனின்றண்மலர்ச்சீர்
ஏறுவிருசெவியுமெய்தினேனென்னேயான்
வேறுகதில்லேன்விலங்கின்விடையானே. (௪0)

கோலமாண்டவேற்கட்கொடியிடையாள்பங்காமெய்க்
கலைமாண்டோருள்ளங்கலந்தாயொருவேன்வெஞ்
சிலைமாண்டநெஞ்சச்சிதடனேன்புனையும்
விலைமாண்டதொங்கன்மிதித்தேனிருந்தேனே. (௪௧)

பன்னிருகண்கொண்டபாலன்பொருட்டன்று
நன்னரருள்புரியுநாயகனேயென்செய்கேன்
என்னிருகண்ணேயிபமாலையாலறிவுந்
தன்னமிலாதந்தோதளர்ந்தேனுடையானே. (௪௨)

வேயிற்சிறந்தமென்றோண்மேவும்வடமுல்லை
வாயிற்சிறந்தமணிவிளக்கேவெங்கொடிய
நாயிற்சிறந்தேனலமிலேனுக்கிரங்கித்
தாயிற்சிறந்ததயாநல்கவேண்டாவோ. (௪௩)

பொல்லாமணியேபுலையேன்வெறுங்கொடியேன்
அல்லேலேனுமுல்லையணிமலர்தந்தாட்கொண்ட
நல்லானேநாயேனலிந்தேனினியேனும்
எல்லாமுடையாயெமக்கிரங்கவேண்டாவோ. (௪௪)

வேறு.

என்றுதோத்திரம்புரியபத்தனையெம்பெருமான்
நன்றுநோக்கிநீவேண்டியயாவெனநவிலக்

கன்றினல்விளவெறிந்தவன்காணொணுக்கமலம்
ஒன்றுசீறடியான்மனக்குளைத்திடுமன்றே. (சரு)

பத்தியென்பதில்லாதியான்பண்ணியபூசை
அத்தவெத்துணைக்குற்றமேயிருக்கினுமவற்றைக்
கித்துணைக்கணங்கமித்திடவேண்டுமாலினிநீ
நத்துவெங்கருவிறந்தனையகற்றுதியந்தே. (சசு)

என்றுமுக்கணெம்மானடிமலர்வயினிபந்தான்
ஒன்றுதன்றலைவண்டுபோற்கிடந்திடவுவந்து
நின்றுதண்டனிட்டதுநெடுநிலகந்தரனுந்
தன்றிருக்கையானீவிடத்தருகண்மாவேழம். (சஎ)

முன்னைஞான்றினுங்கோடிபங்கதிகமாமொய்ம்பும்
துன்னும்வெள்ளியநிறனுமேயெய்தரத்தும்பி
பன்முறைப்பிரான்றனைவலம்வந்துபால்வண்ண
நின்னையொன்றியான்கேட்பதுண்டெனநனிநிகழ்த்தும். (சஅ)

எனையொழிந்தெமதிறைவனுமிறைவனையொழிந்து
தனியனுமொருவேனுமத்தகைமைசாறுறக்கம்
இனிதினெய்தலிற்பயனிலையாகலினினையோன்
நினையுமஞ்செழுத்தோதிநின்பங்கயத்தடத்து. (சகூ)

புக்குருக்கரந்திருந்தனன்புராரிகேள்புனித
மிக்கவத்துருவாசனோதியவெறுஞ்சாபம்
நக்கரக்கடல்வயின்வருஞாயிறுமுன்னர்
தொக்கவெம்பனியகலுநீர்மையிற்றொலைகிற்பான். (ருo)

வேண்டியேபுலோமிசையுநின்வலத்தினின்மேவுங்
காண்டகும்பெருந்தோகையைக்கருதியேவழிபட்
டீண்டரும்பல்வரங்களையெய்தலானெங்கள்
ஆண்டகாயவன்றவத்தினுக்கருளுமமைவே. (ருக)

என்னவெம்பிரானன்னதுநோக்கிநல்லிதயா
தன்னிலப்புரந்தரன்வருமாறுதான்கருதப்
பொன்னுலாமலர்நாளத்தினின்றவன்போந்து
கன்னிபாகன்றன்கழன்மலர்பணிந்தனன்கனிவான். (ருஉ)

சம்பகேசனும்விண்ணவர்குழூஉப்பலசார்ந்து
வம்புநீடியமலர்மழைபொழிதரமறைந்தான்
தும்பியாமயிராவதம்பழிச்சலானீதிவ்
வம்புவிக்கணயிராவதகேத்திரமாமால். (ருங)

பம்புசீரயிராவத்தீர்த்தமாப்பரிவான்
அம்புயத்தனிமலர்செறியருங்குகதீர்த்தம்
இம்பரோதிடப்படுமிறையவன்றனையாரும்
நம்புமாலதீமோதநாயகனெனநவில்வார். (௫௪)

அன்னதன்றயிராவதேசப்பெயரறைவார்
கன்னிதன்னையுமன்னணங்கட்டுரைப்பாரால்
இன்னவாறிபம்பூசனைபுரிந்ததீதினியாம்
அன்னைதன்னையப்புலோமிசைவழிபடலறைவாம். (௫௫)

வெள்ளையானைப்படல முற்றிற்று.

# இந்திராணிப்பூசனைப்படலம்

புரந்தரன்றுமனைப்பூவினுளத்திற்
கரந்தமையுணர்ந்திடுகடியசெய்கையர்
அருந்தவர்க்கூற்றினையாற்றுமொய்ம்பினர்
இருந்தனர்சம்பனேமுதலவேதிலார். (௧)

பொன்னுலகதனிடைப்பொருந்தமேவியே
அன்னவரமர்பொரவாற்றலெய்திடார்
இன்னலினுழந்தனரிமைப்பிலாரெலாம்
பொன்னவனுணர்ந்தவன்பொருக்கென்றுன்னினன். (௨)

பரிமகமப்பகல்புரிந்தபார்த்திவன்
நிருபர்களேறனுணிலாமதிக்குலந்
தரவருநகுடனுந்தாமவேந்தனைப்
பொருவருமிறையெனக்கொண்டுபோயினன். (௩)

ஏந்தலுமரக்கரோடெதிர்ந்துபோர்செய
வீந்தனர்சிற்சிலர்வெந்நிட்டார்சிலர்
நாந்தகவுழவனுநகுடவேந்தனும்
போந்துபொன்னுலகினைப்புரந்திட்டானரோ. (௪)

ஒருசசிகணவனையுவந்துநீக்கிய
பெருவினைநினைந்துளம்பேதுறீஇயவன்
வருவகைநாடியுந்தனைவன்கணுளரா
சுரர்குருத்தாமையுற்றுணிந்துகவுரியை. (௫)

நாடியவிரதமொன்றுஞற்றகன்னியே
நீடியவானதிநீரிற்றோய்ந்தனள்
வீடரும்விதியினின்விதானமாதரித்
தேடவிழ்குழலியையேத்தினளரோ. (சு)

அவ்வயினகிலமீன்றெடுத்தவன்னையுங்
கொவ்வைவாய்ச்சிறுகக்கோட்டிக்கூறுமால்
நவ்விநேர்விழியினாய்நம்பன்வெற்பினும்
மவ்வன்மாநகர்சிறந்திலங்குமாலரோ (எ)

முத்தியைநல்குறுமுதன்மையாயது
முத்திகேத்திரமெனமொழியுநீரது
சித்திபற்பலவதுசெறிக்குமாண்பினாற்
சித்திகேத்திரமெனச்செப்பற்பாலதே. (அ)

நம்பனுக்குரியவத்தலத்தைநாடவர்
இம்பரிற்கூவிளவனமென்றோதுவார்
சம்பகவனமெனச்சாற்றுவாரவண்
எம்பரனென்றுடனெய்துமாலரோ. (கூ)

அன்னதொன்னகர்வயினடைகின்றார்தமக்
குன்னினவுன்னினவுவந்துநல்கலான்
என்னையேமனோபிரமணியென்றோதுவார்
பன்னருமந்நகர்பரிவினாடியே. (க0)

ஏமையருமறைநெறிவழிபடீஇயெழில்
அமைதருசித்திரைமதியினாகிய
இமையவர்தொழும்புகர்நாளினேய்ந்துநின்
றமைதருதோளினாயாற்றிற்பூசனை. (கக)

யாமவர்க்கெளிமையிற்காட்சிநல்குதுங்
கோமளவல்லிகேள்குறித்தநல்வரம்
ஆமலகில்லனவளித்துமென்றரு
மம்மலைவல்லியுமறைந்திட்டாளரோ. (கஉ)

புலோமிசையுமிறும்பூதுமேவிமெய்
சுலாவியபொன்னடித்துணையிறைஞ்சினாள்
கலாமகறரவுமைகட்டுரைத்தவை
எலாமெடுத்துரைத்தனளேம்பலானரோ. (கங)

அவனருளும்பெறீஇயகன்றுமாநிலத்
தெவரிருவினையையுமிரித்துநின்றிடுந்

திவண்மணிமாடங்கள்செறியுமுல்லைபாம்
பவனுறைபதியதன்பாங்கரெய்தினாள். (கச)

சோல்வரம்பிகந்தவன் றுணைவியோடமர்
முல்லைமால்வனமணமுன்னரோசனை
எல்லையில்வீசவுமெண்ணியேம்பலான்
வல்லியேயனையவள் மகிழ்ச்சியெய்தினாள். (கரு)

ஆண்டனோர்திறைவனையங்கையாற்கனி
நீண்டிருந்தருச்சனையியற்றுமாறுகண்
டாண்டநாயகனருளாமென்றேறியே
யாண்டகாதலினகர்வலம்வந்தாளரோ. (கசு)

பின்னரப்பெருந்தகைதனைப்பிரிந்திடாக்
கன்னியாமனோன்மணியைக்காதலான்
உன்னியாகமநெறியுவந்துமஞ்சனந்
தன்னையேயாட்டினாள்சமுக்கைபோட்டுவாள். (கஎ)

முல்லைமுன்மலர்கொடுமுதல்விதாண்மலர்
ஒல்லையினருச்சனையுஞற்றியென்றகொல்
எல்லவிர்முலிசிதன்சாபமேகவென்
றல்லியுமருணமாறிலனுசாம்புவாள். (கஅ)

வேறு.

இன்னவகைபுலோமிசையமிறைவிபூசனையாடிப்
பன்னிரண்டாண்டெறுதலும்பராபரைகட்புலனாகி
உன்னுடைப்பூசனையுவந்தாமொன்றுமுளத்தினினையலேல
நின்னுடைக்கேள்வனையடைதிமலனருளாமென்றாள். (ககூ)

அன்னையுரைத்திடும்பின்னுமடுத்தயரொருபரிதி
தன்னையேகண்டவிமந்தனைப்பொருவகன்றிடுமால்
முன்னையவளெனலாமெய்துமுல்லையரன்காட்சியினால்
என்னவயிராணிபடுமயிராணியெடுத்தேத்தும். (உ0)

கருநிறத்துமுகில்விளர்ப்பக்கறுத்திவணெய்த்தெதிர்ந்தாருண்
மருவுமிருளனைத்தையுந்தன்வாய்ப்பெய்யுங்குழல்போற்றி
ஒருகடலினடுவணணியுதயஞ்செய்பானுவென
வருமணிப்பொற்றகடுமுன்னுவயங்குபலவணிபோற்றி. (உக)

மும்மதிலும்பொடித்தபிரான்முடிப்பிறையுமிகத்தாழச்
செம்மைநலந்தரச்சற்றேசினந்தசிறுநுதல்போற்றி
கொம்மைமுலைக்கலைமானுங்குரைகடல்வாய்வருமானும்
எம்மையுமேபொலிகிற்குமிருகருணைவிழிபோற்றி. (உஉ)

எனைத்துயிரின் குறைக்கிரங்குமிணைவள்ளைச்செவிபோற்றி
தனித்துணைவன் றனைவணக்குந்தகைப்புருவச்சிலைபோற்றி
கனித்துவர்வாய்போற்றிநகைத்தளவரும்புங்கவின்போற்றி
குனிக்கருஞ்சீர்க்குமிழ்போற்றிகுலவுசுபுகம்போற்றி. (உ௩)

திங்களெனப்புரைந்தென்றுந்திகழ்கருணைமுகம்போற்றி
சங்கநிதியெனக்கிளருந்தகைசெறிகந்தரம்போற்றி
அங்கதன்பாலமரர்துயர்கடியுமருங்கடிபோற்றி
பங்கயமாநிதிபொருவும்பால்பெருகுமுலைபோற்றி. (உ௪)

கல்வளைத்தான் றனைவணக்குங்கவின்பெருகும்வேய்போற்றி
சொல்வளைக்கும்யாழ்த்தண்டாய்ச்சொற்றிடுமுன்கைபோற்றி
அல்வளைக்குமிடற்றொருவனங்கைதொடுநகரம்போற்றி
எல்வளைத்தாலெனக்கரத்திலிலங்கிடுசூடகம்போற்றி. (உ௫)

எற்புநரம்பிவைதோன்றுதிலங்குபுறங்கைபோற்றி
பொற்புநீடியகாந்தளெனப்பொலியுங்கரம்போற்றி
அற்புருவத்தனிமுதலையன்றுபற்றும்விரல்போற்றி
முப்புவனமொருங்கீன்றமுதல்விதொனமுதல்போற்றி. (உ௬)

தோன்முதலென்றொருமூவர்தமையுதவுந்துணிபேபோல்
தொன்முதன்மேற்படர்நதொளிருந்தொல்வளாகணனிபோற்றி
நன்மையுதவியகங்கைநதிச்சுழியும்வட்கிடவிங்
கென்றுமிளிர்தருமுந்தியோடையவிடைபோற்றி. (உ௭)

நவமணியிற்செய்திவருநலங்கெழுமேகலைபோற்றி
புவனவரம்பையுநாணப்பொலிகுறங்குநனிபோற்றி
எவமகலவிலங்கியபட்டாடையினதெழில்போற்றி
உவமமலவன்வராலாமையுமாங்கால்போற்றி. (உ௮)

மெய்யடியர்துதிநீங்காவிரைசெறிபூம்பதம்போற்றி
பொய்யடியனேற்குதவும்பொருவில்விரலெழில்போற்றி
வையமெடுத்துரைசெய்யவயங்குமடிச்சீர்போற்றி
உய்யமயிலிலங்குநடையொடுஞ்சாயனனிபோற்றி. (உ௯)

ஒப்புரையினிலமெடுத்துரைசெய்யவொண்ணாத
முப்புரையென்றிவணோங்குமுக்கணுடைமணிபோற்றி
எப்புரையுமில்லாதார்க்கிரங்கியருள்செயுங்கருணை
வைப்புளாயோதரியமனோபிரமணிநின்சீர்போற்றி. (௩0)

வேறு.

என்றுபுலோமிசைகூறியயாவுமெம்மனைகேட்
டின்றுளமகிழ்ந்தனமினியயரேலிட்டிடைநீ

நன்றுநின் றன்வாழ்வெய் துவையென் ருநகராசன்
அன்றுதவம் பிகையங்கு மறைந்தாளார் வத்தால். (௩௧)

அவ்வரமெய் தியவவ்வயிரர் ணியுமாங்கென் றுந்
தெவ்வடுமாவயிரப் படையான் றன்றிரடோ ளிங்
கெவ்வமில்சிந்தையினென் றுகொலெய் துவனென் றுநின்
றவ்வயினின் றனளம்பிகைபா தமகத் துன்னி. (௩௨)

நாயகனெய்திட நன்னுதலாளின்னலமெய் தித்
தாயகமாமுமையாள் செஞ்சரணந் தனையென் று
மேயகமாயவளங்குறை நின் றாள் விண்ணோருள்
தூயபுரந்தர னுடியபரிசுஞ் சொல்வாமால். (௩௩)

இந்திராணி பூசனைப்படல முற்றிற்று.

---

# இந்திரன் விழாப்படலம்.

---

இந்திர னுவான்றுமறைநாளத் தினினெய் திச்
சந்திரமோலியொடம் பிகைபா தந்தனையேத் தி
நந்தலில்வானத் தாளைவிளித் தொருநாற்கோட்டுத்
தந்திமடுக்கணணியமமுடித் தேசார்கின் றான். (௧)

வானதியிற்சீர் மிக்கதுமாடுநேர்வன் பாவந்
தானகல்விப்பதுமாமச்சலசத் தடநீரை
ஏனகுபொற்கும்பத் துநிரப்பியிரிருகோட்டுத்
தானவிலங்கின் பியன் மிசைவைத் தேசார்கின் றான். (௨)

துந்துபியானதமுங்கநடந் திறைதொல்கோயில்
வந்துபுகுந்தாசமனமுனுற்றிமுன் மதிநேர்வான்
அந்தமில்சீர்ப்பூரணைசெறிநன் னுளாம்போழ்தத்
தெந்தையைமஞ்சனமாட்டினனம்மாவினிதன் னுன். (௩)

நறுமலர்முல்லைகொடெந்தையைநாலாரணமோது
நெறியினருச்சனைபுரியநெடும்பகடினியெய் தி
அறைதருமன்பானேவல்குயிறநிடவயிராணி
முறைமையினேவனைசுபுண்டிமுன் முக்கனிமுன் னுன. (௪)

கோண்டுபசாரர்புரிதரமுச்சுற்றமிகுந்த
எண்டகுமந்தணர்மாமுனிவோர்களிருக்கோதப்
புண்டரிகத்திலயுநேருமரம்பையர் புடைவந்தங்
கெண்டிறன்மாநடமங்கனுனுற்றி நலிசைபாட. (௫)

சிற்சிலர்கண்டாநாதமுழக்கத்தேவேசன்
கைச்சிலைவெற்பாக்கொண்டவன்முக்கட்சனியெம்மான்
அச்சமகற்றயிராவணநீர்தனமுல்லைவண்ணன்
பொற்சரணைத்திப்பூரணையிருநாள்பூசித்தே. (சு)

அருக்கியபாத்தியமானவளித்துபவித்தமாடை
ஒருக்கியநெஞ்சினுவந்தேயுதனியெம்முடையானை
இருக்கினெடோதியவ்விறைவனைமும்மைவலம்வந்து
சுருக்கமில்தோத்திரமாவனகூறித்தொழுவானால். (எ)

வேறு.

இஞ்ஞான்றெமக்குவெளிப்பட்டாயெம்பெருமான்
இஞ்ஞான்றியான்செய்தவமென்னென்றுரைப்பதுவால்
செய்ஞ்ஞான்றதில்லைச்சிவனேவடமுல்லை
மைஞ்ஞான்றகண்டத்துமாமாசிலாமணியே. (அ)

எண்ணியவையெய்தினேனெண்ணியவையெய்தினேன்
எண்ணியவையெய்தினேனெங்கள்பெருமானே
விண்பறந்துமண்கிண்டும்விதிமாலுணரகிலாப்
புண்ணியமாமேனிபுரிந்தெமக்குக்காட்டினையால். (கூ)

சம்போகங்காதராசம்போகங்காதரா
சம்போகங்காதராசாமகண்டத்தெம்மானே
நம்பாபரமாநவிந்தேற்கருளினையால்
அம்பாசமேதாவமலாவிடையானே. (க0)

மெய்யானவன்புனக்கேமெய்யானவன்புனக்கே
மெய்யானவன்புனக்கேமேவக்கடைக்கணியாய்
செய்யாய்வெளியாய்கரியாய்செழுஞ்சடைமேற்
பையாடரவமசைத்தபரமேட்டீ. (கக)

மானேர்விழியாண்மலையரையன்பொற்பாவை
கோனேநீநாயேன்குலதெய்வமாதலினால்
யானேதிருவுடையேன்யானேதிருவுடையேன்
யானேதிருவுடையேனெங்கள்பெருமானே. (கஉ)

வேறு.

இன்னவண்மகவானுமிறைவனைத்தோத்திரம்புரியக்
கன்னியொருபாகத்தெங்கண்ணுதலுமெளிதடைந்து
நின்னுடையவருந்தவத்தைநெடிதுவந்தாநீயுறற்று
மன்னபெருந்தொண்டினுக்கின்றலகின்றுமென்றுணர்வாய். (கங)

வேண்டுவதேனல்குவமென்றிறைவிழைவிற்கேட்டருள
மாண்டகுணமகவானுமழவிடையோன்றனைநோக்கிக்
காண்டகுபேரொளியேழுக்கண்கொண்டகரும்பேசே
வாண்டகொடியமுதேயென்றடிகளடிமலர்வணங்கி. (௧௪)

நின்னடிக்கேயென்ஞான்றுநேயமுநின்னலதொன்றும்
என்னுள்ளங்கருதாதேயிருக்கவுநின்னகரென்றும்
மன்னுமாலதிவனமென்றியம்பவுமாமறையனைத்தும்
நின்னைமாலதிநகரோனெனவுநிகழ்த்திடவேண்டும். (௧௫)

மாலதிவனத்திறைவியெனநின்பான்மருவிடுமிவ்
வேலவார்குழலாளையியம்பிடயான்கரந்ததடம்
மூலகாரணவென்பேரான்மொழியவிவ்வரமே
பாலியாயென்றிரந்தான்பண்ணவர்நாயகனம்மா. (௧௬)

பின்னுமவனெம்மானைப்பெரிதிறைஞ்சிவேண்டிடுமால்
என்னையாளுடையாயிவ்வெழினகரினீயென்றுந்
தன்னமில்விழாவயரத்தான்வேண்டுமிம்மதியின்
என்னவவன்றனக்கருளியிறைவனுருக்கரந்தனனால். (௧௭)

இறைவனுருக்கரந்ததற்பினிந்திரனுங்களியெய்தி
நிறையுமன்பான்விச்சுவகன்மனைக்கூவிநிகழ்த்திடுமால்
முறைமையினித்தனிநகரமுன்னியசீர்ப்பொன்னுலகென்
றறையவியற்றிடுகென்றானன்னவனுமதுநேர்ந்தான். (௧௮)

இந்திரன்றன்பொன்னுலகென்றியாவருமேயெடுத்தோத
அந்தணரேமுன்னுயவரியநாற்குடிவீதி
தந்துபுறக்குடிவீதிதானமைத்துத்தனியளகை
வந்துள்ளங்கவலுமாவணவீதியும்வகுத்தான். (௧௯)

ஆளுடையபெருமானுமம்பிகையுமவன்றனக்காங்
கோளுறுநற்பரிவாரங்குழைந்தமரவாலயமும்
நீள்சிகரிகோபுரமுநெடியமணிமண்டபமும்
வாளகிரியெனப்பொலியுமதில்பிறவுமனத்தோர்ந்து. (௨0)

அயனுமிறும்பூதெய்தவமைத்தணிகள்பலகுயிற்றிப்
பயமலிதீர்த்தங்கள்பலவாகனங்கள்பரிந்துஞற்றி
நயமலிவைதிகத்தேருநாணவையந்தனையியற்றி
நயனமீரைஞ்ஞூற்றுநாயகனுக்கறிவித்தான். (௨௧)

வைதிகத்தேர்மிசைவருமவ்வள்ளலார்தமக்கன்பாய்
எய்தருநற்சாறியற்றவெழிற்றொன்மால்விடைக்கொடியைச்
செய்தவரெலாம்புகழவினிதேற்றித்தினந்தோறும்
பொய்தபவொன்பானாளும்பொருவில்விழாவயர்வித்தான். (௨௨)

னைஞ்சாகாளொருசித்திரையெய்தவெழிற்றீர்த்தப்
பேரெஞ்சாவிழவயரப்பெம்மானைக்காணவருஞ்
சீரெஞ்சாவன்பருக்குஞ்செழுமறையோர்தமக்குமிவ
ணேரெஞ்சாவிரவலர்க்குநெஞ்சகனிமிகமகிழ. (உ௩)

என்னதானத்தினுமீங்கிளிச்சிறந்ததெனவுரைக்கு
மன்னதானமுமகிலதானமுமாடையும்பிறவாச்
சொன்னதானமுமளித்துத்துயரகன்றுசெலவன்றே
ரின்னதானக்களிற்றுக்கிறையோராண்டுறைந்தனனால். (உ௪)

சந்நிதியின்பாங்கரொருதளியமைத்துத்தன்னாம
மன்னவொருசிவலிங்கமாண்பினிறீஇமணிசணடன்
றன்னையொருசற்புமலர்தனைக்கொண்டுதகவினொடுந்
துன்னியருச்சனைபுரிந்தான்சூழ்வினைகளொருங்கிரிந்தான். (உ௫)

இன்னணம்பூசனையாற்றியிறைவன்றன்பூசனைக்காச்
சொன்னவிரைம்பதுபதிகடுரிசறவேயுதவியபின
கன்னியொருபான்மருவுகறைக்கண்டனசிறப்பினுக்கா
அன்னவகையரும்பதியுமந்தணர்க்குமாழையுமே. (உ௬)

நன்னயமாயுதவிக்கைந்நாகமூர்நசெழிற்சசியோ
டின்னலிகந்தவர்வாழுமெழிலமராவதிநகரந்
தன்னையடைந்தனனடையத்தகைமைசால்வானோர்கள்
துன்னினர்நெஞ்சகமகிழ்ந்தார்துரிசனைத்துமொருங்கழிந்தார். (உ௭)

சசியினொடுபுரந்தரனுஞ்சாரநகுடனுங்கண்டச்
சசிவயிற்றன்காதல்கொடுதான்காமபாணத்திற்
றிசையுமிலக்காய்வருந்தியிடருற்றுமனமயர்ந்து
சசிவினொடுமாண்டளப்பாவிடங்கனிவிற்சென்றனனால். (உ௮)

சென்றவனுந்தன்குறையைத்தெரிவிப்பத்தேசிகனும்
அன்றவனுக்குரைசெய்வானையகேளருந்தவமே
அன்றுவசுக்களொரெண்மர்துதைந்தவன்பாற்றுங்கிவரும்
நன்றமைந்தசிவிகையினைநடாய்வரின்முற்றிடுமாலோ. (உ௯)

நின்கருத்தென்றுரைசெய்யநீண்டபுகழ்நகுடனுமங்
கொன்றியசீர்ச்சிவிகைதாங்கினர்வெறுத்துத்தரைவீழ்த்த
அன்றுதொட்டுப்புரந்தரனுமடர்துன்பமொரீஇச்செங்கோல்
சென்றிடத்தான்கடைமுறையிற்சிவனடிநீழலிற்புக்கான். (௩0)

மாமுனிவிரிந்திரனெய்மவ்வல்வனத்தமர்பெருமான்
றாமருசேவடிபரவுங்காரணத்தானந்நகரந்
தேமலிமிந்திரபுரமென்றினிதியம்பச்சிறந்ததிறை
காமமிந்திரேசனெனவின்றிடமேவிடுமன்றே. (௩௧)

பல்லுயிரும்பயர்தவளிப்பதிவயினென்றுஞ்சாந்த
மெல்லிடைநாயகியெனும்பேர்மேவுமின்னுமித்தலத்தி
னெல்லியொடும்பகலுமிறைக்கேய்ந்தபுண்ணியமான
கல்லுணர்வினியற்றுநலகநமுறைத்துமினியென்றான். (௩௨)

இந்திரன்விழாப்படலமுற்றிற்று.

---

## சிவபுண்ணியப்படலம்.

அண்டர்வாணன்றன்றொண்டினையகமகிழ்ந்துரைப்பக்
கண்டியாமகிழ்வாமெனக்கரிசிலந்தணர்கள்
மண்டுமன்பினன்வேண்டுவமரபுளியவர்க்கு
விண்டுரைத்திடலாயினன்வியன்றவச்சூதன். (௧)

இத்தலத்திறைக்கெனைத்துணைப்பொருளுபகரிக்க
அத்துணைக்கஃதிரட்டியாமான்றமெய்த்தவத்தீர்
வித்தகப்பெருவிரதங்களெனைத்தினுமேலாய்
நித்தநிற்பதுசிவநிசியென்பரானிலத்தே. (௨)

அத்தகையித்தலத்தாற்றுநரடைதரும்பேறிங்
கித்தனைத்தெனச்சொற்றிடுந்தரமதன்றெமையாள்
உத்தமன்றிருவருளினாலுணர்ந்தவாறுரைப்பா
மத்தமாமதிசூடினோனருள்பெறுமாண்டீர். (௩)

இன்னமாத்தலத்திறைவனைநெறியினினைந்து
கன்னிபாகனையருச்சிப்போர்கவின்மலர்நண்பன்
மன்னுநற்பதமெய்துபமத்தமாமலர்கொண்
டன்னவன்றனையருச்சிப்போரளகையாளுவரால். (௪)

கோவின்வைப்பினையெய்துவர்கோதறுகரும்பின்
மேவருஞ்சுவையிரதத்தாலாட்டுநர்வெற்பின்
பாவைகேள்வனைத்தேனினாட்டுறும்பரிசுடையோர்
தேவநந்தனத்தென்றுமேதிளைத்தினிதிருப்பார். (௫)

ஆவினஞ்சினெண்ணெயினிறைவன்றனையாட்டப்
பாவமஞ்சுமீண்டினன்முனம்பனியெனப்படுமால்
மாவிலாங்கலிகதலியின்மஞ்சனமாட்டத்
தேவநாயகனடிமலரொன்றுவர்சிறந்தே. (௬)

பூசுஞ்சாந்தமும்புனைதருமாலையும்பிறவும்
காஞ்சசந்தமார்முப்புரிநூலொடுகவின்பூந்

தேசுலாமணமுல்லையந்தொடைதெரிந்தணிவோர்
வாசவன்றொழுமலரயன்வாழ்க்கைமேவுவரால். (எ)

வில்வஞ்செங்கழுநீர்வியன்றாமலைகொண்டு
கொல்லிடைக்குழகன்றனையருச்சனைகுயிற்று
நல்லவித்தகர்வலாரியாய்நனிதவச்சிறந்தாண்
டெல்லைதீர்தருமின்பமதெய்திநிற்பாரால். (அ)

பத்தியோடுநற்பசுவினெய்விளக்கிடுகிற்போர்
அத்தனார்வலக்கண்ணெனவழல்விழியென்ன
நித்தமோங்குபநால்வகையுண்டியாணிரம்ப
வைத்துநன்னிவேதனஞ்செய்வோர்வான்பதமுறுவார். (கூ)

வேந்தராவரால்விமலனுக்கிங்கடைகாய்முன்
ஏந்திநல்குநரென்பவேயெழிற்கருப்பூரந்
தாந்தகச்சிறந்தெய்தியாராதனஞ்செய்வோர்
பூந்தருக்கள்சூழ்விண்ணிடைப்பொலிந்தினிதிருப்பார். (க0)

அருக்கியத்தினுக்காகியவட்டில்களாற்குத்
திருத்தநற்கலசஞ்சிறந்தோங்கியபிறவும்
அருத்தியோடளிப்பார்புவியனைத்தையும்புரக்குந்
திருத்தகுஞ்சிறப்பெய்துவரென்பராற்சிறந்தோர் (கக)

குடையளிப்பவர்குலவுசாரூபமெய்துவரால்
அடைவிற்சாமரையளிப்பவரரசராய்ச்செறிவார்
இடைவிடாதிறைக்கென்றுமெய்யன்புமீச்செறிந்த
நடையினீரெனச்செப்பினான்மறைச்சூதன். (கஉ)

இந்திரன்பதமெய்துவரனைத்துமீண்டுதவி
முந்துவோரிரதங்கொடுமுன்னியாட்டிடுவோர்
கந்தமுல்லையானருச்சனைபுரிபவர்கவினச்
சந்தநல்விளக்கெரித்தார்சிவன்றாணிழல்பெறுவார். (கங)

சிவநிசிக்கணேபூசனைசெய்குநர்துணையாய்
அவர்தமக்குமுற்பதின்மருமவர்பினத்துணையோர்
தவறில்சுற்றமோடிறைவளர்தருகயிலாயக்
குவடுமேவுவரென்னுமக்குலமறையெனைத்தும். (கச)

முன்னையாமத்திற்பூசனைமுடிக்குநரிரண்டாச்
சொன்னயாமத்திற்பூசனைதொடங்குநர்மூன்றாப்
பன்னும்யாமத்திற்பூசனைபண்ணுநர்நான்காந்
துன்னுயாமத்திற்பூசனைசூழ்பவர்முறையால். (கரு)

பொன்னிறுட்டினைப்புராரிதன்வடிவினைப்புனைதீர்த்
தென்னையாள்பவன்கபூலினையெழில்கொளூற்பயனை
மன்னுவாரவன்பணிபுரிவார்பரிமேதந்
தன்னுடைப்பயனீர்யுதந்தகச்சார்வார். (கசு)

வலம்வருஞ்சிந்தையார்மணமருவுகூவிளமே
நலர்பெறக்கொடுபூசனைநடாத்துநர்நம்பன்
இலகுமாதலக்கேகியபயனுறுவார்
தலகிலாமகூறத்துணிபெனவறிதிர்மெய்யுணர்ந்தீர். (கஎ)

சிந்தையன்பொடுஞ்செறிந்திந்தச்சிவநிசிதன்னில்
நந்திடாமனல்விளக்கெரித்திட்டவர்நாளாற்
கந்தமாமலர்நண்பனூர்கருதிவீற்றிருக்கும்
அந்தவான்பதமெய்துவரவலதீத்தம்மா. (கஅ)

அமலன்பூசனைதொடங்குநர்க்கருந்துணையாக
அமைதருங்குணமுடையவரம்பிகாபதியால்
சமையுமன்பினூற்சொன்னவில்வந்தனைச்சாத்துங்
கமையினூர்சிவகணத்திறைபாகுவர்கண்டீர். (ககூ)

அலரினேடொருநறுங்குறடமலனுக்களிப்போர்
வலமழுக்கரத்திறைவனையுறுவர்மஞ்சூரம்
அலகிலன்பினூனிவேதனமாற்றுநர்சயிலை
மலையையெய்துவர்மனக்கவலகன்றிவண்மகிழ்வான். (உ0)

மங்கலத்தடங்குடைந்துமுன்யாமமாதுமைதன்
பங்கன்மேவியகோயிலைப்பணிந்தெழுகிற்போர்
பிங்கலன்பதமெய்துவர்பிறங்குமெய்ஞ்ஞானம்
அங்கணெய்துவராற்றிடினதற்பின்யாமத்தே. (உக)

யாமமூன்றிலெம்பிரான்றனையேத்தியேவிழிப்போர்
சோமசேகரன்றுணையடிமருவுவர்நான்காம்
யாமமாண்டினிதிருக்குநரெம்பிரான்படிவம்
நாமநீருலகிடைநணியெய்துவர்நாளால். (உஉ)

இயம்புநான்கியாமத்தினுமிணைவிழியுறங்கார்
சுயம்புவாகியசோதியைத்தான்றுதிபுரிவோர்
தயங்குமெய்ச்சிவமாகுபதாவின்மெய்த்தவத்தீர்
வயங்குமித்தலச்சிறப்பிதுவாகுமாண்புவியில். (உங)

வேறு.

அத்தவர்தமைநோக்கியவந்தணீர்
சித்தமாதரத்தாற்சிவபுண்ணியம்

அத்தனையுமறைந்தனனற்றேவ
மித்திரன்கதியெய்தல்விளம்புவாம். (உச)

சிவபுண்ணியப் படல முற்றிற்று.

---

# தேவமித்திரன் கதிபெறு படலம்.

பொன்னாடுகாவுடைத்துப்பொருவிலபயன்புரக்கும்பொன்னிசூழ்ந்த
நன்னாடுசோறுடைத்தான்றோருடைத்துத்திருத்தொண்டைநல்லநாடு
சொன்னாடுமலைநாடுமாதங்கத்திரளுடைத்துத்தோலாமெய்மைத்
தென்னாடுசிவலோகமெனப்பாருமெடுத்துரைக்குஞ்சிறந்தநாடு. (க)

வன்னாடுகுரும்பைமுலைத்தடாதகைதன்பெண்ணரசுவழங்கவெம்மான்
பொன்னாடுமருமத்துப்புங்கவனேமுதற்பொருவிறந்தோர்போற்றக்
கொன்னாடுகூரிலைவேலொருவழுதியெனத்தானுங்கோல்கொண்டோச்சத்
தென்னாடலாற்றென்னாடெனயாருமெடுத்துரைக்குந்தெய்வநாடு. (உ)

இந்நாடுதனிற்சங்கமொருமூன்றுநடந்ததனாலிமையோர்வேந்தன்
பொன்னாடுதனையொரீஇவழிபாடுபுரிந்ததனாற்புரைதீர்ந்தோங்கும்
மெய்ந்நாடுபரிசதனால்வருணனுமப்பரம்பரனைவிழைவினாடல்
எந்நாடுமுயப்புரிந்ததிறத்ததனாற்சிறந்ததெழின்மதுரைமூதூர். (ங)

இன்னகரந்தனிலோதுதலோதுவித்தலீண்டேற்றலீதல்
மன்னுமகம்புரிதல்புரிவித்தலெனக்கிடந்தவறுவகையாஞ்செய்கை
என்றும்வழாதோம்பிமறையங்கமுன்னாங்கலையனைத்துமினிதாய்ந்த
சொன்னவிலுமந்தணரிற்காசிபகோத்திரமொன்றுதுலங்குமாலோ. (ச)

இத்தகுகோத்திரத்தொருநால்வேதமேபடிவெடுத்தாலென்னும்வேத
மித்திரனென்றொருவன்பாலவனறியாதுற்றியவெவ்வினையொருங்கின்
றித்தரைமேல்வந்ததெனுந்தேவமித்திரனென்பானியைந்துதோன்றிப்
பொய்த்தமொழியல்லாதுமருந்துக்குமெய்ம்மொழிதான்புகலானானன். (ரு)

அந்தணனாயான்றனைநிந்தித்தலருமறையோதாமையீசன்
நிந்தனைசெய்திடறன்னையீன்றானைநிந்தித்தல்யார்யார்க்கீண்டுப்
பந்தமகற்றிடுஞ்சிவசாதனம்புரியாதிருத்தல்பஞ்சாக்கரமோதாமை
சந்திகுயிற்றாதிருத்தல்குருதுரோகங்குயிற்றலுஞ்செய்வானாய். (சு)

பரத்தையேகாட்டுமெனப்பரத்தையர்பாற்சென்றுள்ளம்பாழ்பட்டன்னோர்
தரத்தையேநினைந்துதனத்தாசையினாற்றன்கைதனந்தனையேதந்திட்
டிரத்தையேயிழந்தவர்காற்பணிசெய்துமொழுகுவானுழையேவேள்பூஞ்
சரத்தையேயேவலினாலலையூடுசெருகேபோற்றளர்ந்தானம்மா. (எ)

இன்னவாறிவணிகழ்ந்தலறியாமேயிவன்றனைமுன்னீன்றோன்சால
மின்னவாங்குழன்மனையோடாராய்ந்துதன்குலக்குமிகவுமேற்பத்
துன்னுமொருவேதியன்பால்வருந்திருவைத்தன்கொடியசுதற்குமன்றல்
தன்னையயர்வித்தவனுமனைவியோடருந்துறக்கந்தனையுற்றானால். (௮)

இனையமாதொருசுத்தையெனும்பெயரினளினையோனில்லக்கென்றுந்
தனைநிகருந்துணைவியாயமைந்துசற்பிரகாசியருந்ததியேமான
மனையின்வாழ்க்கையைநடத்தித்தன்பெயர்க்குத்தக்காங்குமாண்பினோர்பால்
நினைதருமெய்ப்பத்திபுரிந்திறைவியடித்துணைக்கமலநேயமெய்தி. (௯)

தன்னுடையகொழுநனுக்கூட்டியமிச்சிறனையருந்துந்தகையாளென்று
மன்னவன்றன்முனியினவனெதிரொன்றுமொழியாதாளவன்றனேவல்
பொன்னெனக்கொண்டுளமதிக்குட்பொற்பினாள்செந்தீமுன்பொருந்துமன்றல்
தன்னையயர்ந்தானென்றுமிறைவனெனமனநாடுந்தருமமிக்காள். (௧௦)

அவனுறங்கத்தானுறங்கியவனெழுமுனெழுந்திருக்குமருங்குணத்தாள்
அவமறுசிந்தையிற்றன்னைமணந்தானையல்லதயலறிகிலாதாள்
தவறுபெரிதுஞற்றுந்தன்வாழ்நாளினெனக்கணவன்றன்பேரோதாள்
தவமலிசிந்தையையுடையாணீர்மையினைத்தெனக்கூறுந்தகைமைத்தன்றே.()

தந்தைதாயகல்பின்னறத்தன்றுயக்குரித்தாமோரயுதஞ்செம்பொன்
அந்தில்கவருடன்முன்னுந்திக்கருமத்தனக்கொழித்தானன்னதன்றிக்
கொந்தலருங்குழற்சுத்தைதனக்குவந்தசீதனமுங்குறைவொன்றின்றிச்
சிந்தையன்பிலாதுபரத்தையர்நலக்கேவிலைதந்துதிரிந்தானம்மா. (௧௨)

விடர்களொடும்பயின்றுகவறுடிமத்தமுழக்கிவீணைவாசித்
தடைவொடுமப்பரத்தையர்தம்மனைதானேநிலையாகியறிவுசோர்ந்து
கடிமணந்தானயர்ந்தாளவைதுறப்பிநாள்கள்பலகழித்தானன்னா
ளிடரினலிந்தின்னலுக்கேயிருக்கையளாயிதுவிதியென்றிருந்தாளம்மா. ()

வேறு.

பரத்தையர்க்கவன்கைப்பொருள்யாவையும்படிமேல்
அருத்தியோடவன்விற்றளித்திட்டனனந்தோ
அருத்தமிவ்வணமாகவுமனையன்முற்பழகுந்
திருத்தமாகியவிசைமுன்னும்பயிற்சியிற்சிறந்தான். (௧௪)

பொருளையீட்டியுமவர்க்களித்திருந்தனன்பூமேற்
றிருவனாளெழிற்சுத்தைவாழ்மனையகந்தேடி
மருவினனொருநாளத்திமலர்வதேமானப்
பெருமகிழ்ச்சியிற்கண்டடிபரசினள்பெரிதும். (௧௫)

கையினீரொடுகாலினீர்கவினுமுக்குடிநீர்
பெய்துதான்முகமன்பலகூறினள்பெரியாய்

செய்யமாமறையொழுக்கினுய்நீவரச்சிறியேன்
வையமேலென்னமாதவம்புரிந்தனனென்றாள். (௧௬)

பின்னுங்கூறுவாள்பேதையேன்றன்னைநீநாடி
இன்னபோதிவணெய்தியதென்றன்மாதவற்கு
மன்னுமாத்திகநாளெனமதித்துக்கொலென்றாள்
அன்னபோதவனருமறையொழுக்கிலானறையும். (௧௭)

பேதைகேள்பிதிரென்பதென்சிரார்த்தமென்பெரிது
மேதுசெய்வதற்கென்றனனிருந்தவக்கொழுந்தப்
போதுகூறுவாளதுமறையொழுக்கெனப்புகலு
மாதயாவினுன்மறையெனப்படுவனமதியாய். (௧௮)

இன்னதேபுரிந்தான்மரபோங்குமென்றிசைத்தாள்
கன்னலேனிகர்மொழியினுள்காதலன்கூறும்
பொன்னனுபொருசிராரத்தமெனப்புகல்வதுவும்
அன்னதின்றமையாமையுமாருனக்கறைந்தார். (௧௯)

ஆத்திகம்புரிந்தாலலதையநம்மரபுங்
கோத்திரத்தொடுசிறக்குமென்றின்னுரைகூறிச
சோத்தமென்றுசுத்தையுமவற்குரைத்தனனுரைக்கு
மாத்திரத்தினவ்வந்தணனுரைப்பனுன்மறித்தும். (௨௦)

பேதையாநினக்காத்திகமென்பதும்பெரிது
மாதரத்தினோடாற்றிடலென்பதுமன்ன
தோதிடின்விசேடத்ததுமென்றுனக்கியாரே
யோதினரிஃதியானறியேனெனவுருத்தான். (௨௧)

கேட்டநங்கையுநீசினமெய்தல்கேடில்லா
வாட்டமேயிலாமெய்த்தவத்தந்தைதன்மனைவாய்
நாட்டமூன்றுடைநம்பனேர்நற்றவன்கூறக்
கேட்டுளேன்மறந்திரெனக்கிளத்தினேனென்றாள். (௨௨)

வேறு.

ஆத்திகத்தையுளூற்றிடுதற்கிரவாதுத்தமவிடயத்தரும்பொனீட்டிற்
தீர்த்தயாத்திரைப்பலனைப்பிதிர்க்களளிப்பாரென்னச்செப்பும்வேத
மாத்திகத்திலவுபாசனந்தனைமுற்றிடப்புரிந்தாரடைவரென்றே
ஏத்தருஞ்சீர்க்கயையினிடத்தாற்றுமாத்திகப்பயனையினிதினம்மா. (௨௩)

பத்தியொடுமனைவியொடுமவுபாசனந்தன்னைப்பரிவினூற்றி
அத்தழலாற்பிதிராயுத்தேசித்திட்டவிசமைத்திட்டவன்றன்மோன
முற்றிருப்புக்கலன்கலவாதொருதனிழலெய்தன்னமுகந்துபாகங்
கைத்தலத்தாற்புரியினந்தப்பிதிர்க்களுக்கிங்கேகழிபேருவகையுண்டாம் (௨௪)

தக்கணையிலாதுநனிவிளைந்துமொருவன்காலந்தணந்துஞ்செய்தால்
இக்கடனீர்வைப்பதனிற்கொடியவெனக்கரைகிற்பரீண்டுக்காலை
நற்கடத்தினிலைக்கறியென்றின்னனவாஞ்சாத்துவிதநலந்தானெய்து
மிக்கபொருளானுலோவங்கருதாதுஞற்றின்வியன்பயனைநல்கும். (உரு)

பிதிரர்தினந்தருப்பையினொடெண்ணின்னதம்மகத்திற்பிதிரர்கண்டாற்
சதிர்பெறுமற்றவருள்ளங்களிசிறப்பர்துரோணமத்தனையெண்ணில்லங்
சதுவிடத்தானிறைத்திட்டுத்தருப்பைதனைமேற்பரப்பிக்கனிவினூற்றல்
விதியென்னமறைபகர்ந்ததென்றறிதிசலையாய்ந்தமேதக்கோயே. (உசு)

சூசியொடுபத்திமையின்றிப்புரியினஃதசுரருக்காந்துணைவிற்சென்று
கசிவினொடுமிழிந்தான்பாற்றூனமேலாதுபிறர்கையேற்காது
பசிபவேயனதோளார்ப்புணராதுகலதியர்சம்பரிசமெய்தா
திசைவினிற்கூதாடாதுபிறரன்னமயிலாதிங்கிருப்பதல்லால். (உஎ)

இழிசனரோடுரையாடாதெண்ணெயிட்டுக்கொள்ளாதிங்கிருகண்டுஞ்சல்
பழியகலும்பசற்போதுகொள்ளாதுகட்டிலிற்கண்படைகொளாது
விழைவின்வேண்டியநுகராதுணிரவில்விழையாதுவிழைந்திரண்டு
பொழுதருந்தாதுரையாடாதொருபாழ்த்தமனைவாவிப்புனலாடாது. (உஅ)

நறுங்கலவைபுனையாதுபூப்பானமாதரொடுநயந்துபேசா
தறங்குலவுமனத்தோயிங்குரைச்சுநராத்திகப்பயனையடைவர்கண்டாய்
சறங்குபுகழ்கிருதத்தினிரண்டயனந்திரோதைவயிற்கருதினொன்று
பிறங்குதுவாபரமும்மைமதிமதியொன்றிக்கலியிற்பெருநீர்வைப்பில். (உகூ)

விரதமனுட்டித்திடவேவேண்டுமெனவாகமங்கள்விளம்பாநிற்கும்
பொருவருநற்றேகதிடமுள்ளவனுயதுநெருங்கப்பொருந்தின்மேற்கொண்
டுரைகெழுமாத்திகமுன்னுளந்தணருக்கறுசுவையூணுதவவேண்டும்
பெருமவாத்திகநாளின்வைகறையினதிப்புனலிற்பெட்பினூடி. (கூ0)

கடன்கழித்திட்டவுபாசனஞ்செய்தவ்வனலில்லாள்கரத்தினல்கி
விடல்கருமமனையில்லான்கருக்கொண்டவில்லுடையான்வேறுவேதத்
திடனுடையசாகையான்மறையோதானவுபாசனஞ்செய்யாதான்
கடல்வளைப்பிற்பிறர்பழிக்கத்தக்கான்றன்னிலைகடந்தபிரமசாரி. (கூக)

என்றின்னோரொழித்தொழிந்தவுத்தமவந்தணர்தம்மையிசைந்துகூவி
நன்றெமதில்வயினுத்திகக்குறுதிரெனவடைகாய்நயந்தளித்துத்
துன்றுதயிலம்பிண்ணாக்குடனுதவிநீராட்டித்தொடங்கவேண்டும்
இன்றந்தமுறைகருதான்பிதிர்க்களவன்றனைச்சினப்பரென்றுமாதோ. (கூஉ)

கருத்தாவும்வெள்ளியென்விழியிழப்பன்வயங்குமறைக்கலைவலோராம்
வரித்தாருமபிசிரவணப்பெயரின்மனுவதனைமகிழ்விற்கேட்டுப்
பெருத்தாதரத்தொடன்னம்புசியாரேலஃதசுரப்பெயர்த்தாங்கண்டாய்
மருத்தாரோயென்றின்னவப்பெரியோனெடுத்துரைத்தான்மரபினம்மா. ()

நீராடினுயல்லையசற்குரியபண்டங்கணேடினுயன்
ருராய்ந்துமறையோரைவழித்தனையுமன்றுபகலாயிற்றம்மா
தேராய்கொலாத்திகழுந்தவறுறுகின்றதுசெய்தேநீரவேண்டும்
ஊராஞேர்கையேற்பானுடங்கியைந்துசெய்வனெனினுனக்கிங்கென்னே. ( )

மறைமொழிந்தநீர்மையினுலிவ்வாறுசெய்யவழியற்ருனுயிற்
கறைதபுநல்விரதமனுட்டித்தவன்கான்போர்த்தழலேகணித்தநென்றிம்
முறையியம்பியுத்தமாதமமத்திமஞ்செய்யான்முந்நீர்வைப்பின்
அறையுமிரவுரமுன்ஞுநிரயமெய்தித்துயரமடைவனன்றே. (௩௫)

அன்னணமோர்மனுவந்தரந்துயரமாண்டெய்தியதுதீர்வின்றி
மண்ணுலகிஞேரியாய்த்தோன்றிப்பல்பிணமாந்திமறித்துமன்ஞன்
தன்னமாமட்டையாப்பிறப்பெடுத்துமிலேச்சனெனத்தான்பிறந்து [ருள்.
கொன்னவில்வேற்கிராதனெனத்தோன்றியழிவானிந்துகுறித்தாற்றென்

வேறு.

இன்னவாறவற்கியம்பியவின்னுரைகேட்டும்
அன்னமாமதியிலியந்தத்திருவினைநோக்கி
என்னடீயெனக்கோதினையெனச்சினந்தனையான்
றன்னமேனுமோராதிதுசாற்றுவான்றொடங்கும். (௩௭)

எந்தையாத்திகக்கின்னுமைம்மதியுளவெனக்கு
முந்தையாரணமுணர்ந்தவர்போன்மொழிகின்ருய்
சிந்தைநாணிலாய்தேசிகன்பதிவிதாவினையோர்க்
கந்தராசியமுரைக்குநர்நிரையகடைவார். (௩௮)

என்றநன்மொழியுணர்கிலாதேமக்கியவுணுரைத்தாய்
நன்றுநன்றெனக்கண்சிவந்தடித்துநானறியா
தொன்றுமின்றெனநீரின்மூழ்காதுறுகடன்மை
அன்றுதான்புரியாதருந்தினன்பழஞ்சோறு. (௩௯)

உண்டபின்னடைகாய்கையிற்கொண்டுசென்றுற்ருன்
கண்டுபோன்மொழிப்பரத்தையர்சேரியைக்கனிவான்
மண்டுபேரன்பிற்சுத்தையுமவன்வரம்பில்லாப்
பண்டைநீர்மையையறிந்துதான்பரிபவமடைந்தாள். (௪௦)

பரத்தைசேரியையெய்தியபாதகப்பனவன்
தரத்தினீடியசுத்தைசாரகந்தனையுள்ளக்
கருத்திலன்பிலான்சில்பகல்கழிந்தடைந்தனனுல்
அருத்தியோடவளவன்முகநோக்கியாங்கறையும். (௪௧)

மதியொரைந்துளவாத்திகக்கெனவழுத்தினையால்
அதுவரும்பொழுதென்றதற்காவனபொருள்கள்

மதிவலாயொல்லுங்கைகையுசவுவனெனவோதக்
கதுமெனச்கொடும்பாதகன்கட்டுரைத்திடுமால். (௪௨)

ஒன்றைநாடிவேற்றூர்வயினுற்றனனொருநாள்
நன்றவாத்திசெய்திடாயந்தனற்றினன்மற்
றின்றொராறுநாளாயினவேத்திபுரிவிலனீ
என்றுபாத்திகமாத்திசெனுமொழியிசைத்தே. (௪௩)

என்னதாயுனைக்கெடுத்தனைபோலுமெற்கூறி
தன்னைநாடினையெனவவட்டலைவயிற்புடைப்ப
அன்னமாதுயிர்துறந்தனளப்பிசைபாத
முன்னிரேயினன்முற்புரிபுண்ணியப்பயனால். (௪௪)

அன்னபாதகனவட்குரிமைக்கடனாற்றித்
தன்னையக்கொடும்பாதகம்பற்றியீர்த்தலைப்பப்
பின்னுந்தன்மனையவள்வயிற்கிடப்பனயிரவும்
மன்னுமங்கணர்தமைக்குறிற்றவன்மதிகெட்டே. (௪௫)

ஊர்கள்பல்லபோந்துன்மத்தனாகியோரிடத்திற்
சார்கிலாதவன்முற்புரிபுண்ணியச்சார்பாற்
சேருநல்வினையிருந்திடிற்சேர்வனசோரா
பார்பழிச்சுறுமுல்லைமாநகர்படர்ந்தனனால். (௪௬)

காசுலாமுலைக்கொடியிடைகாதலனெங்கள்
மாசிலாமணிக்கன்பர்தாமரபினுமற்றும்
பூசனைத்திறம்விறப்பொடுபொருக்கெனக்கண்டான்
பேசுமைம்பெருப்பாதகக்குழிசியாம்பெரியோன். (௪௭)

அற்றைநாளெலாமாங்கவன்றிரிதந்தேயருக்கன்
ஒற்றையாழியந்தேர்குடபாலுருக்கரப்ப
மற்றைவேதனுமாசிலாமணிப்பிரான்கோயில்
உற்றனன்முன்னைவினையுவன்பிடர்பிடித்துந்த. (௪௮)

வேதநீற்றினைப்புனையுமெய்யன்பர்கள்குழூஉக்கொண்
டாதரத்தினோடடைந்தவவ்வாலயக்கோர்சார்
மாதராஞ்சொலார்மயிலனையார்தமையணுகி
ஆதனல்லிசைபாடியேமுழவயர்த்தனனால். (௪௯)

அன்னமாதருளொருத்தியக்கானத்தின்மயங்கி
இன்னபாதகன்வலைவயினகப்படவினையான்
றுன்னிவந்தமைமற்றதுவாகலினுவந்தக்
கன்னிதன்படிவத்தின்மேற்காதல்கொண்டயர்ந்தான். (௫௦)

அன்றிராமுழுதுந்துயிலாதந்தக்கொடியோன்
என்றுதான்குணதிசைவயினெய்திடவெள்ளிக்
குன்றமேவியகுணநிதிதனையடைந்தெவருஞ்
சென்றுதாழ்ந்திடத்தாளுமத்திரணடிச்சார்ந்தான். (ருக)

ஊணிலாதுயிர்சோர்தலானொருவந்தந்துயிலான்
நாணிலானவணிருத்தலானள்ளிடையாருங்
காணவாவிதான்றுறந்தனன்கான்மிதிப்புண்டங்
கேணியார்விழியாரிடைமனந்தந்தவினையான். (ருஉ)

வேறு.

அந்தாரணியினவன்மாண்டவப்பொழுதே
வந்தார்கொடியமறலியவன்வன்றூதர்
தந்தானைகொண்டெதிர்ந்தார்தழலிற்கொடியோனை
முந்தேகுத்தும்மெறியுமென்றேமொழிந்தாரால். (ருங)

என்றுநெருங்கவெனையாள்கணத்தலைவர்
அன்றினர்சோவெறியுமம்மானருண்மேவும்
நன்றுதவுநந்திபிரானல்லருளாற்சென்றணைந்திட்
டன்றவர்தம்மையடைவேவெதிர்த்தாரால். (ருச)

வந்தெதிர்ந்தபாதகனைமானமிசையேற்ற
அந்தநமன்றூதுவருமையவிவன்றன்போலுந்
சிந்தைவருந்தச்செயற்கரியவெம்பாவம்
முந்தப்புரிந்தாரிலையாலெனமொழிவார். (ருரு)

பிறந்ததுதொட்டிந்தப்பெரும்பாதகன்புரிந்த
மறந்தனக்குநேராவசுந்தரையிலில்லையுயிர்
துறந்தவிவனைத்தொன்னிரபத்தாழ்த்த
மறந்துகொடுசேறல்மாண்போவெனக்கரைந்தார். (ருசா)

அந்தமொழிகேட்டருஞ்சாரதருரைப்பார்
இந்தநெடும்பதியினெம்மானெழினிசியின்
முந்தவுணவயிலான்முகிழாவிருவிழியும்
வந்துயிர்நீத்தானதனான்மாண்டவுல்கெய்தினனால். (ருஎ)

இன்னபொழுதத்திருங்காரியமியைந்தே
முன்னியுணற்றிமுகிழாதிருகண்ணும்
பன்னுவரேனுமம்பரமபதிக்கணித்தாய்த்
துன்னுகிற்பாரென்றுசொல்லுஞ்சிவாகமமே. (ருஅ)

இப்பதியினெந்தைக்குரியவெழினிசியில்
ஒப்பொருவரில்லாதவுத்தமனாநாடியோன்

மெய்ப்பெருமையென்னான்வியந்துரைக்குமாறன்றால்
அற்புதனைத்தேருமருட்கடலன்னீரென்றே. (௫௯)

மாதரசிபாகத்தெம்மானைத்தாழாதுவிலை
மாதுபெரூருட்டர்தவான்பதம்பெற்றானெனினக்
கோதில்கருணைக்குணக்கடலையுள்ளபடி
யோதுகிற்போர்தஞ்சீருரைக்குந்தரமேயோ. (௬௦)

வேறு.

பாவமித்திரனெனப்படும்பரிசினானுமத்
தேவமித்திரன்வீடுபேறெய்தியதிறமீ
தாவலானமரேசனையன்பினானன்று
மேவுசம்புதாசன்கதியடைந்தமைவிரிப்பாம். (௬௧)

தேவமித்திரன் கதிபெறுபடல முற்றிற்று.

---

# சம்புதாசன் கதியடைந்த படலம்.

சிவதருமந்தனைக்குயிற்றத்தேமகன்றுகையேற்கு
நவமலிசிந்தையருமடிவைப்பினுக்குநானிலமேல்
எவமகற்றும்பரிமேதப்பயனெய்துவாரென்னப்
பவனுரையாஞ்சிவாகமங்கள்பரிவினுரைத்திடுமன்றே. (௧)

அத்தருமந்தனையன்பினாற்றுநர்தம்பெருவளனும்
அத்தருமக்கிரும்பொருளைப்பயன்படிப்பார்தஞ்சீரும்
இத்துணையென்றெம்மனோரெடுத்துரைக்கும்பரிசன்றென்
றத்தனுமாபதிசொன்னவாகமங்கட்டுரைத்திடுமால். (௨)

சொன்னதருமந்தனக்குத்துணையாகவிருநிதியம்
மன்னியதொன்முதன்மகிழுமாண்பினியற்றிடினென்று
மன்னதொன்முதல்வித்தினங்குரிக்குமென்றெடுத்துப்
பன்னுமருமறையெனினிப்படியென்னப்படுவதோ. (௩)

ஆக்கைவருத்தியுமன்னவறங்குயிற்றும்பரிசுடையார்
நீக்கமிலாவானந்தநிருத்தநிலவும்பதத்தார்
தூக்கியசேவடியெய்தித்துயரமொழிந்திடுவரென
மாக்கனிவினொடுத்துரைக்குமாதேவனாகமமே. (௪)

உள்ளவாறீத்தருமமுஞற்றிடுமெய்ப்பரிசுடையார்
கள்ளமேயலகைமுன்னுங்கடும்பரிசமுறலாகார்

அள்ளிவிடமுண்டபிரானடிமலர்க்கேசார்பாவார்
விள்ளாரவமுன்னுயவேலைதயுருரெனுமறையே. (௫)

நாம்புகழுமித்தருமநலிவுறச்செய்வாரென்றுந்
தாம்படிமேற்பலதுயரந்தணவாமேயுற்றிறுதி
யாம்பொழுதிரவுரவமுன்னருநிரயம்புகுவரென
எம்பலினொடெடுத்துரைக்குமிறைவனருளியமறையே. (௬)

இன்னவாறொருசம்புவிணையடிக்காட்புரிநீர்மை
தன்னமிலாதுளுற்றலினித்தரையின்மேலவன்றனையே
முன்னியெவருஞ்சம்புதாசனெனமொழிந்திடுவார்
அன்னவனுமாபதிதாளடைந்தமைசாற்றுதுமாலோ. (௭)

வேறு.

கானம்வரம்பிலாதுடைத்தாய்க்கற்றோர்சாலச்செறிவதுமாய்
மானம்வரம்பிலாப்பரசுமலர்க்கைராமன்வாழ்நாடிங்
கானவரம்பிலாமதமாவணிகளணிகளாக்குழும
வானவரம்பன்காத்தோம்பும்வளநாடென்றுமலைநாடு. (௮)

அன்னநாட்டின்மலைச்சிகரத்தருவியனைத்துந்திரண்டெழுந்து
பொன்னுமணியுநெடுந்திரைக்கைபொருந்தியென்றுமிழிந்துவரும்
நன்னலஞ்சான்றனைத்துவினைநாடியகற்றுநதிப்பாங்கர்
மன்னும்பதியினொருநான்குமறையோர்தவத்தாற்றோன்றியோன். (௯)

வேறு.

அரியமாமறைகூறிடுமந்தமில்பிரம
சரியநன்னிலைமேவினோன்பின்னுகன்றுள்கள்
கருதிடும்பெருஞ்சிறந்தையானவன்கழனுடுந்
திரிபின்மெய்த்தவர்சார்பினுற்செறிந்திடுநலத்தான். (௧௦)

உத்தமச்சிவபுண்ணியமுதிர்ச்சியானுவனக்
கத்தனேதியசிவாகமங்கடைப்பிடித்தொழுகி
நித்தனின்மலமணியையுநீற்றையும்புனையும்
வித்தகச்சிவவேதியர்தமைவிழைந்தடைந்தே. (௧௧)

இறைவனருள்பெறுநெறியாதெனவினையோர்
கறைவிராவியகண்டனார்கண்டவாகமத்தின்
முறையினுற்செயுந்தீக்கையேமுமலமோசனஞ்செய்
தறைவனரடிப்பத்திமையளிக்குமென்றறைந்தார், (௧௨)

அன்னமாமொழிகேட்டவனவரடியிறைஞ்சிப்
பொன்னவாஞ்சடைப்புண்ணியன்புண்டரீகத்தாள்

மன்னுமன்பொடுவழிபடுநெறியுணர்க்கெனனும்
முன்னியாங்கீவரன்பினன்மொழிதன்மேயினரால். (க௩)

ஆகமத்தினிற்றீக்கையையடைந்தரன்கழற்கண்
பாகநின்றவன்றிருவெழுத்தஞ்சுமுச்சரிப்பார்
ஏகநாயகனேலவார்குழலியாமிறைவி
பாகநாயகன்பதநிழலெய்துவர்பாங்கால். (க௪)

பின்னுங்கூறுதுமெனைத்துளபீடுசான்மறையுங்
கன்னிபாகனேயிறையெனக்கட்டுரைத்திடுமால்
அன்னதன்றிமற்றயலவர்தம்மையுமறைதல்
இந்நிலத்துபசாரமென்றிசைப்பராலின்னும். (க௫)

மறையினந்தநால்வருக்கிறைவகுப்பதுசொல்லா
னறைவதன்றுகைக்காட்டுமற்றன்னதன்பயனே
இறைவனோடொன்றலிருவிரன்முடக்கியசெய்கை
முறையின்மும்மலமோசனமூவிரல்விலக்கே. (க௬)

டமருகக்கரஞ்சிருட்டிமற்றபயந்தான்றிதியென்
றமையுமோதுசங்காரமிங்காமழுக்கரமே
சமைதிரோபவமூன்றியதாளனுக்கிரகம்
அமலன்குஞ்சிதபதமவனவயவத்தொழிலே. (க௭)

மாயனுருந்திமலரவன்வருதலுமலரோன்
ஏயதோமுகந்தனிலவன்வருதலுமினையோர்
ஆயமாமறைகூறியவரும்பரமன்றால்
நீயுணர்ந்திடுமற்றதற்குரைப்பதெந்நியதி. (க௮)

வேறு.

போதாசனன்கரியோன்புரந்தரனாதியர்தமக்கு
மாதோர்பாகன்றானேபரம்பரனுமறையனைத்து
மோதாநிற்பதுகருதினுமவனையெனைத்துளவுயிரு
மாதேவாவென்றுரைக்குமனுவொன்றேசான்றுமால். (க௯)

தாரணியிலாருயிர்களுக்கந்தனைப்படைத்தன்மிகக்காத்தல்
பரிவினொடித்திடன்மறைத்தலருளலெனப்படுமைந்து
கருமமுஞற்றிடுமவர்க்குக்களைகணாயவனையந்தம்
புரிதரலானரனென்னப்புராந்தகனைமறைபேசும். (௨0)

மும்மறையினடுவொன்றுமூவிரண்டொடொன்றுகுஞ்
செம்மையவிகாண்டத்துத்திகழ்நடுக்காண்டத்தேழு
மெய்ம்மைதிகழ்சங்கிதையின்மேவுநடுவினிலொன்று
மெய்ம்மையுமந்தாதியொழிந்திலகுமவன்றிருநாமம். (௨க)

உலகமெலாம்விரியுமுதற்காலத்தினெவனுள்ளான்
பலவகையபுவனநாயகரையெவன்படைத்துடையான்
நிலவுலகமீளவும்வந்தொடுங்குங்காலெவனுள்ளான்
தலைவனவனெனமறைகடணப்பிலாதெடுத்தோதும். (௨௨)

உறங்குவதுபோலுமொருசாக்காடிங்குலகினர்தா
முறங்கிவிழிப்பதுபோலும்பிறப்பென்னுமுறைக்கிலக்காய்
நறுந்துளவத்தெரியல்புனைநாரணனும்பிறப்புளனே
லறந்தனையேகளாயுமறையவனையுமேயிறையெனுமோ. (௨௩)

வேறு.

ஈசனுரைத்தவாகமங்களெடுத்தேதகூறும்பொருண்மூன்றும்
பேசிற்பதியேபசுவோடுபாசமென்பர்பெருமறைசொல்
தேசுமலியும்பதியையான்மாச்செறியுமுத்தித்திறம்பலவால்
ஈசற்றறிதியென்றருளாணிகழ்த்தப்புக்கார்நெறிமுறையான். (௨௪)

கந்தங்கெடுகைகுணங்கெடுகைகன்மங்கெடுகைமலங்கெடுகை
நந்துந்தனுமுத்தியெனழியாதிருக்கைமாதர்நலமென்றுந்
தந்தங்கரணம்பதிக்கரணமாகையுயிர்தானழிகையஃ
தந்தமிலதாஞானமுறலரும்பாடாணம்போன்றிருத்தல். (௨௫)

என்னவுரைக்குமிவையெனைத்துமியம்பிற்பழிசேர்முத்தியெனச்
சொன்னவிறைநூலினியனுக்கடுகள்சேர்மும்மலநீங்கி
அன்னவருளோடணைந்திறைவனடிநீழலிற்சென்றணைந்துநிற்கும்
நன்னர்முத்தியேமுத்திநலனூர்முத்தித்திறனிதுவால். (௨௬)

தூரவனோக்காற்பரிசத்தாற்கூறும்வாக்காற்பாவனையால்
விரவுநூலானியோகத்தான்வீறுசெறியவுத்திரியதனாற்
கரவுமலிமும்மலநீக்குங்கருதாருயிக்கடைவினி
பொருவிலிரண்டுதிறப்படுமால்புகழ்சாலவுத்திரியென்பதுவே. (௨௭)

ஞானவதியேநற்கிரியாவதியோடென்னநம்பனுரை
யானவரியவாகமங்களருளிச்செயுமாலரன்கழற்கே
மேனவன்பிங்குடையாய்நீமேலாந்தீக்கைதனையெய்தித்
தானமதமாவுரியான்றன்சார்பேயடைகவென்றனரால். (௨௮)

அந்தத்தீக்கைமுத்திறமாவாகமங்கட்டுரைக்குமவை
சந்தச்சமயம்விசேடமொடுசதிர்கொணிருவாணமதென்ன
முந்தப்புகலுமவையனைத்துமுறையேயெய்தினலலது
சிந்தப்புரமூன்றெரித்தானைச்சேரலரிதாமென்பாரால். (௨௯)

நாதமார்க்கத்தனக்கென்றுஞ்சமயந்தகுமாலெஞ்ஞான்று
மேதமேயில்சகமார்க்கம்புத்திரமார்க்கமென்பவைகட்

கோதும்விசேடமென்றுரைப்பருலப்பில்சன்மார்க்கந்தனக்குப்
போதகிருவாணமதென்னப்புராரிமறையும்புகன்றிடுமால். (௯0)

வேறு.

பரமதப்பொருள்பாங்கினினுணர்ந்தபின்சுபக்க
மரபினோர்ந்துவைதிகசைவமாண்பினிற்றேர்ந்து
பரமனாரடிப்பதுமமேநாடியபனவோன்
பரிசினைத்தெனப்பகரவும்படுவதோபார்மேல். (௯௧)

என்றுணர்ந்தவனெம்பிரானியம்புமாகமத்தி
னொன்றுமெய்மைசாரிக்கைகையுற்றிறைசரித
நன்றுகேட்டுளங்கசிந்துநம்பானமர்தலக்கே
சென்றுதான்புதுக்குஞ்செயன்மேற்கொடுதிரிந்தான் (௯௨)

சினகரந்திருமதின்முதலாயினசேலூர்
அனகனுக்கதியாதரத்தொடும்புரிகிற்போர்
பனசபூடணனுருப்பெறுவாரெனிற்பாரிற்
கனிவினாற்புதுக்குநர்பலன்கழறவும்படுமோ. (௯௩)

மனைகடோறும்புக்கிருகையேற்றவர்தருமாழை
தினையனைத்துந்தன்னுடல்விருத்தியிற்செலுத்தாது
மனமுவந்தவர்தரும்பொருண்மணிமிடற்றிறையாம்
அனகனாலயக்கேகொடுத்துதவியாங்குழல்வான். (௯௪)

தன்முயற்சியான்வரும்பொருளனைத்தையுந்தாழா
தன்பினாலயத்தொழில்செய்வார்க்களித்தமரேசன்
மன்னுமாலயமதில்சுவர்கோபுரம்பிறவும்
அன்னவேதியன்புதுக்குவான்றிரிந்தனனம்மா. (௯௫)

இப்பணிக்கணேநின்றிடுமெழிற்சம்புதாச
விப்பிரப்பிரான்விழைந்தொருதினந்தனின்மேவார்
முப்புரந்தழற்படுத்தவன்மூதெயிற்காஞ்சி
வைப்பையெய்தியாண்டங்ஙனம்புரிந்தனன்மகிழ்வான். (௯௬)

கம்பமேவியகண்ணுதற்பணிகனிந்துஞற்ற
நம்பனாரடிக்கன்பராநயத்தகுசில்லோர்
உம்பரோதுசீர்முல்லையின்சிறப்பெடுத்தோத
அன்புதன்பிடர்பிடித்துந்தவாங்கணைந்தனனால். (௯௭)

அணைந்தவந்தணன்மங்கலவாவிநீராடி
அணிந்துநற்சிவசாதனமங்கணன்கோயில்
பணிந்துமும்முறைவலம்வந்துபரிவொடும்போந்து
குணங்கடந்தவக்கோமணியுடன்கொடியிடையை (௯௮)

வலம்வந்தெம்மையாளுடையவள்ளலையுமைதனைமெய்
கலந்தவன்பின்னருச்சனைமுதலியகடன்கள்
மலந்தெறத்திருத்தொண்டுசெய்மாண்புடைமறையோன்
புலங்கசிந்தவனாற்றியேதோத்திரம்புரிவான். (௩௯)

வேறு.

கத்தனைஞானக்கனியைக்கறைமிடற்றுச்
சுத்தனைமுக்கட்சுடர்க்கொழுந்தைத்தொன்மறைசொ
லத்தனையெங்களழகனையனாதிமல
முத்தன்சீர்மொழியாதமொழியென்னமொழியே
முதல்வன்சீர்மொழியாதமொழியென்னமொழியே. (௪௰)

வம்பமருங்கூந்தன்மடவாளொருபாகத்
தம்பவளமேனியழகனைத்தென்காஞ்சிநகர்க்
கம்பனைமுக்கட்கருமணியைமுல்லைவன
நம்பனையேவாழ்த்தாதநாவென்னநாவே
நயந்தவன்சீர்வாழ்த்தாதநாவென்னநாவே. (௪௧)

கம்பமதமாகளிற்றுரிவைப்போர்வையனை
உம்பர்பிரானையுமையாளொருபாகத்
தெம்பெருமானையெழிலார்வனமுல்லைச்
செம்பயனைக்கேளாதசெவியென்னசெவியே
சிற்பரன்சீர்கேளாதசெவியென்னசெவியே. (௪௨)

படநாகணிவானைப்பாண்டரங்கத்தானைத்
திடநான்மறைசொல்சிவனையணியாரூர்
உடையானையென்னையுடையானைமுல்லைவனக்
கடவுளைச்சென்றெய்தாதகாலென்னகாலே
கருதியவன்கோயில்புகாக்காலென்னகாலே. (௪௩)

வேறு.

அரிதினேத்தியாங்கின்னணமறையவரகத்திற்
பரிவினோடுகையேற்றுண்டுபரம்பரன்றளியை
அருமையாகவேபுதுக்கவுமார்வமீக்கொண்டு
திரிதந்தான்பலதேத்தவன்செம்பொனைநாடி. (௪௪)

ஆலயத்திருக்கோபுரமதின்முதலாய
சாலவேபுதுக்குந்தொழிறன்னைமேற்கொண்டு

மூலகாரணன் முழுமுதன் முக்கணெம்பெருமான்
காலகாலன்றொடர்பூதவணமர்ந்தனன்கனிவான் (சரு)

இன்னவாறவனெழுகுநாளிவற்கெதிர்மறையா
மன்னுமாறொருமறையவன்மாதர்தங்காதல்
துன்னியாங்கிறைதுணைக்கழலடைந்தனனென்ன
அன்னவன்கதையுரைக்கெனச்சூதனுங்கறையும். (சகூ)

சம்புதாசன் கதியடைந்தபடல முற்றிற்று.

---

# சித்திரகன்மன் கதியடைந்த படலம்.

அம்லமபாடியவணைந்திடவனையாட்கலப்பில்சீர்க்கழலளிப்பதாய்ப்பின்னோர்
தம்மதாருயிரோர்வணிகனுக்காத்தந்ததாயன்றுதாண்டவங்காளி
நம்மையாளுடையிறைவனார்நடிக்கநயந்துகண்டதாய்நலக்கநின்றோங்குஞ்
செம்மைசேர்புகழ்மருவியநின்றுதிகழுநாடெனுந்தொண்டைநன்னாட்டில். (க)

அம்மையப்பனையமரர்பிரானையணங்கொர்பாகனையருந்தவத்திராமன்
மும்மைஞாலமுந்தொழத்திருவிழவுமுன்னராற்றுமூதூரெனயாண்டும்
எம்மையாளுடையிறைவனைமயிலாயிறைவிபூசனையியற்றுமூரென்று
செம்மையாலுலகெங்கணும்புகழச்சிறந்துமிக்கதுமயிலைமாநகரம். (உ)

அன்னமாநகரந்தனிலொருநாலாரணம்பயிலந்தணர்மரபில்
வந்தவன்பெயர்சித்திரகன்மனென்றெஞ்ஞான்றினிதுரைக்குமாஞாலம்
பொன்னெனத்தகுமம்மரபுதித்தும்புனிதமில்லவர்போலவன்புவிமேல்
வன்னெடுந்தொழில்புரிபவனுகிவஞ்சநெஞ்சனுயவண்சரித்திருந்தான். (௩).

இனையன்வேத்தியல்பொதுவியலென்னுமிருதிறத்துநாட்டியநன்னூல்பயின்று
கனியுமாமொழிக்காரிகையார்பாற்காதலானவர்பழகிடவிசைநூல்
இனிதுதான்பயில்வித்திடுவோனென்றியாருமேசொலவிருந்தனனிவனே
அனகனெம்பிரானடிமலர்பரசாதவலனுய்த்திரிதரும்பரிசுடையான். (ச)

வேணிமேலொருவேணிவைத்தோங்கும்விமலனார்புகழ்மேவிடாதென்றும்
நாணிலாதுதன்பால்வருவாரைநலியுமாசெயுநாரியரில்லங்
காணியேயெனமருவியங்கவற்குக்காற்றொண்டேசெயுங்கருத்தினனோர்நாள்
மாணிபால்வருங்கூற்றினைக்குமைக்கும்வள்ளலாரருண்முன்வழிகாட்ட. (ரு)

மூன்னைபூழிவன்றனைப்பிடித்துந்தமுல்லைவாயிலைமுன்னணைந்திறைவன்
அன்னையாங்கொர்டியிடையினொடென்றுமமருமாத்தலம்யாண்டுளதென்றே

இன்னலேபுரிதருங்கொடியோனும்யாரையுந்தனிவினவலிலாது
வன்னெடும்பயோதரம்விலைபகருமாதரார்மறுகினைமருவினனால். (சு)

மறுகிலெய்தியாங்கோர்மடமானைவலிதிற்கண்டவள்வசந்தனிலொழுகி
முறுகுகாதலாற்கைத்தெலாமவட்கேமுன்னிநல்கியோன்மொழிதருகின்றான்
இறுகிடைக்குடமுலைச்சியர்சமயமெண்ணலேசமயம்மவரில்லங்
குறுகலேவிசேடம்மவர்தம்மைக்கூடலேநிருவாணமென்பதுவே. (எ)

அவருந்தானுமொன்றுவதேயாகுமவலந்தன்னைநீத்திடுமபிடேகஞ்
சிவனுரைத்திடுமாகமமுறைக்குஞ்செய்தியன்றெனத்தெருமராநின்று
பவர்வணச்சடையரன்பதக்கன்புபயக்குநெஞ்சுடைப்பாவைதனிலத்தே
கவர்மனச்சிறியானுமுண்டுறங்கிக்காலமங்கலகில்லனகழித்தான். (அ)

அன்னமாமடமாதுவெம்பழிபாவத்தினுக்கஞ்சியாங்குநிற்பவளெங்
கன்னிபாகனுக்கடிமையாயிருந்துங்கருணையேயின்றிக்கைத்தின்மேல்விழைவு
மன்னிவீணரையணைந்துநாள்கழிக்கின்வஞ்சினக்கொடுங்கூற்றுவந்தணைந்தால்
என்னையான்புரிகேனவன்றன்னொடிடருறுதிவண்வாழ்வனோவறியேன். (கூ)

என்றுநாடியசிந்தையாளச்சமெய்திநாடொறுமெம்பிரான்றலக்கே [மன்
சென்றுதொண்டின்மேனின்றனளவள்காற்றொண்டின்கீழ்நின்றசித்திரகன்
துன்றுசூசியுமிழையுமேயென்னத்தொடர்ந்துகாதலிற்றன்றொடக்குண்டான்
அன்றொர்ஞான்றவடன்னொடுமமலனைமருமாத்தலமண்மிவந்தடைந்தான். ()

வந்துகோயிலுட்புகுந்தவளோடுமைத்துமாமணிகண்டனைமகிழ்வாற்
சிந்தைசெய்குநருள்ளமேமருவுந்தெய்வநாதனைச்சிறுகிடைநுதற்கீற்
றந்தில்வானுதலம்பிகைதன்னையடைவிற்கண்டவன்றன்னையுமறந்த [த்தால்.
சிந்தைமேவியேயிருகரங்குவித்துச்சென்னிமேல்வைத்தான்செய்தபுண்ணிய

அங்கவன்றிருப்பணியினைத்தொடங்குமன்பனுஞ்சம்புதாசன்சேர்த்துள்ள
வெங்கொடுங்கற்கள்சந்நிதிமருங்கேமிகவிறைப்புண்டுகிடந்தமைநோக்கித்
தங்குகாதலினவளிருகாலைத்தகவருத்துமென்றகற்குளைந்து
செங்கையாலெடுத்தங்கொருமருங்குசெறித்தனன்சிவநெறியறியாதான். ()

இன்னவாறந்தப்பதிதனத்தலத்தினென்றும்வாழ்க்கையேமேவியபடியாற்
கன்னிபாகனைக்கண்டதோர்பரிசாற்கைகளஞ்சலிகூப்பியமுறையால்
வன்னெடுங்கற்கள்சேர்த்திடுமாற்றால்வஞ்சநெஞ்சனேயாயினுமவனே
என்னையாளுடையிறையவன்வதியுமிருஞ்சிலம்பினையெய்தினனம்மா. (கரு)

வேதநாயகன்றிருப்பணிக்குரியவெய்யகற்களைச்சிரத்தையொன்றின்றிப்
போதவாங்கிருத்தியபுலைமறையோன்புனிதன்மேவியபொங்குசீர்க்கயிலை
நீதியானடைந்தனனெனினிமலனிலவுமாலயம்புதுக்கியநின்ற
கோதில்வேதியன்சம்புதாசன்முன்குறித்துறும்பதங்கூறுதலரிதே. (கச)

வேறு.

உடம்பாட்டினெதிர்மறையினுமாபதிக்கேபணிபுரியுங்
கடம்பாட்டைமேற்கொண்டார்கதியடைந்தபரிசுரைத்தேம்
இடும்பாட்டினுட்கிடவாதெம்பிரான்றனைக்கண்டு
மடம்பாற்றுந்தொண்டைமான்வழிபாட்டையுரைப்பாமால். (கரு)

சித்திரகன்மன்கதியடைந்தபடலம்முற்றிற்று.

---

# தொண்டைமான்வழிபடுபடலம்.

சீர்நாடுசெங்கமலத்திருநாடுதிருவாரூர்
ஏர்நாடுநகர்மேவவெங்கைபிரான்றுறக்கமகன்
ஞர்நாடுமலர்த்தாரானருந்தவநாடியவணங்க
நீர்நாடுபெருநாடுநிகழ்த்திடுநன்னீர்நாடு. (க)

இருமுனிவர்நடங்காணுமிரும்பதியுமிறையொருத்தி
கருவுயிர்ப்பத்துணைசெய்தகவின்றலனுமருஞ்செல்வ
மருவுமொருபெருந்தோணிவார்கடன்மேன்மிதந்ததெனுந்
திருநகரும்படைத்ததொருசெம்பியன்றன்றிருநாடு. (உ)

வாகையாற்செம்பியன்றன்வன்மையாற்கோலோச்சும்
ஓகையாற்சிறந்தபதியுயிர்க்கெலாம்பெரும்பந்தம்
போகையானீலவிழிப்புணர்க்கையானெவ்வெவரும்
நாகையாதெடுத்துரைக்குநலத்ததொருகடனாகை. (௩)

புலிப்பறழும்புல்வாயும்பொருந்தியொருதடத்தென்றுஞ்
சலிப்பின்றிநீரருந்தத்தடவுக்கையாளியொடு
புலக்களிறுநட்பாகப்புணர்தரநல்வளவர்பிரான்
கலிப்பகைதீர்த்தரசாண்டகவினகரங்கடனாகை. (௪)

இந்நகரந்தனைப்புரப்பானிரணியமன்றினைவேயு
மன்னன்வழிவருசீரான்மறங்கடிந்திட்டறனோம்பும்
பொன்னனையகுணமுடையான்பொறையினிலமகளனையான்
மின்னவிரும்வேணியற்கேவியனன்புபுரிநீரான். (௫)

ஒருஞான்றம்மன்னர்பிரானோங்குபதாகினிசூழ
வருவான்வேட்டையின்மனமாய்வலைமுதலபொருள்கொண்டும்
வெருவாதுமோர்ப்பத்தான்விலங்கினங்களுணர்த்துகிற்குங்
கருஞாளிகைக்கொண்டுங்கானெல்லாந்திரிதந்தான், (௬)

தானமாதரக்கரிமாசாரங்கமெய்கிடிநி
தானமாவனவிருகமனைத்தையுந்தன்சரங்கொண்டு
தானமாகொலைபுரிந்ததடவரையேயெனக்குவித்துத்
தானமாவலிகையேற்றான்மருகன்பொறைசார்ந்தான். (எ)

இப்பொறைதான்பசுந்தமிழுக்கெழில்வடாதெல்லையெனச்
செப்பரிலவியதென்றாஞ்செழுந்தவத்துக்குறுமுனிவற்
கப்பனைநல்கியகுமரனருந்தமிழையறிவுறுத்துந்
திப்பியமால்வரையென்றுந்தெரியானாய்த்திரிதந்தான். (அ)

நிழலேபோலவ்வரசைநெடிதுதொடர்தருமெயினர்
கழலேறுகாலினர்தாங்கதுமெனச்சார்ந்தவன்குறிப்போர்ந்
தழலேபோனனிகொதித்திட்டலகில்விலங்கினம்படுப்ப
எழலேயுநெஞ்சத்தாரொல்லாருமியைந்தனரால். (கூ)

ஓடியெறிந்தவலையிருத்தியொருங்கினைதூய்ப்பார்வைதனைக்
கடிதுவிடுத்தவைகலங்கக்கைக்கொண்டுபறையடித்து
நெடிதுகுறித்தவண்கோடுநேராதவிலங்கினமும்
படர்வினைந்தாண்டெழுப்புவார்பரிசினைத்தென்றுரைப்பதுவோ. (க0)

துணையாகவந்தார்கள்சூழ்ச்சிதனிற்பிழைத்தவற்றைக்
கணையாலாருயிர்வாங்கிக்களையிலிறும்பூதெய்த
இணையாருமில்லாதவேந்துமற்றங்கொருசார்
அணைவான்றன்னந்தனியேயடவிமுழுதுஞ்சரித்தான். (கக)

கிழியீடுநேர்பட்டாலெனக்கேசங்கனமாக
விழியாலமெனலாகவில்லாகக்கொடும்புருவம்
மொழியாலைக்கரும்பாகமுகிழ்முலைமொட்டாத்தேமா
நிழலுடியிருந்தானைநேராகக்கண்டனனால். (கஉ)

நேரானன்னெடுவரையோநிலவுலகமனைத்துண்டான்
ஊரோவவ்வலாரிபரிந்தோம்புகின்றபேருலகோ
சேரேயுநெடும்பாந்தள்செறிபிலனோவின்னரென
ஓரானலென்னுயிரையொருங்குவருத்துநர்தமையே. (கங)

வேறு.

என்றான்றன்னைத்தான்மறந்தானிதயங்களித்தான்வேட்கையின்மேல்
நின்றானென்பதொழிந்தானென்னெடியதவமேயோவென்பான்
அன்றார்கலிநல்கியவமுதோவணைந்ததென்பானைம்புலனும்
வென்றார்போதுமவர்தமையேவிழைந்துநின்றான்விறல்வேந்தன். (கச)

ஒருவாறறிதிற்றேர்ந்தவர்தம்முழையேபகர்ந்தாண்டுரைசெய்வான்
மருவார்மலரோவானமுதேவானோரோந்தன்மனமகிழுங்

குருவார்மணிப்பூண்சசிக்கொடியேகுடிலத்தவருக்கோர்விருந்தே
திருவேநீயார்யார்பெற்றசெல்வமென்றான்செங்கோலான். (௧௫)

கற்பேபடிவங்கொண்டகனங்குழையார்நெஞ்சங்கவன்றவர்தாம்
பொற்பேபடிவங்கொண்டானைக்காணப்பெறுவிருணிலராய்
மற்போர்வல்லாய்நானேதான்மணிப்பைந்நாகத்தவருலகம்
அற்பாற்புரக்குந்தனுசனென்பானரியதவத்துவருகின்றேன். (௧௬)

இனைந்தவரசனெழின்முகத்தைநோக்கியெம்மையாளுடையாய்
அனந்தனிகராமெந்தையைக்கண்டடைவொடென்னைமணம்பேசிற்
கனிந்தசொல்லான்மன்றலயர்விப்பானெனிற்காசினிமாட்டுப்
புனைந்தபுகழெய்துவையென்றுபுனையுமுரைத்துப்போந்தனரால். (௧௭)

கரந்தாருருவங்காண்கிலனாக்கன்னெஞ்சயர்ந்தான்காமுகனுந்
திரிந்தான்காமசரம்பாயத்தெருமந்தொன்றுந்தெரியானாய்ப்
பரிந்தாங்கவர்சொல்வழிச்சென்றேபார்த்துமென்னப்பறைந்தடைந்தான்
தருந்தாருவனான்பரிவாரந்தனதுநாடுசெலவிடுத்தே. (௧௮)

வேறு.

கண்டுசென்றுதனுசன்கழல்வணங்கியெதிர்நின்
றண்டர்வாணனெனலானகநின்புடைவரும்
புண்டரிகைபொருவும்புனிதைதன்னைவதுவை
கொண்டுநின்றுசுகமெய்திடநினைக்குறுகினேன். (௧௯)

என்றியம்புமரசன்குறியெனைத்துமினையோன்
றுன்றுமாமுகனுரைத்திடவுணர்ந்துதுயர்தீர்ந்
தின்றுநின்வரவுநல்வரவதென்றுரைசெய்தே
மன்றலெய்திடவுரைத்தனனம்மாசுணவிறை. (௨௦)

மன்றலெய்தியொருமாமதிமுகத்திருவினோ
டன்றினன்குவிழைபோகமயராவலங்கினாள்
ஒன்றியின்னணமயர்ந்துறுபவோராயினைய
நன்றுமஞ்சனொருவன்றனையுநல்கினரரோ. (௨௧)

ஆழிவாயொருசலஞ்சலந்திகர்க்குமமைதி
தாழவேயொருமகக்கொடைதனைத்தருகுவார்
காழிமாநகர்வருங்கவுணியற்பெறுமெழில்
வீழிவாய்ப்பகவதிக்குநிகரென்றுமிளிர. (௨௨)

உச்சிமோந்தனருகந்தனளுவப்பெறுவதோர்
நச்சுமெய்த்தவமெந்தியாதுகொலெனுநவிலுவார்
பிச்சனாயினனிவற்பெறுபெருந்தகையிதோர்
வைச்சசேமநிதியென்றுளமகிழ்ந்தனரரோ. (௨௩)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NA...

மைந்தனல்கியதறிந்தமடவார்பலருமே
சிந்தையாரமகிழ்வெய்தியரன்றெய்வவுருவே
வந்ததென்னவறியாதவர்வழுத்தினர்களால்
முந்தவன்னதுணைசெய்யமுயல்கிற்பதெவரே. (உ௪)

ஆடிசெய்த்திருவிழாவினையயர்ந்தவனிசெய்
நீடிருந்தவமெனப்பலருநின்றுபுகல
நாடுநல்லனநிமித்தமுளவாயினநயந்
தோடினார்விழுந்தாருவகைகொண்டவரரோ. (உ௫)

ஐயிரண்டொடுமிரண்டுதினமாகவவர்தாஞ்
செய்யபொன்னனையமாதுதருசெல்வனையெடுத்
துய்யவந்தவிறையேயெனவுகந்துமறைசொல்
தெய்வநன்னெறிநடாத்தினர்திறம்பலிலராய். (உ௬)

வேறு.

நிலங்காக்குமனையரொலாந்தலையெடுப்பக்குறும்பெல்லாஞ்
சலங்காக்குநெறியின்றித்தாமொழியத்தக்கோராம்
புலங்காக்கும்புனிதர்தமைப்புரப்பானையினியவர்தந்
நிலங்காப்பாரொன்றவர்க்குநிலங்காப்புமிட்டனரால். (உ௭)

பரியிரதங்கரியாளென்றுரைத்தகடற்படைகொண்டு
கரிசுபுரிதருங்கொடியகயவரொடுங்கலந்தமர்செய்
பொருவரியபுரவலனார்புனிதனடியேகருதித்
திரிதருமச்செயலேபோற்செங்கிளையாடினார். (உ௮)

நாட்டுமறையுட்பொருளைநலமலியும்வடமுல்லை
காட்டுமணிவிளக்கதனைக்காட்டியவன்றனையன்பி
னாட்டியவனருள்பெறுமெம்மனையர்பெருமானைச்சீ
ராட்டியகைத்தாயருந்தாலாட்டிமகிழ்ந்தனரம்மா. (உ௯)

கைப்போதுசென்னிவயிற்கவினக்கடன்ஞாலத்
தொப்போதகில்லாவுயர்மாசிலாமணியை
முப்போதுமேத்திமொழியவொருமூவுலகுந்
தப்பாதுகாப்பாருஞ்சப்பாணிகொட்டினார். (௩௦)

காவாவென்றுலகெல்லாங்கனிந்தடையவும்புனிற்றுச்
சேவாரும்வெல்கொடியார்தெய்வவருள்கொண்டுபகை
மேவாதுகாக்கும்விறல்வேந்துமினிநட்டை
வாவாவென்றுரைப்பதுபோன்மதியதனைவாவென்றார். (௩௧)

பெருமுத்தர்வழிபாடுபெரிதுஞற்றவொருவேயின்
வருமுத்தந்தனையன்பின்வழியன்றிக்காணரிதாம்

பரமுத்திதனைப்பயக்கும்பரம்பனைக்காண்பாரா
ஒருமுத்தநல்கென்றாரொருமுத்தநகையுடனானார். (௬௨)

வம்பமருங்குறும்பகற்றுமாமாசிலாமணிதாட்
செம்பதுமமுடிபுனைந்துசெய்யகோல்கரங்கொண்டு
மன்பதைகாத்தடையலர்கள்மணித்தேரையுருட்டுகிற்குஞ்
செம்பியன்சேய்செய்யசிறுதேருருட்டுவாரானார். (௬௩)

வேறு.

நாகராசனுநாகமாமுலைக்கொடிநல்கியசுதற்கம்மா
பாகசாதனன்சசிவயின்மகப்பெறும்பரிசெனமகிழ்வெய்தி
யோகசாதகன்மங்குணித்தருமறையுரைத்தவாவவ்வேந்துக்
காகநாடியகன்மமுமுனாற்றினனஃதியம்பிடவற்றே. (௬௪)

இன்னவாறவனாற்றியவேலையினிருப்புனனன்னுடன்
றன்னதாருயிரன்னவம்மடவாறன்னையன்பானோக்கிப்
பொன்னனையுனைப்பிரிந்திவணேகிடப்புந்திவைத்தேனென்றான்
அன்னதற்கவன்றிருமுகநோக்கிமற்றணங்கவனுரைசெய்யும். (௬௫)

எனைவலிந்துவந்தெழின்மணம்புணர்ந்தனையிருமையுந்தரவல்ல
தனையனைக்கனிந்துதவினைபிரிவெனுந்தகைமைசார்துயர்தந்தாய்
அனகநிற்கொருநீதியுமாவதேயழகிதென்றொருமைந்தன்
புனைவருந்திருப்புணரகிலாதிவண்போதுமோபுகலென்றாள். (௬௬)

மனைவியுள்வெயர்த்தியம்பியமாற்றமம்மன்னவன்றான்கேட்டு
மனநெகிழ்ந்தவண்மாழ்கியென்மடக்கொடிமற்றுனைமணஞ்செய்வான்
நினையவந்ததுமூழதிற்சாலவோர்நிகளமதிலையன்றே
தனையன்வேறுளன்வேறுதாரத்தினேஞ்சாற்றுவதென்னென்றான். (௬௭)

சேயனிகழ்ந்ததும்வினைவழியாவருந்திறம்புதல்வழக்கன்றால்
மயின்முறைக்குலத்துரிமையைமறப்பதுமன்னுரிமையுமன்றே
அயின்மலர்க்கரத்தவனுன்மாமகனெனவரும்புவியுரைக்கும்போ
தயனினைப்பயனிலையென்மொழியன்பொடுங்கேளென்றான். (௬௮)

நானளிக்குமித்தொண்டையங்கொடிதனைநல்லதோர்குறிப்பாகத்
தானெறிந்தனனெனிற்கடல்வழிவிடுந்தனக்கொருகவலின்றே
நானவார்குழன்மடந்தையிஞ்ஞாலமேயன்றிநாகமுமேனை
யானநானிலமனைத்துமோர்குடைநிழலளிக்குவனிவனென்றான். (௬௯)

அரசர்கோமகனகன்றன்னகன்றபினருந்ததிபோல்வாரும்
பரிவினீன்றதன்றுதைதனிசைவொடுபார்மிசைபடர்ந்தாரால்
பருணிதத்திருமகன்றனதன்னைசொல்பாணியாதலையாழித்
திரையிற்றொண்டையங்கொடியெறிந்தனனரன்றிருவடிநினைந்தன்றே. (௭௦)

ஊத்தைதவாய்ச்சமண்கடல்வயின்விடுத்திடவும்பாரன்றிருநாம
வார்த்தையஞ்செழுத்தாலொருகற்புணைமருங்கில்வந்தெழுகின்ற
சீர்த்தநந்திருநாவினுக்கரசெனச்செம்பியன்றிருமைந்தன்
மாத்தடங்கடற்றிரைவயிற்றோன்றியம்மருங்குறுங்கரையுற்றான். (௪௧)

திரைகடந்துவந்தடைந்ததொர்பரிசினாற்செம்பியன்றிருமைந்தன்
திரையனென்றிடச்சிறந்தனன்றொண்டையாற்செறித்தலாற்றிரியின்றிக்
கரைதருந்தொண்டைமானெனயாவருங்கட்டுரைத்திடலானான்
தெரியினென்றனன்சூதனும்பின்னுறுஞ்செயலவர்க்குரைசெய்யும். (௪௨)

கங்கைவார்சடைக்கடவுடனருளினாற்கடற்றிரைசையேந்தி
அங்கண்மாநிலந்தனில்விடுத்திடவஃதறிந்தசெம்பியர்கோமான்
துங்கமைந்தனையுச்சிமோந்துயிர்த்தருஞ்சுடர்மணித்தேரேற்றிச்
சிங்கவாதனக்குரியனென்றுரைத்தனன்செழும்புவிகளிதூங்க. (௪௩)

வந்தமைந்தனைக்கண்டவம்மாநகர்மாந்தர்கண்மதிகண்ட
சிந்துவென்னமாமழைமுகில்கண்டதொர்செழும்பைங்கூழெனநின்றார்
அந்திலார்புனைசெம்பியன்றானுமம்மகவினையன்பாற்கொண்
டந்திவானிறமேனியானருளினைகனிலம்புகழ்கின்றான். (௪௪)

வேறு.

தன்னருமைத்திருமகன்றன்பேராற்றல்பெரிதுணர்ந்ததண்பார்வேந்தன்
பின்னெய்துவனவனைத்துமுன்னோர்ந்துகரிகாலப்பெருவேந்தன்று
முன்னடைந்துவென்றண்டதண்டகநாடாள்கவெனமுடியுஞ்சூட்டி
மன்னுரிமைச்சுற்றமுந்தந்தவன்றனைச்செல்கெனவாணைவழங்கினானால். (௪௫)

வேறு.

திரையன்பினிலாண்டருடாதையைத்தாளிறைஞ்சித்
திரையன்விடைபெற்றுவடாதுசெலத்துணிந்து
பரையன்றொருசேய்க்கெழின்மாமுலைப்பாலளித்த
உரைசெய்சிறப்போங்கியகாழியுவந்தடைந்தான். (௪௬)

ஆனந்தநடம்புரிந்தாருயிர்க்கின்பநல்கும்
தானந்தமில்லதொருசீர்த்திதழைத்ததென்றும்
கானந்தயங்குகுழலாடியகாட்சிமல்கும்
தேனந்துசோலைத்திருத்தில்லையிற்சென்றகன்றான். (௪௭)

புகலிக்கிறைவன்வதுவைப்பெயரைப்புகன்றிட்
டகிலத்தவரும்வரக்கூயவரெய்தவன்றே
புகலற்கரிதாஞ்சுகபூரணப்பேறுநல்கு
நகரென்றுரைசெய்வியன்றனையகன்றான். (௪௮)

முத்தாறுவலஞ்செய்சீர்முதுகுன்றமேவி
அத்தாவமலாவருளாளவெனவரற்றிக்
கைத்தோர்மலநாடியகண்ணுதல்பாதமேத்திப்
புத்தேளிர்நாடும்புரிசைப்பதிபோந்தகன்றான். (சகூ)

மயனுடியமாலயன்மண்ணினலமந்தன்றே
அயனுடியகற்கிடியன்னமெனத்திரிந்திட்
டயனுடியசீளழற்குன்றமுவந்துகண்டு
வியனுருமானைதப்பதிசேர்ந்துவிரைந்தகன்றான். (ருo)

மறைநான்கும்வெற்பென்னவிளங்கவுமாசிலாத
துறைநான்குமயக்கருள்கிற்பதுதாய்தவத்தோர்
குறைநாடியதீர்ப்பதுவாங்கழுக்குன்றமென்னத்
தறையோதியநன்னகரெய்தித்தணந்துபோனான். (ருக)

வேறு.

செம்பியன்றன்றிருநாடுசேர்ந்துதண்டகனுளைச்சிறந்துநாளும்
அம்புவியிற்றண்டகநாடெனக்கிளைத்துமந்நாடுகாடுமண்டிக்
கம்பமேவியபெருமான்றிருநகரெனக்காண்டற்கரிதேயாகப்
பம்பியசேனையுந்தானுமக்கானமுழுவதுமேபடர்ந்தானம்மா. (ருஉ)

அவ்வேலையர்நெடுங்கான்குறும்படர்ந்துசெறிந்துநாலாறுகோட்டந்
தவ்வாதுபிரிவெய்திச்சிறுகுடியேதுவன்றியவண்சரிப்போர்தம்மை [றும்
வெவ்வேகமொடுதொடர்ந்திட்டாறலைக்குஞ்செயலதனைமேற்கொண்டென்
இவ்வாறீண்டுடல்வளர்த்துத்திரிதந்ததிகபாமுமிகத்துமன்றே. (ருங)

தாயுரையின்படிவந்ததிரையனெனுந்தொண்டைமான்றன்னோடுற்ற
மேதகுநாற்படைகொண்டுநூழிலாட்டயர்வுள்ளமேற்கொண்டன்னோன்
காதுநெடுங்குறும்பிரவிகண்டவிருளெனக்கழித்துக்காஞ்சியென்னு
மாநகரம்புதுக்கித்தன்னரசுக்கிடங்கொண்டானவனியாள. (ருச)

இன்னநகரெழுநகரத்தொன்றெனயாவரும்பேசவிலங்காநிற்கு
மன்றியுமத்திசைமுகனுலஞ்சிக்கப்படுவதனுமைவதாகி
மன்றவுமையறம்புரிந்தமாநகரமெனநன்குவயங்குபீட (ருரு)
மென்றவெவ்வெட்டினின்மலருட்கமலமெனத்திசைபோயங்கிருந்ததன்றே.

வேறு.

இன்னதொன்னகரன்பதிங்குணர்ந்தநல்வேந்தன்
அன்னநன்னகர்புதுக்கெனவுறைதரவாங்கு
மன்னுசீர்மலிகம்பியன்வகுத்தனனென்ப
இன்னனெஞ்சினேனெடுத்தெவனுரைப்பதப்பெருமை. (ருசு)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS

சமயமாதியமூவகைத்தீக்கையுஞ்சார்ந்தோர்க்
கமையவேபுரிந்தாகமநெறியினுன்மார்த்தஞ்
சமைதரப்பரார்த்தம்புரிகின்றதண்ணளியா
னமையிங்காள்சைவவந்தணரிருக்கையுமியைத்தான். (ருஎ)

தீக்கைமந்திரமுதலியவங்கங்கடேர்ந்து
தக்கமாமறைநான்கையுமோதித்தாழ்சடில
நக்கனூரடித்தொண்டரைநாடுமந்தணர்வாழ்
மிக்கிருக்கையேயோர்புறமிளிர்தரவிதித்தான். (ருஅ)

யானைதேருடனிவுளியேற்றம்பலதேர்ந்து
தானையாவையும்பயின்றுதம்பகைப்புலம்பொருது
மானமாவனதன்மையாய்ச்செறிதருமன்னர்
ஆனமாமரபோருறைவீதியுமமைத்தான். (ருகூ)

தங்கணெய்தூநர்மணியினைத்சருதியென்றுசாவ
அங்கதற்கினமாவனவுண்டெனவறைவார்
தங்கைதந்தவான்பொருள்பிறர்தம்மதேயானுந்
தங்கைத்தென்றெனும்வசியர்சாரிருக்கையுஞ்சமைத்தான். (சுo)

வருவிருந்தினிதோம்பியேவைகலும்வானும்
பெருகுநற்புகழ்கூறிட்டப்பிறங்குமெய்ஞ்ஞான
மருவுமன்பொடுகொடைபலவழங்கிடவேளாண்
மரபினோருறையிருக்கையும்வரம்பிலவமைத்தான். (சுக)

நாற்பெருங்குடிவீதியுமன்றியந்நகரின்
பாற்படும்புறக்குடியுறைவீதிகள்பலவும்
ஏற்பவேயமைத்திறைமகனிடத்தினிதியம்ப
மேற்படுங்குலவேந்தனுமுட்புகவிழைந்தான். (சுஉ)

வேறு.

திசைமுகனுலஞ்சிக்கப்படுதலினுற்சிறந்தோங்கும்
இசைகெழுமுகாஞ்சிநகரெனநிலவுமாநகரைக்
கசிவுறுமெய்யன்பினெடுங்கடறபடையினோடிறைஞ்சி
நசையின்வலம்வந்தொருதனன்மனையினுட்போந்தான். (சுந)

வேறு.

அரசர்தம்பிரானரசரொடமைச்சரொடெய்தி
அரியணைக்கணுங்கமர்ந்தனனடங்கலர்தம்மை
வெருவுறப்புரிந்தியாவரும்விழைதரவுஞற்றிப்
பொருவருந்திகிரியைநனியுருட்டினன்புரந்தான். (சுச)

இனையவேலையின்முல்லைமாநகரெலாமடவி
துன்னியேதளவான்மறைபட்டதேதோன்று
தின்னமாநகரெய்தினனென்றுமேற்கடலிற்
சென்றுமூழ்கினன்சேனைகாவலர்க்கிதுசெப்பும். (௬௫)

என்றுதான்கடலாழ்ந்தனனின்றிவண்வதிந்து
குன்றவில்லிதன்றளிபலகுறித்தடைகிற்பேன்
சென்றெனத்தரியலர்தமைக்கடந்தசெவ்வேலான்
அன்றுரைத்ததுசேட்டனரணிககாவலர்கள். (௬௬)

அணிகவேலையையிறுத்தனராசர்தம்பெருமான்
கனிவினாலந்திக்கடன்றனைமுடித்துணவயின்று
பனிநிலாக்கதிர்பாவலாற்பான்மறிமுல்லை
எனுமலர்க்கொடியாண்டுமேமணங்கமழ்தரலான். (௬௭)

துளக்கிலாநெறிதோன்றலுமன்றவண்வைகித்
இளப்பிறையர்வகலவோவெழின்மணித்தவிசிற்
களிப்பினொருகான்கண்டகாட்சியைநினைத்திங்
களக்கலாயினனங்கிராமுழுவதுமம்மா. (௬௮)

இனையவேலையிலேந்தலுங்கெண்டிசைதிசைப்ப
மனநடுங்குறக்கேட்டதோர்மாமணியோசை
அணிகவேலையினவ்வணுங்கறிதுயிலாரும்
புனமலர்த்துழாய்ப்புயலெனக்கண்வளர்பொழுது. (௬௯)

இங்கொராலயமிருந்திடவேண்டுமெம்பெருமாற்
கங்கருத்தயாமஞ்செய்வதாகின்றதென்னாச்
சங்கராசிவசந்திரசேகரசருவ
பங்கனாகரவென்றுங்கையுச்சிமேல்வைத்தான். (௭0)

என்றுதோன்றினனியமங்கண்முடித்தனனேந்தல்
அன்றமைச்சரைக்கூயவர்க்கன்பினுணர்த்திக்
குன்றவில்லிதன்புனைமணிக்கோயிலொன்றீண்டு
நின்றதாகுமாலெனச்சிலர்நிகழ்த்துவாரானார். (௭௧)

ஐயகேளிவணம்பிகாபதியினிதமருஞ்
செய்யமாமணியாலயமீங்கிலைதேரின்
வெய்யராங்குறும்பர்களுறைகிற்பதுமேனாள்
வையமூர்ந்துந்தைபொருததோர்மலையரணுண்டால். (௭௨)

அன்னதாலதுபுழலெனப்படுவதஃதைய
இன்னதன்மையதென்றிவணெடுத்துரைப்பரிசால்

இன்னல்செய்கிற்போருறையுளினெழின்மணியோசை
என்னலாகுமற்றதன்சிறப்பறிந்தவாறிசைப்பாம். (எங)

வேறு.

கங்கைகுலந்தனில்வந்தோர்திருத்தில்லைநடத்திறைவன்கருணைவாழ்வாம்
அங்கணன்முன்பெற்றானுக்கெனக்கவியொன்றுரைத்தனுப்பவன்பாற்றீக்கை
இங்களவில்பேரருளாற்செய்தொருவீடளித்தபிரானிசைத்தசீர்த்தி
தங்குசேவையர்பெருமான்மரபினோரெஞ்ஞான்றுந்தழைப்பதம்மா. (எச)

கோட்டமிளங்காடேற்றுக்காடாமூர்சடிகைபல்குன்றவெண்குன்
றீட்டுமெயில்சிறுகாரைபீக்காடுகொலியூர்படுவூரீதூர்
நாட்டுபுழல்சந்திரிகைசெங்காடுகுணபத்திரநயக்குஞ்செம்பூர்
வாட்டமில்லையூர்களத்தூர்வேலூர்வேங்கடம்புலியூர்மணவூர்தாமல். (எரு)

எனப்படுமிக்கோட்டத்திற்புழற்கோட்டங்களைக்கைக்கொண்டின்னல்
செய்வார், அனைத்துயிர்க்குமவரோணன்வாணனெனவுலகெல்லாமறையுநீ
ரார், உனற்கரியபெரும்பொருளெலாங்கவர்ந்தார்பகைப்புலம்வென்றோங்கி
வாழ்வார், புனக்குறவர்மடமானைக்கவர்ந்தானைப்பொருவாராய்ப்புரைசெய்
கிற்பார். (எசு)

பவளத்தூண்வெள்ளருக்கர்தூணினொடுவெண்கலசபாடமோங்குந்
தவளநெடுமதிலரண்கொண்டொருகொடுங்கோலோச்சிடுவார்தம்மாலெந்தா
தவளங்கொள்கொலைக்களிற்றினுரியான்றன்வழிபாட்டிற்காலமின்றி [ய்
அவமதில்யாங்கழிக்கின்றேமெனவமைச்சருணர்ந்தாற்றவரசன்கூறும். (எஎ)

இன்றடித்தமணியோசையீதெனத்தேர்ந்தனமென்னவெடுத்துரைப்ப
நன்றதனைக்காணுமாநசைகொண்டாமெனத்தானைநடந்துசெல்லக்
குன்றனையகுஞ்சரமூர்ந்திந்திரனேயெனவேகக்கொடியோர்தாஞ்செய்
குன்றின்வயினத்திரையனெய்தினனாலெனச்சினந்தார்கோனுகன்னார். (எஅ)

இத்திரையன்றிருத்தாதைநமைப்பொருதிங்குடற்றவிவண்கரந்தேமின்று
கத்துதிரைவாரிதிபோல்வருந்தானையுடையானைக்கண்டுமாழ்கல்
எத்துணையுங்கொடியதாம்பொருவதேசிறப்பென்னவெண்ணியன்னோர்
வைத்திருந்தபடையானும்வயிரவனாரருளானுமலைவான்வந்தார். (எகூ)

அரசர்பிரான்முன்கண்டுசாந்தமொழிபலபகர்ந்துமதுகேளாது
பொருவதேகடமையெனவில்வளைத்துப்பகழிதனைப்புயல்போலவை
இருபடையும்பொருதுழியாண்டரையர்பிரான்படைத்தலைவரேவாநிற்குஞ்
சரமதனாற்கொலைவாளாற்பிறபடையாலவண்பொருதல்சாற்றற்பாற்றே. ()

வேறு.

இழந்தார்தலையிழந்தாரிருகைகாலொடுகுடர்கள்
இழந்தார்பலர்மலைபன்னபுயந்தாவிகல்புரிவார்
அழிந்தாரினியாஞ்செய்குவதென்னேயெனவரற்றிக்
கழிந்தாரொருவேந்தன்படைகண்டான்முடிவெனவே. (அக)

வாணன்படைவாளுள்கழிவாராய்மனமழியச்
சேணின்கண்கரந்தேநெடும்போர்செய்தனர்தீபோர்
காணும்பரிசிலராய்த்திரையன்கார்முகக்கணையால்
நாணும்படிசுழல்காலின்முன்பஞ்சாயினர்நடுங்கி. (அஉ)

வெந்திட்டனராலன்னவர்வியன்மாமலையரணிற்
சென்றிட்டமுறத்தாம்வயிரவன்சேவடிமலரை
உன்னிக்குறையொன்றுங்குறையாதோதவோர்பூதந்
தன்னைத்தரவந்தாரறைகூவித்தகைதரவே. (அங)

இன்னோர்வரவினைவேந்தனுக்கெடுத்தோற்றர்களியம்பச்
சொன்னார்புயவேந்தன்பொருதற்காற்றலிலாது
சென்றோர்வருமாறென்னைகொலென்றேதிசைகடல்சூழ்
வன்றூரணிதனிலென்றிறும்பூதெய்தியவந்தான். (அச)

படைமன்னவனொருநாற்படையொடுபற்றலர்தம்முன்
விடையென்னநடந்தேகினன்வேல்வேந்தனைநாடி
இடியன்னமுழக்கோடொருபூதம்மெதிர்வந்தே
அடைவிற்குகைநிகர்வாயினையங்காந்தடைந்ததுவே. (அரு)

அரசன்படையொருவந்தமழற்கட்பெரும்பூதம்
விரவும்பசிகொண்டோனனம்வேட்டுண்ணியசெயல்போல்
ஒருகையின்முகந்துண்டதுவெகுண்டேயுலகுடைய
குரிசில்வியன்படையாழுடையார்கோனகர்ப்பொருவும். (அசு)

கண்டான்படைவேந்தன்கனவிற்கண்டதோர்காட்சி
தண்டாவலிமிகுதானையிற்கண்டேநனியஞ்சி
அண்டாவொருகல்லானையுமயிலக்கரும்பிடவும்
உண்டாயதோர்செயன்மானுமிதென்றேயுளங்குழைந்தான். (அஎ)

தென்னன்முகில்சிறையிட்டதோர்செயலென்னவெனைத்தான்
இன்றிக்கொடியோர்வெஞ்சிறையிடுவாரெனநினைந்தே
மன்னன்கரியினையூர்ந்தொருவண்பாசறையெய்தச்
சென்னிக்கிளமதிசூடிதன்செயனன்குணாசெய்வாம். (அஅ)

வேறு.

முல்லைக்காட்டின்வழியாகமுடிவேந்தர்பிரானணைந்திடவும்
முல்லைக்கொடியிற்கரந்திருக்குமுதல்வன்பகைவன்புலிக்கஞ்சி
ஒல்லைமீளுமிகுபக்குவனுக்காசானாயொருங்கெளிவந்
தல்லலறுப்பான்போற்றொண்டைமானைத்தானும்வலிந்தான். (௮௯)

உள்ளங்கொண்டேயவனையர்பிரானூர்ந்துவருமவ்வும்பரனைக்
கள்ளம்பயிலாமுல்லைநெடுங்காட்டிற்றகைசயக்கடகளிறு
வெள்ளம்பயிலுஞ்சடைமுடியார்விரகாற்றகைந்தன்மையினான்
எள்ளினிடனுஞ்சால்பெயராதிருந்ததனையிறையுணர்ந்தான். (௯௦)

அந்தோசிறியோர்சிறைவயினகப்படாவேயுயிர்பிழைத்து
வந்தேன்வந்துங்கொடுந்துயரமதனுக்கிரட்டிவாய்த்திடவே
நொந்தேனென்றேயகங்குழைந்துநாலிரண்டைக்களிற்றின்மிசை
வந்தானூருமாங்கிருந்துமவ்வற்கொடியைவாளோச்ச. (௯௧)

அரசனெஞ்சமற்றம்மலரோனறியாவரும்பரம
னரியமுடியிற்றலைக்குருட்டோன்றன்முடிமேற்பட்டவுடன்
குருதிசொரியக்கண்டென்னேகுறித்திங்கேழைசெயிற்றினனென்
றுருகியவன்றன்சோதிப்பவுவந்துகண்டானிறையுருவம். (௯௨)

வேறு.

அயர்ந்துவீழ்ந்தெழுந்துபுரண்டாராதகாதலுடன்
வியந்தென்னேநினைந்தென்னேபுரிந்தனமாலெனவியர்த்துப்
பயந்திருகண்ணீர்சொரியப்பரம்பரனைத்தான்றழீஇ
மயர்ந்தாம்பாவென்னமம்மரினாற்புலம்பினனால். (௯௩)

வள்ளாலிக்கொடியேன்றன்வாளினான்வெட்டுண்டாய்
எள்ளாதஞானத்திருமேனியெம்பெருமாஅன்
உள்ளாயிலையாயிருப்பாயுடையாயூர்
கொள்ளாக்கொடியேன்கொடும்பாவியானேனே. (௯௪)

மறையோடயனுமம்மாலான்மனமதனாற்
குறையாதவாக்காற்கூறுமளவையினால்
அறியாதசீர்மையாயந்தோயானேயன்றிச்
சிறியேன்வழியுமேதிநரகிற்சேர்ந்ததுவே. (௯௫)

வேதனென்பானெத்தனையோவேதனையாற்றானுழந்தும்
போதமிழந்தும்புணர்வரியபொன்முடியை
ஆதனேனிப்பரிசாற்காணவரும்பாவம்
எதுபுரிந்தேனெளியேனுணரேனே. (௯௬)

மூதாதையரெல்லாம்வாழ்முதலேயின்
பாதாரவிந்தம்பூசிச்சிப்பசுத்துவகீக்
கோதாசில்லிடெய்திபோங்கினரின்றிச்சிறியேன்
கீதாகொடியநெறிநரகிலாழ்ந்தேனே. (கூஎ)

வாட்போக்குமன்னன்வழிப்பட்டினின்றனையான்
வாட்போக்கிதன்னில்வயங்கினையன்றுமுன்றன்
றாட்கேயன்பெய்திக்கனியமர்ந்தானைக்கோரா
றாட்போக்கிவாளாநவிக்கேதுடையானே. (கூஅ)

கண்சுமந்தநெற்றிக்கருட்பேசனிக்கூடன்
மண்சுமந்தன்றேநெடியமாறன்பிரம்படியா
புண்சுமந்தும்பாணன்பொருட்டாலிறகுசடைக்
கண்சுமந்துநின்றாமிக்காரியம்போலாகாவே. (கூகூ)

சொல்லடியானென்றுந்தொடர்வரியாயன்றொருவன்
கல்லடியும்பார்த்தன்றன்கையிலுன்னைச்சொரு
வில்லடியும்பட்டனையிவ்வேலைக்காயாவி
புல்லியவாளோச்சும்பொறுத்தாயெம்புண்ணியமே. (க00)

இன்னவபசாரமியற்றியுமெய்த்தாயெனுயிர்
தன்னைவிடாதந்தோதவிக்கின்றேனன்றுசரதி
மன்னுசுதன்பரவும்வள்ளாலிம்பாபாவி
என்னவிழைத்தாலினிம்பைபெலாம்போமின்றே. (க0க)

காக்கைதனக்குக்கரைந்தேபொன்பொல்லாத
ஆக்கைதனையினையாயாக்காரோசெக்கிலிட்டுப்
போக்ககிலாரோவுலையிற்போட்டுமுடிக்காரோநான்
மீச்கொடியனுமுறையான்வேறென்புரிவதுவே. (க0உ).

ஐயவரசனெனக்கொண்டவணியுளார்
செய்யாவினையார்சிறியேனைத்தீவினையேன்
வெய்யவாள்கொண்டுவீழ்த்துவதேநன்றெனத்தேர்ந்
துய்யுநெறியென்றுடைவாளுருவினனே. (க0௩)

தாயரெனநாடித்தானுருவியேயொள்வாள்
மாயமிடற்றிலவன்வைத்தரியவேதொடங்க
மாயனறியாமணிமிடற்றுமாதேவன்
தூயவறவிடைமேற்றோன்றிபேசட்டுனைக்கும். (க0௪)

மைந்தகேளென்றுமாசுடையேமல்லேமால்
தந்தனைநீவெட்டெனினுந்தாரணியினெஞ்ஞான்

Dr. U. V. S. IYER LIBRARY

முந்துமாமாமணியென்றேமொழிந்து
வந்தனனெல்லாருமுடையான்மலையில்லான். (௧௦௫)

வந்தவன்றன்கைப்பிடித்துமால்விடையைவிட்டிழிய
அந்தரிமாதங்கியமலைவலத்தேயமர
நந்திமுதலோரிடப்பானண்ணவமரரெலாங்
கந்தமலர்மாரிகாரென்னத்தூர்த்தனரால். (௧௦௬)

கண்டானவ்வேந்தன்கடவுளையுள்ளங்கூர்ந்து
விண்டான்றுதிகள்விளம்புவானெம்பெருமாஅன்
மண்டான்முதலாவரம்பிலாமாபூதங்
கொண்டாயுடலாக்குலவும்பரமேட்டி. (௧௦௭)

பாவகநீங்கும்பரமேபசுபோதச்
சோவெறிந்தமுக்கட்சுடரேயெனையின்று
மேவுதுயர்தெறத்தமேலோனேநின்றனிரு
பூவடியேயென்றும்புகலென்றடைந்தேனே. (௧௦௮)

ஆறுறகன்றவருளாளாவம்பிகையோர்
கூறுமதியின்குழவிமுடிபுனையும்
நீறுடுமேனிநிருத்தாகொடியிடையோர்
கூறாய்நல்வெள்ளிக்குவட்டையுடையானே. (௧௦௯)

கல்லைக்கனிவித்தகட்டழகாவிக்கொடியேன்
சொல்லைத்துதியென்னக்கொண்டசுடரோனே
தில்லைப்பதியாய்செழுமுல்லைவாயிலமர்
அல்லைப்பொருவுமிடற்றையாவருளாயே. (௧௧௦)

என்றுபுலம்பியிடருறுவான்றன்முன்னர்
கன்றின்விளவெறிந்தான்காணப்பெருந்தகையு
மன்றவுணராய்மாசிலாமணிநாமென்றே
என்றவுரைத்திட்டுமைவலப்பாலேய்ந்துறைக்கும். (௧௧௧)

இக்குஞ்சரமூர்ந்தெழினந்தியைத்துணையா
மிக்குச்சென்றுன்றன்விரவலரைவென்றமது
பக்கலன்புற்றுப்பணிசெய்வாயென்றுபணித்
தக்கணமேயெம்மானருளுருவந்தான்கரந்தான். (௧௧௨)

தொண்டைமான்வெய்யகடத்தும்பியிவர்ந்தக்கணமே
தண்டலிலாக்கொடியதகைவிலாரூரெய்தி
மண்டியேநொச்சிதனைவளைத்தான்மாதவத்தின்
ஒண்டனிநந்தியுங்கரிக்கநேர்ந்ததுவே. (௧௧௩)

வயிரவன்றன்வன்பூதமாய்த்திட்டவக்கணமே
எயிலிணையுமன்னனிடச்சோணன்வாணனொடும்
வயிரங்கொண்டெய்தவல்விசிகத்தாலழித்துக்
கயிலையரன்றண்ணருளாற்கவலகன்றுநின்றனனே. (ககச)

அந்தமிலாமாதவத்தரசர்பெருமானுஞ்
சிந்தையுவந்துசெயலற்றெலைமயடர்க்கு
முந்தைவினையொழிக்கமுன்னின்றனென்றுபுகழ்ந்
தந்திவணக்கெம்மருளாளற்போற்றுமால். (ககரு)

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

மணிகொண்டபஃறலைப்பாம்பணைத்திற்றுயில்கூருந்
திணிகொண்டவரைநெடுங்கோட்செங்கண்மரகதமுகிலும்
அணிகொண்டகமலமலரமர்ந்தொருமுச்சகம்படைக்குங்
கணிகொண்டநான்முகங்கள்கவினுமொருபெருந்தகையும்
விசும்பளந்தமணிமுடியும்வியன்மலர்ச்செஞ்சீறடியுங்
கசிந்தன்பினிலமாறிக்கலையனமுங்கேழலுமாய்
முனைநாடியுணர்வரியமுதல்வமுல்லைவனமேவி
நினைநாடுமடியவர்க்குநிறையருளும்புரிந்தோய்கேள்.

இவை யெட்டுந் தரவு.

களபயதன்றுரித்துடுத்தகடவுணீவழிபடுமோர்
களபமதற்கருள்புரியுங்காதன்மையுரைப்பதுவே.
பெண்மயனீத்தாற்குதவும்பெற்றியனீநினையடைந்த
பெண்மயனீவாற்குதவும்பேருதவியளப்பதுவே.
மணிகண்டனெனமறைகள்வழுத்தொருநீமறையவற்கா
மணிகண்டுநல்கென்னைமழையொருவழங்கினையே.

இவை மூன்றுந் தாழிசை.

மலரவன்வழிபடமருவியநினையிவண்
அலகிடலரியதொரளியுருவினை
உருவமொடருவமுமுருவருவமுமென
வருமொருபரிசினைமலிநிலையினை
கலைமறைபரவியகவினொடுநிலவிய
மலைமகளொடும்வரமருணெறியினை.

இவை மூன்றும் அராகம்.

ஆரணமாய்விளங்கோய்நீ - ஆகமமாயிசைந்தோய்நீ
காரணமாய்நின்றோய்நீ - கற்பனையுங்கடந்தோய்நீ

இவை நான்கும் முச்சீரோரடியம்போதரங்கம்.

கானுநீகனலுநீ - கதிருநீமதியுநீ
வானுநீநிலனுநீ - வஞ்சமுநீதஞ்சமுநீ

இவை எட்டும் இருசீரடி யம்போதரங்கம்.

(எனவாங்கு) தனிச்சொல்.

நேரிசை யாசிரியச் சுரிதகம்.

கருங்கடற்றுயில்கூர்கண்ணன்வாமூலக
மரும்பதிதானெனவாட்சிகொண்டனையால்
குமரன்வழிபடக்குழைந்தவன்றனை நீ
யமரர்சேனாபதியாக்கிநின்றனையால்
பொன்மனைவிழைந்தவன்பொன்றிடாவண்ண
மன்பொடுமவனுக்கருள்சுரந்தனையால்
உடுக்களுக்கவர்தமுளத்துயர்தீர்தர
வடுக்கணுமையருள்வழங்கவாற்றினையால்
கண்ணிழந்திட்டசுதிரவனையர்க்கு
மெண்ணியதலைமையைப்பொய்த்துவித்தனையால்
அராவணைதுறந்தவனருளியகுசலவர்
விராவுபேரின்புறவிளைத்துநின்றனையால்
கொடியமாமுனிவன்முறுகினனடைவான்
நெடியதோரின்னனீக்கிநின்றனையால்
நாற்கோட்டும்பனுடிநிற்பரசிட
மேற்கோட்டமில்சுகம்விழைந்துநல்கினையால்
சகியுளங்கவன்றுசார்தரவவட்கே
நசையுறக்காதலனலப்புணர்த்தினையால்
விண்ணுடையமரர்வேந்துவந்தனைதர
நண்ணிநின்றின்பநலம்புணர்த்தினையால்
காதலியைக்கொல்கயவனுக்கிரங்கி
மாதயாவோடருள்வழங்கிநின்றனையால்
பத்திபழுத்தபனவனுக்கன்று
வித்தகவீடுபேறளித்தனையால்
குலனொழுக்கிகந்தகொடியவன்றனக்கு

நலமந்தமில்சுகநல்கிநின்றனையால்
வேடுவனாகிவிசயனுக்கன்று
நீடுபாசுபதந்தனைந்தருணின்
பீடுகெழுபரிசுபேசவுமரிதே. (ககசு)

என்றுதுதித்திட்டெம்பெருமானல்லருளா
லின்றுகொடியோரினலகன்றேனெம்போலார்
நன்றுதவம்புரிந்தார்ஞாலத்தெனவவனும்
பொன்றுன்னுமாடப்புழற்பதியிற்புக்கடைந்தான். (ககஎ)

வேறு.

அரசன்புக்கனனைச்சிவாயிலிற்சென்றேயதிசயமெனைத்துந்தன்
இருகணாற்கண்டுவியந்தனனதனிடத்திலங்கிடும்பொருள்கொண்டு
பரவுசீர்முல்லைவாயிலையணுகினன்பாணிநவிடைதானுங்
கரவதின்றியேதுணைசெயுங்காட்சியைக்காட்டிநின்றதுநாளால். (ககஅ)

பின்னும்வேந்தனும்விதிப்படிமங்கலவாவிப்போர்நீராடி
மின்னும்வார்சடைப்பிரான்றனைமெய்வலம்விபண்கொடிமறைக்கப்பட்
டின்னறீர்தரவிருந்தவம்பிகைதனையிறைஞ்சிமேயதிற்றும்போ
தன்னவேலையின்வெரீஇச்சென்றதானையுமாங்கடைந்ததன்றே. (ககக)

அனையரோடவனந்தமாமாலதிவனந்தனையகலாது
கனிவினானதிறைவன்றன்பணிபுரிகடன்மைமேபரிக்கொண்டு
பணிமதிச்சிலைமாடமார்கச்சியிற்படர்வதாச்சிலைநீரகக்
குனிசிலைக்கரசனுப்பினன்றற்றரைக்கொணர்கெனப்பொன்னன்றே. (கஉ0)

கோண்டுவந்தனர்செய்பொனைவேயனுங்கூயினனெடுந்தச்சன்
கண்டுவந்துகாணிறைஞ்சினனவன்றனைக்கருணையான்முகநோக்கி
மண்டுகாதலினியற்றுகென்றியற்றினன்மரபினொன்டார்கண்மன்னே
புண்டரீகன்மால்காணெணப்பரம்பரன்புனிதவாலயமம்மா. (கஉக)

அண்ணலாலயமம்பிகையாலயமமைத்தனனசன்பின்னர்
எண்ணருஞ்சிறப்புறுசருப்பசித்திரகமியைச்சனனிமைத்தந்தி
னண்ணுறும்வெள்ளெருக்கின்றூணமந்தாரளத்திறை [illegible] டினனனன்றிப்
பண்ணுலாமகாமண்டபம்பட்டிமண்டபம்பலதிருமித்தான். (கஉஉ)

நிருத்தமண்டபநிலவலங்காரமண்டபநிகழ்தருசீர்த்தித்
திருத்தகுங்கலியாணமண்டபமுதலாயினசெறித்தன்றிக்
குருத்தகும்பரிவாரதேவருக்குக்குற்றலயமெடுப்பித்தங்
கருத்தியோடமலன்றனுணையின்வயினமைத்தனனிதம்மா. (கஉ௩)

மாடவீதியொடாவணவீதிமாமறையவர்முன்னுளோர்
நீடுவீதியினபுறக்குடிவீதியொடமைச்சனிலவேந்தன்
மாடுதானைநாதரையலர்தமரென்றமனைவவெனக்கூறி
நாடியாங்கவணியற்றியபரிசெலாநலச்சுவங்கறிவித்தான். (கஉ௪)

இன்னவாறவன்மயன்மிகநாணுறவியற்றிவேதனையெய்தி
இனனதேவகுலந்தனைக்கட்டியேபதிற்றுயினனெனச்சொல்ல
மன்னன்றானுந்தனவணமுதலனவகுத்திடப்புரிந்தன்றிப்
பின்னுமங்கலவாவிமுனையுயினபுதுக்கினனபெரிதம்மா. (கஉ௫)

முல்லைமால்வனநகரேனாணிமொழிதரத்தானமாறறிச்
சொல்லிறந்தவப்பரம்பரனுனனைமாசிலாமணியெனச்சொல்லி
நல்லிடைச்சொடியிடையெனவுமைதிருநாமமங்கமைத்துச்சென்று
மெல்லையிலவசானசிறப்பெலாமேபதினனிறைபவனமிகமனனே. (கஉ௬)

போதமூன்றினும்புண்ணியனருட்டிருப்பொனனுருக்கனைத்தீண்டு
நீதியார்முன்னுமறுவகைச்சமயவரைநிலவிடக்குடியேற்றி
மாதுபாகனுராலயச்சுற்றுப்புறமருங்கினிற்கொண்ணாகிட்ட
காதுவேல்வயிரவனறனைக்காவலாயமைத்தனனகடிதனறே. (கஉ௭)

பின்னுநற்சுபவோரையிலாங்கவனபெரிதுளமகிழ்கூர்ந்து
தனனையேபொருந்துபாயிடைமத்தானபுரிந்தபமேசன
கன்னியோடுகாதலசபைதிசண்டிகவிநாயகசோறசவருஞ்செய்து
மன்னிவீற்றிருனிப்பணியவனமனைமானமாப்புகழுற்றான. (கஉ௮)

இன்னதன்மையைக்கேட்டிவனமுன்னவனெழின்முல்லைநகரெய்தி
மன்னராங்குசலவர்நனிபூசனையாற்றியமாதேவன
சந்நிதிக்கெதிர்தனபெட்டாளொருதனிக்குறிதாபித்துப்
பொன்னெடுந்திருக்கோயிலைவகுத்துப்பினபுரிதவப்பயனுற்றான. (கஉ௯)

வேந்தர்தம்பிரான்றொண்டைமானம்பிரான்வியனகமுனனியேத்தி
மாந்தர்யாவரும்பரசிடச்சிறப்பொடுபூசனைவழாதெனறும்
ஆந்தகும்பரிசமைத்தனனிங்ஙனமாற்றியேயமலேசன்
சேர்ந்தபங்கயச்சீறடியெய்தினன்செப்பிடும்பாற்றேயோ. (க௩0)

வேறு.

தொண்டைமாஞ்சடகளிற்றொடுமுல்லையாற்றொடக்குற
றண்டர்வாணனைவழிபடலீண்டுநாமறைந்தாம்
விண்டசீர்ச்சிவாலயதரிசனவிதியன்பு
கொண்டுரைத்துமாலென்றொருசூதனுங்கூறும். (௧௩௧)

தொண்டைமான் வழிபடுபடலமுற்றிற்று.

---

# சிவாலயதரிசன விதிப்படலம்

என்றொடுங்குங்கமலந்தனக்கரண்டைகாகடிகை
என்னவார்புனற்றடமடைந்தியாக்கையைச்சுத்தந்
தன்னமின்றியேசெய்திருங்கண்டமணிந்தனைப்பூண்
டன்புவாய்ந்தவர்குழுவொடுமறுகவாதரவான். (௧)

மூந்தரம்பையின்கனியிலாங்கலிமொழிகூடந்
சந்தமாரடைகாயலவெதுக்கருகனியுந்
சிந்தையன்பொடுங்கொடுசென்றுசிவன்றிருத்தளியை
வந்தணைந்திடலில்லையேற்றுரான்மகிழ்ந்தொழிக்க. (௨)

இறைவனுகமியாதினைத்தூலலிங்கமதா
யறையுமுத்தகுகோபுரமன்பொடுந்தாழ்ந்து
முறையிலுட்புகுந்தானைமாமுகனையுட்குழைந்து
மறைசொலும்விடைத்தேவர்தம்மருங்கணைந்திறைஞ்சி. (௩)

அறவனைப்பணிவானருளொன்றவன்றன்னை
முறையின்வேண்டமற்றவன்விடைமொழிந்ததாக்கருதிக்
குறைதெறக்கரமிரண்டையுந்தலைமிசைகூப்பி
நிறையுமன்பொடுநிருத்தனார்சேவடிநினைந்து. (௪)

கங்கைதங்கியசெஞ்சடைக்கடவுளைமலையான்
மங்கைபங்கனையடைந்தவன்மன்னிவீற்றிருக்கு
மங்கலம்பெறுசந்நிதிமுற்சிவமறையோன்
அங்கையிற்கொடுவந்தனவனைத்தையும்வழங்கி. (௫)

அணையனூற்றுபசாரங்களனைத்தையுநோக்கிக்
கணிவிரோடருட்பாக்களைக்கழறியேநின்று
புனையப்பொன்னூருவளித்திடும்பொற்புநீடியநீ
றினறெறச்சிவமறையவனல்கவேற்றிருகை. (சு)

சேயதாயடைந்ததிற்றினையேனுமண்வீழா
தேயவாவொடுமணிந்துசென்றெம்மையாளுடைய
நாயனார்சோமாக்கந்தனைநலச்சமுற்பணிந்து
பாயசீர்க்கல்லாலடிகளைப்பரவுதல்செய்து. (எ)

தூஞ்சாக்கன்றைக்குழைந்துநின்றொருசுறமகட்குக்
குஞ்சரிக்கொருகணவனுங்குமரனைப்பரசி
நெஞ்சநின்றுநீராளமாயுருகநீளாக
மஞ்சொலும்முறைமையின்வலம்வருவதுமுறையால். (அ)

சலனநீக்கியாங்கிருகரந்தகுமுறைகுவித்து
மலைதருங்கொடிமணாளனைமனத்தகத்திருத்தி
நலனுறச்சிந்தித்தாயினுநலக்கமற்றவன்ற
னிலகுதோத்திரமோதியேயாயினுமியைந்து. (கூ)

தொண்டில்வன்றொண்டுமென்றொண்டென்றுகமற்சொன்ன
தொண்டினின்றெம்மையாண்டவேழொன்பதாந்தொகைசேர்
தொண்டர்தம்மைநாவலவனூரோதியதுரிசில்
பண்டையன்பனையிறைவனின்விழுமிதாப்பகர்ந்து. (க0)

நின்றபான்மைசேர்நீற்றிடையன்புறம்பெருமை
துன்றுசீர்த்தியாளரைத்துதிபுரிந்துநின்றேனும்
அன்றினார்புரமட்டவன்கோயிலைவலம்வந்
தென்றுமன்பொடுபொலிவராலிகபரங்கருதி. (கக)

அடியெடுத்துவைத்திடைவெளிதோற்றிடாதாங்கு
மிடையுமும்முறைவலம்வரல்சாலவும்விதியால்
கடைபடுங்குணுங்காவர்கைவீசியேசெல்லின்
அடலரக்கரோயாவர்மார்புறப்பிணித்தடையின். (கஉ)

அஞ்சலித்தடைவாரெனினமரரேயாவர்
விஞ்சுமாகமம்விளம்பியமுறையிதுவாமால்
மஞ்சுலாம்பொழில்சூழெழிற்சேய்ஞலூர்வருவார்
தஞ்சரண்பணிந்திருகரந்தட்டியேயெற்கு. (கங)

தரிசனப்பலன்றருதியென்றஞ்சலிதான்செய்
துருவவோடரித்தடங்கணெம்முடையநாயகிதன்
மருமலர்ப்பதம்வாழ்த்தியேயருச்சனைபுரிந்திட்
டருணீற்றொடுசெய்யசாந்தன்பொடுமேற்றே. (கச)

பையவேவலம்வந்தொருகொடிமரப்பாங்கி
னைதினெய்திபட்டாங்கமைங்காற்புரிந்திட்டெம்
மையனுமமோர்சாசரமத்தனைபகோர
முய்யுமாறிவண்கணித்திடவேண்டுமாலுரவீர். (கரு)

சிவாலயதரிசன விதிப்படல முற்றிற்று.

---

## வாழ்த்து.

வையமோங்குகமாமழைமல்குக
செய்யகோலொருவாதுசெழிக்கமெய்ச்
சைவமோங்குகதனித்திருக்கண்மணி
யுய்யுநீற்றினேடோங்கவுலகெலாம்.

---

## நூற்பயன்.

இன்னநூலையெழுதிப்படித்துளோர்
அன்னதன்பொருளாய்ந்துரைசெய்குவோர்
இன்னறீர்ந்திட்டிகபரமெய்திப்பின்
கன்னிபாகன்சீர்க்கான்மலரெய்தவே.

## திருமுல்லைவாயிற் புராணம் முற்றிற்று.

---

ஸ்ரீமெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.
ஸ்ரீசிவஞான யோகிகள் சேவடி வாழ்க.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨௩ | ௩௨ | ௩ | கணங்களெல்லாம் | ... கணங்கள் |
| ௨௪ | ௩௯ | ௨ | புகக்செங்கோல் | ... புகச்செங்கோல் |
| ௩௮ | ௨ | ௨ | வயங்கி | ... வயங்கி |
| ௪௨ | ௩௭ | ௨ | தருமன்னாய் | ... தருபொற்கொடி |
| ௪௩ | ௪௫ | ௪ | ரல்லாரோல் | ... ரல்லாரார் |
| ௪௭ | ௧௮ | ௪ | யாமல் | ... யன்றி |
| ௭௪ | ௩௮ | ௩ | மிரங்கீயாற்றிய | ... மெளிதடைந்தாற்றிய |
| ௮௮ | ௪ | ௧ | வனைப்பெய்தும் | ... வனப்பெய்தும் |
| ௮௮ | ௩௪ | ௨ | மான்புடை | ... மாண்புடை |
| ௮௮ | ௪ | ௪ | வசிட்டனை | ... வசிட்டனை |
| ௮௯ | ௯ | ௪ | தயோதியர் | ... தயோத்தியர் |
| ௯௨ | ௩௪ | ௨ | போரடுகென்றாள் | ... போரடுகென்றான் |
| ௧௦௭ | ௧௭௫ | ௩ | பறையுமவன் | ... பறவைக்கவன் |
| ௧௪௦ | ௯ | ௪ | பூரணை | ... பூரணி |
| ௧௪௯ | ௫ | ௧ | கேத்திர | ... கோத்திர |

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS

# இந்நூலாசிரிய ரியற்றிய நூல்கள்.

1. வடதிருமுல்லைப் பதிற்றுப்பத்தந்தாதி.
2. திருப்போரூர் ஆண்டவன் பதிற்றுப்பத்தந்தாதி.
3. சென்னை விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி.
4. கூவம் திரிபுரசுந்தரி பதிற்றுப்பத்தந்தாதி.
5. கழுகாசல சதகம்.
6. வேதகிரீசர் வண்ணம்.
7. சந்தான குரவர் நான்மணிமாலை.
8. பழநி மும்மணிக்கோவை.
9. கந்தகோட்ட மாலை.
10. விநாயகர் இரட்டை மணிமாலை.
11. திருத்தணிகைமாலை.
12. இராஜராஜேஸ்வரி மாலை.
13. வடிவுடையம்மை மாலை.
14. மாசிலா மணிமாலை.
15. சென்னைக் கந்தர்மாலை.
16. கந்தரநுபூதி யுரை.
17. பிச்சாடன நவமணிமாலை யுரை முதலியன.

# விளம்பரம்.

*இப்புத்தகம் வேண்டுவோர் கீழ்க்குறித்துள்ளவர்களிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் :—*

1. **ஸ்ரீநூலாசிரியர்,**
   29. *சாமிபிள்ளைவீதி, சூளை.*
2. **திரு. கிருஷ்ணசாமி முதலியார்,**
   *சிறுவள்ளூர்.*
3. **கா. நமச்சிவாய முதலியார்,**
   12. *ஏகவல்லியம்மன் கோயில்வீதி, சென்னை.*
4. **ரிப்பன் அச்சுக்கூடம்,**
   *தம்புசெட்டிவீதி, சென்னை.*
5. **தாம்சன் கம்பெனி,**
   *பிராட்வே, சென்னை.*
6. **நாகேசுர குருக்கள்,**
   *திருமுல்லைவாயில்.*
7. **திரு-இராமசாமிசெட்டியார்,**
   *சிவானந்த செட்டியார் சவுளி, கும்பகோணம்.*
8. **திரு-சபாபதி பிள்ளை,**
   *நாஷனல் ஐஸ்கூல், திரிசிரபுரம்,*

மார்பில் சட்டம் விலை அணா. ௮.

காலிகோ சட்டம் விலை அணா. ௧0.

Dr. U. V. S. IYER LIBRARY
22843
MADRAS-90